# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 56 +4

சுடர் 32 | கதிர் 64 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 16, ஞாயிற்றுக்கிழமை 29.01.2017

மகாராஜா பொதிகள் சேவை
அவுஸ்திரேலியா உள்ள உங்கள் உறவுகளுக்கு பொதிகளை விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
800/=
GTV Enterprises (Pvt) Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
021 - 2224338 / 021-4925024
இல 25 கந்தசாமி கோவில் வீதி வவுனியா
024 - 4930200 / 076 - 6908961



## சுமந்திரனை குண்டு வைத்து கொல்லச் சதி

தாக்குதல் நடத்த முயன்றோரே இந்த மாத முற்பகுதியில் கைதாம்

யாழ்ப்பாணம், ஜன. 29
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டவர்களே, வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சி திருவையாற்றில் >> 52

முச்சந்தி முரளி



பிரேரணை வரும் ஆனா வராது, என்றதைப் போலத்தானே இருக்கு



## கொக்கட்டிச்சோலை படுகொலை நினைவு

எம்.பிக்கள் உட்படப் பலரும் பங்கேற்று நேற்று மலரஞ்சலி

மட்டக்களப்பு, ஜன.29
கொக்கட்டிச்சோலைப் படுகொலையின் 30 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு மகிழடித்தீவுச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள படுகொலை நினைவுத் தூபி அருகில் நடைபெற்றது. >> 52

# இலங்கை மீது ஐ.நாவில் மற்றுமொரு பிரேரணை

கொழும்பு வந்த ட்ரம்பின் பிரதிநிதி அரசிடம் நேரில் எடுத்துரைத்தார்

கொழும்பு, ஜனவரி 29
ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்துவதற்குக் கால அவகாசம் வழங்கும் மற்றொரு பிரேரணை, ஜெனிவாக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்பினால் கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்ட அவரின் பிரதிநிதி அன்ஜூலா, கொழும்பு அரசின் முக்கிய அமைச்சர்களிடம் மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார் என, இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. அமெரிக்காவின் புதிய அரச தலைவராக ட்ரம்ப் கடந்த 20 ஆம் திகதி பதவியேற்றார். பதவியேற்று 4 தினங்களுக்குள்ளேயே, கொழும்புக்கு, அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பதில் செயலர் அன்ஜூலா வருகை தந்திருந்தார். சிவில் சமூகத்தினர், >> 52

## புதிய தேசிய பாதுகாப்பு சட்டவரைவு விரைவில்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன. 29
புதிய தேசிய பாதுகாப்புச் சட்டவரைவை எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் அல்லது மார்ச் மாதத்தில் நாடாளுமன்றில் சமர்ப் >> 52

## சார்க் அமைப்பின் கலாசார நிலையம் மாத்தறையில்

அடுத்த வருடம் அமையும் என்கிறார் அமைச்சர் நாவின்ன

யாழ்ப்பாணம், ஜன.29
சார்க் நாடுகள் அமைப்பில் உள்ள 7 நாடுகளும் ஒன்றிணைந்து மாத்தறை நாவின்னவில் கலாசார நிலையம் ஒன்றை >> 52

## ஆசிரியர்களுக்கு எதிராக வடக்கு சபையில் பிரேரணை

மாகாணக் கல்விச் செயலரை அவமதித்தமையைக் கண்டித்து

யாழ்ப்பாணம், ஜன. 29
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலரை அவமதித்தமைக்குக் கண்டனம் தெரிவித்து, வடக்கு மாகாண சபையின் >> 52



## முருங்கைக்கு எதிர்காலத்தில் சந்தை வாய்ப்பு

ஹேலிஸ் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் நேற்றுத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29
யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முருங்கைக் கன்றுகள் ஊடாகப் பயன்பெறுவோருக்குச் சந்தை >> 52

## மைத்திரி பதிலடி

2020 வரை கூட்டு அரசு அசையாது எனச் சூளுரை



கொழும்பு, ஜன. 29
அதிகாரங்களைக் கோரிச் சிலர் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் தேர்தலில் மக்களின் தீர்ப்புக்கு அமைவாகவே அனைத்தும் >> 52

## கர்ப்பிணி படுகொலை; மேலும் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 29
ஊர்காவற்றுறையில் கர்ப்பிணிப் பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் 2 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
ஏற்கனவே கைதான சகோதரர்கள் 2 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள >> 04



## இந்திய புதிய தூதரை சந்தித்தார் சம்பந்தன்

கொழும்பு, ஜன. 29
இலங்கைக்கான இந்தியத் தூதுவராக அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்ட தரன்ஜித் சிங் >> 52

## யாழ். பாடசாலைகளில் முருங்கை வளர்ப்பை ஊக்குவித்தல் அவசியம்

***ஹேலிஸ் நிறுவனத்திடம் நேற்று திட்டமிடல் பணிப்பாளர் கோரிக்கை***

யாழ்ப்பாணம் ஜன. 29
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் முருங்கைக் கன்றுகளை வளர்ப்பதற்குரிய உதவிகளை ஹேலிஸ் நிறுவனம் முன்னெ >> 04

## மணலாற்றில் விகாரை அபிசேகம்



*முல்லைத்தீவு மாவட்டத்தின் மணலாற்றில் மறுசீரமைப்புச் செய்யப்பட்ட விகாரையின் அபிசேக நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. இதில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன கலந்துகொண்டார். (த-5)*



## பொருத்து வீட்டால் நிலக்கீழ் நீருக்கும் ஆபத்து வரும்

***வடக்கு முதல்வர் எச்சரிக்கை***

விரிவு பக். 7

கனடாவில் இருந்தவேளை அங்கு நடந்த

## வடக்கு சுகாதார மாநாட்டில் விக்கி பங்கேற்காதமை ஏன்?

எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜன. 29
வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கனடாவில் இருந்த சந்தர்ப்பத்தில், வடக்கின் சுகாதார அபிவிருத்தி தொடர்பில் கனடாவில் நடைபெற்ற மாநாட்டில் ஏன் பங்கேற்கவில்லை என்று வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி >> 53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4 லட்சம் பெறுமதியான மரப் பலகைகள் கடத்தல்

## சந்தேகத்தில் மூவர் கைது

கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி, தருமபுரம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்திச் செல்லப்பட்ட 4 லட்சம் ரூபா பெறுமதியான மரப் பலகைகள் மற்றும் மரத் துண்டுகள் கைப்பற்றப்பட்டதாகக் கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்ட சிறப்புப் போதைப் பொருள்ஒழிப்புப்பிரிவின்பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார்.

கிளிநொச்சி-முல்லைத்தீவுமாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலக்கன்னவின் வழி நடத்தலின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக இந்தப் பிரிவு - பொறுப்பதிகாரி பிரதீபன் தலைமையில் இயங்கி வருகிறது.

மரக்கடத்தல் இடம்பெறுவதாக நேற்றுக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையில் பூநகரி-பரந்தன் விதியில் வைத்து லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட 30 முதிரைப் பலகைகளும், 36 முதிரைத் துண்டுகளும், 16 வேப்பம் பலகைகளும் கைப்பற்றப்பட்டன.

விறகுக்குள் மறைத்து வைத்து இந்தப் பலகைகள் கடத்தப்பட்டுள்ளன. இவை தருமபுரம் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக்கொண்டுசெல்லப்படவிருந்ததாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 3 பேர் கைது-செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இவர்கள் நாளை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் எனப் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார். (த-6)

### லொறியிலிருந்து இறக்கிய

# இரும்புக் குழாய் வீழ்ந்து சேதமடைந்தது ஹைஏஸ்

## முறைப்பாட்டை ஏற்க பொலிஸ் மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் லொறியில் இருந்து இரும்புக் குழாய்களை இறக்கிக் கொண்டிருந்தவேளை குழாய்களில் ஒன்று வீதியால் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வானின் மீது விழுந்ததால் வாகனம் சேதமடைந்தது.

இது தொடர்பில் தாம் வழக்குத் தொடர முடியாது என்றும், தேவையெனில் பொலிஸ் நிலையம் சென்று முறையிடுமாறும் பொலிஸார் வாகன உரிமையாளரிடம் கூறினர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் நேற்று முற்பகல் 11 மணியள வில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது தொடர்பில்பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிலமையை ஆராய்ந்தனர்.

லொறி உரிமையாளரின் அரசியல் செல்வாக்குக் காரண மாக பொலிஸார் முறைப்பாட்டை ஏற்கவில்லை என வான் சாரதி குற்றஞ்சாட்டினார்.

அடாவடி புரியும் அரசியல்வாதியின் பார ஊர்தி என்பதால் பொலிஸார் நடவடிக்கை எடுக்க அஞ்சுகின்றனர். எம்மைப் போன்ற பாமர மக்களாக இருந்திருந்தால் எமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருப்பர் என்று அங்கு கூடியிருந்தவர்கள் விசனம் வெளியிட்டனர்.

(த-101)



# வீட்டில் கஞ்சா வியாபாரத்தை காட்டிக் கொடுத்தான் திருடன்

யாழ்ப்பாணம், ஜன. 29

வீடு ஒன்றில் இருந்து 7 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றவரிடமிருந்து கஞ்சாப் போதைப் பொருள்கள் மீட்கப்பட்டன. குறித்த வீட்டில் விற்கப்பட்ட கஞ்சாவே அது என்று விசாரணையில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றது. நயினாதீவைச் சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க குறித்த நபர் வேலணையை அண்மித்துள்ள வீடு ஒன்றில் பணத்தைத் திருடியுள்ளார். சந்தேக நபர் குறித்த வீட்டில் கஞ்சா வாங்கச் சென்றபோதே பணத்தைத் திருடியுள்ளார் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

அந்த வீட்டில் ஏற்கனவே சில சட்ட விரோதச் செயல்கள் இடம்பெற்றிருக்கின்றன. குறித்த நபர் கஞ்சா வாங்கியதோடு அங்கிருந்த பணத்தையும் திருடியதாகவும், அதனைத் திசை திருப்புவதற்காக வீட்டில் உள்ளவர், தனது மகனை திருடன் கடத்திச் சென்றதாக நாடகமாடியதாகவும் விசாரணையில் தெரிய வந்ததாகப் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று எனத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# நல்லா ஊடுருவியிருக்கிறீங்கள் என்றது தெரியும்



அம்பலத்தாடி அப்புச்சி

aappuchchi@gmail.com

இரவு முழுக்க காவல் பணியில் இருந்து களைச் சுப்போன வீட்டு நாயார் நல்லாத் தூங்கிக்கொண்டிருந்தார். அவர் தூங் கிற அழகைப் பார்த்து இரசிச்சுக் கொண்டிருந்தன். ஜேர்மன் செப்பேட்டும் ஊர் நாயும் கலந்ததில ஒரு தனி வடிவு. நான் அதைப் பார்த்துக் கொண்டி ருக்க அது சட்டென்று தலையை நிமிர்த்தி காதை அங்கையும் இங்கையும் திருப்பி உசாரடைஞ்சுது. கண்ணை மூடிக் கண்ணைத் திறக்கிறதுக்குள்ள கேற்றடிக்குப் போட்டுது. என்னடாவென்று பார்த்தா, அது தபால்காரன் நானும் வாசல் பக்கம் போனன். என்னைக் கண்டதும் தபால்காரர் குரைக்கத் தொடங்கிட்டார். "நீங்கள் நாய்களை கட்டி வளர்க்காதேங்கோ அது எப்பப் பார்த்தாலும் என்ர மணிச் சத்தம் கேட்ட உடனேயே என்னைத் துரத்திக் கொண்டு வருகுது. நான் காலைத் தூக்கி சைக்கிள் கான்டிலுக்கு மேல போட்டுக் கொண்டு சீவனைக் கையில பிடிச்சுக்கொண்டு ஓடவேண்டியிருக்கு" என்று கொதிச்சார். இதைக் கேட்டுட்டு நான் சொன்னன் "காலைத் தூக்கி காண்டில்ல போடேக்க மணியைக் கவனமா பார்த்துக்கொள்ள வேணும். அந்த நேரத்தில மணியடிச்சா நாய் விடாது எட்டிக் கவ்விப் போடும்" என்று. "உங்களுக்கு நக்கலும் நையாண்டியும்தான்" என்று கத்திப்போட்டு அவர் போயிட்டார். இந்தக் காலத்தில ஒண்டையும் கட்டி வைக்கேலாது பாருங்கோ. எல்லாம் கட்டற்றுப் போயிட்டுது. எங்கட எல்லாத்துக்குள்ளையும் எல்லாம் புகுந்து அது அதுகள் எல்லாம் எங்களைக் கட்டிப் போடுதுகள். நாங்கள் என்னத்தை எதைக் கட்டிப்போடுறது. உந்தத் தொழில்நுட்பத்தால எல்லாத்திலையும் கட்டற்ற நிலைமைதான் என்று மனசுக்குள்ள நினைச்சுக் கொண்டு கடிதத்தை உடைச்சன்.

துணைத் தூதரகம் ஒன்று அனுப்பி வச்சிருந்த அழைப் பிதழ் அது. அவையளிண்ர நாட்டுத் தினம் ஏதோவாம் வரட்டாமாம் என்று இருந்திச்சு. காலையும் பின்னேரமும் கொடியேற்றம் கொடியிறக்கம் என்று பலதும் பத்துமான நிகழ்சிகளோட இரவுச் சாப்பாட்டுக்கும் வரட்டாமென்று இருந்தது. சரி கனநாளா நல்ல சாப்பாடு இல்லாமல் நாக்கு செத்துப்போய்க் கிடக்கு எதுகும் இராப்போசனத்துக்குப் போய்ப் பாப்பம் என்றிற யோசனையோட என்ர பழைய மோட்டார் சைக்கிளுக்கு புகைபரிசோதித்து வரிகள் எடுக்கிற வேலைக்காக வெளிக்கிட்டுப் போயிட்டன்.

மோட்டார் சைக்கிள ஸ்ராட் பண்ணி மெல்லக் கொண்டு போய் "புகையைப்பார் தம்பியென்று"போட்டு ஒரு கரை யில இருக்க, தெரிஞ்ச பெஞ்சனியர் ஒருத்தரும் வந்தார். "நான் இப்பத்தான் பெஞ்சனியர் சங்கக் கூட்டத்துக்குப் போட்டு வாரன்" என்றார். "கிழடுகள் கூடிக்கதைக்கிறது ஒரு நல்லவிசயம்தானே" என்றன் நான்.

"இந்தக் கிழமை முழுக்க ஒரே கூட்டங்கள்தான் மூன்று நாளுக்கு முன்னம்தான்அன்னை திரேசாவின்ர நினைவு நாள் கொண்டாட ஒரு கூட்டம் போட்டவை அதுக்குப் போனனான்" என்றார். "ஆமோ! அப்பிடியோ! பக்கத்து நாட்டுக்கா ரர் தங்கட ஆக்கள் எல்லாற்ற ஆண்டுத்துவசத்தையும் எங்களக் கொண்டாடச் செய்யிறாங்கள். நாங்கள் நல்லா மென்று விழுங்கிறம்" என்றன் நான். "அவங்கள் எள் ளென்றா எண்ணெய்யா நிக்க எங்கடையாக்களும் தயாரா நிக்கினம் தானே! பிறகென்னத்தைச் சொல்லுறது" என்று நானே பொருமியும் கொண்டன்.

"இப்ப கிட்டடியில அவையளின்ர அரசமைப்பை உருவாக்கின ஆரோ ஒருத்தருக்கும் விழா எடுத்தவையெல்லோ! அந்தாளின்ர பேரையே நான் இப்பத்தான் கேள்விப்பட் டன்" என்றார் பெஞ்சனியர். "போற போக்கில நாங்கள் கெதியா அவையளின்ர ஒரு மாநிலமா மாறிடுவம். கவலைப் படாதீங்கோ!" என்று நான் அவரைச் சமாதானப்படுத்தினன். வேற என்னத் தைச் சொல்ல நான்.

எங்கட ... தைக் கேட்டுக்கொண்டு பக்கத்தில நிண்டிருந்த பெடியன் சொன்னான் "நீங்கள் சொல்லுறது தான் சரி. அவையளின்ர விழாக்களைக் கொண்டாடுறது. தானே இப்ப எங்கட மாகாணசபையின்ர முக்கியமான வேலைபோலயிருக்கு. நல்லூருக்கு ஒவ்வொரு வருசமும் ஆட்டக்காரரையும் பாட்டுக்காரரையும் கூட்டிக்கொண்டு வாறதுக்கு எங்கட மகாகண சபைக்காரர் தூக்கியாடுற காவடியப் பார்க்கச் சகிக்கேல்லை. போதாக்குறைக்கு வருசம் வருசம் பல இலட்சத்திற்கு மேல அவையளின்ர விழாக் களுக்கென்று மாகாண சபைக்காரர் செலவழிக்கினமாம்" என்றான்.

நான் திடுக்கிட்டுப்போனன். பகலில பக்கம் பார்த்துக் கதை எண்டு சும்மாவே சொல்லினவை முன்னோர். பெடியன் பார்க்க வாட்டசாட்டமா இருந்தான். ஜிம் முக்குப் போய் உடம்பை முறுக்கேத்தியிருப்பான்போல! உடம்பை மட்டுமில்லை மூளையையும் உர மேத்தியிருப்பான் போலக் கிடந்தது பார்க்க.

"போனமுறை யோகா தினத்துக்கு எங்கட புலம் பெயர் வர்த் தகர் ஒருத்தர் பத்து லட்சம் கொடுத்தவ ராம். ஆனாலும் விழாவில அவருக்கு மூன்றாம் தரத்திலதான் மரியாதையாம். அதுவே எங்கடையாக்கள் ஏதும் கலை நிகழ்ச்சி என்று போய் நின்றா இவையள் எல்லாம் ஏதும் குடுப்பினமோ என்று சொல்லுங்கோ! அங்கையென்றால் கூழைக் கும்பிடு போட்டுக் குனிஞ்சு குடுப்பினம்" என்றான் பெடியன். அவனுக்கு ஏதோ கனக்க விசயம் தெரிஞ்சிருக்கும்போல.

"ஐயா! எல்லாம் பாஸ்" என்றான் மோட்டார் சைக்கிளப் பரிசோதிச்ச பெடியன். எழுப்பி வீட்டுக்கு வந்தன். மனிசி தந்த சாப்பாட்டைச் சாப்பிட்டிட்டு எப்பனுக்குக் கட்டில்ல சாய, மேசை யில கிடந்த, காலையில வந்த இன்விரேசன் கார்ட் என்னைப் பார்த்துச் சிரிச்சுது. முறைச்சுப் பார்த்துப் போட்டுத் திரும்பிப் படுத்திட்டன். அப்பிடியே நித்திரையாப் போனன். எழும்பிப் பார்க்கேக்க நேரம் இரவு ஏழரை மணி. இப்பவும் கார்ட் என்னைப் பார்த்துச் சிரிச்சுது. பறவாயில்லைப் பார்ப்பம் என்று வெளிக்கிட்டன்.

அங்க கல்வியங்காட்டுக் கிழவர் சிவிகேயர் பேசிக் கொண்டிருந்தார். "நீங்கள் நல்லா ஊடுருவியிருக்கிறியள் என்றது தெரியும். தீர்வுக்கு உதவுறதுதான் முக்கியம்" என்று தூதற்ற முகத்துக்கு நேரயோ சொல்லிக்கொண்டிருந்தார். அவர் மேடையில அசடு வழியச் சிரிச்சுக் கொண்டிருந்தார்.

பக்கத்தில இருந்தவர் சொன்னார், "இந்த மனுசனுக்கு என்ன விசரோ! வந்தா நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டிட்டு பேசாமல் ஒரு சிரிப்பச் சிரிச்சுப் போட்டுப் போறத்துக்கு, மேடையும் மைக்கும் கிடைச்சிட்டுது என்றுபோட்டு கண்டதையும் பேசி வில்லங்கத்தை விலைக்கு வாங்கப் போகுது" என்று. ஏதோ அந்த மனுசனுக்காவது கொஞ்சம் துணிச்சல் இருக்கே என்று நினைச்சன் சொல்லேல்ல.

எழும்பிப் போய் சாப்பாட்டுக் கோப்பையை எடுத்துக் கொண்டு சாப்பாட்டு வரிசையில நிண்டன். எனக்கு முன்னாலையும் பின்னாலையும் நிறையப் பேர் நிக்கினம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை அழித்தொழித்த பெரும் தலைவன் மகிந்த

## கருணா அம்மான் புகழாரம்

கொழும்பு, ஜன. 29

உலகத்திலே அழிக்க முடியாத பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து, இன்று இந்த நாட்டுக்கே ஒரு விடுதலையைத் தேடித்தந்த மாபெரும் தலைவன் தான் எங்களுடைய தலைவர் மதிப்பிற்குரிய மகிந்த ராஜபக்ச. இவ்வாறு கருணா அம்மான் என்று அறியப்பட்ட முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார். நுகேகொடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்சவை நாங்கள் ஒருபோதும் மறக்க முடியாது. உலகத்திலே அழிக்க முடியாத பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழித்து, இன்று இந்த நாட்டுக்கே விடுதலையைத் தேடித்தந்த ஒரு மாபெரும் தலைவன் தான் எங்களுடைய தலைவர் மதிப்புக்குரிய மகிந்த ராஜபக்ச. ஆட்சியில் உள்ள அரசு 2016ஆம் ஆண்டுக்குள் தீர்வைப் பெற்றுத் தருவோம் எனக் கூறித் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளது. இந்த அரசுக்கு வாக்களிக்கக் கோரிய கூட்டமைப்பு இன்று மக்களிடம் செல்வாக்கை இழந்துள்ளது - என்றார். (த-5)

# உள்ளூராட்சித் தேர்தல் ஏப்ரலில் சாத்தியமாகா

## எல்லை நிர்ணய வர்த்தமானி மேலும் இழுத்தடிப்பு

கொழும்பு, ஜன 29

எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை தொடர்பில் வெளிவர வேண்டிய வர்த்தமானிப் பிரசுரம் இம்மாதம் 31ஆம் திகதியும்வெளிவருவதற்கான அறிகுறிகள் தென்படாததால் உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலும் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இல்லையென அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏப்ரல் விடுமுறைக்கு முன்பு இந்தத் தேர்தல் நடைபெறுமென அரசு தெரிவித்துள்ள போதிலும் அதற்கான எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையில் உள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டுமென அமைச்சர் பைசர் முஸ்தபா குழுத் தலைவர் அசோக பீரிஸுக்கு தெரிவித்துள்ளபோதிலும் அந்தக் குறைபாடுகள் தொடர்பில் குழு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்பற்றி விளக்கமளிக்குமாறு அசோக பீரிஸ் அமைச்சருக்குக் கடந்த 22ஆம் திகதி கடிதமொன்றை அனுப்பியிருந்தார். எனினும், இதுவரை அந்தக் கடிதத்துக்கான பதில் கிடைக்கவில்லை எனவும் குழுவின் அறிக்கை அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பல்வேறு நொண்டிச் சாட்டுக்கள் கூறப்பட்டு வருகின்றனவே தவிர, ஆக்கபூர்வமான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (த)

### கால்கோள் விழா

ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் கால்கோள் விழா நாளை திங்கட்கிழமை காலை8.30மணிக்குஆவரங்கால் மத்திய முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.முதன்மை விருந்தினராகக் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப்பொதுச் சுகாதாரப்பரிசோதகர் சி.சிவதர்ஷனும், சிறப்பு விருந்தினராக ஆவரங்கால் சிவன் தேவஸ்தான தர்மகர்த்தா அ.தில்லைநாதனும் கலந்து கொள்வர். (த-ரி)

### போத்தலால் குத்தி பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜன. 29

யாழ்ப்பாணம், கல்லுண்டாய் வெளியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பெண் இனம் தெரியாத ஒருவரால் போத்தலால் குத்தப்பட்டுக் காயமடைந்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த பெண் எழுப்பிய அவலக் குரலையடுத்து அங்கு நின்றவர்கள் தாக்குதலாளியை விரட்டிச் சென்ற போதும் அவர் ஓடித் தப்பியுள்ளார்.

காயமடைந்த பெண் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-101)

# அரசியல்வாதிகளுக்கும் விருது வழங்கும் திட்டம்

## அவசியம் என்கிறார் மைத்திரி

கொழும்பு, ஜன. 29

தற்போதைய அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளை ஆராய்ந்து விருது வழங்கவேண்டிய தேவையுள்ளதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பல்வேறு துறைகளில் விருது வழங்கப்படுவது போல அரசியல்வாதிகளுக்கு விருது வழங்கும் திட்டமொன்று உள்ளதா என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது காலத்தின் தேவையாகவும் உள்ளது. தொழில் புரியும் மக்களை அடிப்படையாக் கொண்ட ஒரு மத்தியஸ்தர் குழுவை இதற்காக நியமிக்கலாம். ஏனெனில், அவை அனைத்தினதும் அடிப்படைப் பொறுப்பு அங்குதான் உள்ளது - என்றார். (த-4)

### பாவனைக்குதவாத 35,000 கிலோ அரிசி

கெக்கிராவையில் மீட்பு

கொழும்பு, ஜன. 29

பாவனைக்கு உதவாத 35 ஆயிரம் கிலோ கிராம் அரிசி கெக்கிராவை - பும்போகம பிரதேசத்திலுள்ள விற்பனை நிலையம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது நேற்றுமுன்தினம் இரவு இந்த அரிசி கைப்பற்றப்பட்டது. குறித்த அரிசி சந்தைக்கு விநியோகிக்கத் தயாராக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# ஹசனலியை வெட்டி விட தீவிர முயற்சியில் ஹக்கீம்

## தாருஸ்ஸலாமில் மந்திராலோசனை

முஸ்லிம் காங் கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், கட்சியின் தனக்கு நெருக்கமான 10 உறுப்பி னர்களுடன் தாருஸ்ஸலாமில்மந்திராலோசனையில் ஈடுபட்டதாகத் தெரிய வருகின்றது.

மந்திராலோசனையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த எந்த உறுப்பினரும் அழைக்கப்படவில்லை. விசுவாசமானவர்களை மட்டுமே ஹக்கீம் அழைத்துள்ளார்.

பேராளர் மாநாட்டில் எடுக்கப்படவேண்டிய தீர்மானங்கள் மற்றும் கட்சியி லிருந்து முக்கிய பதவிநிலைகளை இல்லாமல்செய்வதற்கான முடிவுகளும் இங்கு எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி எம்.ரி.ஹசனலிக்கு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவது, கட்சி யின் செயலாளர் பதவிக்கு எக்காரணம்கொண்டும்ஹசனலியை நியமிப்பதில்லை, தவிசாளர் மற்றும் செயலாளர் நாயகம் என் கின்ற பதவி நிலைகளைக் கட்சியின் யாப்பிலிருந்து இல்லாமல் செய்தல், தவிசாளர் மற்றும் செயலாளர் நாயகம் பதவிநிலைகளை இல்லாமல் செய்வது தொடர்பில் கட்சிக்குள் உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளிக் காட்டி னால் அதிகாரம்மிக்க செயலாளர் நாயகமாகச் சட்டத் தரணி நிசாம் காரியப்பரை நியமித்தல், பிரச்சினைகள் ஏற்படாத விடத்து டம்மிச் செயலாளராக மன்சூர் ஏ.காதரை தொடர்ந்தும் செயற்பட வைப்பது போன்ற முக்கிய முடிவுகள் இதில் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருவர் கூட்டத்தில் நடந்த விடயங் களைச் செயலாளர் நாயகம் ஹசனலிக்குத் தொலைபேசியில் தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து செயலாளர் நாயகம் இல்லாத நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றுக் கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டுக்கு ஹசனலி, வந்துள்ளார். (த-4)


### இவ்வார வேலைவாய்ப்புக்கள்

பிரபல நிறுவனங்கள், அலுவலகங்கள், சுப்பர் மார்க்கெற்கள், காட்சியறைகள், ஹோட்டல்கள், வைத்தியசாலைகள், நிதிநிறுவனங்கள், வியாபார நிலையங்கள் ஆகிய இடங்களில் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கூடிய பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உண்டு.

| | |
|---|---|
| Manager - 1 | Attendant - 10 |
| Accountant - 3 | Sales Executive - 5 |
| Cleaning Supervisors - 5 | Petrol shed workers - 10 |
| Receptionist - 2 | Sales Man/ Womens - 10 |
| English teacher - 2 | Pharmacist - 2 |

உங்கள் திறமைக்கேற்ப நீங்கள் விரும்பும் ஊதியத்துடன் விரும்பிய இடத்தில் வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள விரைந்து சுயவிவரக்கோவையுடன் நேரில் வாருங்கள்.

திங்கள் - வெள்ளி (10a.m - 4p.m) (AJA 00648 (14,17,18)

WIN STAR JOB BANK

106, தபாற்பெட்டிச்சந்தி, பலாலிவீதி, திருநெல்வேலி.

021 320 2789
Fb: winstarjob bank
Web: www.winstarjaffna.com



### உற்பத்தித் தொழில் முன்னணியில் திகழும்

## என். வைத்திலிங்கம் நிறுவனம்

### யாழ்ப்பாணக் கண்காட்சியில்

"இந்த வருடமும் யாழ்ப்பாண சர்வதேச கண்காட்சியில் பங்குபற்றுவது எமக்குச் சந்தோஷம் தருகிறது" என்று என். வைத்திலிங்கம் நிறுவனத்தின் பொது முகாமையாளர் கூறினார்.

நாம் 1922 இல் இணைக்கப்பட்டு 95 வருடங்களாக வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளோம். எமது நிறுவனம் முதலில் கொழும்பில் வியாபாரத்தைத் தொடங்கி, யாழ்ப்பாணத்திலும் கட்டட நிர்மாண நிறுவனமாக விளங்கியது. 1960 இல் இந் நிறுவனம் முள்ளுக்கம்பி, கம்பி ஆணிகள், திருகாணி உற் பத்தியைத் தொடங்கியது. 1967 இல் நாம் ஜப்பான் நாட்டில் முதன்மையான இரண்டு கம்பனிகளான கவர் சக்தி ஸ்ரீல், மறுபாணி கூட்டுத்தாபனம் என்பவற்றுடன் இணைந்து றிவர் ப்ராண்ட் என்னும் நாமத்துடன் சந்தைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்நிறுவனம் நீண்ட சரித்திரத்துடன் தற்போதும் உற்பத்தியிலும் விற்பனையிலும் சிறந்து விளங்குகிறது. நாம் எப்போதும் கூரைத் தகடு உற்பத்தியில் முன்னணியில் நின்று தனியார் நிறுவன வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளோம். எமது உயர்தர உற்பத்திகளில் பல்வேறு அழகிய நிற மற்றும் கல்வனைஸ்ட்றிவர் ப்ராண்ட் கூரைத்தகடுகள், THORN முள்ளுக்கம்பிகள், இரும்பு ஆணிகள் என்பன அடங்கும்.

அண்மைக்காலத்தில் எம்மால் அறிமுகப்படுத்தப்பட்ட உன்னதமான பொருள்களில் கல்துகள்கள் பதிக்கப்பட்ட இரும்புக் கூரையும் ஒன்றாகும். அறிமுகப்படுத்திக் குறுகிய காலத்திலேயே முன்னணி சுற்றுலா விடுதிகள் மற்றும் வீடுகள் என்பவற்றில் பொருத்திப்பார்ப்பவர்களை பிரமிக்க வைத்தது. இவ் வகைக் கூரைகளின் சில சிறப்பம்சங்கள்.

- துருப் பிடிக்காத நீண்ட காலப் பாவனை
- குறைந்த கட்டுமான, ஆயுட்கால செலவு
- தீவிர வானிலைகளுக்கு எதிராக உயர்ந்த பாதுகாப்பு
- வெப்பம், நெருப்பு, ஈரப்பதன், நீர் மற்றும் பாசி எதிர்ப்புத் திறன்
- மழைச்சத்தம் குறைப்பு
- கண்ணைக் கவரும் ஆடம்பர அழகு

எமது இணை நிறுவனமான TINPAK (PVT) LTD பால்மா, தேயிலை, உணவுப் பொருட்கள், தீந்தைகள் முதலியன அடைப்பதற்கான அச்சிடப்பட்ட தகர குவளைகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்காகவும் உற்பத்தி செய்கிறது. அத்துடன் Ipaint வர்ணத் தீந்தைகளை உயர்தர கட்டுப்பாட்டுடன் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, சர்வதேச தரங்களுக்குத் தயாரிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரங்கள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## தேவை

அனைத்து விதமான பழைய அலுமினியம்.
Lithosheet, அலுமினியக்கம்பி என்பன மொத்த மாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் கொள்வனவு செய்யப்படும்.

Elephant Metal & Aluminium Works (pvt) Ltd.
Amphanai, Thellippalai, Jaffna.

(J.7717)
(22,18)

**021 224 3338, 077 348 3557**

## விற்பனைக்கு உண்டு

அனைத்து விதமான அலுமினியப் பாத்திரங்களும் தரமான முறையில் உற்பத்தி செய்து நியாயமான விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.

Elephant Metal & Aluminium Works (pvt) Ltd.
Amphanai, Thellippalai, Jaffna.

(J.7718)
(22,18)

**021 224 3338, 077 348 3557**

## காணி / வீடு விற்பனைக்குண்டு

சுன்னாகம் நகர் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள சுன்னாகம் - மல்லாகம் 'பிரதான வீதியில் லோகா சைவ உணவகத்துக்கு அருகில் உள்ள தில்லைசிட்டி வீதியில் (100m) 3 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு (சகல வசதிகளுடனும்) விற்பனைக்குண்டு.

**004 176 645 4669, 077 244 6103**

## செவிப்புலன் சோதனை மற்றும் பேச்சுப் பயிற்சி

எமது நிறுவனம் செவிப்புலன் சோதனைகளும் பேச்சுப் பயிற்சி வகுப்புக்களுடன் வேம்படிக் கல்லூரி வீதியில் புதுப்பொலிவுடன் இயங்குகின்றது. எமது பயனர்கள் புதிய முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

**Medcon Hearing Care Center,**
No: 171, 1st Cross Street,(Vembady Girls School Road)
Jaffna. - **077 012 4415, 021 492 3587**

## சட்டக் கல்லூரி பிரவேசப் பரீட்சை வகுப்புக்கள் - 2017

கொழும்பு, யாழ்ப்பாணம்,
வவுனியாவில் ஆரம்பமாக உள்ளன.
**நீங்களும் சட்டத்தரணி**
ஆகலாம்.

**தொடர்பு: கே. ஜீ. ஜோன்**
**சட்டத்தரணி**
**55/5 விவேகானந்த மேடு,**
**கொழும்பு - 13**

(V 190)
(14,17,18)

**077 670 5511 / 011 311 9975**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

**பிரெஞ்சு வகுப்புக்கள்**



பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்

இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.
உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
(இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.)



பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்.
(யாழில் வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் இல்லை.)

International Diploma A 1 பரீட்சைகட்டணம்
AF இல் படிப்போருக்கு 4000/=. ஏனையோருக்கு 10300/= யாழில் எங்கு படித்தாலும் இப்பரீட்சையை எமது AF இல் மட்டுமே எழுத முடியும்.

ஆரம்பம் சில தினங்களில், உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
**021 222 8093** 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதக்கடவை → AF [வெள்ளை மாடிக்கட்டடம்]

## PRASHANTH MULTI CENTER & PRASHANTH TUITION CENTER

**MANIPAI ROAD**
**(OPPOSITE UDUVIL GIRL'S COLLEGE)**
**UDUVIL.**

சகல விதமான பாடசாலை உபகரணங்களும் பாடப்புத்தகங்களும், பயிற்சி வினாத்தாள்களும், போட்டோ கொப்பி, லெமனேட்டிங் போன்றனவும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மற்றும் பிரசித்தி பெற்ற ஆசிரியர்களால் (G.C.E. O/L,A/L) கணிதம், பௌதீகவியல் பாடங்களும் நடத்தப்படும்.

**தொடர்புகளுக்கு: 077 868 9597**

## அலுவலக ஆண் உதவியாளர் பதவி வெற்றிடம் - 01

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையில் அலுவலக ஆண் உதவியாளர் வெற்றிடம் உள்ளது. 20-35 வயதுக்குட்பட்ட தகுதி உடையவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையில் உறவினர் அல்லாத இருவரின் சிபாரிசுகளுடன் தங்களது விண்ணப்பங் களை 05.02.2017 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,**
**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
**இல.67, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**

## விற்பனைக்கு

**பின்வரும் வாகனங்கள் உடன் விற்பனைக்குண்டு.**

01) Leyland 10891 Aluminum body
2016 24000 Km தொடரிலக்கம் LM
02) TATA 709 Full body
2016 15000 Km தொடரிலக்கம் LM
03) ISUZU 28 ஸ்ரீ

**அலுவலக தளபாடங்களும் விற்பனைக்குண்டு.**

(K/2828/01.88)

**S.Murugesu - 077 635 7024**

## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உறுதி ஒலி ஓசை மிக்க பெரிய மணிகள், குத்து விளக்குகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: பிள்ளையார் மெற்றல்**
**இல - 64, வைரவர் கோயில் வீதி,**
**வைரவப்புளியங்குளம், வவுனியா.**

(V 202)
(14,17,18)

**024 222 0129/ 024 222 2097**

## முக்கிய அறிவித்தல்

பரிமளா ஸ்ரோர்ஸ் தயாரிப்பான V.S.P நல்லெண்ணை எள்ளின் விலை அதிகரிப்பால் 30.01.2017 இல் இருந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் மனவேதனையுடன் தெரியப்படுத்துகிறோம்.

ஆக்க கூடிய சில்லறை விலை
1 போத்தல் 750ml-540/=
1 போத்தல் 350ml-270/=
1 போத்தல 200ml-160/=

**தயாரிப்பாளரும் ஏகவிநியோகத்தருமான**
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
**இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 9165, 021 222 4135**

(A/J/00513)
(22,17,18)

## கண்ணிவெடியகற்றுநர்களுக்கான பதவி வெற்றிடம்

THE HALO TRUST

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 16நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்கால வேலைக்காக மிதிவெடிப் பயிற்சிக்காக ஆண்,பெண் இருபாலாரிடமுமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ளவேண்டியது யாதெனில் கண்ணிவெடியகற்றலானது துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்க வேண்டிய கடினமான வேலையுமாகும். எமது தரமான நடவடிக்கைகள் மூலம் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வ தாகும். எனவே இதனைக் கருத்தில் கொள்ளும் விண்ணப்ப தாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர் பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : எமது முன்னாள் பணியாளர்களும் விண்ணப் பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளா கவே கருதப்படுவர்.

**மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வ முள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவைகளை எதிர் வரும் 03ஆம் திகதி மாசி மாதம் 2017அன்று வெள்ளிக் கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவ ரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.**

ஹெலோ ரஸ்ட், 450,திருநகர் மேற்கு,கிளிநொச்சி.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுக்கவேண்டும் என்று யாழ்ப் பாண மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. மோக னேஸ்வரன் தெரிவித்தார்.

ஹேலிஸ் நிறுவனத்தால் ஒரு மில்லியன் முருங்கைக் கன்றுகள் வழங்கும் ஜீவாதாரத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாவற்குழி மகா வித் தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இத னைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளின் இடவசதிகளைப் பொறுத்து முருங்கைக் கன்றுகளை வளர்ப்பதற்கு பிரத் தியேகமாகக் கன்றுகளை வழங்க இந்த நிறு வனம் முன்வரவேண்டும். பாடசாலைகளில் மாணவர்களுக்கு உணவுத் திட்டத்தின் கீழ் உணவு வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் உணவில் கூட இலை வகைகளைப் பாடசாலைகள் வழங்குவதில் சில இன்னல்களை எதிர்நோக்குகின்றன.

அரச தலைவர் செயலகத்தால் நடை முறைப்படுத்தப்பட்ட போசாக்குத்திட்டத்தில் கூந்த வருடப்புள்ளிவிவரத்தின்படி யாழ்ப்பாண மாவட் டத்தில் அநேகமானோர் போசாக்குக் குறை பாட்டுடன் வாழ்ந்து வருகின்றமையை அவ தானிக்கக் கூடியதாக உள்ளது. அதில் முக் கியமாகக் குருதிச் சோகை நோயால் பாதிப் படைந்தவர்கள் அதிகமாகக் காணப்படுகின் றனர்.

எமது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குருதிச் சோகை நோயின் தாக்கத்தில் சாவகச் சேரிப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. அடுத தடுத்த இடங்களில் ஊர்காவற்றுறை, சங் கானைப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. எங்கள் மாவட்டத்தில் பிறக்கின்ற குழந்தை கள் 2.5 கிலோ நிறைக்கு குறைவான நிலை யிலேயே பிறக்கின்றன என யாழ்ப்பாண மாவட்ட சுகாதாரத் திணைக்கள அறிக்கை குறிப்பிடுகின்றது. பாடசாலை மாணவர் களின் வளர்ச்சி வீதம் மிகவும் மோசமான நிலையிலேயே காணப்படுகின்றது. அவர்களின் வயதுக்கு ஏற்ற தோற்றங்களும், உயரங் களும் இல்லாத தன்மை காணப்படுகின்றது. எமது முன்னோர் 70 முதல் 80 வயது வரை ஆரோக்கியமாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் நாம் இளம் வயதிலேயே பல நோய் களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை யில் வாழ்ந்து வருகின்றோம். இதற்குக் கார ணம் எமது வாழ்க்கை முறை மற்றும் உண வுப் பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகும். பொதுவாக அவதானித்துப் பார்த்தால் வறுமை யில் வாழும் குடும்பங்கள் தங்கள் உணவுத் தேவைகளுக்காக வீட்டுத் தோட்டங்கள் போன் றவற்றை உருவாக்கித் தங்களுக்குத் தேவை யான உணவுகளைப் பெறுகின்றனர். இத னால் அவர்களின் ஆரோக்கியம் ஓரளவு பேணப்படுகின்றது. ஆனால் வசதி படைத்த வர்கள் கடைகளில் இரசாயன உரங்கள் பாவிக்கப்பட்ட உணவுகளையே உண்கின் றனர். இதை வைத்துப் பார்க்கும்போது வறியவர்களே போசாக்கான உணவுகளை உண்கின்றனர் என்பதை அவதானிக்க முடி கின்றது-என்றார். (த-8)

## கர்ப்பிணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலேயே, யாழ்ப்பாணம் ஐந்து சந்தி யைச் சேர்ந்த 2 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர். மேலதிக தகவல்கள் எதனையும் பொலிஸார் வெளியிடவில்லை.

ஊர்காவற்றுறையில் ஞானேஸ்வரன் மேரி ரம்சியா (வய்து 27) என்ற 8 மாதக் கர்ப்பி ணிப் பெண் கடந்த செவ்வாய்க்கிழமை மண் டையோட்டு எலும்புகள் நொறுங்கி மூளை சிதையும் அளவுக்குக் கொட்டனால் அடித்துக் கொல்லப்பட்டார். கத்தியாலும் வெட்டிக் காயப் படுத்தப்பட்டிருக்கிறார். அவர் உயிரிழந்ததும் அவரது வயிற்றிலிருந்த சிசுவும் உயிரிழந் தது.

கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களைக் கண்கண்ட சாட்சியான சிறுவனும் உள்ளார். அந்தச் சிறுவனுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❝ பல நாடுகளுக்கு நான் பயணம் செய்துள்ளேன். நிறைய பேரை சந்தித்துள்ளேன். நான் ஒரு "ஸ்ரீலங்கன்" என்று கூறியதும் அவர்கள் முதலில் தெரிவிப்பது "ஸ்ரீலங்கன்ஸ்" எப்போதும் ஒரு புன்னகையுடன் தான் எங்களை வரவேற்பார்கள் என்று. அது ஒரு உண்மையான விடயமும் கூட. இலங்கையர்க்குள்ள ஒரு அடையாளம். எங்களில் அனைவரையும் உண்மையான ஒரு நேசத்தோடு பார்க்கிறோமா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. நாமாகவே அதை ஒரு உணர்வுபூர்வமாக கொண்டு வர வேண்டும். அப்படி செய்தால் நன்றாயிருக்கும். ❞

**இளங்கோ ராம்**
விளம்பரப்பட இயக்குநர்



**புன்னகையுடன் அனைவரையும் அரவணைக்கும்**

**உண்மையான இலங்கையராகத் திகழுங்கள்**

**#IamaTrueSriLankan**

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம்
OFFICE FOR NATIONAL UNITY AND RECONCILIATION

**வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்**

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

UNIVERSITY of CAMBRIDGE ESOL Examinations · ICDL · bcs · abe Accredited College · SQA

## இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

06, February, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## வார இறுதி வகுப்புகள் — 04 Months

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

05, February, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## IELTS

**சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை**

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## KIDS' Class — Grade 1-10

**சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்**

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**British Way English Academy**

**Contact (Jaffna Branch) : 021 300 55 55**
Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா நடராஜா



கருகம்பனையைப் பிறப்பிடமாகவும், வசாவிளானை வசிப்பிடமாக வும், தற்போது தெல்லிப் பழையில் வசித்து வந்த கந்தையா நடராஜா நேற்று (28.01.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் சுப்பிர மணியத்தின் பாசமிகு சகோதரனும் கன்கநாயகியின் அன்புக் கணவரும் குணராஜசிங்கம், கமலாதேவி, சாரதாதேவி, சத்தியபாமா, சரோஜினிதேவி, சத்தியா ஆகியோரின் அன்பு த்தந்தையும் ஜெகதாம்பிகை, தில்லைநடராஜா, நாகேஸ்வரன், சிவராஜசிங்கம், ஸ்கந்தகுமார், ஸ்ரீபாஸ்கரராஜா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலய வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நாளை (30.01.2017) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**சைவப்பிரகாச வித்தியாலய வீதி,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**ந. குணராஜசிங்கம்**
**(மகன்)**

### திருமதி சரஸ்வதி குமாரசாமி



41,சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி குமாரசாமி 28.01.2017 சனிக் கிழமை காலை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் மனைவியும் காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை -மாணிக்கம் தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பு கோபாலசிங்கம் காலஞ்சென்ற தம்பு கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் கெங்காதரன் (முன்னாள் ஆசிரியர் யா/இந்துக்கல்லூரி,வவு/தமிழ் ம.ம.வி) வேதநாயகி(ஓய்வு பெற்ற கணக்குப் பதிவாளர்-கச்சேரி-யாழ்) செந்தில் மனோகரன் (கனடா),சுரேந்திரன்(முன்னாள் சீமெந்துக் கூட்டுத் தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவளராணி,காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் மதிவதனி (கனடா),செந்தில்மதி(ஆசிரியர் புத்தூர் இந்து ஆரம்பபாடசாலை)ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்ஷிதா (ஆஸ்திரேலியா),முகுந்தன்(உதவி பிரதேசசெயலாளர்-செட்டிகுளம்) சங்கீதா(ஆசிரியை,யாழ் இந்துக் கல்லூரி),சர்மிளா, கீர்த்திகா (கனடா), செந்தூரன் (ஆஸ்திரேலியா), கிருபாசக்தி (கச்சேரி-யாழ்),நிஷாந்தன் (தொழில் நுட்ப வியலாளர்) யாதவன் (மாணவன் யா/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் டிவேஸ், டிஸ்னா ஆஸ்திரேலியா)தனுஷ்கா,தமன்யா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்று க்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**41,சங்கிலியன் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 790 0014**
**071 442 1552 077 296 8338**
**077 7286 199**

# வாளுடன் வந்தவர்கள் கோயில் முன் அட்டகாசம்

யாழ்ப்பாணம், ஜன.29

யாழ்ப்பாணம் சிவன் கோயில் முன்பாக நேற்றுமுன்தினம் இரவு 11 மணி யளவில் 3 மோட்டார் சைக்கிளில் வந்த 9 பேர் வாள் , கத்தி சகிதம் வீதியால் சென்றவர்களையும் வர்த்தக நிலைய உரிமையாளர் ஒருவரையும் அச்சுறுத்தியுள்ளனர். 9 பேரில் 8 பேர் முகங்களை கறுப்புத் துணியால் மூடிக் கட்டியிருந்தனர். ஒருவர் துணியேதும் கட்டாமலே நின் றிருந்தார் என நேரில் கண்டவர்கள் கூறினர்.

மோட்டார் சைக்கிளின் இலக்கத்தை வீதியால் பயணித்த ஒருவர் குறித்து அது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிசாருக்குத் தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தபோதும் வன் முறையில் ஈடுபட்டிருந்தோர் அங்கிருந்து தப்பிச் சென்று விட்டனர்.

இவ்வாறு மக்களால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கங்களை வைத்து பொலிஸார் உரிமையாளர்கள் தொடர்பில் தேடுதல் நடத்தி வருகின்றனர். இதில் ஒரு மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பகுதியில் நீண்டகாலமாகப் பொலிஸாரினால் தேடப்படும் குற்றவாளியினுடையது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

அதேபோன்று ஏனைய மோட்டார் சைக்கிள்கள் தொடர் பிலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட் டுள்ளனர் . (த-10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சற்குணபாலதேவி மாசிலாமணி



மண்டைதீவு 2 ஆம் வட்டாரத்தை பிறப்பி டமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குண பாலதேவி மாசிலாமணி நேற்று (28.01.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான குண ரத்தினம் -பாக்கியம் தம்பதி யினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் சிவகங்கை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற மாசிலாமணியின் அன்பு மனைவியும் வவி, நிதி ,மதி, சுதன்,கண்ணன் காலஞ்சென்ற சுகந்தன் மற்றும் சுகந்தி,சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சலதரங்கம், ஸ்ரீமதி,சிவகுலசிங்கம் (ஓய்வு நிலை கிராம சேவையாளர்) தெய்வீகராணி ஆகியோரின்அன்புச் சகோதரியும் ஸ்ரீலிங்கம், திருலிங்கநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்றவர் களான பசுபதி, ஜெகநாதன் மற்றும் வசந்தமலர், தேவபாலன், காலஞ்சென்ற நித்திய ரத்தினம் மற்றும் நடேசமூர்த்தி,நடனசபாபதி காலஞ்சென்ற அருந்ததி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தீபநாத்,ஹரிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**2 ஆம் வட்டாரம்,**
**மண்டைதீவு. 077 372 0603**
**077 524 5568**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### திருமதி தெய்வநாயகி சுப்பையா



கோவிலாக்கண்டி மேற்கு, தச்சன் தோப்பை (வேலம் பிராய்) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி சுப்பையா நேற்று (28.01.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பொன்னார் சின்னத்தங்கம் தம்பதியாரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர் களான முத்துகுமார்- குஞ்சுபிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருளானந்தம், இராஜேஸ்வரி, சந்திராதேவி, புண்ணியமூர்த்தி, இராசரத்தினம், அரசகுமாரி, உதயகுமார், கருணாநிதி, கருணாகரன் (பிரான்ஸ்), தயாகரன்(ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகபூசணி, யோகரட்ணம், நல்லமுத்து, ரஜனி, கனகேஸ்வரி, ரவீந்திரன்(லண்டன்), கனகேஸ்வரி, கீதாஞ்சலி, அனுலா, நந்தா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.02.2017 புதன் கிழமை மு.ப.11 மணியளவில் சர்மிலன் மரக்காலை நீர்வேலி வடக்கு நீர்வேலி எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சர்மிலன் மரக்காலை,**
**[illegible]**
**நீர்வேலி.**

**தகவல்:**
**[illegible]**
**[illegible] 077 396 3612**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பதில் முதன்மை நீதியரசராக பிரசாத் டெப் நியமனம்

பதில் முதன்மை நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசாத் டெப் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று முன் தினம் நீதியரசர் பிரசாத் டெப் பதில் முதன்மை நீதியரசராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வில் ஜனாதிபதியின் செயலா ளர் பீ.பி. அபயக்கோனும் கலந்துகொண்டார். முதன்மை நீதியரசர் கே.சிறிபவன் வெளிநாட்டுப் பயணமொன்றை மேற் கொண்டுள்ள காரணத்தால் பதில் முதன்மை நீதியரசராக பிரசாத் டெப் நியமிக்கப்பட்டார். (ஐ)

## இலங்கையை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றியமைக்கத் திட்டம்

*ரணில் தெரிவிப்பு*

இலங்கையை அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற நிலையில் இருந்து, அபிவிருத்தியடைந்த நாடு என்ற கட்டத்துக்குக் கொண்டு செல்வதே எமது நோக்கம். இந் தப் பணி மிகப் பெரிய சவாலான விடயம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்க தெரிவித்தார்.

முத்துராஜவல கைத்தொழில் வலயத்தில் நேற்றுமுன்தினம் தொழில் நகரத்தின் முதற்கட்டப் பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோதே தலைமை அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள இளைஞர்களுக்குச் சிறந்த தொழில்வாய்ப் பைப் பெற்றுக்கொடுப் பதற்கும், அவர்களுக்கு செழிப்பான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்கும் நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழில்வாய்ப்புத் துறையில் தீவாக இருக்கும் இலங்கையை உப கண்டமாக மாற்ற அனைத்துப் பணி களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையை இந்து சமுத்திரத்தின் கேந்திர ஸ்தானமாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். போருக்குப் பின்னர் முதல் தடவையாக பெரிய அபிவிருத்திச் செயற்றிட் டங்களை ஆரம்பிக்க உள்ளோம். வரலாற்றில் ஆசியாவும், இந்து சமுத்திர வலயமும் பொருளாதாரத்தில் மேம்பட்டு இருந்த தருணத்தில் இலங்கை அதன் மத்திய நிலையை மாகச் செயற்பட்டது- என்றார். (ஐ)

# வடக்கில் சிங்கள - முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்வுக்கு ரூ. 3,000 மில்லியன்

## மீள்குடியேற்றச் செயலணிக்கு வழங்கியது மீள்குடியேற்ற அமைச்சு

யாழ்ப்பாணம், ஜன.29
வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள - முஸ்லிம் மக்களின் மீள் குடியமர்வுக்காக உருவாக்கப்பட்ட மீள்குடியேற்றச் செயலணிக்கு மீள் குடியேற்ற அமைச்சு 3 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. வீட்டுத் திட்டம், வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு மீள்குடியேற்றச் செயலணிக்குத் தனியான திட்ட அலுவலகமும் உருவாக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றச் செயலணி கடந்த ஆண்டு ஜூன் மாதம் உருவாக்கப்பட்டது. மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா, விவசாய அமைச்சர் துமிந்த திசாநாயக்க ஆகியோரை இணைத்தலைவர்களாகக் கொண்டு இந்தச் செயலணி இயங்குகின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனையும் செயலணியின் இணைத்தலைவராக உள்வாங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மீள்குடியேற்றச் செயலணிக்கு எதிரான தீர்மானமும் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தநிலையில் செயலணி வடக்கில் திட்டங்களை மேற்கொள்வதற்கு தனியான திட்டப்பணிப்பாளரும், ஒவ்வொரு மாவட்டங்களுக்கு ஒருங்கிணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலம் இடம்பெயர்ந்தவர்களுக்கு வீட்டுத் திட்டம், வாழ்வாதார உதவிகள் வழங்கல் என்பன முன்னெடுக்கப்படவுள்ளன. யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் முஸ்லிம் மக்களும், வவுனியாவில் சிங்கள மக்களும் இந்தத் திட்டத்துக்குத் தகுதியானவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-5,101)

## தபாலகத்துக்கு வாகனம்

யாழ்ப்பாணம், ஜன.29
யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கு வவுனியாலில் இருந்து வாகனம் ஒன்று எடுத்து வரப்பட்டுள்ளது.

குடாநாட்டுக்கான உள்ளூர் தபால் பொதிகள் போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன.

தற்போது வந்து சேர்ந்த வாகனம் மூலம் மேலும் கூடுதலான இடங்களுக்குத் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படும். தற்போது தபாலகத்தில் ஒரு வாகனம் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது. (ற-17)

## திட்டங்களுக்கு முன்மொழிவு

யாழ்ப்பாணம், ஜன.29
வலி. தென்மேற்கில் இரண்டு திட்டங்களும், வலி. மேற்கில் இரண்டு திட்டங்களுமாக மொத்தம் நான்கு உட்கட்டுமான திட்டங்களின் முன்மொழிவுகள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு கோரியுள்ளது.

வலி.மேற்கில் வட்டுக்கோட்டை, சுழிபுரம் பிரதேசத்தில் இரு சந்தைகளை சீரமைப்புச் செய்யவும், வலி.தென்மேற்கிலும் இரு சந்தைகளை சீரமைப்புச் செய்யவுமே முன்மொழிகள் கோரப்பட்டுள்ளன.

முன்மொழிவுகள் யாவும் வலி.மேற்கு, வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர்களின் பரிந்துரையுடன் முன்னளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு முன்னளிக்கப்பட்ட திட்டங்கள் அரச மாவட்டச் செயலர் நா.வேதநாயகனால் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ற-50)

## பொருத்து வீட்டுத் திட்டத்தால் நிலக்கீழ் நீருக்கும் ஆபத்தே

### வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.29
65ஆயிரம் பொருத்து வீடுகள் அமைக்கப்படும் போது அதே அளவான 'போர்க்' குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவற்றின் தாக்கங்கள் பாரதூரமானவை என்பதை நாம் அறிவோம். கொழும்பு அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் நீர்வளத்தை மீட்டெடுத்தல், பாதுகாத்தல், பங்கிடுதல், முகாமை செய்தல் எனும் விடயப் பரப்புக்களை உள்ளடக்கிய வடமாகாணத்துக்குப் பொருத்தமான ஒரு நீரியியல் கொள்கையை வகுப்பதற்கான ஆய்வரங்கு நேற்று யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் பன்னாட்டு, உள்ளூர் நிபுணர்கள் கலந்து கொண்டனர். ஆய்வரங்கில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-
எமது மாகாணம் பல விதங்களிலும் ஏனைய மாகாணங்களில் இருந்து வேறுபட்டது. நதிகள் அற்ற ஆனால் நற்குளங்களையும் கிணறுகளையும் கொண்ட பிரதேசம். தனித்துவமான ஒரு நீரியல் கொள்கை எமக்கு அவசியமாகின்றது. கொழும்பில் அல்லது ஏனைய மாகாணங்களில் வகுக்கப்படும் கொள்கையானது எமக்கு ஏற்புடையதாகும் எனக் கூற முடியாது.

கலந்துரையாடலின் பின்னர் ஏதேனும் ஒரு துறை பற்றி அரசியல் உயர் மட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களே கொள்கைக்கு அத்திபாரமாகின்றன. எவ்வாறு ஒரு துறை சம்பந்தமாக அபிவிருத்தி நடைபெற வேண்டும், சுற்றுச்சூழல் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் போன்ற அனைத்தினதும் வடிவமைப்பு கொள்கைக்குள் அடங்கும். மத்திய அல்லது மாகாண அரசு கொள்கையை வகுத்த பின் அதனைநடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு அந்தந்த அரச, மாகாண திணைக்களங்களுக்குண்டு.

சில நேரங்களில் கொள்கைக்கும் சட்டத்துக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படலாம். நாங்கள் கொள்கை வகுத்தலில் ஈடுபடும் போது சட்டத்தையும் கருத்திற் கொண்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சிலதடவைகளில் சட்டத்தை மாற்ற வேண்டியிருக்கும். சில வேளைகளில் கொள்கையை மாற்ற வேண்டி வரும். உதாரணமாக ஆழக் கிண்டும் போர்க் கிணறுகள் முன்னர் இருக்கவில்லை. ஆழத் தோண்டும் 'போர்க்' குழாய்க் கிணறுகளுக்கும் எமது வழமையான கிணறுகளுக்கும் வேற்றுமைகள் பல உண்டு. 'போர்க்' கிணறுகள் ஆழ்நீரை அள்ளிவந்து ஆபத்தான பின்விளைவுகளை விளைவிக்கக் கூடியவை. அவை பற்றி அப்போது கொள்கைகள் வகுக்கப்படவில்லை. தற்போது அவற்றை வகுப்பது அவசியமாகின்றது. ஆய்வரங்கு நடைபெறும் மூன்று நாள்களும் தொழிற்திறனுடன் வடமாகாணத்தின் நீர்வளத்தை மீட்டெடுத்தல் பற்றியும், பாதுகாத்தல் பற்றியும், பங்கிடுவது பற்றியும் முகாமைத்துவம் செய்தல் பற்றியும் ஆராயப்படவுள்ளது. அதற்கு அப்பால் கொள்கைகள் என்றால் என்ன, கொள்கை ஆவணம் தயாரிக்கப்படும்போது எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதில் கவனம் செலுத்தல் வேண்டும்.

உங்கள் பரிசீலனையானது எமது பொருளாதாரம், கலாசாரம், மதஅனுட்டானங்கள், போரின் பின்னரான சூழல் அனைத்தையும் மனதில் எடுத்து அதில் நீரின் பங்கு என்னஎன்பதை ஆராய் வதாய் அமைய வேண்டும். எமது நீர்வளத்தை ஆராய்ந்து அவற்றின் சிறப்பியல்புகளை, குறைபாடுகளை கணக்கில் எடுக்க வேண்டும். எமது உணவுத் தேவைகளையும் அதில் நீரின் பங்கையும் ஆராய வேண்டும். தற்பொழுது நடைமுறையில் இருக்கும் நீர்சம்பந்தமான சட்டங்களை ஆராயவேண்டும்.

நீர்முகாமைத்துவமானது நிலப்பயன்பாட்டையும் நீர்ப் பயன்பாட்டையும் இணைத்துச்செயற்படவேண்டும். நீரின் தரம், தன்மைபற்றியெல்லாம் ஆராய்ந்து முடிவெடுக்கப்படவேண்டும். சுன்னாகம் நீர் மாசுபடுதல் போன்றவை ஆராயப்பட்டு கழிவுப் பொருள்களின் வெளியேற்றல் பற்றியெல்லாம் இறுக்கமான தீர்மானங்களை நாங்கள் எடுக்க வேண்டும். இனியும் எமது நிலமும் நீரும் மாசுபடாதவாறு பாதுகாக்க வழிமுறைகளை நாங்கள் வகுத்துக் கொள்ள வேண்டு-என்றார். (ற-10)



## சுற்றுலாப் பயணிகளின் இருக்கைகள் உடைப்பு

பூநகரி, ஜன. 29
சுற்றுலாப்பயணிகள் அமர்வதற்கென கௌதாரிமுனை கடற்கரையில் பிரதேச சபை அமைத்திருந்த ஆசனங்கள் உடைக்கப்பட்டு கடலுக்குள் போடப்பட்டுள்ளன. அவற்றை வலைகள் அடித்துத் துப்புரவு செய்ய கடற்றொழிலாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

பூநகரிச் சந்தியிலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது கௌதாரிமுனை கடற்கரை. கடற்கரைக்கு தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்களின் நலன் கருதி பூநகரி பிரதேச சபையினர் 4 சுற்றுலா குடில்களையும் 7 சிமெந்து இருக்கைகளையும் அமைத்தனர்.

சிமெந்து இருக்கைகள் உடைக்கப்பட்டு அமரும் பகுதி கடலுக்குள் போடப்பட்டுள்ளன. அவற்றில் மீனவர்கள் வலைகளை அடித்துத் துப்புரவு செய்கின்றனர்.

இது தொடர்பாக பிரதேச சபையினர் கருத்துத் தெரிவிக்க மறுத்தனர். (ற-9)



## கடை உடைத்து பணம் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன.29
கற்சிலைமடுவில் மாற்றுத் திறனாளியின் கடை உடைத்து ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம், அலைபேசி மீள்நிரப்பு அட்டைகள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. கடையின் பின்புறக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 25 ஆயிரம் ரூபா பணத்தையும், அலைபேசி மீள்நிரப்பு அட்டைகளையும் திருடிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அன்று இரவு பிறிதொரு கடையிலும் திருட்டு முயற்சி நடந்துள்ளது. கடையில் இருந்தவர்கள் விழித்துக் கொண்டதால் திருடர்கள் தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது.திருட்டுத் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-10,500-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைக்கல்லாற்றில் விரைவில் புதிய பாலம்

## கட்டுமானப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பம்



கிளிநொச்சி, ஜன.29

பூநகரி ஏ-32 வீதி, மண்டைக்கல்லாற்றில் வெள்ளம் குறுக்கறுத்துப்பாயுமிடத்தில் சுமார் 400 மில்லியன் ரூபா செலவில் பாலம் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட முதன்மை பொறியியலாளர் கே.இளங்கீரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இதற்கான ஒப்பந்தம் ஜப்பானிய நிறுவனம் ஒன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதமளவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகும்.

ஜப்பான் அரசு வடக்கு மாகாணத்தில் எட்டுப் பாலங்களை அமைக்கவுள்ளது. அதற்காக 3 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. மன்னாரில் 3 பாலங்களும், வவுனியா, நவற்குழி, கைதடி, மண்டைக் கல்லாறு ஆகிய இடங்களில் தலா ஒரு பாலமும் அமைக்கப்படவுள்ளன. மன்னாரில் 3 பாலங்கள் அமைக்கப்படவுள்ளதால் ஒப்பந்த நிறுவனம் மன்னாரைத் தளமாகக் கொண்டு ஆரம்பப் பணிகளை மேற் கொண்டுள்ளது.

மண்டைக்கல்லாறில் அமைக்கப்படவுள்ள பாலத்துக்கான மதிப்பீட்டு அறிக்கை கடந்த ஒக்ரோபர் மாதம் ஜப்பான் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டது. இந்த மாதம் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கவிருந்தது. தற்போது மழை பெய்வதால் அடுத்த மாதமளவில் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

95மீற்றர்நீளம்கொண்ட கொங்கிறீற்பாலம் 21 மாதங்களில் கட்டி முடிக்கப்படும். - என்றார்.

மழை காலங்களில் மண் டைக்கல்லாறில் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாயும். அந்த வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும். படகு மூலமே பொதுமக்கள் போக்குவரத்துச் செய்தனர். முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்திய சாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை என்பவற்றுக்கு அம்புலன்ஸ் மூலம் நோயாளர்களைக் கொண்டு வருவதில் இக்கட்டு நிலை காணப்பட்டது. (ற-ய-21)



மழை காரணமாக மண்டைக் கல்லாறு பகுதியூடான போக்குவரத்து தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றது. படகின் மூலம் பாலத்தைக் கடந்து மறுகரையை அடைய வேண்டிய நிலையே காணப்படுகின்றது. வெள்ளம் வழிந்தோடிய பின்னரும் கூட இப்போது பாலம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. குறித்த பாலங்களில் குழிகளும் ஏற்பட்டுள்ளன. பாலத்தைக் கடக்கும் போது, சில வேளைகளில் வீதியை விட்டு விலகி பள்ளத்தினுள் விழ வேண்டிய நிலை காணப்படுகின்றது.

போக்கு வரத்துச் செய்வதற்கு மிகவும் பாரதூரமாக உள்ள மண்டைக்கல்லாறு பாலத்தை உடனயாக திருத்தித் தர வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

# கேப்பாபிலவுக் காணி விடுவிப்பு: இராணுவத்தினர் பொய்ப் பரப்புரை

## வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.29

கேப்பாபிலவு மக்களின் காணிகளில் 235 ஏக்கர் விடுவிக்கப்படுகின்றது என்று வெளியான தகவல்கள் பொய். கேப்பாபிலவு மக்களின் காணிகளில் ஒரு ஏக்கர் கூட விடுவிக்கப்படவில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

2016ஆம் ஆண்டு முல்லைத்தீவில் பெரும்பாலான மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர். கேப்பாபிலவு மக்களின் மீள்குடியமர்வு எட்டாக்கனியானது. அவர்களின் குடிமனைகள், விவசாய நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது. அவர்களின் சொந்தக் கிராமத்துக்கு அருகே சீனியாமோட்டைக் கிராமத்தில் வழங்கப்பட்ட காணிகளில் வீடுகள் என்று கூறப்பட்ட - இராணுவத்தால் அமைக்கப்பட்ட கூடுகளில் அவர்கள் வற்புறுத்தப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

கேப்பாபிலவு மக்கள் தமது சொந்தக் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டங்களையும், உணவு ஒறுப்புப் போராட்டங்களையும் நடத்தினர். வடக்கு முதலமைச்சர் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், சட்ட வல்லுநர்கள் அடங்கிய குழுவை இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்ய நியமித்தார். அந்தக்குழுவின் அறிக்கை இராணுவத்தினர் தற்போதுள்ள இராணுவத் தலைமையகத்தை தென்மேற்காக நகர்த்த வேண்டும். கேப்பாபிலவு மக்களை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் என்று பரிந்துரைத்தது.

இராணுவத்தினர் கேப்பாப்பிலவு மக்களிடம் அவர்களின் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன என்று நம்பிக்கையூட்டி அவர்களின் போராட்டங்களை வலுவிழக்கச் செய்தனர். எனினும் மக்களின் ஓரங்குலக் காணியைக் கூட அவர்கள் விடுவிக்கவில்லை.

சீனியாமோட்டையில் வற்றாப்பளையைச் சேர்ந்த 42 பேருக்குச் சொந்தமான 78 ஏக்கர் காணி மேட்டு நிலச் செய்கைக்குரிய காணிகளும், சூரிபுரத்திலுள்ள - இப்போது இலங்கையில் இல்லாத ஒருவருக்குச் சொந்தமான 70 ஏக்கர் காணியும், இன்னொரு வருக்குச் சொந்தமான 6 ஏக்கர் காணியுமே விடுவிக்கப்படுகின்றன என்று கடந்த 25ஆம் திகதி வித்தியானந்தாக் கல்லூரியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆனால் அன்று 234 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன என்று இராணுவத்தால் பொய்ப்பரப்புரை செய்யப்பட்டது. திட்டமிடப்பட்டு ஏமாற்றப்பட்ட கேப்பாபிலவு மக்கள் கடந்த 25ஆம் திகதி அமைதி வழிப் போராட் டத்தைத் தமது கிராமத்தில் நடத்தினர். அவர்கள் தமது சொந்தக் காணிகளில் குடியமரும்வரை போராட்டம் தொடரும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அவர்களின் போராட்டத்துக்கு நான் துணை நிற்பேன் - என்றுள்ளது. (ற)

# ரயில் மீது கல் வீச்சு

தென்மராட்சி, ஜன.29

தபால் ரயில் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் ரயில் பாதுகாப்பு அலுவலர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு தச்சன் தோப்பு புகையிரத நிலையத்தில் நடந்துள்ளது.

இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்ட ரயில் தச்சன்தோப்பு ரயில் நிலையத்தில் தரித்துக் கிளம்பியபோதே தாக்குதல் நடத்தப்பட்டது.

காயத்துக்கு இலக்கான பாதுகாப்பு அலுவலர் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் இறங்கி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

யாழ்ப்பாணம் - அனுராதபுரம் மார்க்கத்தில் கடமையாற்றும் அனுராதபுரத்தைச் சேர்ந்த எம்.ஏ.சிறிவர்த்தன (வயது-52) என்பவரே காயமடைந்தார். அவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். (ற-9)




வவுனியா வைத்தியசாலைக்கு நீர் சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி வழங்கப்பட்டது. வவுனியா, இராசேந்திரகுளத்தில் இருக்கும் எப்பரஸ் ஆடைத் தொழிற்சாலை ஒமேகா நிறுவன ஊழியர்களின் நிதிப் பங்களிப்புடன் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் சமன் ஜயசிங்க இயந்திரத் தொகுதியைக் கையளித்தார். (ற)

# எம்.ஜி.ஆர். இருந்திருந்தால் தீர்வு நிச்சயம் கிட்டியிருக்கும்

## சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.29

எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்திருந்தால் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு நிச்சயம் கிடைத்திருக்கும். ஈழத் தமிழர்களால் மட்டுமல்ல, உலகத் தலைவர்களாலும் இருவர் தேசியத் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன். மற்றையவர் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஈ.சரவணபவன்.

எம்.ஜி. இராமச்சந்திரனின் 100ஆவது பிறந்த தின நிகழ்வுகள் கடந்த 17ஆம் திகதி பண்டத்தரிப்பு தென்னிந்தியத் திருச்சபை அரங்கில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிங்கள அரசால் தமிழ் மக்கள் இன்னலுக்குள்ளாக்கப்பட்டபோது எம்.ஜி.ஆர். ஓங்கிஉரிமைக்குரல்கொடுத்தவர். புலிகளின் போராட்டத்துக்காக கோடிக் கணக்கில் நிதி உதவி வழங்கியவர்.

வே.பிரபாகரனும், எம்.ஜி.ஆரும் தமிழர்களால் தேசியத் தலைவர்களாகப் பார்க்கப்பட்டனர். இருவரும் மக்களின் நலனுக்காக உண்மையாக உழைத்தமையே அதற்குக் காரணம். இப்போது இருவரையும் இழந்து தமிழ் மக்கள் அநாதரவாக உள்ளனர்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும், அரசியலிலும் அமைதியாக இருந்து சாதித்தவர் எம்.ஜி.ஆர். அவரது அமைதி காக்கும் குணமே மாபெரும் வெற்றிக்கு வித்திட்டது - என்றார். (ற)

# மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் பிரதேசக் குழுக்கள் உருவாக்கம்

கிளிநொச்சி, ஜன.29

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் அமைப்பின் பிரதேசக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அமைப்பின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்குடன் இந்தக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.



இவ்வாறு மாவட்ட மாற்று வலுவுள்ளோர் அமைப்பினர் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பிரமந்தனாறு, கல்லாறு, மயில்வாகனபுரம், நாதன்குடியிருப்பு, உழவனூர் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய பிராந்தியக் குழு முதற்கட்டமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கிராம அலுவலர் சாந்தி கிருஸ்ணா, கிளிநொச்சி மாற்றுவலுள்ளோர் சங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சிவநேசன், பிரதேச இணைப்பாளர் வே.கௌரிதாசன், வன்னியசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் அமைத்த வீடுகளால் துன்பத்தின் மத்தியில் வாழ்க்கை

## ஆரோக்கியபுரம் கிராம மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜன.29

இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடுகளில் வெடிப்புகள் தோன்றியுள்ளன. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தினோம். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு முல்லைத்தீவு, ஆரோக்கியபுரம் கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.



போரின் பின்னர் ஆரோக்கியபுரம் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். அவர்கள் தற்காலிக வீடுகளில் வசித்த நிலையில் இராணுவத்தினர் கல் வீடுகளை அமைத்துக் கொடுத்தனர். வீடுகளின் மேற்கூரைக்கு தகரங்களே இடப்பட்டன. வீடுகளுக்கு முறையாக அத்திபாரம் இடப்படவில்லை. இரு அரிகற்கள் நிலத்துக்குள் புதைக்கப்பட்டே அத்திபாரம் இடப்பட்டது. வீட்டின் பெறுமதி 10 லட்சம் ரூபா என்று பிரதேச செயலகத்துக்கு இராணுவத்தினர் கணக்குக் காட்டியுள்ளனர்.

நிரந்தர வீடு அமைப்பதானால் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மூலம் அளவுப் பிரமாணங்கள் எடுக்கப்பட்டு அவரின் மேற்பார்வையின் கீழ்தான் அமைப்பது வழமை. இந்த வீடுகள் அமைக்கப்படும் போது அவ்வாறான செயற்பாடுகள் இடம் பெறவில்லை.



வீடுகள் நாளடைவில் பாதிப்புக்குள்ளாகின. சுவர்களில் வெடிப்புத் தோன்றின. கடந்த ஆண்டு பெய்த மழையின்போது கூரைத் தகரங்கள் தூக்கி வீசப்பட்டன.

"இப்போது வெயிலிலும், மழையிலும் நாம் துன்பப்படுகின்றோம். 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் எமக்கு வழங்கப்பட்டால் வேறு வீட்டுத் திட்டங்களிலும் எம்மை உள்வாங்க முடியாதுள்ளது என்று பிரதேச செயலகத்தினர் கூறுகின்றனர்"- என்று பாதிக்கப்பட்ட கிராம மக்கள் கூறுகின்றனர்.

"இதில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வீட்டுத் திட் டங்கள் வழங்குவதற்கான திட்டங்கள் எதுவும் இல்லை."- என்று கூறினார் அந்தப் பகுதி கிராம அலுவலர்.

"வேறு நிரந்தர வீட்டுத் திட்டங்கள் வழங்க முடியாது. 10 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று இராணுவம் பிரதேச செயலகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளது. அதனால் வீட்டுத் திட்டத்தின்போது இவர்களை முன்னிலைப் படுத்தமுடியாது.

தாம் அமைத்துக் கொடுத்த வீடுகள் பாதிப்படைந்துள்ளன என்பதை இராணுவம் ஏற்றுக் கொண்டுள்ளது. 25 புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கவுள்ளது. அதில் பாதிக்கப்பட்டுள்ளவர்களும் உள்வாங்கப்படுவார்கள்."- என்று அவர் குறிப் பிட்டார்.

"கடந்த முறை 70 வீடுகளே பிரதேச செயலகத்துக்கு ஒதுக்கப்பட்டன. வீடுகள் இல்லாதிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட வீடுகளில் பாதிப்பு ஏற்பட்டால் அவர்களும் வீடு இல்லாதவர்கள் பட்டியலில் இணைக்கப்படுவார்கள். வீடுகளை யார் வழங்கினார்கள் என்பது கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

இப்போது வீடுகள் வழங்குவதற்கான பதிவுகள் நடைபெறுகின்றன. அதில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் உள்வாங்கப்பட்டிருக்கலாம்.

இராணுவத்தின் வேலைத் திட்டம் ஒன்றுக்குக் கிராமம் கேட்டபோது ஆரோக்கியபுரம் கிராமம் வழங்கப்பட்டது. அவர்கள் அந்தக் கிராமத்தில் வீடுகள் அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். வீடுகளை அமைப்பதானால் எம்மிடம் அனுமதி பெற்று வீடுகளை அமைக்க வேண் டும் என்று அறிவுறுத்தியுள்ளோம்"- என்று துணுக்காய் பிரதேச செயலர் இ.பிரதாபன் தெரிவித்தார். (ற-21,6)

### மழையால் பாதிப்பு

ஆரோக்கியபுரத்தில் இராணுவம் அமைத் துக் கொடுத்த வீடுகளின் கூரைகள் கடந்த ஆண்டு மே மாதம் பெய்த மழையின் போது தூக்கி வீசப்பட்டன. இதனால் வீடுகள் பாதிப்படைந்தவர்கள் மேலும் மோசமான நிலையை அடைந்துள்ளனர்.

"இந்த வீடுகள் இராணுவத்தினரால் வழங்கப்பட்டன. அவற்றின் சுவர்கள் அனைத்தும் வெடித்து விழும் நிலையில் உள்ளன. இராணுவத்தால் வழங்கப்பட்ட பெரும்பாலான வீடுகள் இந்த நிலையி லேயே உள்ளன. இந்த வீடுகள் தரப்பட்டுள் ளன என்று கூறி அதிகாரிகள் எமக்கு வீட்டுத் திட்டங்கள் தர மறுத்து விட்டனர். பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்தி உதவி கள் வழங்க வேண்டும். என்று அப்போது பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்தினருந்தனர்.

"பாதிப்புகள் குறித்த விவரங்கள் இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளன. 10 லட்சம் ரூபா செலவில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட வீடுகளே மக்களுக்குக் கையளிக்கப்பட்டிருந்தன. வீடு இருந்ததாலேயே அவர்கள் வேறு வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. திருத்த வேலைகளை பிர தேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." - என்று கிராம அலுவலர் குறிப்பிட்டிருந்தார்.

"ஆரோக்கியபுர மக்கள் இப்போது மழையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அப்போது அவர்களுக்கு சமைத்த உணவு வழங்கினோம். பாதிக்கப்பட்டவர்களுக்கான மேல திக உதவிகளுக்கு மாவட்ட செயலகத் தைத் தொடர்பு கொண்டுள்ளோம். சேத விவ ரங்களின் தரவுகளை அனுப்பியுள்ளோம். அரசே அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்."- என்று பிரதேச செயலாளர் கூறியிருந்தார்.





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் செமட்ட செவன வீடமைப்பு கட்டுமானப் பணிகள் நேற்றுமுன்தினம் பேசாலை, முருங்கன் கிராமத்தில் வைபவரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர்.சுவர்ணராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் முதன்மை அதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டார். (ற-56)

# தென்னைச் செய்கையாளருக்கு பல மானிய உதவித் திட்டங்கள்

கிளிநொச்சி, ஜன.29

தென்னைப் பயிர்ச் செய்கை சபையால் வழங்கப்படும் மானியத் திட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் 400 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வடபிராந்திய தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 200 பேருக்கு காசோலை வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையால் பல்வேறு மானியத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. புது மரநடுகை, சீரமைப்பு என்பவற்றுக்கு தென்னம்பிள்ளைகள் மானியமாக வழங்கப்படுகின்றன. ஊடுபயிர்ச் செய்கைக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. 5 ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரை இந்த மானியத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

வறட்சியைத் தாக்குப்பிடிக்க மண்நீர் பாதுகாப்பு, பொச்சுமட்டை, குழி என்பற்றுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம்ரூபாவீதம்வழங்கப்படுகின்றது. உரப் பயன்பாட்டுக்கு ஒரு மரத்துக்கு 55 ரூபா வீதம் வழங்கப்படுகின்றது. மக்னீசியம் குறைபாடு இருந்தால் டெலமைற் பசளை மானியம் வழங்கப்படுகின்றது.

விலங்கு வளர்ப்பு மானியமாக ஓர் ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. நீர்ப்பாசன மானியமாக 8 ஆயிரம் ரூபா வழங்கப்படுகின்றது.

பொதுமக்கள் மானியங்களைப் பெற்றுத் தென்னைச் செய்கைளில் ஈடுபடுவதில் ஆர்வம் காட்டுகிறார்களில்லை. மாவட்டத்தில் உள்ள தென்னைச் செய்கையாளர்கள் பிராந்திய கமநல சேவை நிலையங்களில் உள்ள எமது உத்தியோகத்தர்களைத் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற முடியும்- என்றார். (ற-21,35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு

பாவனையில் உள்ள Panasonic குளிர் சாதனப்பெட்டி வண்ணார்ப்பண்ணை, யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

**077 978 9752**

### வீடு விற்பனைக்குண்டு

வவுனியா கூமாங்குளம் காளிகோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் வீடுமனை விற்பனைக்கு உண்டு.
விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**தொ.பே:. 024 222 6445**

### யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு

யாழ்.சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் ஈச்சமோட்டையில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**077 614 6434**

### காணி விற்பனைக்கு

கொக்குவில் பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட சம்பியன் ஒழுங்கையில் சுற்றிலும் ஆறு அடி உயரத்துக்கு கம்பிவேலி போடப்பட்ட வீடு கட்டப் பொருத்தமான சதுரமான நாலு பரப்புக் (4) காணியும், நந்தாவில் ஒழுங்கையில் சுற்றிலும் ஆறு அடி உயரத்துக்கு கம்பிவேலி போடப்பட்ட ஆறு பரப்பு (6) தென்னங்காணியும் மற்றும் யாழ்ப்பாணம், கொட்டடி சிவன்பண்ணை வீதியில் சுற்றிவர மதில்கட்டப்பட்ட எட்டரைப் பரப்பு (8½) காணியும் உடன் விற்பனைக்குண்டு. தரகர்கள் வேண்டாம். பிற்பகல் 4 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.

**077 730 8354, 011 492 7113**

### விற்பனைக்குண்டு

Scooty model புதிய மேட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ரூ 45.000/=
(லீசிங்கில் உள்ளது)

**077 611 0625**

### வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கடற்கரை வீதியிலுள்ள ஒரு பரப்பும் 16 குளியும் உள்ள காணியும் அதனுள் அடங்கும் வீடும் விற்பனைக்குண்டு.

**077 614 6434**

### வீடு விற்பனைக்குண்டு

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்துக்கு அருகில் பயன்தரு மரங்களுடன் கூடிய 4 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு (c.236)

**077 294 0053/ 076 881 4546**
(காந்தன்) (இரத்தினம்)

### காணி விற்பனைக்கு

நவாலி அட்டகிரி பாடசாலைக்கும் குருக்கள் கோயிலுக்கும் அண்மையில் உள்ள 'ஆண்டா வளவு' என்னும் 12 பரப்பு விஸ்தீரணமுடைய காணியும் வீடும் அதற்குள் அடங்கிய பயன்தரு மரங்களும் விற்பனைக்குண்டு. (AJA/00667)(11,18)

**021 224 2579, 077 379 2193**

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

30 நாள்கள் நிரம்பிய German Shepert Labrador Cross நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

**077 774 2069**

### வீடு வாடகைக்குத் தேவை

அரச தொழில்புரியும் 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு யாழ்நகரை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 504 8095**

### தேவை

சமையல் வேலை தெரிந்தவர்களும், உதவியாளர்களும் தேவை. மும்மொழிகளும் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. (AJA/00672)(11,18)

**077 724 2427, 077 741 2713**

### விற்பனைப் பிரதிநிதி தேவை

ஹாட்வெயார் கடைக்கு அனுபவமுள்ள ஆண் பணியாளர் தேவை. மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் தேவை.

**077 278 8899**

### வேலையாள்கள் தேவை

1. சப்ளையர் (உணவு பரிமாறுபவர்)
2. ரீமேக்கர்
3. உணவு பார்சல் கட்டுபவர்
4. கிளீனிங் செய்பவர்
5. சமையல் உதவியாளர்

ஆண்கள் மட்டும்

றொலெக்ஸ் ஹோட்டல்
077 907 9888

## வீடு வாடகைக்கு

### அனெக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு

இல.246/2. கோயில் வீதி. நல்லூரில் அமைந்துள்ள ஒரு அறையும் ஒரு சமையலறையும் மொத்தம் 2 அறைகள் இரண்டு மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.

**077 729 9031**

### வீடு வாடகைக்கு

மானிப்பாய் வீதி. ஆனைக்கோட்டை. ஆறுகால்மடத்தடியில் அழகிய மேல் மாடி வீடு 2 அறை. 2 பாத்றூம். ஹோல். குசினி ஆகியவற்றுடன் வாடகைக்கு உண்டு. அத்துடன் தனி சிறிய குடும்பம் பாவிப்பதற்கு தனி வீடு சகல வசதிகளுடனும் உண்டு. வாடகை முற்பணம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 765 6918**

### வீடு வாடகைக்கு

கோண்டாவில் மேற்கு கே.கே. எஸ். வீதிக்கு அருகில் அமைந்துள்ள வீட்டின் மேற்தளம் வாடகைக்கு உண்டு.

**077 598 7500, 077 132 8557**

### கட்டடத் தொகுதி வாடகைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் K.K.S. வீதியில் இருந்து 200m தொலைவில் (சிவப்பிரகாசம் வீதியில்) அமைந்துள்ள இரு கட்டடத் தொகுதிகளும் 450.900 சதுரஅடிகளும் மற்றும் பெண்கள் தங்குவதற்குரிய அறையும் வாடகைக்கு கொடுக்கப்படும்.

**077 606 3397/ 071 811 3802**
**021 2221480** (AJA 00670)(14,17,18)

## ஏனையவை

### ஐஸ்கிறீம் இயந்திரங்கள் விற்பனைக்கு

இத்தாலி வகை ஐஸ்கிறீம் இயந்திரங்கள் (ஒரு மணித்தியாலத்திற்கு 80 லீற்றர்) மற்றும் Bitzer Comprecer, ஐஸ் வான் விற்பனைக்குண்டு.

**077 242 5237**
(கண்டி மற்றும் வவுனியா)

### வீடு வாடகைக்கு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர் Temple Road இல் சகல வசதிகளுடன் கூடிய 9 அறைகள் கொண்ட தொடர்மாடி வீடு வாடகைக்கு விற்பனைக்குண்டு. வீடாகவோ, வணிகத் தேவையாகவோ பாவிக்கலாம்.

**077 871 5430, 076 857 3798**

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கச்சாய் வீதியில் முக்கால் மையில் தூரத்தில் விநாயகர் சிலைக்கு முன் வீதியில் 30 யார் தொலைவில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**076 781 8132**

### வீடு வாடகைக்கு

இணுவில் கிழக்கு காரைக்கால் சிவன் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(வாகனத்தரிப்பிடம் உண்டு)

**076 997 9528, 077 494 9485, 077 210 9216**

### மணமகள் தேவை

1981.03.12 இல் பிறந்த, உயரம் 5 அடி. கிரகபாவம் 43½ , 7 இல் செவ்வாய். ரோகினி நட்சத்திரத்தினை உடைய பிரான்ஸில் வசிக்கும் PR அற்ற மணமகனுக்கு பிரான்ஸ். ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்து PR உள்ள பெண் தேவை.

**076 641 6908**

### காணி விற்பனைக்குண்டு

பூவரசன்குளம் மணியங்குளம் மதகடிக்கு அருகில் சுமார் ஒரு ஏக்கர் நெற்காணி வயலும் மூன்று ஏக்கர் மேட்டு நிலக்காணியும் துப்புரவு செய்த நிலையில் உடனடியாக விற்கவுள்ளன. உடன்தொடர்புகொள்ளவும்.

**தொ.பே:. 071 157 5509/077 445 1916**

### தேவை

கொழும்பிலுள்ள சலூன்களிற்கு வேலையாள்கள் தேவை.

**077 676 3436**

### வாடகைக்குண்டு

வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் ஆங்கில திருக்குடும்ப கன்னியர்மடம் பாசாலைக்கு English Convent எதிரில் வீடு, கடை-வாடகைக்குண்டு.

**தொடர்பு: 077 005 5607**

### மாருதி-சுசுக்கி கார் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் (இல.KI....) மாருதி சுசுக்கி வெள்ளை நிறமுடைய 800.cc கார் விற்பனைக்குண்டு. 25,000 Km மாத்திரம் ஓடியது. சிறந்த நிலையில் உள்ளது./A.C உண்டு.

**077 505 6263**

### பூக்கன்றுகள் விற்பனை

நல்லின குரோட்டன்கள். மருத்துவ செடிகள் மற்றும் 60 விதமான பூக்கன்றுகள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். பூச்சாடிகள். மீன்தொட்டிகள். பறவைக் கூடுகளையும் மலிவான விலையில் பெறலாம்.

**பூக்கன்று ஒவ்வொன்றும் 80/=**

யாழ் அக்கூரியம்
917, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.

**075 991 0060, 077 707 0711**

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள நிசான் சனி கார் விற்பனைக்கு உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் சென்று பார்வையிடலாம். தொடர்புகொள்ளவேண்டிய தொலை.பே.இல.

**077 726 8307/ 077 789 5149**

### வீடு வாடகைக்கு

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் காரைக்கால் லேனில் இல - 24 பூநாறி மரத்தடி அருகில் உள்ள ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிடமும் உண்டு. வங்கிகள், அரசமற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 848 9079**

### 16 மாத நாய்க்குட்டி காணவில்லை

அரியாலையில் உயிராக வளர்த்த எமது ஆண் டோபர்மான் இன நாய்க்குட்டி கடந்த 17.01.2017 இரவு முதல் காணவில்லை. பிடித்து வைத்துள்ளவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**பிரபா- 076 562 4967**

### Air Ticket & Visa

சகலநாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள், விசாக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை, மதுரை விசேட விலைக்கழிவுடன் 23, 800/=

மலேசியா, தாய்லாந்து, பாங்கொக், இந்தியா நாடுகளுக்கான விசாக்களை மிக விரைவில் பெறலாம்.

Air Ticketing வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளுடன் தற்போது.

**SB Travels & Tours(Pvt) Ltd.**
216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1080, 81 / 076 691 1082, 83

### பெயர்மாற்றம்

பொந்திலேன், பண்டத்தரிப்பைச் சேர்ந்த **ஜெசிக்கா அணோதினி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **ஜெசிக்கா அணோதினி அன்போன்சஸ்** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

ஜெசிக்கா அணோதினி அல்போன்சஸ்

### மணமக்கள் தேவை

டாக்டர்கள், இஞ்சினியர்கள். பட்ட தாரிகள், லிகிதர்கள் , எக்கவுண்டன், வர்த் தகர்கள், விவாகரத்துப் பெற்ற மணமக் களும், வெளி நாட்டில் பிரஜா உரிமை பெற்ற மண மக்களும், பாவம் கூடிய பாவம் குறைந்த செவ்வாய் குற்றமுள்ள, குற்றமில்லாத, சைவபோசன மணமக்களும் சூரியன் செவ்வாய் குற்றமுள்ள , குற்றமில்லாத மணமக்களும் எம்மிடம்முள்ளனர்.

★85 இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 43 பாவமுடைய MSc இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.

★87 இல் பிறந்த 5 இல் சூரியன் 47 பாவ முடைய MSc ஆசிரியைக்கு இஞ்சினியர் MSc படித்த மணமகன் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, [illegible]லிங்கம் வீதி,
[illegible]லையடி, முடமாவடி.
077 607 0862

### மரக்குற்றிகள் விற்பனைக்கு

ஊர் மகோக்கனி மரங்கள் 5 அடி - 10 அடி சுற்று வரை
நாவல் 5 அடி - 10 அடி சுற்று வரை
அரிந்த பலகைகள் விற்பனைக்கு

**தொடர்பு : 077 224 2404**
**021 321 7963**

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



ESP & Company உரிமையாளரும் பிரபல
வர்த்தகரும் ஆகிய

## E.S. பேரம்பலம் கணேசலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**உரிமையாளரும் ஊழியர்களும்**
**NSB ரேடர்ஸ் பிறைவேட் லிமிட் [கொழும்பு]**
**நியூ சிறி கண்ணன் - திருநெல்வேலி**
**ஸ்ரீ பேப்பர் மார்ட் - யாழ்ப்பாணம்.**

(J.386)
(14,17,18)

# மரண அறிவித்தல்

## Dr.M கனகசபை

**(முன்னாள் ஸ்தாபகர்,M.K.S Medical Clinic**
**கொக்குவில் & கொழும்பு)**



புங்குடுதீவு. 7ஆம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி. கொக்குவில்.கொழும்பு.கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.M கனகசபை 27.01.2017 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னையா- செல்லக்கண்டு தம்பதியினரின் அன்பு மருமகனும் மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் கௌரி(கனடா). Dr.K.சிவகுமார்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் அருணாசலம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற சண்முராஜா.பாலச்சந்திரன் மற்றும் கமலநாதன்(குட்டி-UK), விமலநாதன்(விமல்-UK), கமலேஸ்வரி (செந்தி-UK), அன்னசோதி மற்றும் காலஞ்சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கணேசமூர்த்தி(மோகன்-கனடா).தாரணி(கனடா) ஆகியோரின் மாமனாரும் ரேனிஷா. பவித்தா.காவியா.ரூபியா,இனியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் அமுதவல்லி .அருணாசலம்.காந்திமதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்.நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

Dr.K.சிவகுமார் -மகன் ( 076 397 9190)
கௌரி கணேசமூர்த்தி -மகள்
S.சுதன் (ஸ்ரீ சுதனா நகை மாளிகை)-
பெறாமகன்
உஷாந்தி சுதன் -(முகாமைத்துவ
உதவியாளர் ,பிரதேச செயலகம்,நல்லூர்)-
மருமகள்

**27/ 11, இந்து மகளிர் ஒழுங்கை,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 8746.**

# கண் நிறைந்த தெய்வத்தை காலனவன் அழைத்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது



**தாயின் மடியில்**
**10.12.1955**

**அம்பாள் பாதத்தில்**
**22.01.2015**

### அமரர்

## லயன் கனகசபை உருத்திரகுமாரன்

(BA, MA,PGDE,SLTS - I ,அகில இலங்கை சமாதான நீதிவான். முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர் தீவகம். முன்னாள் நயினை நாகபூசணி அம்மன் கோயில் செயலாளர், பொருளாளர் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபை தர்மகர்த்தாசபை உறுப்பினர்)



**கண்ணீரால் கரைந்த ஆண்டிரண்டு**

என்னருகில் இருந்தும் என்னை அறியாமல்
பாதி வழியில் உங்கள் இதயத்துடிப்பு
நின்று இரண்டு வருடங்கள் ஆகிறது
இரண்டு நிமிடம் என்னையும் பிள்ளைகளையும்
விட்டிட்டு இருக்கமாட்டீங்களே எப்படியப்பா இரண்டு வருடம் இருக்கிறீங்க – நீங்கள்
இல்லாமல் ஒவ்வொரு நிமிடமும் ஒரு வருடமாகிப்போகிறது என் உடம்பில்
உயிர் இருக்கும் வரை உங்களுடன் வாழ்ந்த பசுமையான நினைவுகளுடன்
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம்வல்ல அம்பாளை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்
அன்பு மனைவி - உ. சுபோதினி,
அன்பு மகன் - உ. கௌரிசங்கர் (பிரான்ஸ்),
அன்புமகள் - ச. அபிராமி (அமெரிக்கா),
அன்பு மருமகன் - ஜீ.சஞ்சீவன் (அமெரிக்கா),
ஆசைப்பேரன் - ச.ருத்ரா (அமெரிக்கா)

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற

## ‘ றோயல் குளுக்கோஸ்’

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

## “ றோயல் குளுக்கோஸ்”




Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670

## சிவா நறுமணப் பூங்கா

இல.888, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2567

(சி/00348)(11.17)

---

ST.CLAIR COLLEGE

## கனடாவில் உயர்கல்வி

கனடா சென்று உயர்கல்வி கற்க ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கீழ் காணும் துறைகளில்

- Business Management
- Computer System & Networking Technology

Duration : 03 Years
6 Months : IIS City Campus, Jaffna
2½ Years : St.Clairs College, Canada



நேர்முகத்தேர்வு: 30.01.2017 திங்கட்கிழமை
10.00a.m to 8.00p.m.

(உங்கள் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்)

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது
பதிவுகளுக்கு முந்துங்கள்

Hotline: 071 777 3444
info@iis.edu.lk

IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
021 222 8060 | 021 4900 900

---

## பதவி வெற்றிடம்

தொழில்நுட்ப உத்தியோகத்தர், கணக்காளர், கணக்கு உதவியாளர், ஒப்பந்தக்காரர் கம்பனிக்கு மேற்படி பதவி வெற்றிடங்கள் உள்ளன.

கீழ்க்காணும் தகைமையுடையோர் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

* தொழில்நுட்ப உத்தியோகத்தர்
(தகைமைக்கேற்றவாறு 5 வருடதொழில் அனுபவம் முன்னுரிமை)
* கணக்காளர்
(தகைமைக்கேற்றவாறு 3 வருட அனுபவம்)
* கணக்கு உதவியாளர்
(தகைமைக்கேற்றவாறு)

காலம்: 05.02.2017 (முற்பகல் 10.00 மணி)

குறிப்பு: சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

தொடர்பு: SIGMA CIVIL CONSTRUCTION
No.137, PUNNAI NEERAVI,
VISHWAMADU,
KILINOCHCHI

Mobile: 077 074 2611/ 077 804 8447
Director

(K.286) (13.18.17)

---

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி வெளிவாயில் (Out Gate) முன்பாக

JITF 2017

## மங்களா காட்சியறை

அனைத்துத் தளபாடங்களுக்கும் ஆச்சரியத்தக்க விலைக் குறைப்பு

இன்று மட்டும்



இல.536, K.K.S வீதி, மனோகரா சந்தி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 8367, 077 728 6069

விற்பனைப் பொருள்களையும், புதிய ஓடர்களையும் சிறிய முற்பணத்தைச் செலுத்தி இச்சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## Rajarata University of Sri Lanka
### FACULTY OF MANAGEMENT STUDIES



## MASTER OF BUSINESS ADMINISTRATION

The Rajarata University of Sri Lanka, Mihintale entertains applications from qulified candidates for the Master of Business Administration

### INTAKE XVI-2017

**More Details**

Duration - Two Years
Medium - English
Invesment - Year I Rs. 200,000/=
Year II Rs.180,000/=
Lectures - Saturday & Sunday
(9.00 a.m. to 4.00 p.m.)
Venues - Mihintale/Colombo

### How to apply

Application form and further information can be obtained from Assistant Registrar, Post graduate program, Faculty of Management Studies, Rajarata University of Sri Lanka, Mihintale.

OR

Can be downloaded from www.rjt.ac.lk.

The duly completed application form along with Rs.500/= money order and other required documents should reach the Assistant Registrar on or before 17th February 2017.

Money order should be drawn in favor of Bursar, Rajarata University of Sri Lanka, Mihintale.

(The top left hand corner of the envelope should bear the words "MBA 2017")

### Who can apply

- A Special Bachelor's Degree with a class standing in Management Studies from a recognized university,

OR

- A Bachelor's Degree in any subject area from a recognized university or equivalent qualification with two years' relevant experience,

OR

- A Postgraduate Diploma of not less than one year or Higher Degree in Management Studies from a recognized university,

OR

- A Postgraduate Diploma of not less than one year or Higher Degree in any other field from a recognized university with one year's relevant experience,

OR

- A professional qualification with three years relevant post-qualifying experience,

OR

- Five years' executive experience acceptable to the Senate of the University

**Closing Date of Application: 17th February 2017**

(+94) 25 2266854 / (+94) 25 2266627
www.rjt.ac.lk/mba
Registrar, Rajarata University of Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 12 . 1936

மறைவு 22 . 01 . 2017

### திருமதி நேசமலர் காலிங்கராஜா

யாழ்.இணுவில் தெற்கு பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், லண்டனில் வசித்து வந்தவருமான திருமதி நேசமலர் காலிங்கராஜா 22.01.2017 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற காலிங்கராஜாவின் (சின்னமணி) அன்பு மனைவியும், உதயகுமார் (லண்டன்) விஜியகுமாரி (கனடா), சசிகுமாரி (கனடா), நந்தகுமாரி (கனடா), பாலகுமார் (பிரான்ஸ்), திலீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான ரத்தினம், பாலசுப்பிரமணியம் மற்றும் செல்வராணி ( தேவி), காலஞ்சென்ற தேவராஜா மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராசமலர், காலஞ்சென்ற சிவானந்தராஜா மற்றும் சந்திரகுமார் (கனடா), அழகானந்தன் (கனடா), குமுதவல்லி, சுஜீபா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான திருவிளங்கம், மகேந்திராதேவி மற்றும் தர்மலிங்கம், தேவிசத்தியபாமா, ஆறுமுகதாஸ், காலஞ்சென்றவர்களான கண்மணி, பொன்னம்மா மற்றும் பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், யதுர்ஷா, விக்கினேஷ், ஹரிஷ், ஹரனி, சிந்துஜா, சுஜானி, சிவானுஜா, சங்கீர்ணா, சாரங்கன், நிதுர்ஷா, வைஷ்னி, வர்ஷ்னி, அட்சயன், அகரன், எழில் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இலக்கியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணிவரை Hedon Cemetery & Crematorium, Holders Hill Rd, London NW7 1 NB,UK முகவரியில் நடைபெற்று Hendon Cemetery & Crematorium, Holders Hill Rd, London NW7 1NB,UK முகவரியல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**0044 755 7528 012** (AJA 00634) (11,18)

## மரண அறிவித்தல்



பிறப்பு 25 . 07 . 1943

இறப்பு 26 . 01 . 2017

### திருமதி தவராணி சிவானந்தன்

யாழ்ப்பாணம், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், நோர்வே, ஒஸ்லோவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தவராணி சிவானந்தன் 26.01.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மனோன்மணி தம்பதிகளின் மகளும், சச்சிதானந்தம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவானந்தனின் மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவராஜா, இந்துராணி மற்றும் தவராஜா விக்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாமதி, ரவிசங்கர், ரவிமோகன், சுரேஸ், நிவேதினி, வைக்சலா ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாலசூரியா, சோபிதா, சித்திரா, சீலா, குகராஜன், ரெட்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிருந்தா, சுஜீவன், கௌதம், நிர்மலா, நிக்ஷிதா, ராகுல், ராகவி, அஜய், சமித்திரா, சகானா, அடானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கஷோன், ரேகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **தியாகராஜா குடும்பத்தினர்.**

**ரவிசங்கர் (நோர்வே - +4747 802 580),** (V/ 203) (11,17,18)
**குகராஜன் (நோர்வே - +4799 246686),**
**சுரேஸ் (நோர்வே - +4722 640066),**
**ஜெயராஜன் (வவுனியா - 077 038 1410)**

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### கந்தையா கனகரத்தினம் (K.K.ஐயா)

தோற்றம் 18.10.1934

மறைவு 20.01.2007

கண்ணியமாய் குடும்பத்தில் பாசம் காட்டி
கனதியுடன் நாமுயர உழைத்து நின்றீர்
புண்ணியநல் வடிவமென பெருமை கொள்ள
பூரிப்பாய் பிறர்க்குதவி செய்து வென்றீர்
கண்ணிமைபோல் காத்தவரே உயர்வில் நாங்கள்
களிக்கின்ற வேளையிலே அருகில் இல்லை
புண்ணியரே பூரணன்தாள் நிலைத்து நிற்பீர்
புனஸ்கரித்து வணங்குகிறோம் பத்தாம் ஆண்டில்

82/07, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(J 388) (14,17,18)

### கட்டுநாயக்க விமான நிலையத்தில் இந்தோனேசிய நபர் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.29 இந்தோனேசியப் பிரசை ஒருவருக்கு திடீரென்று ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்ததாக கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

சவூதி அரேபியாவிலிருந்து இந்தோனேசியா நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த 57 வயதுடைய இவர், கட்டுநாயக்க விமானநிலையத்தில் இறங்கி இந்தோனேசியாவுக்குச் செல்வதற்கான விமானத்தில் மாறி ஏறுவதற்காக கட்டுநாயக்கவில் காத்திருந்த வேளையில் மாரடைப்பு ஏற்பட்டு, கீழே விழுந்து உயிரிழந்தார். இவரின்சடலம்நீர்கொழும்பு வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## மரண அறிவித்தல்



### செல்லையா நடராசா

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வீரபத்திராஜன் கரணவாய் தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா 27.01.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் யசோதா(பிரான்ஸ்), செந்தில்நாதன் (சுவிஸ்), பிரகலாதன்(பொறியியலாளர் - இலங்கை) ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமாரன்(பிரான்ஸ்), வதனகுமாரி(சுவிஸ்), லக்ஷிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதீபா, தீபகன், ஹபிசாயினி, கிதுசயன், ஐனுக்ஷன், பிரதிக்ஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சிராய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"வீரபத்திராஜன்"
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(N/242) (14.18.17)

தகவல்: குடும்பத்தினர்.

**077 352 0309**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அச்சுறுத்தும் மகிந்த

அரசுக்குத் தலையிடி கொடுக்கும் வல்லமை தன்னிடம் இருக்கின்றது என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறார் மகிந்த ராஜபக்ச. நேற்றுமுன்தினம் நுகேகொடையில் அவருக்கு ஆதரவாகத் திரண்ட கூட்டம் மகிந்தவின் செல்வாக்கு இன்னமும் சரிந்துவிடவில்லை என்பதைக் காட்டுகிறது.

"ஆட்டம் ஆரம்பம்" என்கிற மகுட வாக்கியத்தின் கீழ், தற்போதைய அரசு முன்னெடுக்கும் அல்லது முன்னெடுப்பது போலக் காட்டிக் கொள்ளும் முயற்சிகள் அனைத்துக்கும் எதிராக மக்களைத் திரட்டிக்கொண்டு களமிறங்கப் போகிறார் என்கிற எச்சரிக்கையை இந்தக் கூட்டத்தின் மூலம் அரசுக்கு விடுத்திருக்கிறார் மகிந்த.

அரசு என்னதான், மகிந்தவால் மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியாது என்று சொல்லிக்கொண்டாலும், மகிந்தவுக்கு உள்ள சிங்கள மக்களின் ஆதரவை, அதனால் புறந்தள்ளிவிடமுடியாது.

இலங்கையின் அரசியல் களத்தில் மாற்றங்கள் அனைத்தும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு மிக விரைவாகவே இடம்பெறுகின்றன. 2015ஆம் ஆண்டில் எல்லாவகையான எதிர்பார்ப்புகளுக்கும் புறம்பாக மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டார். போரை வென்ற தலைவர், தமிழர்களை ஒடுக்கி சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மிகச் சிறப்பான தீனியை வழங்கிக்கொண்டிருந்த தலைவர், அரசின் மொத்த நிதி வசதிகளையும் தனது குடும்பத்தின் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்த தலைவர் என்று பல அம்சங்கள் சாதகமாக இருந்த அந்தக் காலத்தில், மகிந்தவின் தோல்வி கற்பனைக்கு அப்பாற்பட்டதாகவே இருந்தது. குறைந்தது இன்னும் ஒரு தசாப்தத்துக்கு அசைக்க முடியாத தலைவர், கிட்டத்தட்ட ஓர் அரசாட்சியையே நிறுவிவிட்டார் என்றெல்லாம்கூடக் கருதப்பட்டது.

ஆனால், "மாற்றம்" என்கிற மந்திரச் சொல்லின் கீழ் திடீரென மகிந்த வீழ்த்தப்பட்டார். வீழ்த்தவே முடியாத தலைவராக இருந்த வர் ஒரே நாளில் மொத்த அதிகாரங்களையும் இழந்துவிட்டு இராமன் முன் நின்ற இராவணனைப் போல நின்றார். அவரைப் பார்த்து "இன்று போய் போர்க்கு நாளை வா" என்று மைத்திரி சொல்லவில்லையாயினும் – அப்படி வந்துவிடாதே என்று மைத்திரி நினைத்தாராயினும் – இன்று மறுபடியும் போர்க்களத்திற்கு வந்து நின்று அறைகூவல் விடுக்கிறார் மகிந்த.

வரலாற்றில் முன்னெப்போதும் நிகழாதது என்று வர்ணிக்கப்பட்ட, ஐக்கிய தேசியக் கட்சி சுதந்திரக் கட்சிக் கூட்டு அரசை தனியொரு ஆளுமையாக அசைத்துப்பார்க்க மகிந்தவால் முடிகிறது. அதுவும் விரைவாகவே நடந்து முடிந்திருக்கிறது.

புலி வருகிறது புலி வருகிறது என்று மக்களை ஏய்த்துக் கொண்டிருந்தவனின் மந்தையைத் தேடி ஒருநாள் புலி வந்தே விட்டது என்பதைப் போல, மகிந்த எழுந்துவிடுவார் என்று தமிழர்களுக்கு இதுநாள்வரை பூச்சாண்டி காட்டிக்கொண்டிருந்தார்கள் தற்போதைய அரச தலைவர்கள். கடைசியில் அவர்கள் கூறியதைப் போலவே மகிந்த வந்துவிட்டார். ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்ற கோசத்துடனும் முறைகேடாக வழங்கப்பட்ட – உழைக்கப்பட்ட சொத்துக்கள் அரசுடமையாக்கப்படும் என்கிற பதில் முழக்கத்துடனும் வெளிநாட்டு நீதிபதிகளின் ஊடாகப் படையினரை வேட்டையாட முற்படுகின்றனர் என்கிற போர்க் குரலுடனும் மகிந்த எழுந்து நிற்கிறார். ஆட்சிக் கவிழ்ப்பு நிச்சயம் என்று சூளுரைக்கிறார்.

எந்த அரசு அவர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்களையும் அதிகார வரன்முறை மீறல் குற்றச்சாட்டுக்களையும் வைத்ததோ அதே அரசு மீது அதே ஏவுகணைகளையே திரும்பி ஏவுகிறார். எதுவும் செய்ய முடியாததாக அரசு கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எதையாவது செய்யும் திராணி இந்த அரசுக்கு இருக்கிறதா என்கிற சந்தேகமும் எழுகிறது.

மகிந்தவின் எழுச்சி சிங்கள பௌத்த மக்களுக்கு நன்மையாக முடியுமோ இல்லையோ, தமிழ் மக்களுக்கு நிச்சயம் பாதகமாக முடியும். புதிய அரசமைப்பு முயற்சியில் ஏற்படும் தோல்வி உட்பட எதையெடுத்தாலும் இனிமேல் மகிந்தவையே சாக்குப் போக்காகச் சொல்லும் இந்த ஆட்சி என்று திடமாக நம்பலாம். தமது சறுக்கல்களுக்கு தோல்விகளுக்கு எல்லாம் மகிந்தவே காரணம் என்பார்கள். அவர் இனவாதத்தைக் கக்கும்போது தாம் எதையும் செய்ய முடியவில்லை என்பார்கள். அவர் அதைத்தான் செய்வார் என்பதைத் தெரிந்திருந்தபோதும், அதை அனுமதித்துவிட்டு சிறுபான்மை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறக்க அவரைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இதுதான் வரலாறு முழுவதும் நடந்தது. இந்த ஆட்சி அதிலிருந்து வேறுபட்டது என்று சொல்வதற்கான சான்று ஏதும் இதுவரைக்கும் இல்லை.

# காணாமல் போனோர் தொடர்பில் இறப்பைப் பதிவு செய்தல் அவசியமே!

ந.சதாசிவ ஐயர்
ஓய்வுபெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்.

காணாமற்போன ஆள்களைப் பதிவு செய்வதற்காகவும், சான்றிதழ் வழங்குவதற்காகவும் ஒரு சட்டவரைவு பொதுமக்கள் தகவலுக்காக 10.06.2016ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 05.07.2016 நாடாளுமன்றில், உள் நாட்டலுவல்கள் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதத்துக்கு எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டதுடன், அது 2016 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கச் சட்டமாகவும் வெளியிடப்பட்டுள்ளது. பதிவு செய்து சான்றிதழ் வழங்கும் நடவடிக் கைகள் பதிவாளர் நாயகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் நன்மை தீமைகளை ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. இது பற்றிச் சமூக நலன்விரும்பிகளுக்கும், அதிகாரிகளுக்கும், மக்களுக்கும் தகவல் வழங்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

பிறப்பு, இறப்புப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின் கீழ், இறப்புக்களை பதிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி ஒருவர் இறந்துவிட்டால், அவரது உறவினர், அக்கறையுள்ளோர் அவரது இறப்பைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதற்கு ஆதாரமாக இறப்பு நிகழ்ந்த திகதி, இடம், உடனிருந்தவரின் அறிக்கை அல்லது சாட்சியம், தகனம் செய்யப்பட்ட அல்லது புதைக்கப்பட்ட இடம், இறப்புக்கான காரணம், இறந்தவர் தொடர்பான பெயர் விவரங்கள் முறைப்படி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

கிராம அலுவலர் ஒருவர், தமது பகுதியில் நிகழும் ஒவ்வொரு பிறப்பு இறப்புத் தொடர்பிலும் பிறப்பு இறப்பு கட்டளைச் சட்டத்தின் 40ஆம் பிரிவின்படி, தாமாகவே தமது அறிக்கையை, உரிய படிவத்தில் அது நிகழ்ந்து ஏழு நாள்களுக்குள் உரிய பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும் எனச் சட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பதியாமல் தவறவிடப்பட்ட மரணங்களைக்கூடக் காலந்தாழ்த்திப் பதிவதற்குரிய ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளன.

ஆனால், ஒருவர் காணாமற்போய்விட்டால், அவர் இறந்துவிட்டார் எனப் பதிவு செய்வதற்கு சட்ட ஏற்பாடுகள் இருந்ததில்லை. ஆயினும் ஒருவர் காணாமற்போய் ஏழு வருடங்கள் கடந்துவிட்டால், அது தொடர்பில் அக்கறையுள்ளவர்கள், மாவட்ட நீதிமன்றில் மனு ஒன்றைச் சமர்ப்பித்து, காணாமல் போனவரது சொத்துக்கள் தொடர்பில் நிவாரணங்களைத் தேடிக்கொள்ளலாம். ஆனால் தற்போது நீதிமன்றின்முலம் நிவாரணம் தேடுவதற்கான காலம் ஒரு வருடமாகும்.

1989, ஜே.வி.பி கிளர்ச்சியின் காரணமாக காணாமற்போனவர்களின் பின்னுரித்தாளர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், 1992 ஆம் ஆண்டு முதன் முதலாக பிறப்பு இறப்புக் கட்டளைச் சட்டத்தில் ஒரு தற்காலிக திருத்தம் அரசால் கொண்டு வரப்பட்டது. அதுதான், காணாமற்போனவர்களை இறந்தவர்களாகக் கருதி, இறப்பைப்பதிவு செய்யும் தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்.

### காணாமல் போனவர்களை இறந்தவர்களாகக் கருதிப் பதிவு செய்ய வசதி

இந்தச் சட்டத்தின்படி, ஒருவர் காணமற்போய் ஒரு வருடம் கடந்துவிட்டால், அக்கறையுள்ள ஒருவர் அவர் இறந்துவிட்டார் எனத் தன்னளவில் திருப்தியடைந்து, நம்பிக்கை கொண்டு, உரிய தகவல்களைச் சத்தியக் கடதாசி மூலம் பிரதேச செயலருக்கூடாகப் பதிவாளர் நாயகத்துக்கு வழங்கி, காணாமற்போனவரின் இறப்பை பிறப்பு இறப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்ளலாம். இந்தப் பதிவானது, காணாமற்போனதால் இறந்துவிட்டார் என்று தீர்மானிக்கப்பட்டவர் திரும்பி உயிருடன் வந்தாலன்றி, பொதுவான இறப்புச்சான்றாக சகல தேவைகளின் பொருட்டும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க, செல்லுபடியான ஒரு நிரந்தரமான சான்றிதழாகும்.

இந்தத் தற்காலிக ஏற்பாடுகள் சட்டம், இரு வருடங்களுக்கே நடைமுறைப்படுத்தப்பட்ட போதும், மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இறுதியாக 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டமாக நிறைவேற்றப்பட்டபோது, ஒவ்வொரு

> "ஒருவர் காணாமற் போய்விட்டால் அவர் இறந்து விட்டார் எனப் பதிவு செய்வதற்கு சட்ட ஏற்பாடுகள் இருந்ததில்லை. ஆயினும் ஒருவர் காணாமற்போய் ஏழு வருடங்கள் கடந்து விட்டால், அது தொடர்பில் அக்கறையுள்ள்வர்கள் மாவட்ட நீதிமன்றில் மனு ஒன்றைச் சமர்ப்பித்து, காணாமல் போனவரது சொத்துக்கள் தொடர்பில் நிவாரணங்களைத் தேடிக்கொள்ளலாம். ஆனால் தற்போது நீதிமன்றின்முலம் நிவாரணம் தேடுவதற்கான காலம் ஒரு வருடமாகும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு வருங்களின் பின்னரும் புதிய சட்டமாக உருவாக்கவேண்டிய தேவையின் சிரமத்தைக் கருத்திற்கொண்டு, சட்டத்தின் செயற்படு காலத்தை நீடிக்கும் அதிகாரம், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வழங்கப்பட்டது. அதன் படி உள் நாட்டலுவல்கள் அமைச்சரினால் இரு வருடத்துக்கொரு முறை வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்தச் சட்டத்தின் செயற்படுகாலம் நீடிக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தில் தான், காணாமற் போன ஆள்களையும் பதிவுசெய்து அதுபற்றி, காணப்படாமைக்கான சான்று வழங்கும் விடயமும் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டு, புதிய திருத்தச்சட்டமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், இது இறப்புச்சான்று அல்ல. ஒருவர் இறந்துவிட்டால் முறைப்படி இறப்புச்சான்று வழங்கப்படும். அதன்மீது பின்னுரித்தாளர்கள் தங்கள் நிவாரணங்களை உரிய சட்டங்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ளலாம். ஒருவர் காணாமற் போய்விட்டால், ஒரு வருடமாக அவரைப் பல இடங்களிலும் தேடி அலைந்து எங்கும் காணாமல், இறுதியில் அவர் இறந்திருப்பார் என முற்று முழுதாக நம்பி, பின்னுரித்தாளர்களின் நன்மைக்காக, காணாமற்போனவரை இறந்தவராகக் கருதி, இறப்பைப் பதிவு செய்யும் தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின்படி, இறப்பைப் பதிவு செய்யலாம். காணமற் போனவர் தொடர்பில் விசாரிக்கும் ஆணைக் குழுக்களுக்கு, இறப்பைப் பதிவு செய்யும்படி விதந்துரைக்கும் அதிகாரம் கிடையாது. அதனால்தான், போர் நடந்த காலத்தில், பொது மக்களில் ஒருவர் காணாமற்போனமை தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கோ, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கோ, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கோ முறையிட்ட போதும், அவரைப்பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம் எனக் குறிப்பிட்டு கடிதம் மட்டுமே வழங்கப்பட்டது. அதனை ஏற்றுக்கொண்டு காணாமற்போனவர் இறந்திருப்பார் எனக் கருதி முடிவெடுக்கும் உறவினர், இந்தத் தற்காலிக ஏற்பாடுகளின் மீது இறப்புக்களைப் பதிவுசெய்யக் கூடியதாக இருந்தது.

### தேவை கருதி வழங்கப்படும் காணப்படாமைக்கான சான்றிதழ்

ஆனால், தம் கண்முன்னாலேயே கடத்தப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட அல்லது கையளிக்கப்பட்ட அல்லது சரணடைந்த ஒருவர் இறந்துவிட்டார் அல்லது காணாமற்போய்விட்டார் என அக்கறையுள்ளவர் (உறவினர்) நம்பாதபோதும், இறந்திருக்கலாம் எனக் கருதாத போதும், ஏற்றுக்கொள்ளாதபோதும், அவரைப்பற்றி எதுவுமே அறிந்து கொள்ள முடியாதபோதும், அது பற்றிய தேடல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையிலும், தமது ஜீவனோபாயம் கருதி, பிள்ளைகளின் நலன்கருதி, எதிர்காலம் கருதி, சொத்துக்கள் தொடர்பில் ஏதாவது உரித்துக்கோருதல் கருதி நடவடிக்கை எடுப்பதற்காக ஒவ்வொரு சட்டத் தேவைகளையும் பூர்த்தி செய்யவேண்டியுள்ளது. இந்தச் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, தற்காலிகமாக வேனும் சம்பந்தப்பட்ட நபர் சம்பந்தமாக உறுதிப்படுத்தும் ஒரு சான்றிதழ் தேவையாக உள்ளது. அந்தச் சான்றிதழ் முறையாக ஒரு திணைக் களத்தினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இறப்புக்களைப்பதிவு செய்யும் மற்றும் காணாமற் போனவர்களை இறந்தவர்க்ளாகக் கருதிப் பதிவு செய்யும் பதிவாளர் திணைக்களமே, இந்தச் சான்றிதழ் வழங்குவதற்கும் பொருத்தமான திணைக்களமென்பதால், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏனைய சட்டங் களுக்கமைவாக தற்காலிக நிவார ணம் பெறும் வகையில் பதிவாளர் நாயகத்தால் இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலம் அதற்காக வழங்கப்பட விருப்பதே காணப்படாமைக்கான சான்றிதழ் ஆகும்.

> காணாமற்போனவர் எனக் கருதப்பட்டவரின் பெற்றோர், பிள்ளைகள், உறவினர் தங்களுக்கான சமூகநல உதவிகளைப் பெறுவதற்காகவும், அவருக்குச் சொந்தமான ஆதனங்கள் தொடர்பில் உரித்துக் கோருவதற்கு வசதியாகவும், இந்தச் சான்று ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் எனச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முக்கியமான விடயம், இது ஒரு தற்காலிக ஏற்பாடே என்பதாகும். இந்தக் காணப்படாமைக்கான சான்றிதழ் இரு வருடங்களுக்கே செல்லுபடியாகும். இருவருடத் தின் பின்னர், பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் மேலும் இரு வருடங்களுக்கு அதனை நீடிக்கமுடியும். ஆதலால், இந்தச் சான்றிதழானது தற்காலிகமானதாகும்.

### காணப்படாமைக்கான சான்றிதழ் பெறும் நடைமுறை விளக்கமும் உள்ளன

இந்தச் சான்றிதழ் "அ" என்பவர் காணாமற்போய்விட்டார் என "ஆ" என்பவர் தகவல் தந்துள்ளார். அதனை நான் பதிவு செய்கிறேன் எனப் பதிவாளர் நாயகம் பதிவு செய்து வழங்கும் சான்றிதழாகுமேயன்றி, இது இறப்புச்சான்று அல்ல.

இந்தச் சான்றிதழுக்கு எவர் விண்ணப்பிக்கலாம்? எப்படி விண்ணப்பிக்கவேண்டும்? எவருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? போன்ற விவரங்கள் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, பின்னுரித்தாளர் நன்மைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட முறைகள் கால நிர்ணயத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தச் சான்றைச் சமர்ப்பித்துப் பெறக்கூடிய நலன்கள் பற்றிச் சட்டத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமற்போனவர் எனக் கருதப்பட்டவரின் பெற்றோர், பிள்ளைகள், உறவினர் தங்களுக்கான சமூகநல உதவிகளைப் பெறுவதற்காகவும், அவருக்கு சொந்தமான ஆதனங்கள் தொடர்பில் உரித்துக் கோருவதற்கு வசதியாகவும், இந்தச் சான்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனச் சட்டத்தில்தெளிவாகக்குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முக்கியமான விடயம் இது ஒரு தற்காலிக ஏற்பாடே என்பதாகும். இந்தக் காணப்படாமைக்கான சான்றிதழ் இரு வருடங்கள் காலத்துக்குச் செல்லுபடியாகும்.

இருவருடங்களின் பின்னர், பதிவாளர்நாயகம் திணைக்களத்தால் மேலும் இரு வருடங்களுக்கு அதனை நீடிக்க முடியும். ஆதலால், இந்தச் சான்றிதழானது, தற்காலிகமானதாகும். இது வலுவிலிருக்கும் போது காணாமற் போனவர் இறந்துவிட்டார் என உறுதிப்படுத்தப்பட்டால், அவரது இறப்பைப் பதிவு செய்யவேண்டுமாயின், காணப்படாமைக்கான சான்றிதழை இரத்துச்செய்து, இறப்பைப் பதிவு செய்து கொள்ளலாம்.

அதேபோன்று ஏற்கனவே காணாமற் போய்விட்டார் எனத் தற்காலிக ஏற்பாடுகள் சட்டத்தின்மூலம் இறப்பைப்பதிவு செய்தோர், விரும்பினால் அதனை இரத்துச்செய்து, காணப்படாமைக்கான சான்றிதழைப்பெற்றுக் கொள்ளவும் முடியும்.

இது தொடர்பாக, சகல பிரதேச செயலர்களுக்கும், கிராம சேவையாளர்களுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. சட்டத்தின் பிரதிகள் வழங்கப்பட்டுள்ளன.

எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால், இவ்வாறு பதிவு செய்யலாம் என வழிகாட்டமுடியுமே தவிர, வற்புறுத்துதல் பொருத்தமற்றது போலத் தோன்றினாலும், இது வரை காணாமற்போகச்செய்யப்பட்டவர்கள் தொடர்பில் ஆணைக்குழுக்கள் விசாரணை மேற்கொண்டனவே தவிர, சட்டரீதியாக எதுவும் நடக்கவில்லை. ஆனால், தற்போது அரசு, ஒருவர் வலுக்கட்டாயமாகக் காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளார்தான், என ஏற்றுக்கொண்டு அதனைப் பதிவுசெய்து, சான்றிதழும் வழங்க முன்வந்துள்ளது எனவும் கொள்ளலாம். இப்படியான ஒரு சான்று இருந்தால்தான், வலுக்கட்டாயமாக காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் பின்னுரித்தாளர்களுக்கு, அதாவது பெற்றோர், மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சமூக நலன்களையோ, உதவிகளையோ, முன்னுரிமை கொடுத்து வழங்கமுடியும். ஆதனங்கள் தொடர்பில், நீதிமன் றுகள் துரித நடவடிக்கை எடுக்கமுடியும். அதலால் சமூக நலன்களை, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய அதிகாரிகள், இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டதால், காணப்படாமைக்கான சான்றின் அவசியத்தைத் பொதுமக்களுக்கு இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான் எனத் தெளிவாக, விளக்கமாக எடுத்துக் கூறி, விண்ணப்பம் மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டியிருக்கும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சமூக நல உதவிகள் கோரி வரும்போது, அதிகாரிகள், காணப்படாமைக்கான சான்றிதழைக்கொண்டு வரும்படி கேட்பது சட்டத்தின் படி தவிர்க்க முடியாததே. ஆதலால், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், உரித்தாளர்கள், இதனைக் க்வனத்திற் கொண்டு ஆவனசெய்தல் பொருத் தமானதாகவே இருக்கும்.



## வாசகர் திருமுகம்

### தீர்மானம் நடைமுறைச் சாத்தியமானதா?

யாழ். மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், நாவற்குழியில் மேற்கொள்ளப்படவுள்ள சிங்கள மக்களுக்கான வீட்டுத் திட்ட முயற்சியைத் தடுத்து நிறுத்தும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப் பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வருமா? அதனால் எதிர்பார்க்கப்படும் சாதகமான பயன் கிட்டுமா? என்பது குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

அந்தப் பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணியில், சிங்கள மக்களுக்கு மானிய அடிப்படையில் 250 வீடுகள் கட்டப்பட இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து இணைத் தலைமைகள் என்ன செய்யப் போகின்றன. அவர்களுக்கும் பொருத்து வீட்டை அமைத்துக் கொடுக்குமாறு கோருவார்களா அல்லது எம்மால் இது விடயத்தில் எதுவும் செய்ய முடியவில்லை என்று கூறப் போகிறார்களா? எனவே நடைமுறைச்சாத்தியமுள்ள விடயங்கள் குறித்துத் தீர்மானங் களை எடுத்துச் செயற்படுத்தினால் மட்டுமே நாடு உங்களைப் போற்றும்.

*கே.ராஜா, மல்லாவி*

### நம்பிக்கை தரும் ஒற்றுமை உணர்வின் வெளிப்பாடு

காணாமல் போனோரது உறவுகள் கடந்த வாரம் வவுனியாவில் முன்னெடுத்த உணவு ஒறுப்புப் போராட்டம், எம்மவர்கள் மத்தியில் வலுவானதொரு ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது. எமக்கெதற்குச் சோலி என்றெண்ணாது, எம்மவர்களில் பல தரப்பினர்கள், தாமாக ஒன்றிணைந்து, அடையாள உணவு ஒறுப்பு, கவனவீர்ப்புப் பேரணி என்பவற்றின் மூலம் குறித்த போராட்டத்துக்கு ஆதரவு நல்கியமை, எம்மவர்களது எதிர்காலச் சாத்வீக வழிப்போராட்டங்களின் வெற்றிக்கு வலுச் சேர்க்கும் ஒன்றாகக் கருதத்தக்கது.

*ப.குணசிங்கம்*
*நல்லூர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் பொ.ஜெசிதரன்

# பழுதடைந்த உணவுகளை இனங்காண்போம்

நாம் உண்ணும் உணவானது சுத்தமாகவும் பாதுகாப்பானதாகவும் இருத்தல் வேண்டும். நுண்ணங்கிகளின் தாக்கத்தால் அவற்றின் தரம் பாதிப்புறும். உணவு நஞ்சாவதற்கும் வாய்ப்புக்கள் அதிகம். பழுதடைந்த உணவின் நிறம், சுவை, உள்ளடக்கம் என்பனவும் மாற்றத்துக்குள்ளாகும். ஆனால் இவை பழுதுற்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிகழும் எனக் கூறமுடியாது. பழுதடைந்த உணவானது பல அசௌகரியங்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தலாம். எனவே இவற்றை இனங்காணும் ஆற்றலை வளர்த்துக் கொள்வோம்.

ஆரோக்கியமான உணவைத் தேர்வு செய்யும்போது எப்பொழுதும் சுத்தமானதும் புதியனவானதுமான உணவு வகைகளையே தேர்வு செய்வோம்.

**பழங்கள்**

வெடித்த, சேதமுற்ற, நிறம் மாறிய, பூஞ்சணம் பீடித்த, பழுதடைந்த, மணமுடைய பழங்களைத் தவிர்ப்போம். சந்தைகளில் வெட்டி விற்கப்படும் பழங்களை வாங்கும் போது மிகமிக அவதானத்துடன் இருப்போம். பழங்கள், காய்கறி வகைகளைச் சமைப்பதற்கு முன்பாக நன்கு கழுவுவதன் மூலமோ அவற்றின் மேற்றோலை அகற்றுவதன் மூலமோ அவற்றில் படிந்துள்ள இரசாயன மருந்துச் சேர்க்கைகளை அகற்றிவிட முடியும்.

**முட்டை**

உடைந்த அல்லது வெடித்த முட்டைகளைப் பாவிப்பதைத் தவிர்த்தல் நன்று. துர்நாற்றம் வீசும் முட்டைகளையும் அவ்வாறே தவிர்த்தல் வேண்டும். புதிய முட்டைகளை நீரில் அமிழ்த்தும் போது கூர்முனை மேல் நோக்கிய நிலையில் அமிழ்ந்திருக்கும். பழுதற்ற முட்டைகள் நீரில் மிதக்கும். உணவுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் முன்பாக அவற்றை நன்கு கழுவுதல் வேண்டும் சல்மோனல்லா (Salmonella) நோய்க்கிருமிகள் இவற்றிலிருப்பதனால் இவற்றைச் சமைக்காது பச்சையாக உண்பது உகந்ததல்ல.

**இறைச்சி**

புதிய இறைச்சி வகைகள் எப்போதும் பிரகாசமான சிவப்பு நிறமாக இருக்கும். கொழுப்புக் குறைவாக உள்ள இறைச்சியே உடலுக்கு நன்மையளிக்கும்.

**பால் மற்றும் பால் பொருள்கள்**

பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டிருப்பின் வாங்க முன்பாக உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதிகளைப் பார்த்து வாங்குதல் வேண்டும். பாஸ்ரறைட் பால் (Pasterized Milk) கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாலாகும். இவை குளிர் சாதனப்பெட்டிகளிலேயே வைத்திருக்கப்படல் வேண்டும். சூரிய வெளிச்சம் படும் வகையில் காட்சிப்படுத்தப்படும் பாலை வாங்குவதை தவிர்க்கவும். பைக்கற்றுக்கள் வீங்கிப் பருத்திருப்பின் அவற்றில் கிருமித் தொற்று ஏற்பட்டுவிட்டது என்பதே அர்த்தமாகும். அவற்றை வாங்கிப் பாவிக்க வேண்டாம்.

**மீன்**

இவற்றைத் தெரிவு செய்யும்போது அவற்றின் பூக்கள் பிரகாசமான சிவப்பு நிறமாகவும் சேதப்படாத பிரகாசமான கண்களை உடையனவான முழுமையான மீன்களைப் பார்த்து வாங்கவும். பழுதடையாத மீன்களின் தோலானது பளபளப்பானதாகவும் ஈரலிப்பானதாகவும் உறுதியான தோற்றமானதாகவும் இருக்கும். மீனின் தசையைத் தொடும்போது மென்மை அல்லது கூழ்த்தன்மையற்றதாக இருத்தல் வேண்டும். உறுதியான தசையை உணர முடியும். மீனை வெட்டும் போது மண்ணிறப் புள்ளிகள் அற்றவையாக சிவப்பு நிறத்தைக் கொண்டவையாக இருத்தல் வேண்டும். மண்ணிறப் புள்ளிகள் இருப்பின் அவை பழுதுறத் தொடங்கி விட்டன எனக் கொள்ளவும்.

குளிரூட்டப்பட்ட கடலுணவுகள் திண்மமாகவே இருத்தல் வேண்டும். அவை பகுதியாக உருகிய நிலையில் இருத்தல் கூடாது. பொதிகள் எப்போதுமே சேதப்படாதவையாக இருக்கின்றனவா? என்பதை பார்த்து வாங்கவும்.

**தானியங்கள் கிழங்குகள் மற்றும் விதைகள்**

கஜு, நிலக்கடலை, சோளம், புழுக்கொடியல், ஒடியல் மற்றும் பயிர் விதைகளை அதிக ஈரலிப்பான இடங்களில் சேமிக்கும் போது அவற்றில் ஒருவித பங்கஸ் வளரும். அவை அவ்லரொக்சின் (Aflatoxin) எனும் நச்சு இரசாயனப் பொருள்களை உருவாக்குகின்றன. இந்த அவ்லரொக்சின் உள்ள உணவுகளை உண்ணுவதால் ஈரல் புற்று நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும். எனவே நிறம் மாறிய விதைகளை உள்ளெடுப்பதைத் தவிர்த்தல் நன்று.

முளைத்த மற்றும் பச்சை நிறமான உருளைக்கிழங்குகளையும் தவிர்த்தல் வேண்டும். இந்தப் பச்சை நிறம் அல்க்காலொயிட்ஸ் (Alkaloids) எனும் நஞ்சு இருப்பதன் அறிகுறியாகும்.



ஏப்பொழுதுமே காலாவதியாகும் திகதியைப் பார்த்து வாங்கவும். உடைந்த கொள்கலன் கள், வீங்கிய பைக்கற்றுக்கள், கசிவுறும் கொள்கலன்கள், உடைக்கப்பட்ட பொதிகள், சரியாக முத்திரை யிடப்படாத பொதிகள் புரியாத பாசை யிலுள்ள சுட்டுத் துண்டு டனான பைக்கற்றுக்கள் போன்ற வற்றிலுள்ள உணவுகளை வாங்க வேண்டாம். காலாவதியான உணவு நல்ல மணமும் சுவையும் கொண்டிருப் பினும் அவற்றைப் பயன்படுத்திட வேண்டாம். அவை நுண்ணங்கி நோய்க்கிருமித் தொற்றுதலுக்கு உள்ளாகியிருக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

**பொதி செய்யப்பட்ட உணவுகள்**

எப்பொழுதுமே காலாவதியாகும் திகதியைப் பார்த்து வாங்கவும். உடைந்த கொள்கலன்கள், வீங்கிய பைக்கற்றுக்கள், கசிவுறும் கொள்கலன்கள், உடைக்கப்பட்ட பொதிகள், சரியாக முத்திரையிடப்படாத பொதிகள் புரியாத பாசையிலுள்ள சுட்டுத் துண்டுடனான பைக்கற்றுக்கள் போன்ற வற்றிலுள்ள உணவுகளை வாங்க வேண்டாம். காலாவதியான உணவு நல்ல மணமும் சுவையும் கொண்டிருப்பினும் அவற்றைப் பயன்படுத்திட வேண்டாம். அவை நுண்ணங்கி நோய்க்கிருமித் தொற்றுதலுக்கு உள்ளாகியிருக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம்.

குளிரில் அல்லது அதீத குளிரில் வைத்திருக்க வேண்டிய உணவு வகைகள் அவ்வாறான நிலையில் பேணப்படாவிடின் அவற்றை வாங்க வேண்டாம். அஜினமோட்டோ அதிகம் சேர்க்கப்பட்ட உணவு வகைகள் உடல் ஆரோக்கியத்துக்குத் தீங்கு விளைவிக்கும். அஜினமோட்டோ அதிகம் சேர்க்கப் பட்ட உலர்ந்த உணவுகளை உள்ளங்கையில் கொட்டிப் பின்பு அதனை மீளவும் பைக்கற்றினுள் கொட்டிய பின் உள்ளங்கையைப் பார்ப்போமானால் உள்ளங்கையில் பல வர்ண சிறு சிறு கண்ணாடித் துண்டுகள் மாதிரித் தென்பட்டால் அந்த உணவில் அஜினமோட்டோ அதிகம் சேர்க்கப்பட்டுள்ளது என்பதனை அறிந்து கொள்ளலாம். அஜினமோட்டோ சேர்க்கைகள் புற்றுநோயைத் தூண்டும் காரணிகளில் ஒன்று என்பது நாம் அனைவரும் அறிந்ததே. பானங்கள், பழரசங்கள் வாங்கும் போது நியம நிறக் குறியீட்டையும் பார்த்து வாங்கிட மறக்க வேண்டாம். பச்சை நிறக் குறியீடு உள்ளவையே ஆரோக்கியமானவை. அவற்றில் நூறு மில்லி லீற்றரில் (100 மில்லி லீற்றர்) 2கிராமுக்குக் குறைவான சீனியே சேர்க்கப்பட்டுள்ளது. மஞ்சள், சிவப்பு நிறக்குறியீடுகள் பொறித்த பானங்களைத் தவிர்த்தல் நன்று.

**செயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்ட பழங்கள்**

செயற்கையாக மருந்து விசிறிப் பழுக்க வைக்கப்பட்ட பழங்களை இனங்காண்பது இலகு. பழக்காம் பானது முதிர்ச்சியடையாது இளமையாகக் காணப்படும். தோல் திட்டுத் திட்டாகப் பழுத்துக் காணப்படும். அவை சுவையற்றவையாக இருக் கும் ஈ, எறும்பு, தேனீ போன்றவை இந்தப் பழங் களை நோக்கி கவரப்படா. நீண்ட காலம் அழு கலடையாது காணப்படும். பழங்களை வெட்டும் போது அவற்றின் விதைகளும் இலகுவில் வெட்டப்படக்கூடியதாக இருக்கும். இயற்கையாகப் பழுக்கும் செயன்முறையானது அடிப்பகுதியிலிருந்து நுனியை நோக்கியதாகவும் விதைப் பகுதியிலிருந்து தோலை நோக்கியதாகவும் இருக்கும். ஆனால் செயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்டவற்றில் தோலிருந்து விதை நோக்கியதாக இந்தச் செயன்முறை காணப்படும். பழங்களை வெட்டிப் பார்ப்பதன் மூலமே இதனை அறிந்து கொள்ள முடியும்.

நாங்கள் பழங்கள் வாங்கும் வியாபாரி செயற்கையாகப் பழுக்க வைக்கப்பட்ட (மருந்து விசிறி) பழங்களை விற்பதனை உணர்ந்து கொண்டால் அதனை அவருக்குத் தெரியப் படுத்துங்கள். நான் இனிமேல் உங்களிடம் பழங்கள் வாங்கப்போவதில்லை. ஏனெனில் நீங்கள் என்னை ஏமாற்றுகின்றீர்கள் என்று நாம் ஒவ்வொருவரும் கூறுவோமெனில் வியாபாரி தன் செயன்முறையை, கொள்வனவு முறையை மாற்ற முயல்வார். எங்கள் வீடுகளுக்கு அண்மையாகவுள்ள நம்பிக்கைக்குரிய வர்களிடமிருந்து மட்டுமே பழங்களை வாங்கி வருவோ மானாலும் இயற்கையாகப் பழுத்த பழங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

எமது ஆரோக்கிய நிலையை மேம்படுத்த பழுதடைந்த உணவுகளை இனங்காணும் எம் ஆற்றலை வளர்த்துக் கொள்வோம்.

சுகாதார வைத்திய அதிகாரி,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 29.01.2017



குணசேகரன் சக்தீனா

“பிள்ள பார்த்து வாங்கோ மேல இருக்கிற வளை தலையில இடிச்சுப் போடும். தங்கச்சி இந்தக் கதிரையில இருங்கோ (அது மிகவும் பழைமையான கதிரை) புயப்படாத பிள்ள. இது எங்கட அப்புவின்ர காலத்துக் கதிரை முதிரையாலானது. நம்பி இருக்கலாம்” சென்ற களை தீரக் கதிரையில் அமர்ந்தேன். மாரி காலத்தின் பின்பகுதியாதலால் நிலங்கள் யாவும் பச்சைக் கம்பளம் விரித்தால் போல் வயல் வெளிகள். பழைமையைப் பறைசாற்றும் வீடுகள் பலவும் ஆங்காங்கே தென்பட்டன. மனிதர்களைப் போல தலையசைத்து என்னை வரவேற்ற பனைமரங்கள் என்று அனைத்தையும் கடந்து சென்றுகொண்டிருந்தேன். அந்த ஊர் என்னைத் தனக்குள் மகிழ்வோடு உள்வாங்கியது. இது யாழ்ப்பாணத்திலுள்ள சப்த தீவுகளில் ஒன்றான காரைநகர்.காரைநகரின்களபூமிக்கிராமத்திலிருந்து பழைமை வளர்க்கிறார் கந்தப்பு நடராஜா ஐயா. தனது சிறிய வயதில் இருந்து அவர் பயன்படுத்திய பொருள்களையும் தனக்கு முன்னோர் பயன்படுத்திய பொருள்களையும் மிகவுபாதுகாப்பாகச் சேமித்து வைத்திருக்கிறார் இவர்.

# தனிநபர் அருங்காட்சியகம்

## காரைநகரில் அரிய முயற்சி

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இன்று தமிழர் "மத்தியில் பழையன கழிதலும் புதியன புகுதலும்" பண்பாடாகிவிட்டது. ஆனால் அவற்றுக்குள் சிக்காமலும் சிலர் இருக்கிறார்கள் என்பதற்கு உதாரணமாகவுள்ள நடராஜா ஐயாவைப் பார்த்தபோது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அவர்பாதுகாக்கும்பொருள்களைத் தனது வீட்டில், அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தியிருப்பதைப்போல வைத்திருக்கிறார். ஆனால் அந்த வீட்டின் நிலை பழமையானது. தான் பிறந்து, வளர்ந்து, இன்றுவரை வாழ்ந்து வரும் வீடு மட்டுமன்றித்தனதுதலைமுறைகள் பல வாழ்ந்ததும் இதில் தான் என்கிறார் 82 வயதாகும் அந்த ஐயா.

அவர் பக்குவப்படுத்தி வைத்திருந்த பொருள்கள் ஒவ்வொன்றையும் மிகவும் அவதானமாக எடுத்த நான் அவை பற்றி அறிய முற்பட்டேன். அவற்றின் பயன்பாடுகளை ஐயாவிடமிருந்து நான் தெரிந்து கொண்டேன்.

எனது காலில் தற்செயலாகத் தட்டுப்பட்டுத் தாளம் எழுப்பிய வெண்கலப் பாத்திரத்தைக் கையில் எடுத்தவர்

"பிள்ள இது வெண்கலப் பாத்திரம், இந்த வெண்கலப் பாத்திரத்தில் சமைத்துச் சாப்பிட்டால் உடற்சோர்வு நீங்கி நாள் முழுவதும் புத்துணர்ச்சியாக இருப்பதை உணரலாம். இதில் சமைத்த பொருள்கள் வெகுவிரைவில் பழுதடையாது . ஆனால் வெண்கலப்பாத்திரத்தைச் சரியாகக் கழுவி வெயிலில் காயவைத்துப் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் அடுத்த முறை சமைக்குபோது களிம்புப் படலம் உண்டாகி உணவின் தன்மை நஞ்சாகிவிடும். இதனால்தான் வெண்கலப் பானையில் சமைத்த உணவுகள் சில சமயங்களில் நிறம் மாறிவிடுவதைக் காணலாம்" என்றார். இப்போது அவர் கூறுபவை அவர் சேமித்து வைத்திருக்கும் பழைய பொருள்களிலும் பெறுமதியானவையாக இருக்கின்றன.

வெண்கலப் பாத்திரங்களுக்கு அடுத்தவையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன செப்புப் பாத்திரங்கள் அதிலொன்றைக் கையிலெடுத்தவர் அதில் ஒட்டியிருந்த படிவுகளைத் தனது விரல்களால் களைய முயன்றார்.

"ஒவ்வொரு முறையும் செப்புப் பாத்திரத்தைக் கழுவும்போது அதில் கறுப்பாக ஒரு கலவை படியும் அதுவும் செம்புதான். அது உணவில் கலந்து, உடலினுள் சென்று மூளையில் உள்ள நியூரான்களை அழிக்கும் ஆபத்துக்குரியது.

மேலும் ஆஸ்துமா, காசநோய் போன்ற சுவாச நோய்களும், குடற்புண் பாதிப்பும் ஏற்படும். செம்பு கடின உலோகமாகமாயினும், அமிலத்தன்மை கொண்ட தக்காளி போன்ற சில காய்கறிகளின் தாக்கத்தால் பிரிகையடைந்து உடலுக்குள் சென்று தசை மற்றும் சிறுநீரகங்களில் படிய ஆரம்பிக்கும். அந்தக்காலத்தில இதை அனைவரும் நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள்" என்றார்.

இப்பொழுது நான் மிக மிக அவதானமாகக் கால்களை எடுத்து வைக்கின்றேன். நான் அறிந்துள்ள செம்பு இவ்வளவு சிறப்புள்ளதா! வெறும் தண்ணீர் பருகப் பயன்படும் செம்பில் இத்தனை வகைகள் உள்ளனவா! என்று வியப்பில் ஆழ்ந்தேன்.

"வீடுகளின் முன்னே தண்ணீர் நிறைந்த வாளிக்குள் செம்பு மிதந்துகொண்டிருக்கக் காரணம், வீட்டின் உள்ளே வருவோர் யாவரும் கால்களைக் கழுவி வீட்டுக்குள் வரவும், வெய்யிலுக்குள் சென்றுவிட்டு வீட்டுக்கு வருவோரும் விருந்தாளிகளும் தாகம் தீர்ப்பதற்கு வாய் முட்டாதபடிக்கு அண்ணாந்து தண்ணீரைக் குடிப்பதற்குமாகும். பாத்திர வார்ப்பின் இலட்சணமும் அதன் உலோகப்பெறுமதியும் இயற்கைக்கும் சுத்தத்திற்கும் செம்புக்குத் தமிழர் வழங்கிய முக்கியத்துவத்தைச் சொல்லும்" என்றார்

அருகிலிருந்த செம்புவடிவிலான ஒரு புதிய பொருளைப்பார்த்து "இதுதானம்மா பூட்டுச் செம்பு" என்றவர்.

"இறுக்கமாகப் பூட்டிப் பாவிக்கக் கூடிய வகையில் இதன் மூடி இருப்பதால் பூட்டுச் செம்பு எனவும் தூக்குவதற்குக் கைப்பிடியைக் கொண்டதால் தூக்குச் செம்புஎனவும் இதனை அழைத்தார்கள்" என்றார்.



அந்தக்காலத்தில் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க வசதி படைத்தவர்களின் வீடுகளில் இதன் பயன்பாடு அதிகம் காணப்பட்டது. இது தான் 'பெட்டகம்' பிள்ள, அந்தக்காலத்தில சேமிக்கிறதுக்கு வைப்பகங்கள் இல்லை. ஆகையால் இதில வைச்சுத் தான் பாதுகாப்பினம். முக்கியமான பொருள்களை இதனுள் பூட்டி வைப்பினம்

"பிள்ளை! இதைப்பாரதத்தென்னப் பண்பாட்டுக்குரியவர்கள் 'கூஜா'என்று அழைப்பார்கள். பித்தளையினால் ஆனா, செம்பு இனத்தைச் சேர்ந்த இது மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கின்றது. செம்பு, குவளை, மூடி என்பவை ஆகும். செம்பின் வாய்ப்பகுதியோடு இணைக்கத்தக்க விதமாகக் குடிக்கும் வாய்ப்பகுதியை உள்ளடக்கி அது வெளியே தெரியாத விதமாகவும் வெளியே திரவ பதார்த்தங்கள் சிந்தாத விதமாகவும் 7-8 புரிகள் கொண்ட மூடி அமைந்திருப்பது இதன் சிறப்பாகும்.

இது முன்பு நீண்ட வழிப்பயணத்துக்காக பானங்களை இட்டு நிரப்பி எடுத்துச் செல்லப் பயன்பட்ட ஒரு சாதனம்" என்றார்.

அங்கு செம்புகளுக்கு மத்தியில் 'மூக்குப்பேணி' ஒன்றுமிருந்தது. இது மாதிரி ஒன்று எனது அம்மம்மா வைத்திருந்ததால் அதன் பெயர் எனக்குத் தெரிந்திருந்தது. பித்தளையினால் ஆன இது நாம் தண்ணீர் பருகப் பாவிக்கும் வட்டவடிவான வாய்ப்பகுதியையுடைய பாத்திரங்களிலிருந்துமாறுபட்டுக் கூர்வடிவில் முன்னோக்கி நீண்டிருந்தது வாய்ப்பகுதியைக் கொண்டிருந்தது. இதுதானம்மா 'மூக்குப்பேணி' என்றார் ஐயாவும்.

'நான் சிறுவனாக இருந்த காலத்தில் மூக்குப்பேணியில் தான் தேநீர் அருந்துவது வழக்கம் எனக்கு அதில் என்னவோ ஒரு வித்தியாசமான சுவை இருப்பதாக இருக்கும். சில வேளைகளில் மூக்குப்பேணி பித்தளையால் செய்தபடியினால் அவ்வாறான ஒரு சுவை வருகின்றதோ தெரியவில்லை' என்றவர் அதன் அமைப்பைப் பற்றிக் கூறவும் மறக்கவில்லை.



இதன் அமைப்பு ஏனைய பாத்திரங்களில் இருந்து வித்தியாசப்படும். மூக்குப் போன்ற வாய் பகுதியை உடையதால் இதற்கு மூக்குப்பேணி என்று பெயர் வந்தது. குடிக்கும் திரவத்தை வெளியே சிந்தாமல் குடிக்கவும் வாய்ச் சுகாதாரத்தைப் பேணவும் இது சிறந்தது. வாய் மூலம் நோயும் பரவாமல் இருக்கும்" என்றார்.

பெறுமதிமிக்கவை அதற்குரியவர்களிடம் இருப்பது தான் சாலச்சிறந்தது என்பதை அறிவோம், இந்தப் பழைய பொருள்களும் அதற்குரிய மனிதரிடம் தான் இருக்கின்றன என்பதை உணரமுடிந்தது.

"ஒவ்வொரு பொருள்களையும் காட்டிவாறு ஐயா கூறிக்கொண்டு சென்றபொழுது அடுத்ததாக இருந்தது அரிக்கன் சட்டி. இந்த அரிக்கன் சட்டி பற்றி நானும் அறிவேன். என்னுடைய அம்மாவும் இதனைப் பாவித்திருக்கிறார். அதனால் அன்று அரிக்கன் சட்டியைப் பற்றி அறியும் ஆவல் எனக்கிருக்கவில்லை.

ஐயா கூறினார்."அரிசி கிளைய மண் அரிக்கன் சட்டியைப் பாவித்தனர். அவற்றின் உட்புறத்தில் வரிவடிவங்கள் ஏற்ற இறக்கத்துடன் வரையப்பட்டிருக்கும். தற்போது வெண்கல, ஈயச் சட்டிகளே இவ்வாறு பாவனையில் உள்ளன. அரிசியில் கல்,மண் கலப்பிருக்கும் அவற்றை நீக்குவதற்கு அரிக்கன் சட்டியில் இட்டு தண்ணியை விட்டு மெதுவாக அசைத்து எடுக்கும்போது பாரம் காரணமாகக் கல்,மண் அரிக்கன் சட்டியின் உட்புறமுள்ள வரிகளில் படிந்துவிட அரிசி மேலே மிதக்கும். ஆகையால் இவற்றை இலகுவாகப் பிரித்தெடுத்து விடலாம். இது அரிசியை அரிக்க மட்டுமில்லை உழுந்து போன்ற ஏனைய தானியங்களில் உள்ள கல்லை நீக்குவதற்கும் பயன்பட்டது. இன்று கல் கலந்த அரிசியைச் சரியாக அரிக்காமல் பாவித்து கல்லடைசல் போன்ற உபாதைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது" கவலையுடன் ஐயா கூறும்பொழுது நம் முன்னவர்கள் ஏன் நோய்நொடியின்றிப் பல காலம் வாழ்ந்தார்கள் என்பதை அறியக்கூடியதாக இருந்தது.

"அந்தக்காலத்தில் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க வசதி படைத்தவர்களின் வீடுகளில் இதன் பயன்பாடு அதிகம் காணப்பட்டது. இது தான் 'பெட்டகம்' பிள்ள, அந்தக்காலத்தில சேமிக்கிறதுக்கு வைப்பகங்கள் இல்லை. ஆகையால் இதில வைச்சுத் தான் பாதுகாப்பினம். முக்கியமான பொருள்களை இதனுள் பூட்டி வைப்பினம். யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் பெட்டகம் பாவனையில் இருந்தது. நெல் போன்ற தானியங்களை சேமிப்பதற்கும் இந்தப் பெட்டகம் அதிகம் பயன்பட்டது.

(46 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முடி உதிர்வைத் தடுக்கும் சூரியகாந்தி



சூரியகாந்தி எண்ணெய், வறண்ட கூந்தலுக்கும் முடி உதிர்த லுக்கும் எதிரானது. முடியை அடர்த்தியாக வளரச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது. பின்வரும் முறையைக் கையாண்டால், உங்கள் தலைமுடி உதிர் வைத் தடுக்க முடியும்.

சூரியகாந்தி எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் சிறிதளவு எடுத்துக்கொள்ளவும்.

இரண்டையும் நன்றாகக் கலக்கிய பின்னர் லேசாகச் சூடுபடுத்தவும். தலையை லேசாக ஈரப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் எளிதில் எண்ணெய் ஊடுருவும். பின்னர் இந்த எண்ணெயைத் தலையில் தடவி, நன்றாக மசாஜ் செய்யவும்.

பின் தலையை சீவுங்கள். தொடர்ந்து, ஒரு துண்டை வெது வெதுப்பான நீரில் நனைத்துப் பிழிந்து அதனைத் தலையில் கட்டிக்கொள்ளுங்கள்.

ஒரு மணி நேரம் கழித்துத் தரமான ஷாம்புவைப் பயன்படுத் தித் தலைமுடியை வெதுவெதுப்பான நீரில் கழுவவும். இவ்வாறு, வாரத்தில் இரு தடவைகள் செய்துவர, உங்கள் தலைமுடி அடர்த்தியாக வள ரும்.

# இவற்றின் தோல்களை நீக்காது சமையுங்கள்

பொதுவாக மரக்கறிகளின் தோல்களை நீக்கிய பின்னரே சமையல் செய்வது வழக்கம். ஆனால், சில மரக்கறி களைத் தோலுடன் சமைப்பதனால் அதிக போசணைச் சத்துக்கள் கிடைக்கின்றன. அத்தகைய மரக்கறி வகைகள் குறித்துத் தெரிந்து கொள்வோம்.



## உருளைக்கிழங்கு

**உருளைக்கிழங்கின் தோலில் நார்ச்சத்து, உயிர்ச்சத்துக்கள், பொட்டாசியம், இரும்புச் சத்து போன்றவை அதிகம் உள்ளன. ஆதலால், உருளைக்கிழங்கைத் தோலுடன் சமைத்துச் சாப்பிடுவது மிகவும் நல்லது.**



## பீட்ரூட்

பீட்ரூட்டின் தோலில் பீட்டா லெயின் என்னும் பைட்டோ நியூட் ரியன்டுகள் உள்ளன. எனவே, பீட்ரூட் கிழங்கின் தோலை நீக்காமல் அதனைச் சிறு துண்டுகளாக நறுக்கி, அதனுடன் ஒலிவ் எண்ணெய், உப்பு சேர்த்துச் கலந்து வேகவைத்துச் சாப்பிட்டால் மிகவும் நல்லது.



## கத்தரிக்காய்

ஊதா நிறமுள்ள கத்தரிக்காயின் தோலில் மட்டும் அன்டி-ஒக்ஸிடன் டுகள், ப்ளேவோனாய்டுகள் போன்ற சத்துக்கள் அதிகமாக உள்ளன. எனவே, கத்தரிக்காய் வாங்கும் போது, ஊதா நிற கத்தரிக்காயை வாங்குங்கள். அதனைத் தோலு டன் சமைத்துச் சாப்பிட்டால், நமது உடம்பின் ஆரோக்கியம் மேம்படும்.



## கரட்

கரட் தோலில் பீட்டா கரோட்டீன், பீனோலிக், அன்டி-ஒக்ஸிடன்டுகள் போன்ற சத்துக்கள் அதி கம் நிறைந்துள்ளன. எனவே, கரட்டை எப்போதும் தோலுடன் சாப்பிட்டால், இதய நோய், புற்றுநோய், பார்வைக் கோளாறு போன்ற பிரச்சினைகள் ஏற்படா.

## வெள்ளரிக்காய்

வெள்ளரிக்காயின் தோலில் கலோரிகள் குறை வாகவும் உயிர்ச்சத்து கே, அன்டி-ஒக்ஸி டன்ட் டுகள், நார்ச்சத்துக்கள் போன்றவை அதிகமாகவும் உள்ளன. எனவே, வெள்ளரிக்காயைத் தோலுடன் சாப்பிட்டால், மலச்சிக்கல் மற்றும் குடல் புற்றுநோய் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புக்கள் தடுக்கப்படும்.



# பித்தவெடிப்பை குணப்படுத்தும் தேன் கிறீம்!

பித்தவெடிப்பு அதிக வலியைக் கொடுக்கும். அழகான உருவத்தை யும் சுமாராக காண்பிக்கும். அத்தோடு, ஆரோக்கியமற்றதும் கூட. இந்தக் குறிப்புகளைப் பயன் படுத்திப் பாருங்கள். விரைவில் பயன் கிடைக்கும்.

**தேவையான பொருள்கள்-**

**01.தேன்-1 கப்**
**02.பால்- 1 மேசைக்கரண்டி**
**03.ஒரேஞ்சு சாறு- 2 தேக்கரண்டி**



செய்முறை-

தேனை ஓரளவு சூடாக்கவும். பின்னர் அதில் பால் மற் றும் ஒரேஞ் சாறை கலக்கவும். பாதம் மிகவும் கடின மாக இருந்தால், ஒரேஞ் சாறை அதிகப்படுத்திக் கொள்ளவும். இதனைத் தினமும் இரவில் பாதங்களில் பூசிக்கொள்ளுங்கள். இவ்வாறு செய்தால், பித்த வெடிப்பு மறைந்து மென்மையான பாதம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேடைப் பேச்சில் வல்லவராகிய வல்லவராஜன், தான் பங்குபற்றும் கூட்டங்களில் பேசும்போது அடிக்கடி "நான் செய்த பாக்கியம், நான் செய்த பாக்கியம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்திக் கொள்வார்.

இதை அறிந்த அவரது மனைவி யார் அந்த பாக்கியம் என்பதை அறிவதற்காக அவர் பேசும் கூட்டம் ஒன்றுக்குச் சென்றிருந்தார்.

வல்லவராஜன் தனது பேச்சில் "இன்று உங்கள் முன் பேச்சாளராக நிற்கிறேன் என்றால் அது எனது பேச்சின் திறமை மட்டுமில்லை நான் செய்த பாக்கியமும் தான்" என்றார்

கோபம் கொண்ட அவரது மனைவி கூட்டத்தினிடையே எழுந்து "முதலில் யார் அந்தப் பாக்கியம் எண்டதை வெளிப்படையாகச் சொல்லுங்கோ"? என உரக்கக் கத்த "சத்தியமாய்ச் சொல்லுறன் நான் சொன்ன பாக்கியம் அடுத்த வீட்டு அழகிய அன்ரி பாக்கியம் இல்லை" என்றார். கூட்டத்தினர் கொல் என்று சிரித்தனர். நீங்களும் கொஞ்சம் சிரியுங்களேன்.

கலாபூசணம் மு.மாசிலாமணி

# 'மழையின் அருமை வெயிலில் தெரியும்'

■ கா.கணேசதாசன்

இன்றைய அவசரமான அதிவேக கால ஓட்டத்துக்கு ஈடுகொடுக்கவேண்டி அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கை வளங்களை ஒருபோதும் அழிக்கக் கூடாது. வளர்ச்சி, அபிவிருத்தி என்ற போர்வையில் திட்டமிடப்படாது கண்களை மூடிக்கொண்டு நாம் செய்யும் இத்தகைய செயற்பாடுகளால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருதைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

இன்றைய காலத்தில் எல்லோருடைய ஆதங்கமும் இயற்கை பொய்த்துவிட்டது என்பதே. உரிய காலத்தில் மழை இல்லை. காலம் தப்பிய மழை, அழிவுக்கு வந்த மழை. வரவேண்டிய நேரத்தில் வராது இப்போது வந்து கெடுக்கின்றது என மாரிகாலத்தின் போது இயற்கையைத் திட்டித்தீர்க்கிறார்கள். வெயிலின் கொடுமை தாங்க முடியவில்லை, நிழலுக்குள் நிற்பதற்கு ஒரு மரம் கூட இந்த வீதியில் இல்லை. சிறியளவாவது மழை வராதா, ஒரு காலமும் இப்படி வெயில் இல்லை எனக் கோடை காலத்திலும் இயற்கையைத் திட்டித்தீர்த்துக் கொள்கின்றார்கள்.

அறுபது அல்லது எழுபது வயதுகளைக் கடந்த முதியவர் ஒருவரை அணுகி உங்கள் சின்ன வயதில், இளமையில், இயற்கைச் சூழல் எவ்வாறு இருக்கின்றது எனக் கேட்போமானால் குறிப்பிட்ட இந்தக் காலப்பகுதிக்குள்ளேயே இயற்கையில் எவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, அதன் சிதைவுகளால் ஏற்பட்டுள்ள ஏராளம் ஏராளம் பாதிப்புக்கள் எவை என்பதை எல்லாம் எம்மால் புரிந்து கொள்ள முடியும்.

காடுகளை அழித்துவரும் நாம் அதன் பின்பும் இந்த இயற்கையைச் சமநிலையில் வைத்திருக்க முடியும் என எண்ணினால் அது மடமை. நாட்டிலுள்ள இயற்கைக் காடுகளைப் பேணிப்பாதுகாப்பதற்குப் பல சட்டங்கள் வகுக்கப்பட்டாலும் அவற்றையும் மீறி ஆங்காங்கே மனிதர்கள் தமது அறியாமையால் காடழிப்புக்களை மேற்கொண்ட வண்ணமேயிருக்கிறார்கள்.

போரின் பின்னர் இந்த வியாதி வடபகுதி மனிதர்களிடையேயும் தீவிரமடைந்துள்ளது. அதன் பின்னர் சில வருடங்களில் போரின் வடுக்களை மறைப்பதைப் பிரதானமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களால் மாட மாளிகைகளும். காப்பெற் வீதிகளும் எனப் பல புதுமைகள் நிகழ்ந்துவிட்டதான மாயையில் நாம் திக்குமுக்காடிப் போயுள்ளோம். ஆனால் அதற்கான வளங்கள் எங்கிருந்து? எப்படி? என்பதைச் சிந்திக்க மறுத்துவிட்டோம்.

இதற்காக நம்மைச்சுற்றியுள்ள சூழலே அழிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது எம்மில் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. நமது சுற்றாடலிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு எமது தாய் நிலங்கள் வானம் பார்த்த பூமியாக உள்ளன என்பதை நாம் அறிவோமா?

இங்குள்ள வீதி அபிவிருத்திகளுக்கு மணல், கிரவல் மற்றும் கருங்கல் போன்றன அகழப்பட்டதால் மாத்திரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு நிலம் தரிசாக்கப்பட்டுள்ளது.

அவை இன்று வானம் பார்த்த வெம்மை பூத்த பூமியாகக் காட்சியளிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், மற்றும் குமுழமுனை போன்ற இடங்களில் வீதிகளுக்காகக் கிரவல்மண் அகழப்பட்டதால் பல ஏக்கர் பரப்பளவிலான காடுகள் அழிக்கப்பட்டன. அந்த இடங்கள் இன்று மரங்கள் எவையுமற்றுப் பாலை வனப் பூமியாகத் தம்மை விஸ்தரிக்கத் தொடங்கியுள்ளன. இவ்வாறு பல வழிகளிலும் எமக்குத் தெரிந்தும், அறியாமலும் ஏராளமான இயற்கை வளங்களை அழித்துவிட்டோம். அபிவிருத்தி மற்றும் நமது வாழ்விடத் தேவைகளுக்காக மரங்களை நாம் அழித்த காரணத்தால் இன்று மழை வீழ்ச்சியில்லை.

இயற்கை பொய்த்துவிட்டது என்பதை உணரத்தொடங்கியுள்ளோம். நம்மால் அழிக்கப்பட்ட மரங்களைத் திரும்பவும் நட்டு இயற்கையைச் சமநிலப்படுத்த வேண்டும்.

மரங்களை வகைதொகை யின்றி அழிக்கும் எம்முடைய செயல் "செருப்புக்குத் தோல் வேண்டி செல்லக்குழந்தையைக் கொல்வதற்கு ஒப்பானதாகும்". இனியாவது இந்த மூடத்தனத்தைத் தவிர்த்து இயற்கையை வளர்க்கப் பாடுபடுவோமாக.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மை
## உதாரணம் எனது

இராஜினிதேவி சிவலிங்கம்



மார்கழி மாதத்துக் கடுங்குளிர் உடம்பைப் புல்லரிக்கச் செய்தது. அதிகாலையில் தலை முழுகி ஈரக் கூந்தலை கோலிவாரி, முடிச்சிட்டு அந்தக் காலைப் பொழுதில் சிவன் கோயிலுக்குச் செல்வது அம்மாவுக்கு பிடித்தமான நிகழ்வு.

திருவெம்பாவைக் காலத்தில் அம்மாவுடன் சேர்ந்து நானும் என் சகோதரிகளான மீனாவும் திலகாவும் தாரணியும் திருவெம்பாவை விரதத்தை கடந்த மூன்று வருடங்களாகப் பிடித்து வருகின்றோம்.

இந்த விரதத்தை ஒழுங்காகப் பிடித்தால் எங்களுக்கு இலகுவாகத் திருமணம் கைகூடி விடும் என்பது அம்மாவின் அசைக்கமுடியாத நம்பிக்கை.

"சாந்தி, திருவெம்பாவை விரதத்தைப் பிடிச்ச பிறகு தான் தேவி அக்காவின்ர மகள் ரோகிணிக்குக் கலியாணம் ஒப்பேறினதாம். நாலு பேரும் இந்த விரதத்தைப் பிடியுங்கோ கடவுள் கண்முழிப்பார்"

அம்மாவை எதிர்த்துப் பேசவும் முடியாது. பாவம் அம்மாவுக்குக் கடவுளையும் விரதங்களையும் கைவிட்டால் வேறு கதியில்லை. பாரிசவாதத்தால் முடங்கிப்போய்ப் படுத்த படுக்கையாகவிருக்கும் அப்பா, கலியாண வயதைக் கடந்த பெண்கள் என அவளைச் சுற்றி இருக்கும் சுமைகளுக்கு மத்தியில் அம்மாவால் வேறு என்னதான் செய்யமுடியும்?

எனக்கும் ஒரு நப்பாசை. முப்பத்தைந்து வயதை கடந்த பின்னரும் சில வேளை நான் விரதம் பிடிக்கும் மகிமையால் ஏதாவது அதிசயம் நிகழலாம். அதற்காக விரதத்தை பிடிக்கத்தான் வேணும் என்ற உறுதியோடு கடந்த மூன்று வருடங்களாக அதனை ஆசாரமாகப் பிடித்து வருகின்றேன்.

அன்று திருவெம்பாவையின் பத்தாவது நாள். நானும் எனது சகோதரிகளும் அருகிலுள்ள சிவன் கோயிலுக்குச் சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பினோம்.

வழமையாக அமைதியாக இருக்கும் வீடு கலகலப்பாக இருந்தது. அம்மா யாரிடமோ மகிழ்ச்சியாக உரையாடுவது கேட்டது.

"அக்கா...! சத்தம் போடாமல் வாருங்கோ. அம்மா யாரோடையோ சந்தோசமாகக் கதைக்கிறா. என்ன கதைக்கிறா எண்டு கேட்பம்"

தங்கை தாரணி கடிந்தாள்.

நாங்கள் ஓசைப்படாது கதவுக்கு அருகில் நின்றோம். அம்மா முன் ஒருபோதும் எங்கள் வீட்டுக்கு வந்திருக்காத ஒரு புது மனிதரிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

"அண்ணா நீங்கள் என்ர குடும்பத்தில காட்டிற அக்கறையை என் உயிர் உள்ள வரையும் மறக்க மாட்டன்" அம்மா அந்தப் புதிய மனிதரிடம் மனம் நெகிழ்ந்து கூறிக் கொண்டிருந்தாள்.

நானும் சகோதரிகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். அம்மாவின் மகிழ்ச்சிக்குக் காரணம் என்னவாக இருக்கும்? வந்த புதியவர் யார்? என்ன காரணத்துக்கு வந்திருக்கின்றார்? என்ற வினாக்கள் எங்கள் நால்வரின் மனதிலே தோன்றினாலும் அடுத்தடுத்து வெளிவந்த அம்மாவின் வார்த்தைகள் விடயம் என்ன என்பதைத் தெளிவாக்கியது.

"அண்ணா நாலு குமர்ப்பிள்ளையளை வைச்சுக்கொண்டு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் தவிச்ச எனக்கு நீங்கள் சொன்ன காரியம் பெரிய ஆறுதலாயிருக்கு இப்ப பிள்ளையள் கோயிலால வந்திடுவினம் நீங்கள் சாந்தியைப் பாருங்கோவன்" அம்மாவின் குரலில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் இழையோடுவதை எம்மால் உணரமுடிந்தது.

விரதத்தால் கிடைக்கும் பயன் கிடைத்து விட்ட திருப்தி எனக்கு. என் சகோதரிகளின் முகங்களைப் பார்த்தேன் அவர்களின் முகங்களில் தெரிந்த பிரகாசம் என்னிலும் தொற்றிக் கொண்டது.

அந்தப் புதிய மனிதர் எனது திருமணம் தொடர்பாகத்தான் வந்திருக்கின்றார் என்பது புரிந்தது. அவர் யார்? எந்த இடத்திலிருந்து வருகின்றார்? அவர் கொண்டுவந்த வரன் பற்றி அறிய வேண்டும் என மனது பரபரத்தாலும் மனதைக் கட்டுப்படுத்தி வீட்டுக்குள் நுழைந்தோம்.

"விரதத்தால் கிடைக்கும் பயன் கிடைத்து விட்ட திருப்தி எனக்கு. என் சகோதரிகளின் முகங்களைப் பார்த்தேன் அவர்களின் முகங்களில் தெரிந்த பிரகாசம் என்னிலும் தொற்றிக் கொண்டது. அந்தப் புதிய மனிதர் எனது திருமணம் தொடர்பாகத்தான் வந்திருக்கின்றார் என்பது புரிந்தது. அவர் யார்? எந்த இடத்திலிருந்து வருகின்றார்? அவர் கொண்டுவந்த வரன் பற்றி அறிய வேண்டும் என மனது பரபரத்தாலும் மனதைக் கட்டுப்படுத்தி வீட்டுக்குள் நுழைந்தோம்.

எங்களைக் கண்டதும் அம்மாவின் முகம் மலர்ந்தது "சாந்தி, திலகா, தாரணி, மீனா இப்படி வாருங்கோ இவர் எனக்குத் தூரத்து முறையில அண்ணன், சாந்தியைப் பெண் கேட்டு வந்திருக்கிறார் அவற்றை உறவுக்காரப் பெடியனாம் பள்ளிக்கூடம் ஒன்டிலை பீயோன் வேலை பார்க்கிறாராம் அவர் மட்டும்தான் ஒரு பிள்ளையாம்" மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் அம்மா.

வந்த அந்தப் பெரியவரும் "தங்கச்சி, சாந்தியை முதலில பக்கத்தில கூப்பிடு எனக்கு உன்ர நாலு பிள்ளையளிலயும் சாந்தி யாரெண்டு தெரியேல" அவர் கூறியதைக் கேட்டதும் அம்மா என் அருகில் வந்து எனது கைகளைப் பற்றி அவருக்கு அருகில் அழைத்துச் சென்று "அண்ணா இவதான் என்னுடைய மூத்த மகள் சாந்தி. ஏ.எல். படிச்சவ பிறகு எங்கட குடும்ப நிலையைப் பார்த்து வீட்டில நிண்டுட்டா" அம்மா தனது நிலையை மறைமுகமாகக் கூறினாள்.

"சாந்தி... நான் குடிப்பதற்கு ஏதாவது தருகின்றாயா அம்மா?" முகத்தில் புன்முறுவலுடன் கேட்டார் அந்தப் பெரியவர். "இதோ கொண்டு வருகிறேன்" எனக் கூறியபடி குசினிப்பக்கம் விரைந்தேன்.

தேநீர் கலந்து அதை எடுத்துச்சென்று அந்தப் பெரியவர் முன் நீட்டி "எடுத்துக் கொள்ளுங்கள் மாமா" எனக் கூறிய என்னிடம் தேநீரை வாங்கிப் பருகியவர் "ரீ நல்லாயிருக்கம்மா" என்றார்.

சிறிது நேரம் ஆறிவிட்டு அம்மாவிடம் "தங்கச்சி விரைவில் நல்ல முடிவோட வாறன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

எங்கள் வீட்டில் எல்லோருக்கும் மகிழ்ச்சி. என்னால் நம்பமுடியவில்லை. இது கனவோ? என எண்ணினேன். நான் திருவெம்பாவை விரதம் இருந்ததன் பயன்தான் என நம்பினேன்.

சில காலங்களில் அந்த வரன் எனக்கும் வரதனுக்கும் திருமணம் என்பதில் சிறப்புற முடிந்தது. மிக எளிமையாக எங்களது வீட்டுக்கு அருகிலுள்ள அந்தச் சிவன் கோயிலில் எனது கழுத்தில் தாலி

43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# அந்தக்காலச் சினிமா

தென்னவன்

50 வருடங்களுக்கு முன்னர் ஒரு மாதத்துக்கு ஒரு திரைப்படம் வெளியாவது என்பது மிக மிகக் கடினமானது. ரசிகர்கள் மத்தியில் அதிக செல்வாக்குள்ள ஓரிரு நடிகர்களின் திரைப்படங்களில் சிலவே குறுகிய காலத்தில் அரிதாக வெளிவரும். மாறாகத் தற்காலத்தில் நாளோரு திரைப்படம் வெளியாகும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அதுவும் அறிமுகப் பாத்திரங்களைக் கூடுதலாக உள்ளீர்த்து. அத்துடன் இவை பன்னாடெங்கிலும் ஒரே நாளில் வெளியாகும் வகையிலும் வளர்ச்சியடைந்துள்ளன. ஆனாலும் அந்தக் காலத்துச் சினிமா இப்படியிருக்கவிலை.

ஐம்பதுகளில் நாட்டில் திரையரங்குகள் குறைவாகவே காணப்பட்டன. வெளியாகும் திரைப்படங்கள் நகரத்திலுள்ள ஒன்றிரண்டு திரையரங்குகளில் முதலில் திரையிடப்பட்டு, அங்கு ரசிகர் கூட்டம் குறைவடைந்த பின்னர் ஏனைய உள்ளூர்த் திரையரங்குகளுக்கு அனுப்பப்படும். அங்கு குறைந்தது பத்து அல்லது பதினைந்து தினங்கள் வரைத் திரையிடப்பட்டு பின்னர் தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருக்கும் உள்ளூர் வாசிகளின் கைகளுக்குக் 'கொப்பி'களாகக் கிடைக்கும்.

அவ்வேளை 'சிலோன் தியேட்டர்ஸ்', 'சிலோன் என்ரரைமென்ற் லிமிட்டெட்', ஸஎஸ்.ரி.ஆர்' போன்ற நிறுவனங்களே திரைப்பட இறக்குமதியாளர்களாகச் செயற்பட்டிருந்தன. இவர்கள் திரைப்படங்களை இறக்குமதி செய்து நகரப் பகுதித் திரையரங்குகளில் குறிப்பாகக் கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், நுவரேலியா, பதுளை, பண்டாரவளை ஆகிய தமிழர்கள் செறிந்து வாழும் நகர்ப்பகுதித் திரையரங்குகளில் வெளியிட வகை செய்தனர். அவை நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் வெளியாகி நிறைவுறக் குறைந்தது ஒரு வருடமாவது செல்லும். அந்தக் காலத் திரைப்படங்கள் அனைத்தும் ஆழமான நற்கருத்துக்களுடன் கூடியவை ஆதலால் மக்கள் குடும்பமாகச் சென்று பார்த்தனர். தென்னிந்தியாவில் வருடாந்தம் 100 திரைப்படப் படங்கள் வெளியாகியிருந்தால், அவற்றில் 40 வீதமான திரைப்படங்களே இங்கு வெளியாகியிருக்கும். யாழ்ப்பாணத்தில் 'ராணி', 'வெலிங்டன்', 'மனோகரா', 'றீகல்', 'வின்சர்' ஆகிய 5திரையரங்குகளே இருந்தன. இவற்றைவிட காங்கேசன்துறை, சங்கானை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, இணுவில், பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் சிறியளவிலான திரையரங்குகள் காணப்பட்டன. ஆனாலும் கிராமத்தவர்கள் அனைவரும் இத்தகைய திரையரங்குகளை நாடினர் என்றும் சொல்லிவிட முடியாது. அவர்கள் மத்தியில் தொலைக்காட்சிகள் மூலம் திரைப்படங்கள் காண்பிக்கும் வளர்ச்சி ஏற்பட்டதாலேயே அனைவரும் திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது எனலாம்.

ஐம்பதுகளின் பின்னர் பன்னாடுகளில் இருந்து திரைப்படங்களை இறக்குமதி செய்வதற்காகத் திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதும் பல்வேறு மொழிகளிலுமமைந்த பன்னாட்டுத் திரைப்படங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் இலங்கை மக்களுக்குக் கிடைத்தது. திரையரங்கில் 'கலரி', 'இரண்டாம் வகுப்பு', 'முதலாம் வகுப்பு', 'பல்கனி', 'றிசேர்வ்' என இருக்கைகள் தரம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுகளுக்கும் வோறுபட்ட கட்டணங்கள் அறவிடப்பட்டன. அத்துடன் 12வயதுக்குக் குறைந்தவர்களுக்கு; கட்டணத்தில் அரைவாசி குறைக்கப்பட்டிருந்தது. 'கலரி' எனப்படும் பிரிவில் அமர்ந்து கொள்ள வாங்குகளும் 'இரண்டாம் வகுப்பு'க்குக் கைபிடி இல்லாத கதிரைகளும் முதலாம் வகுப்புக்குக் கைப்பிடி வைக்கப்பட்ட கதிரைகளும் குடும்பமாக அமர்ந்திருந்து பார்வையிடுவதற்கு 'பல்கணி' மற்றும் 'றிசேர்வ்' பகுதிகளும் எனத் தரம்பிரிக்கப்பட்டன. 'கலரி' இருக்கைகளுக்கு 60சதமும், 'இரண்டாம் வகுப்புக்கு'90சதமும், 'முதலாம் வகுப்புக்கு' ஒரு ரூபா 50சதமும், 'பல்கனி', 'றிசேர்வ்' ஆகிய பிரிவுகளுக்குத் தனியான கட்டணங்களும் அறவிடப்பட்டன. ஆனால் தற்போது நிலைமை இப்படியல்ல அதிகரித்த பணப்பெறுதிக்கு ஏற்ப கட் டணத் தொகையும் அதிகரித்துள்ளது. மற்றும் 'கலரி' என்ற வகுப்புக்கான இருக்கைகளுக்கான வாங்குகள் வைத்திருந்த முறைகள் முற்றாக நீக்கப்பட்டுவிட்டன.



யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட மேற்படி 5 திரையரங்குகளிலும் திரைப்படங்கள் முதலில் வெளியாகும் போது ரசிகர் வெள் ளம் அலை மோதும் என்பதால் ஒரு திரைப்படம் இரண்டு திரையரங்கு களாக அரை மணி நேர இடைவெளியில் காண்பிக்கப்படும். ரசிகர்களின் பிரபல்யமான சில நடிகர்களின் திரைப்படங்கள் வெளியாகும்போது 'மனோகரா' மற்றும் 'றீகல்' திரையரங்குகளை இவைக்கடுத்து முதன்மைப்படுத்தி பயன்படுத்தி வந்தன.

'றீகல்' திரையரங்கு இயங்கிய காலத்தில் பெரும்பாலும் ஆங்கிலத் திரைப்படங்களே அதில் திரையிடப்பட்டது. தமிழ்த் திரைப்படங்களை விட ஆங்கிலத் திரைப்படங்களைப் பார்ப்போரின் எண்ணிக்கை அங்கு அதிகமெனக் கூறுவார்கள். அதற்காகவே தினமும் அங்கு நான்கு காட்சிகள் வரை காண்பிக்கப்படும். அப்போது ஆங்கில



மொழி யாழப்பாணத்தில் பிரபல்யமடையத் தொடங்கியதால் ஆங்கில மொழி தெரிந்த சிலர் றீகலில் திரைப்படம் பாரக்கச் செல்வார்கள்.

எஸ்.ரி.ஆர் பிலிம்ஸ் நிறுவனத்தினரால் 'ராஜா' திரையரங்கு ஆரம்பிக்கப்பட்டது பின்னர் 'ராணி' திரையரங்கு உரிமையாளரால் 'ஶ்ரீதர்' திரையரங்கும் ஆரம்பமாயிற்று. 1983க்குப் பின்னர் போர் காரணமாகத் திரைப்படங்கள் வருவது தடைப்பட்டது. அதனால் திரையரங்குகள் வர்த்தக நிலையங்களின் களஞ்சியங்களாக மாற்றப்பட்டன.

தமிழ்ப் படங்கள் கொடி கட்டி பறந்த காலத்தில் இந்தியாவின் ஏனைய மொழிப் படங்களும் அன்றைய ரசிகர்களால் வரவேற்கப்பட்டன. 'துலாபாரம்' என்னும் திரைப்படம் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் வெளியாகின யாழ்ப்பாணத் தில் எதிரெதிரே உள்ள திரையரங்குகளான 'வின்சர்' திரையரங்கில் தமிழ் மொழியிலும் 'ராஜா' திரையரங்கில் தெலுங்கு மொழியிலும் வெளியாகியது.

தற்போது வெளியாகும் அனைத்துத் திரைப்படங்களும் வண்ணமயமானவை. ஆனால் 50வருடங்களுக்கு முன்னர் அனைத்துப் படங்களும் கறுப்பு வெள்ளைப் படங்காளகவே வெளியாகின. ஆனாலும் ஒரு சில திரைப்படங்கள் கோவா கலர் ஈஸ்ட் மென் கலர் கொண்டவையாக வெளியாகின. 'நாடோடி மன்னன்' திரைப்படத்தின் முதற்பாதி கறுப்பு வெள்ளையாகவும் பிற்பகுதி கோவா கலராகவும் காண்பிக்கப்பட்டது. இயக்குநர் பாரதி ராஜா 3 லென்ஸுகளைப் பயன்படுத்தி வெளியிட்ட 'நிறம் மாறாத பூக்கள்' பட வெளியீட்டின் பின்னரே வண்ணத் திரைப்படங்கள் எடுக்கப்படத் தொடங்கின.

> தற்போது வெளியாகும் அனைத்துத் திரைப்படங்களும் வண்ணமயமானவை. ஆனால் 50வருடங்களுக்கு முன்னர் அனைத்துப் படங்களும் கறுப்பு வெள்ளைப் படங்காளகவே வெளியாகின. ஆனாலும் ஒரு சில திரைப்படங்கள் கோவா கலர் ஈஸ்ட் மென் கலர் கொண்டவையாக வெளியாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவையான பிஸ்கட் லட்டு

வீட்டில் ஏதாவது விசேசம் என்றால், பிரபல்ய மான உணவுகள் மட்டுமே அனைவருக்கும் நினைவுக்கு வரும். அத்தகைய ஓர் உணவு தான் இந்த பிஸ்கட் லட்டு. இது மிகுந்த சுவை பயக்கும்.

**தேவையான பொருள்கள்:**

01.மாரி பிஸ்கட்- 1 பக்கெட்
02.கன்டென்ஸ்ட் மில்க்- அரைக் கப்
03.கொக்கோ பவுடர்- 4 தேக்கரண்டி
04.பால்-2 தேக்கரண்டி
05.உலர் பழங்கள்- 2தேக்கரண்டி(நறுக்கியவை)

**அழகுபடுத்துவதற்காக:**

01.ரெயின்போ தெளிப்பு- 1 தேக்கரண்டி
02.சொக்லேட்- அரைக் கிண்ணம் (துருவியது)
03.தேங்காய்ப் பவுடர்- 4 தேக்கரண்டி

**செய்முறை:**

பிஸ்கட்டை தூளாக்கிக்கொள்ளவும். ஒரு கிண்ணத்தை எடுத்து அதில் 2 முதல் 3 மேசைக்கரண்டி கன்டெஸ்ட் பாலைச் சேர்க்கவும். அதனுடன் கொக்கோ தூள் சேர்த்து நன்கு கலக்கவும். இந்தக் கலவையானது ஒரு தடித்த நிலைத் தன்மையுடன் கிடைக்கும். இந்தக் கலவையுடன் பிஸ்கட் தூள் மற்றும் உலர் பழங் களைச் சேர்க்கவும். விரும்பினால் கலவையுடன் மேலும் அதிகமான கன்டென்ஸ்ட் பால் மற்றும் கொக்கோ பவுடரைச் சேர்க்கலாம். மீண்டும் கல வையை நன்கு கலக்க வேண்டும். கலவையானது ஒரு அடர்ந்த அரை உலர் நிலைக்கு வர வேண்டும். அப் பொழுதுதான் லட்டை குறிப்பிட்ட வடிவில் பிடிக்க முடியும்.

சிறிதளவு நெய் எடுத்து உள்ளங் கைகளில் தடவி, கலவையை லட்டு வடிவத்தில் பிடிக்கவும். பிடித்த லட்டை ஒரு தட்டில் தனியே வைக்கவும். இந்த லட்டுக்களை துருவிய சொக் லேட், தேங்காய்ப் பவுடர் மற்றும் வானவில் தெளிப்பு கொண்டு அலங் கரிக்கவும். முடிந்ததும் லட்டைக் குளிர்சாத னப் பெட்டியில் சுமார் 10 முதல் 12 நிமிடங்கள் வைத்துக் குளிர விடவும். பின்னர் பரிமாறவும்.



# ஆயுளை அதிகரிக்கும் பாதக் கொலுசு

நகைகள் என்பவை தமிழர் பாரம்பரியத்தில் மிக முக்கியம் வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. நகைகள் அணிந்தால், உடலிலுள்ள முக்கிய வர்மப் புள்ளிகளைத் தூண்டி ஒவ்வொரு உறுப்புகளையும் அவை பராமரிக்கும். வெப்பத்தைக் குறைத்து, உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்கத் தங்கம் மட்டுமே ஏற்றது. தங்கம் எப்பொழுதும் எமது உடலைத் தொட்டுக்கொண்டி ருப்பதால், நாளடைவில் உடலின் அழகு அதிகரிக்கும். பொதுவாக எல்லா நகைகளையும் தங்கத்தில் அணியும் நாம், காலில் அணியும் நகைகளை வெள்ளியில் தான் அணிகிறோம். தங்கத்தை மகாலட்சுமியாகக் கருதுவதால் நாம் காலில் அணியும் நகைகளைத் தங்கத்தில் அணிவதில் லை. அத்துடன், வெள்ளி நகைகள் ஆயுளை விருத்தி செய்யக்கூடியவை. வெள்ளியும் உடல் சூட்டைத் தணித்துக் குளிர்ச்சியாக்கி, சருமத்தை ஆரோக்கியமாக்கும் தன்மை கொண்டது.

சிறுவயதிலிருந்தே குழந்தைகளுக்குக் கொலுசு அணிவித்து விடுகின்றோம். குழந்தைக்கு நடக்கும்போது எப்போதும் அது எழுப்பும் சத்தம் கேட்க வேண்டும் என்பதாலும் குடும்பத்தினர் குழந்தையின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பதற்கும் கொலுசு அணிவிக்கப்படுகிறது.

உணர்ச்சி வசப்படுதல் என்பது எப்பொழுதும் ஆண்களைவிடப் பெண்களுக்கே அதிகம். வெள்ளிக் கொலுசு பெண்களின் குதிக்கால் நரம்பினைத் தொட்டுகொண்டிருப்பதால், குதிக்கால் பின் நரம்பின் வழியாக மூளைக்குச் செல்லும் உணர்ச்சிகளைக் குறைத்துக் கட்டுப்படுத்துகிறது. அத்துடன், பெண்களின் மெல்லிடைக்கும் கொலுசு பயன்படுகிறது.



# மன அழுத்தத்தை குறைப்பதற்கு...

- காலையில் வழமையைவிடப் பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே எழுந்து விடுங்கள்.
- எங்காவது செல்ல வேண்டியிருந்தால் அதற்குரிய ஆடைகள், பொருள்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.
- ஒரு காகிதத்தில் அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளையும், எப்போது செய்யப் போகிறீர்கள் என்பதையும் குறித்து வையுங்கள்.
- காத்திருப்பது சிரமம் என்று கருதாதீர்கள். ஒரு புத்தகத்தை கையில் வைத்திருப்பது காத்திருத்தலைச் சுகமாக்கும். தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும்.
- வேலைகளைத் தள்ளி வைப்பது மன அழுத்தத்தை அதி கரிக்கும். அவற்றைத் தாமதப்படுத்தாமல் செய்யுங்கள்.
- முன்கூட்டியே திட்டமிடுங்கள். எதையும் கடைசி நேரம் வரை காத்திருந்து செய்வதைத் தவிருங்கள்.
- சற்று முன்கூட்டியே செல்லப் பழக்கப்படுங்கள். பத்து நிமிடத்தில் செல்ல முடிந்த இடத்துக்கு இருபது நிமிடத்துக்கு முன்பாகவே புறப்படுங்கள்.
- சில மாற்று யோசனைகளைக் கைவசம் வைத்திருங்கள். உதாரணமாக- பஸ் தாமதமானால், வேறு எப்படிச் செய்வது எனும் உபாயம்.
- தவறாய்ப் போன ஒரு விடயத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டே இருப்பதை விட, சரியாய் நிகழ்ந்த பலவற்றைக் குறித்து அடிக்கடி நினைத்து மகிழுங்கள்.
- செல்லும் இடங்கள் புதிய இடங்களாக இருந்தால், வழியை முதலி லேயே தெளிவாகக் கேட்டு வைத்துக்கொள்ளுங்கள்.
- சற்று நேரம் அலைபேசிகளையும், தொலைபேசிகளையும் அணைத்து விடுங்கள். எந்தத் தொந்தரவும் இன்றி ஓய்வு எடுங்கள்.
- உணவு, உடை, உறைவிடம் தவிர்ந்த எதுவும் உங்களை மன இறுக்கம் கொள்ளச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்னுரிமை எதற்குக் கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவு அவசியம்.





எளிதில் சமிபாடடையும் காய்கறிகளான சுரைக்காய், பூசணி, புடலை, பீர்க்கங்காயை அதிகம் உணவில் சேர்த்துக்கொள் ளலாம். அதிக குளிர்ச்சி, ஜலதோசம் பிடிக்கவைக்கும் ஆதலால் இந்தக் காய்களைக் கூட்டாக செய்யாமல், பொரிய லாக அல்லது மிளகு சேர்த்து சூப் செய்து சாப்பிடலாம்.

சமிபாடடைவதற்கு அதிக நேரம் எடுக்கும் உருளைக்கிழங்கு, வாழைக்காய் போன்றவற்றைத் தவிர்த்து கீரை, கரட் மற்றும் பீட்ரூட் போன்றவற்றை அதிகம் சாப்பிடுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு



## வாழ்வதற்கன்றி சாவதற்கல்லவே!

■ கு.நிறோஜன்

முழு உலகத்தையும் பசியிலிருந்து பாதுகாத்து உயிர் வாழ்வதற்கு ஆதாரமான உணவை வழங்குபவர்கள் விவசாயிகள். 'உழுதுண்டு வாழ்வோரே வாழ்வர் மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்வர்' என்ற வாக்கியம் அவர்களை உயர்த்தி வைக்கிறது. ஆனால் அது தற்காலத்தில் உண்மையாகவுள்ளதா? என்பது கேள்விக்குறியே.

விவசாய நடவடிக்கைகள் தற்போது நவீனத்துவத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றன. அதிகரித்த மக்கள் தொகை, அதனால் விளைச்சல்களுக்கு அதிகரித்த கேள்வி போன்றவற்றால் அளவுக்கு அதிகமாக உர வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும் சில விவசாயிகள் மனித உயிருக்கு மதிப்பளித்து, தங்களால் இயன்ற வரைக்கும் உடலுக்குக் கேடு விளைவிக்காத இயற்கைப் பசளைகளையும் கிருமி நீக்கிகளையுமே பயன்படுத்தி வருகிறார்கள். அவ்வாறு இயற்கையுடன் இயைந்த விவசாயிகள் சிலரின் ஆதங்கங்களும் கவலைகளும் தான் இவை.

"முந்தியெல்லாம் உந்த உரங்கள் எங்கால? எங்கட வீடுகளில குப்பைகளச் சேர்த்து வைச்சு. அவை கொஞ்சம் உக்கினதும் வண்டிலில அள்ளிக் கொண்டுபோய்த் தோட்டத்துக்குப் பறிச்சுப் பரவுவம். ஆட்டுப்புளுக்கையையும் சாணகத்தையும் கூடு கட்டிச் சேர்ப்பம். பிறகு அதையும் குப்பையோட சேர்ப்பம். இப்பிடித்தான் அந்தக்காலத்தில தோட்டம் செய்யிறவை பசளை சேர்ப்பினம்" என்கிறார் கைதடியைச் சேர்ந்த விவசாயி ரத்தினம்.

"இப்ப எங்க இப்பிடிச் செய்யினம். பொலித்தீன், பிளாஸ்ரிக் எண்டு நிலம் கெட்டுப்போச்சுது. பத்தாததுக்கு வகை வகையான உரங்கள் வந்து மனிசருக்குப் புதுப்புது வருத்தங்களைக் கொண்டுவருகுது. உயிர் வாழச் சாப்பிடுற காலம் போய் வருத்தத்தைத் தேடுற காலமாப் போச்சுது" என்றும் அவர் ஆதங்கப்பட்டுக் கொள்கிறார்.

### இயற்கைப் பசளைகளுக்குத் தட்டுப்பாடு

தனது தோட்டத்தில் புகையிலைக்கண்டுகளுக்கு நீர்பாய்ச்சுவதற்கு வாய்க்கால் வரம்பைச் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தவர் மேலும் தொடர்கிறார். " ஆனாலும் நான் உந்தப் புதுப்புது உரங்கள் ஒன்டையும் பாவிக்கிறதில்ல. விளைச்சல் குறைஞ்சு கஸ்ரப்பட்டாலும் பரவாயில்லை ஏன் உயிருக்கு உதவாததுகளை உற்பத்தி செய்வான்? உந்தப் பிரச்சினையால இப்ப வன்னியில இருந்து 10வருசங்களுக்கு மேலாக மாட்டெரு வாங்குறன். சண்டைக் காலத்தில பிரச்சினையாத்தான் போட்டுது. இப்ப லொறியில கொண்டுவந்து பறிக்கிறாங்கள். போனவருசமும் லொறியால ஒருலோட் 32ஆயிரம் ரூபா குடுத்துப் பறிச்சனான். இப்ப 35 வரைக்கும் போயிருக்கும். என்ன செய்யிறது உரங்களைவிட இதால விளைச்சல் குறைவுதான். ஆனாலும் நோயில்லாமல் வாழுறது தானே முக்கியம்" என்கிறார் அந்த அடிமட்ட விவசாயியான ரத்தினம் ஐயா.

### வன்னியிடம் கையேந்தும் யாழ்ப்பாணம்

"மாட்டுப்பட்டிகள் இருக்கிற வீடுகளில கிழமைக்குக் கிழமை போய் உரப்பையில எருவ ஏத்திக் கொண்டு வந்து கொட்டிச் சேர்ப்பம். நிறையச் சேர்ந்ததும் லோட்டாக்கி, உரப்பைகளிலும் மூட்டையாக்கி வாகனத்தில ஏத்தி யாழ்ப்பாணம் கொண்டுபோவம்" என்கிறார் யாழ்ப்பாண விவசாயிகளுக்கு இயற்கைப் பசளையை ஏற்றுமதி செய்துவரும் முல்லைத்தீவு-முத்தையன்கட்டைச் சேர்ந்த ரவி. "இஞ்சயிருந்து கனபேர் எரு ஏத்திக்கொண்டு போய் விக்கினம். எங்காவது பட்டி நிறைச்சிட்டுது எண்டுறதை அறிஞ்சால், யார் முந்துகினமோ அவை போய் பட்டி(மாடுகள்) வைச்சிருக்கிற வீட்டுக்காரருக்கு அதுக்குரிய பெறுமதியைக் கொடுத்திட்டு எருவை அள்ள வேண்டியதுதான். பிந்தினால் கிடைக் காது. போட்டிதான். ஒரு உரப்பை 60 ரூபாவுக்கு முன்பின்னா எடுப்பம். கோடை காலத்தில நிறைய எருக் கிடைக்கும். மாரி காலத்தில மழைநீர் கரைச்சு விடும். பிறகு 6 மாதங்களுக்கு எரு கிடைக்கிறது கஸ்டம். சில இடங்களில வெள்ளம் நிக்கும். வாகனத்தைக் கொண்டு சென்று ஏத்தமுடியாது. இப்படித் தான் இஞ்சாலை இயற்கைப்பசளையை ஒன்டுசேர்க்கிறம்" என்கிறார் அவர். "ஆனால் முன்னர் இருந்த கேள்வியைவிட யாழ்ப்பாணத்தில எருவுக்கு இப்ப கேள்வி அதிகரிச்சிருக்கு. சண்டைக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில நிறைய மாடுகள் இருந்ததால இஞ்சையிருந்து எரு ஏத்துறது குறைவு. இப்ப மாடுகளும் அழிஞ்சிட்டு. வளர்க்கிறதும் குறைவு. அதாலயோ என்னவோ வன்னி எருவுக்கு அங்க போட்டியும் தேவையும் கூடியிருக்கு. வன்னி எரு இல்லாமல் யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்வதற்கு எல்லோ ராலும் முடியாது. யாழ்ப்பாணத்தில் போதிய பசளை பெறுவது கடினம்" என்று மேலும் கூறுகிறார் ரவி.

### நமக்கும் நஞ்சுதான் தஞ்சம்

'யூரியா உள்ளிட்ட உரங்களின் பயன்பாடு இல்லாமல் எரு உள்ளிட்ட இயற்கைப் பசளைகளில் தங்கியிருந்தால் போதிய உற்பத்தியைப் பெறேலாது. எங்களுக்கு லாபம் இருக்காதது ஒருபுறமிருக்க நட்டம்தான் ஏற்படும். உரங்களின் பயன்பாடு அதிகரிச்சிருக்கு, கிருமிநாசினி அதிகரிச்சிருக்கு எண்டு எங்களுக்குத் தெரியும். உரங்கள் மண்ணின் வளத்தையும் பாதித்துவிடுகின்றன. கான்சர் அது இது எண்டு உள்ள வருத்தம் எல்லாம் வருகுது எண்டும், மெல்லக் கொல்லும் விசங்கள் எண்டும் தெரியும். அதுகளைப் பாவிக்காவிடில் இப்ப உடனடியாக நாங்கள் உயிர்வாழ வேறு வழியில்லையே? என்ன செய்யிறது? என்று விவசாயி நாதன் கூறுகிறார்.

"உரங்கள், கிருமி நாசினிகள் போட்ட காய்கறிகளை சனத்துக்கு விற்கிறது மட்டுமில்ல அதுகளைத்தான் நாங்களும் சாப்பிடுறம். கிருமிநாசினி இல்லாட்டி இண்டைக்கு உற்பத்திகள் ஏது? உரம், கிருமி நாசினி பாவிக்கிறதுக்கு மனக்கஸ்டமாத்தான் இருக்கு. மாற்று வழி என்ன? இப்ப உரம் எல்லாம் விலை கூடிட்டுது ஆனாலும் அந்தளவு காசு கொடுத்து வாங்கவேண்டித்தான் இருக்கு கவலைதான்" தனது இயலாமையை, ஒன்றும் செய்ய முடியாத நிலையையும் அவர் கூறுகிறார்.

"விவசாயத்தில் உழவு, பயிர் கொள்வனவு, அவற்றை நடுவதற்கான கூலிகள், நீர் இறைப்பதற்கு இயந்திரத்துக்கு மண்ணெண்ணெய், உரம், கிருமிநாசினி என்றவாறு ஒவ்வொரு விடயத்துக்கும் பணத்தை தண்ணீருடன் தண்ணிராக இறைக்க வேண்டிய நிலை. இவ்வளவும் தாண்டி பெருமழையோ, கடும் வறட்சியோ, கால்நடைகளோ, நோய்த்தாக்கங்களோ ஏதோ ஒரு காரணத்தால் கடைசியில் எல்லாவற்றையும் நாசமாக்கிவிட பாடுபட்ட விவசாயிகளுக்கு எஞ்சுவது, இலாபமற்ற நிலை.

### இயன்றவரை இயற்கையே தேவை

உரப் பயன்பாட்டினாலும் இரசாயனக் கிருமிநாசினிகளாலும் அதிகளவு நோய்கள் ஏற்படுவதனை மருத்துவர்களும் அடிக்கடிக்கூறி எச்சரிக்கிறார்கள். கிருமி நாசினிப் பயன்பாடுகளை இயன்றளவு தவிர்க்குமாறு அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க மீளவும் இயற்கை உரப்பாவனை பயன்பாட்டை நோக்கி நகர வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏற்பட வேண்டும். இயற்கை உரப் பாவனையைக் கடுமையாக்குவதற்கு ஒவ்வொரு விவசாயியும் முன்வரவேண்டும். இதற்கு இயற்கையான குப்பைகள், ஆட்டெரு, மாட்டெரு, மாற்றுப் பொருள்களின் மீள்சுழற்சி மூலமான பசளைகள் என்பனவற்றின் மீதான பற்றுதல் அதிகரிக்க வேண்டும். அதற்கான வலியுறுத்தல்கள், நடவடிக்கைகள் வேண்டும். அவை பற்றிய அறிவுறுத்தல்கள் போதியளவு வழங்கப்படவேண்டும். இயற்கைப் பசளைகளைப் பாவிக்கவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு விவசாயிகளிடமும் ஏற்படவேண்டும். விவசாயிகளின் விளைச்சல்கள் தாம் உலகமக்களை வாழ வைப்பன அன்றி இன்றைய கணினிகளும் கைபேசிகளுமல்ல. ஆனால் அளவுக்கதிகமான உரம், கிருமி நாசினிப் பாவனைகளால் மக்களுக்கு நோய் ஏற்படவும் அவர்களே வழிவகுக்கிறார்கள் என்ற நிலை எதிர்காலத்தில் ஏற்பட்டுவிடக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோடிட்ட இடங்களை நிரப்புக

கை நிறையச் சம்பாதிக்கும் ஒரு வெளிநாடுவாழ் தமிழ் இளைஞன் கெவின் (சாந்தனு). வியாபாரக் காரணங்களுக்காக இந்தியாவுக்கு வருகிறார். அவரது தேவை அறிந்து பொறுப்பாக அவரைக் கவனித்துக் கொள்கிறார் குடிகாரரான கார் ஓட்டுநர் ரங்கராஜ் (பார்த்தீபன்). தனக்கு உணவு சமைத்துப் பரிமாறும் வேலையிலிருக்கும் மோகினியின்பால் (பார்வதி நாயர்) சாந்தனு ஈர்க்கப்படுகிறார். மோகினி பார்த்தீபனின் மனைவி என்று அறிந்து அவர் பின்வாங்கினாலும், அவளை நெருங்குவதற்கான சூழல் உருவாகிறது. இந்தச் சூழலை இருவரும் எப்படி எதிர்கொள்கிறார்கள், இதில் பார்த்திபனின் பங்கு என்ன என்னும் கேள்விகளுக்கான பதில்தான் திரைக்கதை.

பார்வதி, பார்த்தீபனின் மனைவி என்பதை அறிந்ததும் சாந்தனுவுக்கு ஏற் படும் அதிர்ச்சியைப் போலப் பல அதிர்ச்சிகளையும் அவற்றுக்கான திருப்பங்களையும் திரைக்கதை கொண்டிருக்கிறது. அடுத்தது என்ன என்பதற்கான சாத்தியக் கூறுகள் பலவற்றை உருவாக்கிக் கடைசி வரையிலும் எதிர்பார்ப்பைத் தக்கவைத்திருப்பது இயக்குநர் பார்த்தீபனின் வெற்றி. கடைசி 10நிமிடங்களில் வரும் எதிர்பாராத திருப்பம், அதுவரையிலான நிகழ்வுகளைப் புரட்டிப்போடுவதுதான் திரைக்கதையின் புதுமை.

பார்வையாளர்களைத் திசை திருப்புவதற்காக அமைக்கப்பட்டுள்ள பல காட்சிகள் சில சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக, தனது மனைவியிடம் பார்த்தீபன் நடந்துகொள்ளும் விதம், சாந்தனுவும் பார்வதியும் தனியே இருப்பதற்கான வாய்ப்புகளைப் பார்த்தீபனே உருவாக்குவது ஆகியவை திரைக்கதையின் புதிர்களைப் பலவீனமாக்குகின்றன.

காட்சிகள், வசனங்களில் பார்த்தீபன் தனிக் கவனம் செலுத்தியிருக்கிறார். பார்வதி, சாந்தனு தொடர்பான பல காட்சிகள் படத்துக்கு உணர்வுபூர்வமான வலுவைச் சேர்க்கின்றன. தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் நறுக்கென்று எழுதப்பட்ட பல வசனங்கள், அவற்றில் இழையோடும் நகைச்சுவை ஆகியவை பார்த்தீபனின் தனிநடை. காட்சியமைப்பில் இயக்குநரின் கற்பனை வளம் பளிச்சிட்டாலும், குறியீட்டு ரீதியாக அவர் பிரயோகிக்கும் சில உத்திகள் சலிப்பூட்டுகின்றன. யதார்த்தத்தில் நடப்பவற்றையும் பாத்திரங்களின் மன அரங்கில் நடப்பவற்றையும் சித்திரிக்கும் காட்சிகளில் படத்தொகுப்பாளர் ஆர்.சுதர்ன் திறமையாகச் செயற்பட்டிருக்கிறார்.

படத்தின் கதை மோகத்தையும் பாலியல் வறட்சியையும் பற்றியதாக இருக்கும்போது வசனங்களும் காட்சிகளும் அதையொட்டி இருப்பதில் ஆச்சரியமில்லை. பாலியல் ஈர்ப்பைச் சித்திரிக்கும் காட்சிகளில் சராசரி ஆண்களின் உளவியல் வெளிப்படுகிறது. இந்த இடங்களைப் பெருமளவில் நாசூக்காகக் கையாளும் பார்த்தீபன், தேவையில்லாத இடங்களில் இரட்டை அர்த்த வசனங்களைப் பயன்படுத்துவது முகம் சுளிக்க வைக்கிறது. உடல்மொழி, பாவனைகள், வசன உச்சரிப்பு என எல்லாவற்றிலும் அசத்தியிருக்கிறார் நடிகர் பார்த்தீபன். பாத்திரத்தில் கச்சிதமாகப் பொருந்தும் சாந்தனு, தேவையான நடிப்பைச் சிறப்பாகத் தந்திருக்கிறார். நடனத்திலும் அதிக ஈடுபாடு காட்டியிருக்கிறார்.

தனது கதாபாத்திரத்தின் இரண்டு பரிமாணங்களை அழகாக வெளிப்படுத்தியிருக்கிறார் பார்வதி நாயர். பார்த்தீபனின் நக்கல்களுக்கு இலக்காகும் அப்பாவி வேடத்தில் தன் அடையாளத்தை நிறுவ முடியாமல் தவிக்கிறார் தம்பி ராமைய்யா.

நல்லதொரு திரைக்கதை, தேர்ச்சியான நடிப்பு ஆகியவற்றைத் தவிர, கலை இயக்கம், இசை, ஒளிப்பதிவு ஆகியவையும் படத்தை ரசிக்கவைக்கின்றன. சத்யாவின் பின்னணி இசை பல இடங்களில் சிறப்பாக உள்ளது. வசனங்களை அதிகம் நம்பும் இயக்குநர் பார்த்தீபன், சத்யாவின் இசைக்கு இடம்கொடுத்துப் பல காட்சிகளில் மௌனம் சாதித்திருப்பது பாராட்டத்தக்கது. அர்ஜுன் ஜனாவின் ஒளிப்பதிவு படத்துக்குச் செழுமையான தோற்றத்தைத் தருகிறது.

முதல் பாதிக்குள்ளேயே கோடிட்ட இடத்தை நம்மால் நிரப்பிவிட முடிவதால், இறுதிக் காட்சிகள் வியப்பைத் தரவில்லை. சரிதான்... இயக்குநரே சொல்லிவிடுகிறாரே 'தவறுகள் கொண்ட திரைப் படம்' என்று!





# எந்தையும் தானும்...

தோள்களிலே
நீ சுமந்த என்
கால்களை
நித்தமும்
நான் நினைப்பேன்.

நீதி நூலாய்
நீயிருந்து
வாழ்க்கை நெறி
கற்றுத் தந்தாய்.

கையிலே
கம்பு வைத்தாய்
நெஞ்சிலே
அன்பு வைத்தாய்.
உயிர் தந்த
இறையாய்
நற்பயிராய்
எனை வளர்த்த
எந்தையே!

அப்போது தோன்றாத
இவையெல்லாம்
இப்போதும்,
எப்போதும்
கூடவே நீயிருக்க
தற்போது
தோன்றினும்
நீயில்லை
என்னருகில்.

-நாவண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடனாளி- என்ர மனைவியின்ர சமையலை வாயில வைக்க முடியாது. அவள் பேச ஆரம்பிச்சா பைத்தியமே பிடிச்சிடுது ஐயா...!

முகாமையாளர் - யோ...! பாங்கில வந்து ஏனைய இதையெல்லாம் சொல்லுற?

கடனாளி- நம்ம கஸ்ரத்தைச் சொன்னாத்தான் லோன் கிடைக்குமென்று சொன்னாங்களே ஐயா!

முகாமையாளர் – !!!

இளைஞன் - ஐயா! நான் நீண்ட ஆயுளுடன் வாழ விரும்புகிறேன். உங்கள் அனுபவத்தில் இதற்கு நல்ல வழிமுறை சொல்லுங்கள்?

முதியவர் - உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?

இளைஞன் - இல்லை ஐயா. திருமணம் ஆயுளை நீடிக்குமா?

முதியவர் - அப்படிச் சொல்வதற்கில்லை... ஆனால் நீண்ட ஆயுள் வேண்டும் என்கிற நினைப்பு உங்களுக்கு மீண்டும் வராமலிருக்கும்.

இளைஞன்- ..............!!!

சிரிங்க...



# ‘க்ளோரி’ அரச ஊழல்கள்





‘ஸ்லாவா’ ஒரு பல்கேரியத் திரைப்படம். இதன் ஆங்கிலத் தலைப்பு ‘க்ளோரி’. கிறிஸ்ரினா குரொஸொவா, பீற்றர் வேல்சனவ் ஆகிய இரண்டு இயக்குநர்கள் இயக்கிய திரைப்படம் இது. இருவரும் இணைந்து அநேக குறும்படங்களை இயக்கியிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து 2014இல் ‘த லெஸன்’ என்னும் முதற் படத்தை இயக்கியிருந்தார்கள். சமூக, அரசியல் பார்வையுடன் திரைப்படங்களை உருவாக்கும் நோக்கத்தில் ஈடுபட்டுவரும் இவர்களால் இரண்டாவதாகப் படமாக்கப்பட்டிருக்கிறது இந்தத் திரைப்படம்.

படத்தின் பிரதான பாத்திரம் சாங்கோ பெட்ரோவ் என்னும் ரயில் பாதையைப் பராமரிக்கும் மனிதன் ஒருவன். மத்திய வயதைக் கடந்து, முதுமையின் படியில் கால்வைத்திருக்கும் அவர், தனியே ஒரு வீட்டில் வசித்துவருகிறார். அவருடைய துணை, கரிசனத்துடன் அவர் வளர்த்துவரும் முயல்கள் மாத்திரமே. அதிகமாக யாருடனும் பேசாமல், நிதானமான வாழ்வை மேற்கொள்பவர் அவர். அவருக்கு நேர் எதிரானது, போக்குவரத்துத் துறை அமைச்சகத்தில் செய்தித்தொடர்பாளராகப் பணியாற்றும் ஜுயா ஸ்டேகோவா என்னும் பாத்திரம். அவர் எப்போதும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருப்பவர். இவர்கள் இருவரையும் ஒரே கோட்டில் இணைத்து அதன் மூலம் பல்கேரியாவின் சமூக, அரசியல் சூழலை விமர்சித்திருக்கிறார்கள் இயக்குநர்கள்.

ரயில் பயணிக்கும் தண்டவாளப்பாதைகள் நல்லநிலையிலுள்ளனவா என்று கண்காணித்துச் செப்பனிடும் பணியைத் தினந்தோறும் செய்துவரும் சாங்கோ பெட்ரோவ், ஒரு நாள் தண்டவாளத்தில் நடந்து செல்லும்போது பணத் தாள் ஒன்று கிடப்பதைப் பார்க்கிறார். அதை எடுத்துக்கொள்ளும் அவர் தனது வேலையைத் தொடர்ந்து செய்துகொண்டு சிறிது தூரம் செல்ல மற்றொரு பணத்தாள் கிடைக்கிறது. இரண்டையும் தன் பையில் செருகிக்கொள்கிறார். தொடர்ந்து சென்றவருக்கு அதிர்ச்சி தரும் வகையில் ஏராளமான பணத் தாள்கள் சிதறிக்கிடக்கின்றன.

அவர் அரசுக்குத் தகவல் தெரிவிக்கிறார். ஊடகங்கள் வறுத்தெடுக்கும் போக்குவரத்துத் துறையின் ஊழலிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்புவதற்கு இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார் செய்தித் தொடர்பாளர் ஜுயா ஸ்டேகோவா. நேர்மையான மனிதரான சாங்கோவுக்கு அமைச்சரின் தலைமையில் பரிசளித்துக் கௌரவித்து நாட்டின் மானத்தைக் காப்பாற்ற அரசு நிர்வாகம் எடுக்கும் முயற்சிகளால் மனிதநேயம் எவ்வளவு தரம்தாழ்த்தப்படுகிறது என்பதை இயல்பான திரைமொழியில் காட்சிப்படுத்தியிருக்கிறார்கள் இயக்குநர்கள்.

தன்னைக் கௌரவிப்பதற்காக ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வரும் சாங்கோ தாராளமாகக் கவனிக்கப்படுகிறார். அவருக்குப் புதிய உடைகள் வழங்கப்படுகின்றன. இது தொடர்பான காட்சிகள் அனைத்துமே எள்ளல் மிக்கவை. அவருடைய பழைய கைக் கடிகாரத்தைக் கழற்றிக் கொடுக்குமாறு அவரை வற்புறுத்தும் ஜுயா அவருக்குப் புதிய கடிகாரம் அமைச்சரால் அணிவிக்கப்படும் என்கிறார்.

நிகழ்ச்சி முடிந்த பின்னர் அவருடைய பழைய கடிகாரத்தைத் தந்துவிடுவதாகவும் கூறுகிறார். வேறு வழியின்றித் தனது தந்தை தனக்குப் பிரியமாக அளித்த கடிகாரத்தை ஜுயாவிடம் கொடுக்கிறார் சாங்கோ. ஆனால் வழக்கம்போல் அரச நிர்வாகம் மெத்தனமாகச் செயல்படுகிறது. ஜுயா, சாங்கோவின் பிரியத்துக்குரிய கடிகாரத்தை வாங்கி எங்கோ தவறவிட்டுவிடுகிறார். சாங்கோ தனது கடிகாரத்தை மீண்டும் பெற்றுவிடப் போராடுகிறார். இதனிடையே ஊடகங்கள் வேறு தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றன.

பரிசளிப்பு விழாவில் அமைச்சரிடம் தனியே பேசும் வாய்ப்புப் பெற்ற சாங்கோ தன்னுடைய சம்பள மீதி எப்போது வரும் என்று கேட்கிறார். அது மட்டுமல்ல போக்குவரத்துத் துறையில் நடக்கும் சில ஊழல்கள் குறித்துத் தனக்குத் தெரியும் என்றும் அதில் ஈடுபடுபவர்களையும் தன்னால் இனங்காட்ட முடியும் என்றும் கூறுகிறார். அமைச்சர் திக்குமுக்காடிப் போகிறார்.

நேர்மையான மனிதரின் எளிய கேள்விகளுக்கு விடைசொல்ல முடியாமல் ஊழல் கறை படிந்த அந்த அமைச்சரும் நழுவுகிறார். சாங்கோ பற்றி அறிந்துகொண்ட ஊடகவியலாளர் ஒருவர் அவரைத் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் பங்குகொள்ள வைக்கிறார். அதில் அரசின் ஊழலை அம்பலப்படுத்துகிறார் சாங்கோ.

இப்போது அரசு, நாயகன் என முன்னிறுத்திக் கௌரவித்த நேர்மையான மனிதரை விரோத மனப்பான்மையுடன் அணுகுகிறது. அவரை மிரட்டுகிறது. சாங்கோ தான் சொன்னது உண்மையல்ல எனச் சொல்லவைக்கிறது.

அரசு தனது ஊழலை மறைக்கத் தனிநபரின் நேர்மையை எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறது என்பதையும் அதன் வழியே தனி மனித உணர்வுகள் எந்த அளவுக்கு நசுக்கப்படுகின்றன என்பதையும் துயரார்ந்த நகைச்சுவைச் சம்பவங்கள் வழியே உணர்த்தியிருக்கிறார்கள் இயக்குநர்கள்.

நமது நாட்டிலும் இதுபோன்ற அரசியல் நிலவரங்கள் காணப்படுவதால் இந்தப் படத்தை மிக நெருக்கமாக உணர முடிகின்றது.



சினிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் எப்படிப் பூமியில்...?

சாஜீவா

டார்வினின் கூர்ப்புக் கொள்கைக்கு முதற்படியாக, உயிரினங்கள் என்பவை நுண்ணுயிர்கள் மூலம் பிரபஞ்சம் முழுதும் பரவி நிற்பவை எனும் ஆய்வுக் கருத்தொன்று நிலவி வருகின்றது. பூமியில் நிலவும் உயிர்வாழத்தக்கதான சூழலினால் சுமார் 350கோடி ஆண்டுகளுக்கு முன்னர் உயிரினங்கள் தோன்றியதாக நம்பப்படுகின்றது. அவை ஆரம்பத்தில் நுண்ணுயிரிகளாகவே காணப்பட்டன. பின்னர், அவற்றின் பரிணாம வளர்ச்சியாலேயே பற்பல உயிரிணங்கள் உருவாகின என்பதாகப் பொதுவான கருத்து ஒன்றும் நிலவுகிறது. இதனைப் பூமியில் உள்ள உயிரினங்கள் அனைத்தும் பூமியில் காணப்பட்ட உயிர்வாழ்வதற்கேற்ற சூழ்நிலைகளால் தோன்றியவை என்றும் கூறலாம். ஆனாலும், இதற்கு மாற்றாகவும் ஒரு கருத்துண்டு. உயிரினங்கள் என்பது நுண்ணுயிர்கள் வடிவில் பிரபஞ்சம் முழுவதிலும் பரவி நிற்பவை என்பதுதான் அந்தக் கருத்து. அண்டவெளி முழுவதும் பரவியுள்ள நுண்ணுயிர்கள் ஓரிடத்திலிருந்து வேறிடத்துக்குப் பரவலாம் என்பதே இதன் சாரமாகும்.

**உயிர் அழிக்கும் கதிர்கள்**

விஞ்ஞானிகள் இதனை ஆராய முற்பட்டபோது, இது சாத்தியமானதுதானா? என்பதில் பல ஐயப்பாடுகள் உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் அண்டவெளி என்பது ஆபத்து நிறைந்தது. சூரியனிலிருந்தும் மற்றைய நட்சத்திரங்களிலிருந்தும் ஓயாது எக்ஸ் கதிர்கள் உட்பட மிக ஆபத்தான வேறு பல கதிர்களும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இந்தக் கதிர்கள் உயிரினங்களுக்கு ஒவ்வாதவை. அவற்றை அழிப்பவை. அத்துடன் நுண்ணுயிர்களை அழிக்க எக்ஸ் கதிர்கள்கூடத் தேவையில்லை. புற ஊதாக் கதிர்கள் மட்டுமே போதுமானவை. ஆனாலும், சிலவகை நுண்ணுயிர்கள், இந்த ஆபத்தான கதிர்களையும் தாங்கி நிற்க வல்லவை தான். இதனால் விஞ்ஞானிகள் பலவகையான நுண்ணுயிர்களை விண்வெளிக்குக் கொண்டு சென்று, அவை எந்த அளவுக்கு விண்வெளிச் சூழலைத் தாங்கிக் கொள்கின்றன என்று ஆராய்வதில் ஈடுபட்டனர். பல ஆண்டுகளாகவே இவ்விதப் பரிசோதனைகள் நடந்துவருகின்றன.

**விண்வெளித் தூசுகள்**

நுண்ணுயிர்கள் எங்கிருந்து வருகின்றன என்பது தெரியாதிருப்பினும் அவை விண்வெளியில் மிதந்துவந்து பரவியிருக்க முடியாது என்பது நம்பிக்கை. காரணம் விண்வெளியில் காற்றுக் கிடையாது. மாறாக விண்கற்கள், வால் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் மூலம் இமை பரவியிருக்கலாம் என்று கருதினாலும். விண்கற்கள் பூமியில் வந்து விழுவது உண்மை தான். ஆனாலும் பூமியைச் சூழ்ந்துள்ள வளிமண்டலம் வழியே பல ஆயிரம் கி.மீற்றர்கள் வேகத்தில் பூமியை நோக்கி வரும் இவை தீப்பிடிக்கின்றன. அப்போது அவற்றில் பலவும் அழிந்துவிடுகின்றன. இந்த நிலையில் அவற்றில் ஒட்டியுள்ள நுண்ணுயிர்கள் எவ்வாறு தப்பிப் பிழைக்க முடியும்.

இங்கு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். விண்வெளி என்பது சுத்தமான பிராந்தியம் அல்ல. விண்வெளித் தூசுகள் நிறையவே மண்டிக் கிடக்கின்றன. வால் நட்சத்திரங்களில் பல கோடி தொன் அளவுக்கு நுண்ணிய தூசு, துணுக்குகள் வெளிப்படுகின்றன. விண்கற்களிலிலும் இவ்வாறு வெளிப்படுவது உண்டு.

இவ்விதமாக விண்வெளியில் துகள் கூட்டங்கள் நிறையவே உள்ளன. இவை மத்தியில் நுண்ணுயிர்கள் எவ்வாறு சாத்தியம்? என்பதுவும் ஐயப்பாடே. சூரியனைச் சுற்றி வருகின்ற பூமியானது, தனது பாதையில் இந்தத் துகள் கூட்டங்களின் ஊடேதான் பயணிக்கின்றது. அப்போது எண்ணற்ற துகள்கள் பூமியில் வந்து விழுகின்றன. இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி பிரெட் ஹொயில், இலங்கையைச் சேர்ந்த சந்திரா விக்கிரமசிங்க ஆகிய இருவரும் இத்துகள்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து,

இத்துகள்கள் மூலம் நுண்ணுயிர்கள் பூமிக்கு வந்து சேர்வதாகக் கூறுகிறார்கள். அவர்கள் இத்துடன் நிற்கவில்லை. இத்துகள்கள் மூலம் விண்வெளியிலிருந்து கிருமிகளும் பூமிக்கு வந்து சேர்வதாகக் கூறுகிறார்கள். இதனால் நோய்கள் பலவும் தலையெடுப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால், அவர்களின் இக்கருத்தை ஏனைய சில விஞ்ஞானிகள் நிராகரிக்கின்றனர்.

விண்கற்கள், வால் நட்சத்திரங்கள் ஆகியவற்றில் கிருமிகள் இருக்கின்றனவோ இல்லையோ அவற்றில் நிச்சயம் உயிரினத் தோற்றத்துக்கு உதவக்கூடிய பல்வேறு அடிப்படைப் பொருள்கள் உள்ளன. பூமியில் காணப்படுகின்ற விதவிதமான வேதியல் மூலக் கூறுகளில் பலவும் விண்கற்களில் காணப்படுகின்றன.

இது அறிவியல் பூர்வமாக கண்டறியப்பட்ட உண்மை. நாம் பொதுவாக விண்கற்கள் என்று கூறுவனவற்றில் பெரிய அளவான விண்கற்களை 'அஸ்டிராய்ட்' என்று நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். சூரிய மண்டலத்தில் பல்லாயிரக்கணக்கில் இவை காணப்படுகின்றன. தனிப் பாதை வகுத்துக்கொண்டு சூரியனைச் சுற்றுகின்ற விண்கற்களும் உண்டு. பூமியை எட்டிப் பார்த்துச் செல்கின்ற பெரிய, சிறிய விண்கற்களும் உண்டு. என்றாவது பூமியில் மோதிவிடலாம் என்று சொல்லக்கூடிய விண்கற்களும் நிறையவே உள்ளன.

**விண்கற்களை நோக்கி ஆய்வுக்கலம்**

விண்கற்கள் சூரியத் தொகுதி தோன்றியபோதே உருவானவை. பூமி தோன்றிய பின்னர் பூமியில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால், விண்கற்களில் உள்ள பொருள்கள் தென்மத்திலிருந்தவாறே தற்போதும் உள்ளன என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனவே, விண்கல் ஒன்றில் அடங்கியுள்ள பொருள்களை ஆராய்ந்தால் பூமியின் தோற்றம் பற்றியும் பூமியில் உயிரினம் எவ்வாறு தோன்றியது என்பது பற்றியும் நிறைய அறிந்துகொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். அந்த நோக்கில் அமெரிக்காவும் சில ஐரோப்பிய நாடுகளும் விண்கற்களை நோக்கி ஆய்வுக் கலங்கள் பலவற்றை அனுப்பியுள்ளன. ஜப்பானும் இத்தகைய விண்கலம் ஒன்றை அனுப்பியுள்ளது. ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு 2004 ஆம் ஆண்டில் அனுப்பிய 'ரோசட்டா' விண்கலத்திலிருந்து சிறிய ஆய்வுக் கலம், வால் நட்சத்திரம் ஒன்றில் இறங்கி விரிவாக ஆராய்வதாக இருந்தது. ஆனால், அந்த ஆய்வுக் கலம் சரியாகச் செயற்படாமல் ஏமாற்றமளித்தது. ரோசட்டாவின் திட்டம் ஈடேறியிருந்தாலும்கூட அது விண்கல் ஒன்றில் அடங்கியுள்ள பொருளைப் பூமிக்கு எடுத்து வந்து ஆராய்ச்சிக்கூடங்களில் வைத்து ஆராய்வதற்கு ஈடாகாது. இதன் பின்னணியில் அமெரிக்காவின் 'நாசா' அமைப்பு 'பென்னு' என்னும் பெயர் கொண்ட விண்கல்லை நோக்கி கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் ஒரு விண்கலத்தை அனுப்பியுள்ளது. இந்த விண்கலம் அந்த விண்கல்லை 2018இல் அடைந்து, அங்கிருந்து சுமார் 60கிராம் கல்லையும் மண்ணையும் அள்ளிக்கொண்டு 2023இல் பூமிக்குத் திரும்பும். அந்தக் கல்லையும் மண்ணையும் ஆராய்ந்தால் பூமியின் தோற்றம் பற்றியும் பூமியில் உயிரினம் தோன்றியதில் விண்கற்களுக்குப் பங்கு உண்டா? என்பது பற்றியும் பல தகவல்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விண்கலம் திரும்பும் வரைக் காத்திருப்போம்!



Diatoms through the microscope

**விண்கற்கள், வால் நட்சத்திரங்கள் ஆகியவற்றில் கிருமிகள் இருக்கின்றனவோ இல்லையோ அவற்றில் நிச்சயம் உயிரினத் தோற்றத்துக்கு உதவக்கூடிய பல்வேறு அடிப்படைப் பொருள்கள் உள்ளன. பூமியில் காணப்படுகின்ற விதவிதமான வேதியல் மூலக் கூறுகளில் பலவும் விண்கற்களில் காணப்படுகின்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# வரலாற்றில் இன்றைய தினம்

1886 - கார்ள் பென்ஸ் முதன் முதலாக பெற்றோலில் இயங்கும் மோட்டார் வண்டிக்கான காப்புரிமம் பெற்றார்.

1995 - தமிழ் எம்பிக்கள் இணைந்து புதிய அமைப்புரமில் யூனிற்றி போரம் என சண்டே ஒப்சவர் செய்தி.

2004 - போதைப் பொருள் எதிர்ப்புப் பரப்புரை புலிகளுக்கு அமைச்சர் ஜயலத் பாராட்டு

2013 - பிரான்ஸ் படையினர் வசம் வீழ்ந்தது மாலியின் முக்கிய நகரான திம்புக்டு.
- நோபலுக்கு நிகரான ஆசிய பரிசுத் திட்டம் தைவான் தொழிலதிபரால் உருவாக்கம்.
- போர்க் குற்றப் பிரேரணை ஜெனிவாவில் நிச்சயம் என அமெரிக்க குழு கொழும்பில் அறிவிப்பு.




# தாயன்பு



தாய் வயலில் வேலை செய்து கொண்டிருந்தாள். அவளின் குழந்தை பக்கத்தில் மரத்தடியில் விளையாடிக்கொண்டிருந்தது. வேலை மும்மரத்தில் தாய் சிறிதுநேரம் குழந்தையைக் கவனிக்கவில்லை. திடீரென ஞாபகம் வந்து பார்த்தபோது, குழந்தை கைப்பிடியில்லாத ஒரு கிணற்றின் விளிம்பருகே நின்று கொண்டிருந்ததைக் கவனித்தாள். அடுத்து ஒரு அடி எடுத்து வைத்தாலும் குழந்தை கிணற்றுக்குள் விழுந்து விடும்.

கூட இருந்தவர்கள் பதைபதைத்தார்கள். தாய் சிறிது கூட யோசிக்காமல் கொஞ்ச தூரம் மெதுவாக நடந்து சென்று குழந்தையைப் பார்த்து, பாப்பா, அம்மா வீட்டுக்குப் புறப்பட்டு விட்டேன். நீ வருகிறாயா, இல்லையா? என்று சத்தம் போட்டுச் சொன்னாள். அடுத்த நிமிடம் குழந்தை திரும்பி தாயைப் பார்த்து, ஓடி வந்து கட்டிப் பிடித்துக்கொண்டது.

விலையேதுமற்ற தாயன்பு தானே அந்த இக்கட்டான நேரத்தில் சமயோசிதமாகச் சிந்திக்க வைத்தது?



# பொது அறிவு

1. மூன்று தலைநகரங்களைக் கொண்ட நாடு எது?
   தென்னாபிரிக்கா
2. உலகிலேயே மிகவும் பெரிய தேசியக் கொடி கொண்ட நாடு எது?
   டென்மார்க்
3. கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது?
   இங்கிலாந்து
4. காவல்துறையில் முதன் முதலில் பெண்களைச் சேர்த்த நாடு எது?
   இங்கிலாந்து
5. பாலைவனம் இல்லாத கண்டம் எது?
   ஐரோப்பா
6. மஞ்சள் ஆறு என அழைக்கப்படும் நதி எது?
   குவாங்கோ நதி
7. எந்த நாட்டினரால் முதன் முதலில் காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது?
   சீனா
8. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
   நெதர்லாந்து
9. சிப்பியில் முத்து உருவாக எத் தனை ஆண்டுகள் எடுக்கும்?
   சுமார் 15 ஆண்டுகள்
10. உலக வானிலை மையம் அமைந்துள்ள இடம் எது?
   ஜெனீவா.



# பண்டைய உலகின் ஏழு அதிசயங்கள்

1. எகிப்திய மன்னர் பாரோ கூபுவின் சமாதி அடங்கியுள்ள கிஸா பிரமிட்.
2. பாபிலோனியா நகரில் அமைந்திருந்த தொங்கும் தோட்டம்.
3. ஆர்ட்டிமிஸ் கோவில்.
4. ஒலிம்பியாவில் அமைந்திருந்த ஜீயஸ் கடவுளின் சிலை.
5. மாசோலஸ் மசோலியம்.
6. ரோட்ஸ் சிலை.
7. அலெக்சாண்ட்ரியா கலங்கரை விளக்கம்.



# பாடம் படித்த பூக்கள்

பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பிய சுதமதி பாட்டியைச் சந்திக்க ஓடினாள். பாட்டி! நீங்க சொன்னதுபோலவே நேற்று சாயங்காலம் நான் ஒரு வேலையைச் செய்தேன். வெட்டி வெச்சா குட்டி போடும் செடியோட இலையைப் பிடுங்கி மண்ணில் புதைச்சு வைத்தேன். அது இப்போ துளிர்த்திருக்குமா பாட்டி?

வா! வா.. தோட்டத்துக்குப் போய் பார்த்துவிடுவோம் என்று பதில் சொன்ன பாட்டி, பேத்தியுடன் தோட்டத்துக்குப் போனார். அங்குப் போன சுதமதிக்கு ஆச்சரியம் காத்திருந்தது. இலை ஓரத்தில் துளிர் விட்டிருந்தது.

உடனே துள்ளிக் குதித்து உற்சாகமடைந்தாள் சுதமதி. பாட்டி, நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவளுக்குத் தாவரங்களைப் பற்றி நிறையத் தகவல்களைச் சொல்லியிருக்கிறார். விடுமுறை நாள்களில் நாடோடிக் கதைகளும், நாட்டுப்புறப் பாடல்களும் சொல்லித் தந்துள்ளார். எனவே, பாட்டியிடம் சுதமதிக்கு ரொம்ப அன்பு ஜாஸ்தி.

சுதமதியின் பாட்டி இயற்கையை நேசிப்பவர். வீட்டைச் சுற்றிலும் பலவகைப் பூஞ்செடிகள் வளர்த்துவந்தார். அடுக்குச் செம்பருத்தி, கனகாம்பரம், பிச்சி, சிவப்பு ரோஜா, டிசம்பர் பூ, சாமந்தி, மல்லிகை, நந்தியாவட்டை என வீட்டைச் சுற்றிலும் ஏராளமான செடி, கொடிகள் வளர்த்து வந்தார். அவற்றுக்கு இயற்கை உரமிட்டு வளர்த்தார்.

பாட்டியுடன் சேர்ந்து சுதமதியும் தோட்ட வேலையைச் செய்யப் பழகிக் கொண்டாள். பள்ளியை விட்டு வீட்டுக்கு வந்ததும், புத்தகப் பையுடன் தோட்டத்துக்குப் போய் விடுவாள் சுதமதி. செடிகளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வீட்டுப் பாடங்களை எழுதுவாள்.

பள்ளியில் சொல்லிக் கொடுத்த பாடங்களைச் செடிகளுக்கு வாசித்துக் காட்டுவாள். எந்தப் பூஞ்செடிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து என்னென்ன பாடங்களைப் படித்தேன் என்பதை ஞாபகம் வைத்துக் கொள்வாள். செடிகள் பதில் பேசாததை எனத் தெரிந்தும் ஒவ்வொரு செடியிடமும் கேள்வி கேட்பாள். செடிகளுக்கு எதிரில் தனக்குத் தானே விடையைச் சொல்லிச் சந்தோசப்படுவாள். எப்போதும் அடுக்கு செம்பருத்திச் செடிக்குப் பக்கத்தில் உட் கார்ந்தபடி அறிவியல் பாடத்தை சுதமதி வாசிப்பாள்.

ஒரு செல் தாவரம் எவை? பாசி, பூஞ்சை.அவற்றின் அறிவியல் பெயர் என்ன? கிளாமிடாமோனசஸ். இப்படிப் பாடங்கள் மனதில் பதியும்வரை திரும்பத் திரும்ப வாசித்துப் பழகுவாள்.

கனகாம்பரச் செடிக்குக் கீழே உட்கார்ந்து, கணித வீட்டுப் பாடத்தை எழுதி முடிப்பாள். மல்லிகைப் பந்தலுக்குப் பக்கத்தில் நடந்து கொண்டே தமிழாசிரியர் நடத்திய செய்யுளை வாசிப்பாள். பயிரை வளர்த்தால் பலனாகும் அது உயிரைக் காக்கும் உணவாகும். (தொடரும்)



*சிந்தனைக்கு–*

சிந்தனைக்கு– பெற்ற தாயுடன் ஒப்பிட, கடவுளும் இல்லை.

–நீதிமொழி



பா.ஆதிகேசன்,
சிமாட்கிட்ஸ் முன்பள்ளி,
திருநெல்வேலி.



யாழ். இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூல் அறிமுகம்



தொகுப்பு :-
எஸ். மல்லிகா




**நூல் - அருளிசை அமுதம்**
**ஆசிரியர்கள் - வைத்தியர். கந்தையா. நவரத்தினம் மற்றும் கந்தையா .சோதிதாசன்**
**இலவச வெளியீடு.**

ஒரு இசைப்பா நூலாக, தோத்திரப் பாடல்களின் தொகுப்பாக 'அருளிசை அமுதம்' விளங்குகின்றது. ஆலயம், வீடுகளில் கிரியைகள், சிறப்பு, நித்திய தினங்களின்போது ஓதக்கூடிய பக்திப்பாரயணப் பாடல்களின் சிறந்த தொகுப்பாக இது விளங்குகின்றது. 'அருளிசை அமுதம்' என்ற நூலின் அட்டைப்படமானது ஆசிரியர்களின் பிறப்பிடமான வேலணையிலுள்ள முருகன் ஆலய முகப்பை (முன்றிலை) சித்திரிக்கின்றது.
பக்த அடியார்கள் மெய்யுருகி இசைத்துப்பாடும் வண்ணம் அமைந்துள்ள விநாயகர் துதி, காப்புடன் பக்திப் பாசுரங்களான தேவாரம்,திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம் முதலான பஞ்சபுராண தோத்திரப்பாடல்களும் அருணகிரிநாதரது திருப்புகழ் பாடல்களும், திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களும் வேலணை தெற்கு தாழையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஊஞ்சல் பாசுரங்களும் குமரகுருபரது சகலாவல்லிமாலை, சரஸ்வதிதுதி, தேவியின் புகழ், நவக்கிரக தோசம் நீங்கும் துதி தோத்திரப்பாடல்கள், ஐயப்பனின் 108 சரணக்கோவை, பல தனிப்பாடல்கள் என 69பக்கங்களில் இதனைத்தையும் உள்ளடக்கிய பக்தித் தொகுப்பாக, ஆலயங்களில் பக்தி வளர்ப்போருக்குப் பேருதவியாக இந்த 'அருளிசை அமுதம்' திகழ்கின்றது.




**நூல்- தமிழ் இலக்கணப் பூங்கா**
**ஆசிரியர்- பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்**
**வெளியீடு- பொன்னெழுத்துப் பதிப்பகம், இணுவில் மேற்கு.**
**விலை- 360 ரூபா**

**மாணவர்களுக்குப் பயனளிக்கும் புத்தகம்**

மனிதனின் சிந்தனையை விரிவுபடுத்துவது மொழி. இதனால்தான், எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்று கூறினார் ஔவையார். இங்கு எண் என்பது கணிதத்தையும், எழுத்து என்பது இலக்கணத்தையும் குறிக்கின்றன. இவை இரண்டுமே பெரும்பாலும் மாணவர்களுக்குக் கசப்பைத்தான் ஏற்படுத்துவன. இதில், இலக்கணத்தில் இடர்ப்படும் மாணவர்களுக்குக் கைகொடுத்து நிற்கிறது– தமிழ் இலக்கணப் பூங்கா நூல்.
தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மிகுந்த பயனளிக்கும் விதத்தில் இந்நூல் அமைந்துள்ளது. மாணவர்கள் கற்கும் வசதி கருதி, விடயத் தலைப்புக்களைத் தனி ஒழுங்கில் வகுத்திருப்பது சிறப்பு. எவர்க்கும் விளங்கும் எளிய மொழிநடை நூலுக்குக் கனதி சேர்க்கிறது. மூத்த தலைமுறையிடம் தான் பெற்றுக்கொண்ட அறிவை, இளைய தலைமுறையினருக்குப் பவ்வியமாக அளித்திருக்கும் நூலாசிரியரின் பேரெண்ணம், பாராட்டுக்குரியது.




**நூல்- தளவாசல் (கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்)- 02**
**முதன்மை ஆசிரியர்- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்**
**வெளியீடு- எழுகலை இலக்கியப் பேரவை**
**விலை- 100 ரூபா**

**பண்பாட்டை மீள்நினைவூட்டும் சஞ்சிகை**

மறந்து செல்லும் தமிழரின் பண்பாட்டை மீள்நினைவூட்டும் தார்மீகப் பொறுப்பைக் கையிலெடுத்து மலர்ந்துள்ளது– (கலை இலக்கிய சமூக பண்பாட்டுக் காலாண்டிதழ்) தளவாசல்– 02. ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்து மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்த மாட்டு வண்டில், இன்று காணாமற் போய்விட்டது. அதனை அட்டைப்படமாகத் தாங்கி, எமது பண்பாட்டை மீள்நினைவூட்டி நிற்கிறது தளவாசல் சஞ்சிகை–02. கதை, கலை, கவிதை, கட்டுரை, மருத்துவம், வாழ்வியல் என வழமையான விடயங்களை உள்ளடக்கியிருந்தாலும், நேர்காணல் உள்ளிட்ட சில புதிய அம்சங்களும் இந்தச் சஞ்சிகையில் உள்ளடங்கியுள்ளன.
நாம் தொலைத்தவற்றை மீட்டெடுக்கும் அரிய பணியைச் செய்யத் துணிந்திருக்கும் தளவாசல், இடையறாது தொடர்ந்து வெளிவர வாழ்த்துக்கள்.

# கூடி மகிழ்வேன்

அராலியூர் நிலா

பண்டைத் தமிழர் வாழ்வியலில், கார்காலம் வந்தாலே காதலருக்குக் களியின்பம் தோன்றும். போருக்குச் சென்ற தலைவன்மார், ஊருக்குத் திரும்பி தலைவியருடன் சல்லாபித்திருப்பர். மெய்யின்பம் துய்ப்பர். இத்தகைய தலைவன் ஒருவனது மனோநிலையை அழகுறச் சித்திரிக்கிறது பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடல்.

போதார் நறும்துகள் கவினிப்
புறவின் தாதார்ந்து
களிச்சுரும்பு அரற்றும் காமர் புதலின்
மடப்பிடி தழீஇய மாவே
சுடர்த்தொடி மடவரல் புணர்ந்தனம் யாமே.
(416)
கார்கலந் தன்றால் புறவே பலவுடன்
ஏர்பரந் தனவால் புனமே ஏர்கலந்து
தாதார் பிரசம் மொய்ப்பப்
போதார் கூந்தல் முயங்கினள் எம்மே. (417)
(பேயனார்- ஐங்குறுநூறு)

பூக்களின் மணம் மிக்க தாதுக்களை உதிர்த்து, கம்பளம் விரித்ததுபோல அழகு பெற்றுத் திகழ்கிறது முல்லை நிலம். அங்கு தேனை அதிகமாக உண்டு வெறி கொண்டதுபோல புதர்களைச் சுற்றிச் சுற்றி ஒலி செய்கின்றன வண்டுகள்.
இப்படியான புதர் ஒன்றில், ஆண் யாணைகள் பெண் யானைகளைத் தழுவி மகிழ்ந்திருக்கின்றன.
நானும், ஒளிவீசும் தொடியை அணிந்திருக்கும் இனியவளான இவளைக் கூடித் தழுவி மகிழ்வேனாக–
முல்லை நிலம் கார் காலத்தை வரவேற்றது. அதனால், அந்தக் காட்டு நிலம் பல்வேறு அழகிய காட்சிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது.
தேன் உண்ண, வண்டுகள் சூழ்ந்திருக்கும் பூக்களை, தன் கூந்தலில் அணிந் துள்ள இவள், பொய்க் கோபம் கொண் டும் கூடி யும் என்னைப் புணர்ந்து மகிழ்விக்கிறாள்– என்கிறான் தலைவன்.
தலைவி மீதுற்ற தலைவனின் தீராக் காதலை அழகுற சொற்சித்திரம் ஆக்கியுள்ளது– இந்த ஐங்குறுநூற்றுப் பாடல். உண்மைக் காதலைத் தவிர, இந்த பூமியில் எதுவுமே நிரந்தரம் இல்லை என்பதை நிரூபித்து நிற்கிறான் இந்தத் தலைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரிவு

எஸ்.தர்சி

பருவத்தின் மாற்றத்தால்
தொலைதூரம்
பறந்து வந்து தங்கி,
விடைபெற்றுச் செல்லும்
வேடம் தாங்கல் பறவைபோல்
வயதின் பருவ மாற்றத்தால்
என்மனதில் கூடு கட்டி தங்கிவிட்டு
பறந்து சென்றுவிட்டாய்
விலாசம் தெரியாமல்...



# வேண்டாமே... மணமுறிவு

எஸ்.மல்லிகா

## வாக்குவாதம்

மனமொத்த தம்பதியர் வாழும் இல்லம், ஆண்டவன் வாழும் ஆலயம். இன்று எத்தனை பேர் அப்படி மனமொத்து வாழ்கின்றனர் என்பதை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஒருவர் கருத்தை மற்றவர் செவிமடுத்துக் கேட்காமல் வாக்குவாதம் செய்வது, அதில் தோல்வியடைந்ததும் பிரிந்து செல்ல நினைப்பது என்பது தற்காலத் தம்பதியர் வாழ்க்கையில் சாதாரணமாகிவிட்டது.

இந்த வாக்குவாதத்தில், ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்கத் தயாராய் இருப்பதில்லை. ஒருவேளை அவர்கள் கவனித்தால்கூட அந்தக் கவனித்தல் தவறாக இருக்கும். உண்மையாகக் கவனிப்பதில்லை.

ஒருவர் வாதத்தை இடையறுத்து, மற்றவர் விவாதத்துக்குத் தயார் செய்துகொண்டிருப்பார். கணவனோ அல்லது மனைவியோ பேசிக்கொண்டிருக்கும் போது, குறுக்கே இரண்டில் ஒருவர் வாதிட்டால் முரண்பாடு வெடிக்கும். பின்னர் தனது வாய்ப்புக்காக, மறுபடி விவாதிப்பதற்காக மற்றவர் காத்திருப்பார். அவர்களுக்குள் ஏற்கனவே ஓர் எதிர்ப்புத் தன்மையை வளர்த்திருப்பர். இந்த எதிர்ப்புணர்வானது தேடலில் இல்லை; அறியாமையில் இல்லை; வெகுளியாய் இல்லை. ஏற்கனவே அவர்களுக்குள் நிரப்பப்பட்டிருக்கும். இந்த வாக்குவாதத்தில் சில கோட்பாடுகளை எடுத்துச் சொல்ல ஒருவர் நினைப்பார். அவற்றை உண்மை என்று நிரூபிக்க அவர் முயல்வார். இவ்வாறு வாக்குவாதம் செய்பவர்களால் உரையாடலில் ஈடுபட முடியாது. அவர்களால் மோதிக் கொள்ளத்தான் முடியும்.

குழப்பம் வந்தவுடன் ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கொள்கின்றனர். கணவனோ அல்லது மனைவியோ அடுத்தவரை அமைதியாக்கி விடலாம். ஆனால், அவர்களை மாற்றிவிட முடியாது. சமாதானப்படுத்த முடியாது. ஏனெனில், இது ஒரு நாகரிகமான போர். வார்த்தைகளைக் கொண்டு சண்டையிடும் போர். திருமண வாழ்க்கையைச் சிதைக்கும் போர். இதுவே பிரபல தொழிலதிபரான ஆதவனின் வாழ்க்கையையும் கூறுபோட்டது. அவனுக்குத் திருமணமாகி இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. ஆனால், அவனுடைய மனைவி பிரிந்து சென்றுவிட்டாள். அவளுடைய வரவைத் தினமும் எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு, அந்தக் கடதாசி பேரதிர்ச்சியைக் கொடுத்தது. அதனையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தவன், வாழ்க்கை இவ்வளவு தானா? என்ற கேள்வியைத் தனக்குள் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறான்.

(தொடரும்....)




# என்றும் நினைவில் வி.வி.வைரமுத்து



காங்கேசன்துறை தந்த மாபெரும் கலைஞன்
அண்ணாவி பரம்பரைக்கு அணிகலனானவன்
நந்தா விளக்குப் போல் ஒளிவீசிய நாயகன்
நடிப்புக் கிலக்கணம் வி.வி வைரமுத்து

அண்ணாவி நடிகமணி ஆயிரத்தில் ஒருவன்
மக்களை மயக்கிய மகத்தான கலைஞன்
சிம்மக் குரலோன் சிவாஜி கணேசன் போல்
வெண்கலக் குரலோன் வி.வி.வைரமுத்து.

மேடைக் கூத்துக்களின் மேதாவிலாசம்
நாட்டுக் கூத்தே நம் நாட்டின் சொத்தென்று
நாட்டுக் கூத்துக்கே நடு நாயகமானவன்
கூத்தும் பாட்டும் அவனுக்குக் கூடிவந்த கலை.

ஆளுமை, அழகுமுகம், கம்பீரத் தோற்றம்
ஆரையும் மயக்கும் அவன் பாட்டும் நடிப்பும்
ஆரடிகள்ளி இந்த அடாத வனம் தன்னில் வந்து
அரிச்சந்திரா விலே அவன் குரல் இன்றும் கேட்கும்.

அல்லி அருச்சுனா, வள்ளி திருமணம்
பக்த நந்தனார், கோவலன் கண்ணகி
நல்ல தங்காளுடன், ஞான சவுந்தரி
இன்னும் இதைப் போல எத்தனை தோற்றங்கள்

எத்தனை மேடைகளில் பல்வித தோற்றங்களில்
மக்களை மகிழ்வித்த மாபெரும் கலைஞன்
நாடக மேடைகளில் நடிகர் திலகத்தை
நம்முன்னே காட்டியவன் நடிகமணி வைரமுத்து
இறந்த பின்னும் வாழ்பவர் மிகச் சிலரே
இதற்கொப்ப வாழ்ந்தவனே வைரமுத்து
மடிந்து மறைந்தாலும் அவன் நடிப்பு
மக்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும்.

**தீவான் கந்தபேரின்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘வீச்...’

(நகைச்சுவைத் தொடர்)



மிருசுவில் தமிழ்தாசன்

## 01

சிவகுரு வாத்தியார் பாடம் தொடங்கி ஐந்து நிமிடங்கள் ஓடிவிட்டன. எட்டாம் வகுப்புக்கு 'வரலாறு' பாடம் நடந்து கொண்டிருக்கின்றது. அங்கு அவர் கேட்ட அந்த வினாவுக்குரிய விடையை இதுவரை யாருமே கூறவில்லை. இதன் காரணமாகச் வாத்தி சற்று எரிச்சலாகவும் கடுப்பாகவும் காணப்பட்டார்.

கழுகைக் கண்டு விட்ட கோழிக்குஞ்சுகளாக விழிகள் பிதுங்கிய வாறு கலங்கிய நிலையிலிருந்தனர் அந்த வகுப்பறை மாணவர்கள். சிவகுருவாத்தியின் கையில் கற்பித்தலுக்குரிய பாடப்புத்தகமோ அல்லது அது சம்பந்தமான ஏதாவது குறிப்புகள் கூட இல்லாமலிருக்கலாம். ஆனால் அவரிடம் அந்தக் கொய்யாப் பிரம்பு மட்டுமிருக்காது விடுவதில்லை. அந்தப்பிரம்படியின் ருசியறிந்த மாணவர்கள் வாத்தியாரைக் கண்டதும் கப்சிப்.

“என்ன...! நான் கேள்வி கேட்டு இவ்வளவு நேரமாய்ப்போச்சுது. ஒருத்தரும் மறுமொழி சொல்லாமல் கோழி பிடிச்ச கள்ளர் மாதிரி முழுசிக் கொண்டிருக்கிறியள்...? என்னடா வினோதன்! உனக்குத் தெரியாதே?”

சாரைப் பாம்புக் கடிக்காளானவன் போல் நடுங்கிக் கொண்டிருந்தான் வினோதன். விடை தெரியாது என்ன தான் சொல்லித் தொலைப்பது.

“எடி அவள் தான்... இரண்டாவது வரிசை... அந்தச் சந்தனப் பொட்டுக்காறி! பேரையும் மறந்து துலைச்சிற்றன்...லக்சிகா...?”

“சேர்”

எச்சில் விழுங்கி மெதுவாக முணுமுணுத்துப் பயத்தில் நெளிந்தாள் லக்சிகா.

“விடியக்காலமை எழும்பிச் சரியாய்க் குளிக்கிறதுமில்லை. அரைகுறையாய் அள்ளி வாத்துப்போட்டு உவடத்தையில பிரேதத்துக்கு அடிக்கிற சென்ரையுமடிச்சுக் கொண்டு வலு விலாசமாய் வந்திடுவியள். ஏதோபடிச்சுக் கிழிக்கிறமெண்டு. ஆனா, இஞ்சை பாத்தால் ஒருத்தருக்கும் ஒரு மண்ணும் தெரியாது. சரி ஆரெண்டாலும் விடை தெரிஞ்சவை எழும்பிச் சொல்லுங்கோ பாப்பம்?”

இது வாத்தியாருடைய ஒரு சிறப்புச் சலுகை. ஆனாலும் யாரும் எழுந்து கொள்ளவில்லை விடை சொல்லவுமில்லை.

இதென்னா இது...!



பின்வரிசையிலிருந்த சிங்காரவேலன் எழுந்து விட்டு ஏனோ மீண்டும் அமர்ந்து விட்டான். இதையார் கவனித்தார்களோ இல்லையே வாத்தியார் கண்டு விட்டார்.

“ஆரது...? எடேட... எங்கடை சிங்காரவேலனே? உனக்குத்தெரியும் போலை. பேந்தேன் இருந்தனி?சொல்லு...? சொல்லடா...? எட சொல்லன்ரா”

வாத்தியார் அவனை அவசரப்படுத்தினார். முன்வரிசை மாணவர்கள் அதிசயத்துடன் பின்வரிசையிலிருந்த சிங்காரவேலனைத் திரும்பிப் பார்த்தார்கள். சிறையிலிருக்கும் மிக மோசமான குற்றவாளி ஒருவனுக்கு சிறைச்சாலை அதிகாரிகள் ஐ.ஆர்.சி. என்னும் பட்டம் கொடுப்பதுபோல அனைத்து ஆசிரியர்களினாலும் “மொக்கன்” என்றும் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டவன் தானிந்தச் சிங்காரவேலன். இத்தனை திறமை மிக்க மாணவர்களும் விடை தெரியாது மௌனித்திருக்கும் போது...! ஒருவேளை இவன் விடையைச் சொல்லிவிட்டால் அவர்களின் நிலைமை என்னவாகும்! பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தனர். கடுக்காயிலும் ஆமணக்கெண்ணெயிலும் பேதி குடித்து விட்ட வயிறுகள் கலங்கி இப்பவோ அப்பவோ என்று அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

“எட சிங்காரம்...! சொல்லன்ரா?”

மீண்டும் வாத்தியாரின் அவசரம் கலந்த அதட்டல்! “ஒறிஜினல் றெமிங்ரன்” தட்டச்சு இயந்திரம்போல அவனது கைகால்கள் மிக வேகமாகத் தட்டச்சுச் செய்து கொண்டிருந்தன. பென்னம் பெரியதொரு கெளுத்துமீன் முள்ளொன்று தொண்டைக்குள்சிக்கிக் கொண்டு விட்டது. போன்றதொரு அந்தர நிலைமை அவனுக்கு! விடயத்தைச் சொல்லவும் முடியவில்லை.

மெல்லவும் முடியவில்லை. அளவு கடந்த பயத்தினால் சிங்காரவேலனின காச் சட்டை அவனையுமறியாது ஈரமாகிவிட்டது. பக்கத்திலிருந்தவர்கள் மூக்கைப் பொத்திச் சங்கடப்பட்டு நெளிந்து கொண்டிருந்தனர்.

(தொடரும்)

# புத்தகங்களால் புனிதமாகுவோம்

புத்தகங்கள்
பக்கமெலாம் நட்பை
விரித்துவைத்திருக்கும் அற்புதங்கள்
அவை வாசிக்க மட்டுமல்ல பிறரை
நேசிக்கவும் கற்றுக் கொடுக்கின்றன

புத்தகங்கள்
கற்பக விருட்சங்கள்
வேண்டுவன வெல்லாம் தந்து எமை
நீண்ட மகிழ்வோடு வாழவைக்கும்
எத்தனை முறை சந்தேகம் கேட்டாலும்
சத்தியமாய்ப் புத்தகங்கள் மட்டுமே
சலித்துக் கொள்வதில்லை

மனிதனுக்கு ஆயுள் அற்பமே
ஆனால் நூல்கள்
நூற்றாண்டு கடந்தும் வாழும்
பதிப்பிக்கப் பதிப்பிக்க அவற்றின்
ஆயுள் புதுப்பிக்கப்படுகின்றது
அடுப்படிமுதல் அரசியல்வரை
அத்தனை விடயங்களையும்
எம் வீட்டுக் கடப்படியில்
நூல்கள் அறியவைக்கும்
அதனால் அறியாமை பொய்க்கும்
உலகைப் பார்க்க வேண்டுமா
புத்தகங்களை விரி; சிந்தனைகளில் சிறகடி

கண்முன்னே புவி விரியும்
தெரியாதனவெல்லாம் புரியும்
உன்னைப் புதுப்பிக்க வேண்டுமா
புத்தகங்களில் குளித்துப் புனிதமாகு
நூல்கள் அமைத்த சாலைவழிதேடு
அத்தனை அறிவையும் பெறுவாய்
புதுப்புது அனுபவம்
அறிவாய் நீவிரைவாய்

*தி.சாந்தகுமார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர் சிந்தனைகள்

அ.அஜந்தன்

எமது மனதைப் பயன்படுத்திக் கருத்துக்கள், முடிவுகள் நினைவுகள் என்பவற்றை உருவாக்கும் செயற்பாடே சிந்தனை எனலாம். இந்தச் சிந்தனையே எமது உணர்வுகளையும் செயல்களையும் தீர்மானிக்கும் ஒன்றாக உள்ளது. நினைவு பூர்வமாகச் சிந்திப்பது எமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே நிகழ்கிறது. உங்களால் அதனை நன்கு உணரவும் முடியும். ஆழ் மனச் சிந்தனைகளை எங்கள் உடலின் செயற்பாட்டின் மூலமே உணரமுடியும். ஒரு மனிதனின் மனதில் சராசரியாக ஒரு நாளுக்கு 60,000 தொடக்கம் 80,000 வரையான சிந்தனைகள் தோன்றுகின்றன. ஆனால் தற்காலத்தில் நமக்குள்ளும் வெளிச் சூழலிலும் அதிகமாகச் செல்வாக்குச் செலுத்தும் எதிர்மறையான எண்ணங்களே நமது சிந்தனைளையும் ஆள்கொள்ளத் தொடங்கிவிட்டன. இவை எமது சிந்தனையின் தன்மையை எதிர்மறையாக்கிவிடுவன. இந்தச் சூழ்நிலை எமது மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் வெற்றி வாய்ப்புக்களையும் பெரிதும் பாதிக்கும். எனவே தான் எமது சிந்தனைகளை நேர்சிந்தனையாக மாற்ற வேண்டிய கட்டாயம் தற்காலத்தில் எமக்கு ஏற்பட்டுள்ளது. இதற்குச் சிறந்த உதாரணமாக தோமஸ் அல்வா எடிசன் குறித்த கதை ஒன்றுள்ளது.

அன்று பாடசாலையிலிருந்து வந்த எடிசனின் கையில்ஒருகடிதஉறைகாணப்பட்டது. அதிலுள்ள கடிதத்தைத் தனது அம்மாவிடம் மட்டுமே கொடுக்க வேண்டும் எனத் தனது வகுப்பாசிரியர் கூறியதாகச் சொல்லித் தாயிடம் கொடுத்தான்.

'உங்கள் மகனின் அறிவுத்திறமைக்கு முன் எங்கள் பள்ளி மிகவும் சிறியது. அவனுக்குக் கற்பிக்கத் திறமையான ஆசிரியர்கள் எங்களிடம் இல்லை. அதனால் தயவு செய்து நீங்களே உங்கள் மகனுக்குக் கற்பிப்பது நல்லது' என்று அவனது தாய் அந்தக் கடிதத்தைத் தனது மகனுக்கும் கேட்கும்படியாகச் சத்தமாகப் படித்தாள்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு எடிசனின் தாயார் இறந்துவிட்டார். எடிசனும் அந்த நூற்றாண்டின் சிறந்த ஆராய்ச்சியாளராகக் கண்டுபிடிப்பாளாராக ஆனார். இப்படி இருக்கையில் ஒருநாள் தனது வீட்டின் பழைய பொருள்களை எடுத்து ஒதுக்கி வைத்துக் கொண்டிருந்தபோது அம்மாவிடம் பள்ளியிலிருந்து கொண்டு வந்து கொடுத்த அந்தக் கடிதம் எதேச்சை யாகக் கண்ணில்பட்டதால் ஆவலுடன் அதை எடுத்துப் படித்துப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

'மூளை வளர்ச்சி குன்றிய உங்கள் மகனை இனிமேல் எங்கள் பாடசாலைக்கு நீங்கள் அனுப்ப வேண்டாம்'

இதனைப் படித்த எடிசன் அழுதார். தனது நாள்குறிப்பேட்டில் 'மூளை வளர்ச்சியற்ற தோமஸ் அல்வா எடிசன் தனது தாயினாலேயே மாபெரும் கண்டுபிடிப்பாளனானான்' என்று குறித்து வைத்துக் கொண்டார். எம்மில் படிந்துள்ள எதிர்மறையான சிந்தனைகளை எப்படி நேர் சிந்தனைகளாக மாற்றி வெற்றி கொள்வது என்பதற்கும் பிள்ளைகளின் மனங்களில் எப்படி நேர் சிந்தனைகளை விதைப்பது என்பதற்கும் இந்தச் சம்பவம் மிகச் சிறந்த உதாரணம்.

### ஏன் நேர் சிந்தனை வேண்டும்?

இது ஒரு மகிழ்ச்சி விழிப்பூட்டி. எமது மகிழ்ச்சி என்பது வெளிக்காரணிகளில் தங்கியிருப்பதில்லை. அது எப்பொழுதும் எமது மனதில் நேர் சிந்தனைகளை உருவாக்கிக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. எதிர்மறையான சிந்தனைகள் எப்பொழுதும் எமது மகிழ்ச்சியைப் பறித்துவிடும். எப்பொழுதும் எமது கனவை அடைவதற்கும் இலக்கை அடைவதற்கும் எம்மை ஊக்கப்படுத்துவதோடு, எமக்கு ஏற்படும் தடைகளையும் தாண்டி எமது பணிகளை இலகுவில் நிறைவேற்றவும் இது உதவும். எம்மை நாமே பார்த்துக்கொள்வதானதால் இது எமது சுயமரியாதையை உயர்த்திக் கொள்ள உதவும். சுயமரியாதை, தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் வலிமையை உருவாக்கி எங்கள் மீது எங்களுக்கு மதிப்பை ஏற்படுத்தும்.

இதனால் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கலாம். உடலும் உள்ளமும் தெம்போடு இருப்பதற்கேற்ற நோயெதிர்ப்பு அமைப்பும் சீராகச் செயற்படும். மற்றவர்கள் எப்பொழுதும் நேர் சிந்தனையுள்ளவர்களையே அதிகம் விரும்புவர். எமது சிந்தனைகளை நேர் சிந்தனையாக மாற்றிக் கொள்வதன் மூலமாக மற்றவர்களுடன் சிறந்த உறவு முறையை ஏற்படுத்த முடியும்.

### நேர் சிந்தனைகள் எப்படிச் சாத்தியம்.

நாம் கதைக்கும்பொழுது எப்பொழுதும் சாதகமான வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும். இயன்றவரை இதனைச் செய்வதன் மூலமாக எமது மனதில் உதிக்கும் சிந்தனைகளை நேர் சிந்தனைகளாக மாற்றமுடியும். வலிமையையும் வெற்றியையும் கொடுக்கக் கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்துவது எப்பொழுதும் எமது நேர் சிந்தனையைத் தூண்டும். எமக்குள் உள்ள எதிர்மறை உணர்வுகளை அடையாளம் கண்டு அவற்றை மனதிலிருந்து வெளியேற்றுவதும் இதற்கே வித்திடும். இதனால் எமக்குள் இருக்கும் விமர்சகரை அடக்கிவைக்கமுடியும். சாதகமான உத்தரவாதங்களை மட்டும் வழங்குவதன் மூலம் அதை நிறைவேற்றுவதற்கான நேர் சிந்தனைகளை உருவாக்கமுடியும். வெற்றி நமதே என்று நம்பிக்கை வைப்பதாலும் சிந்தனையும் செயலும் நேரானதாக மாறும்.

### நேர்மறை சிந்தனையின் நன்மைகள்

நேர் சிந்தனை மகிழ்ச்சியை ஏற்படுத்துவதால் எமது ஆயுள் அதிகரிக்கும். மன அழுத்தத்தை வெகுவாகக் குறைக்கும். உடல் உள ஆரோக்கியம் மேம்படும். நோய் அபாயங்கள் குறையும். மனதின் அநாவசியத் துயரம் குறையும். ஒத்திசைவான உறவுகளை மேம்படுத்தும். வெற்றிக்கான வழியைத் தேடிக்கொடுக்கும். மற்றும் நம்பிக்கையான அணுகுமுறைகள் அனைத் தும் பிரச்சினைகளை வாய்ப்புக்களாக மாற்றும். இத னால் நல்ல விடயங்கள் மாத்திரமே நம்மைச் சேரும்.



வரலாற்றில் இடம்பிடித்த எடிசன் போன்றவர்களின் சாதனைகள் எப்படிச் சாத்தியமானவை? தோல்விகளை ஆராய்ந்து நேர் எண்ணங்களை வளர்ப்பதனாலேயே அவை சாத்தியமாயின.

மேலே குறிப்பிட்ட தோமஸ் அல்வா எடிசன், மின்குமிழைக்கண்டு பிடிப்பதற்கான முயற்சியில் 10 000க்கும் மேற்பட்ட தடவைகள் தோற்ற பின்பே வெற்றிகண்டார். இதனை ஒரு பத்திரிகையாளர் எடிசனிடம், 'நீங்கள் இந்த முயற்சியில் பல முறை தோற்றிருக்கிறீர் கள். அப்பொழுது நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்? என்று கேட்டார். அதற்கு எடிசன் 'யார் சொன்னது நான் தோற்றேனென்று. 10 000 தடவைகளுக்கு மேல் எப்படியெல்லாம் மின்குமிழ் ஒளிராது என்பதைக் கண்டுபிடித்துள்ளேன். அதுவும் எனது கண்டுபிடிப்புக்களே' என்றார்.

இவை தான் உங்களுக்கு நான் கூறும் நேர்சிந்தனைக்கான ஓர் இலகுவான எடுத்துக்காட்டு.

நேர்சிந்தனை உங்கள் வாழ்வையே மாற்றி அமைத்துவிடும். எது நடக்கக் கூடாது என்று நினைக்கின்றீர்களோ அதைப்பற்றிச் சிந்திக்காதீர்கள். அதைப் பற்றிப் பேசவும் முயற்சிக்காதீர்கள். என்றும் வாழ்க்கை உங்கள் வசமே.



> நாம் கதைக்கும் பொழுது எப்பொழுதும் சாதகமான வார்த்தைகளையே பயன்படுத்த வேண்டும். இயன்ற வரை இதனைச் செய்வதன் மூலமாக எமது மனதில் உதிக்கும் சிந்தனைகளை நேர் சிந்தனைகளாக மாற்றமுடியும். வலிமையையும் வெற்றியையும் கொடுக்கக் கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்துவது எப்பொழுதும் எமது நேர் சிந்தனையைத் தூண்டும். எமக்குள் உள்ள எதிர்மறை உணர்வுகளை அடையாளம் கண்டு அவற்றை மனதிலிருந்து வெளியேற்றுவதும் இதற்கே வித்திடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி-தண்டங்களில் கண் வைக்கும் அரசு

ஸுடோ ஸ்வாமி



2007ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட நுளம்பு பெருகுவதைத் தடுப்பதற்கான சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்கு யோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கான அமைச்சரவை அனுமதியும் அண்மையில் கிடைக்கப்பெற்றிருக்கிறது. நுளம்புப் பெருக்கம் சம்பந்தமான சோதனைகளின் போது குறிப்பிட்ட இடம்-வளாகம் ஒன்றைச் சோதனை செய்வதாயின் அதற்குள் உள்நுழைவதற்கு நடைமுறைச் சட்டத்தின்படி அந்த இடம்-வளாகத்தினுடைய உரிமையாளரின் அனுமதி பெறப்பட வேண்டும். எனினும் புதிய திருத்தத்தில் அத்தகைய அனுமதி எதுவுமின்றி பரிசோதகர்கள் வளாகத்தினுள் நுழையத்தக்க வகையில் சட்டம் திருத்தப்படவுள்ளது. இதைவிட இதுவரை தண்டப்பணமாக அறவிடப்பட்டு வந்த 5 ஆயிரம் ரூபாவினை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கும், அதிலும் வர்த்தக நிறு வனங்களுக்கு வதிவிடங்களிலும் பார்க்க அதிகளவு தண்டம் அறவிடவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இது தொடர்பான அறிவிப் பைச் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன வெளியிட்டிருக்கிறார்.



### தண்டம் அதிகரிப்பின் பின்னணி

அண்மைக்காலமாகத் தண்டனைக் கட்டண அதிகரிப்புகள் மீது தனிக்கவனம் செலுத்தி வருகிறது அரசு. சட்டங்களைப் பிரயோகிப்பதன் மூலம் தொட்டதற்கெல்லாம் தண்டம் அல்லது அதிகரித்த தண்டம் என்கிற போக்கு மெல்ல மெல்ல வேரூன்றி வருகின்றது. இந்த இறுக்கமான போக்கு, இலங்கையில் குற்றச்செயல்கள் பெருகிவருகின்றன என்கிற பிம்பத்தையும் உருவாக்கியிருக்கின்றது.

மேற்படிக் கருத்தை உறுதி செய்வதுபோல மற்றொரு செய்தியும் பதிவாகியிருக்கிறது. நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தலைவர் ஹசித்த திலகரத்ன தகவல் தருகையில் தண்டப்பணம் அறவிடுதல் மூலமாக நுகர்வோர் விவகார அதிகாரசபை 90.2 மில்லியன் ரூபாவைச் சம்பாதித்திருப்பதாக வெளிப்படுத்தியிருக்கிறார். குறித்த அதிகாரசபையினர் மேற்கொண்ட 21ஆயிரத்து 819க்கும் மேற்பட்ட அதிரடிச் சோதனைகளில் விதிக்கப்பட்ட தண்டங்கள் வழியாகவே மேற்படி தொகை எய்தப்பட்டதாகப் பெருமிதம் அடைந்திருக்கிறார் அவர். 2015ஆம் ஆண்டில் இவ்வாறான தண்டங்கள் வழியாக 67.9 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டபோதிலும் 2016 இல் இந்தத்தொகை 22.3மில்லியன் ரூபாவினால் அதிகரித்திருக்கிறது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் போக்குவரத்து தொடர்பான குற்றங்களுக்கு அறிவிக்கப்பட்ட அதிகரித்த தண்டப்பணம், பெரும் சர்ச்சையை எதிர்கொண்டிருந்தது. போக்குவரத்து தொடர்பான பின்வரும் ஏழு குற்றங்களுக்கு ஆகக்குறைந்த தண்டத் தொகையாக 25 ஆயிரம் ரூபாவை விதிக்க நிதியமைச்சு ஏற்பாடு செய்திருந்தது. மது போதையில் சாரத்தியம், செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரமின்றிய சாரத்தியம், செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமற்ற ஒருவரை வாகனம் ஓட்டுவதற்கு அனுமதிப்பது, அதீத வேகம், வலது பக்கத்தினால் முந்திச்செல்லுதல், புகையிரதக் கடவையை முறையற்ற விதத்தில் கடத்தல் மற்றும் காப்புறுதிப் பத்திரம் இன்றிய சாரத்தியம் என்பனவே தண்டக்கட்டண அதிகரிப்புக்கு நிதியமைச்சால் இலக்கு வைக்கப்பட்டிருந்தவை.

### வருவாய்தரும் புதிய தண்டங்கள்

கடந்த நவம்பரில் கொண்டுவரப்பட்ட 2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவுகள் சில வரி அதிகரிப்புக்களையும் மேலதிகமாகப் புதிய வரிகள் அறிமுகத்தையும் கொண்டிருந்தன.

குறித்த பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம், எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து 10 வீத மூலதன ஆதாய வரி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. சகல கார்பன் எரிபொருளில் இயங்கும் மோட்டார் வாகனங்களுக்கும் 'கார்பன் வரி'நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டி ருக்கிறது. இணையச் சேவைக்கான தொலைத்தொடர்பாடல் தீர்வையை 25 வீதத்துக்கு உயர்த்துவதற்கும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான தீர்வையாக, வருடாந்தம் 12 மில்லியனுக்கும் குறைவான வருமானத்தைப் பெறும் வணிக நிறுவனங்களிலிருந்து 0.5 வீதத்தை மேலதிகமாக அறவிடவும் முன்மொழியப்பட்டிருந்தது. 'எவ்.ரி.எல்.' எனப்படும் நிதிப் பரிவர்த்தனைத் தீர்வை' எனும் புதிய வரியைச் சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பாகக் காண்பித்து, வங்கி மற்றும் நிதிநிறுவனங்கள் மூலமான கொடுக்கல்வாங்கல் மற்றும் 'ஈஸி காஷ்' பரிமாற்றங்களின்போது ஒவ்வொரு 10 ஆயிரம் ரூபாவுக்கும் 5ரூபா அறவிடவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தண்டனைக் கட்டணங்களை அதிகரிப்பது குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்குரிய ஒரு வழிமுறையாக காண்பிக்கப்படுகின்றபோதிலும், அது 'வந்தபின் காப்பு' நடவடிக்கைக்கு உரியதாகவே இருக்கிறது. குற்றச்செயல்களுக்கான தண்டப்பணத்தை வருவாய்க்குரிய மார்க்கமாகக் கண்டுகொண்டுள்ள அரசு, குறித்த குற்றச்செயல்களை 'வருமுன் காப்பு' நடவடிக்கைகளை முடுக்கி விடுவதன் மூலம் கட்டுப்படுத்த ஆர்வம் காண்பிக்கவில்லை என்கின்றனர் ஒருதரப்பினர். தண்டனைக் கட்டண அதிகரிப்பில் அரசு காண்பிக்கும் தீவிரத்தையும் வருடாந்தம் தண்டனை கட்டணங்களின் மூலம் அரசு ஈட்டும் அதிகரித்த வருவாயையும் இதற்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள் அவர்கள். இந்தப் பின்னணியில் இலங்கையின் நிதி அமைச்சருக்கு விருது வேறு கொடுத்திருக்கிறார்கள்.



### வரி சேர்ப்பில் ரவி கருணாநாயக்கவுக்குப் புகழாரம்!

2016ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தியவர் என்பதற்காக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, லண்டன் நகரிலிருந்து வெளியாகும் 'த பாங்கர்' சஞ்சிகையால் 2016ஆம் ஆண்டுக்குரிய ஆசிய-பசுபிக்கின் சிறந்த நிதியமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அந்தப் பன்னாட்டுச் சஞ்சிகையால் குறித்த மதிப்பளிப்புக்கு அவர் தெரிவாகியது தொடர்பில் நிதியமைச்சு வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், நிதி நிலவரம் தொடர்பான சுட்டிகளில் காண்பிக்கப்பட்ட மாற்றங்கள் பட்டியல் படுத்தப்பட்டிருக்கின்றன.

உள்நாட்டு உற்பத்திக்கும் வரி வருமானத்துக்குமான விகிதம் குறைவான நாடாக இலங்கையைக் காண்பித்திருக்கும். அந்த அறிக்கை, வரி அறவீட்டில், கருணாநாயக்க நிகழ்த்திய சாதனைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. 2014இல் தேசிய உற்பத்தியின் 11.4 வீதமாக இருந்த தேசிய வருவாயை 13.5வீதமாக உயர்த்தியதுடன், வரி வருமானத்தை அதிகரிக்கவும் காரணகர்த்தாவாக இருந்தவர் அவர் என்கிறது அந்த அறிக்கை. வரி தொடர்பான மக்களின் மனநிலையை மாற்றியமைத்ததுடன், 2015 ஜனவரியில் 7இலட்சம் கோவைகளாக இருந்த வரி தொடர்பான கோப்புக்களை 14இலட்சமாக அதிகரித்த பெருமையும் ரவி கருணாநாயக்கவுக்கே உரியதாம்.

அரசுக்கு மக்கள் வரி செலுத்தக் [illegible]டமைப் பட்டவர்கள் என்பது உண்[illegible]தான். அதுபோல தண்டனைக் கட்ட[illegible]களின் அதிகரிப்பு, குற்றச்செயலுக்[illegible] சாத்தியத்தை குறைக்குமேயானாலு[illegible] தண்டனைப் பணத்தைத் தவறான [illegible]களில் தேட[illegible] [illegible]வடிய நச்[illegible]டத்தை [illegible]றைக்கிடவும் ஏதுவா[illegible]க்கிறது. வரிகள் தவிர்க்க முடியாதவை[illegible]யால் மக்கள், தண்டங்கள் தொடர்பா[illegible]ண்டங்களிலிருந்து விலகியிருப்பதே[illegible]தக்குப் புத்திசாலித்[illegible]மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஈழத்தில் எதற்கு ஜல்லிக்கட்டு கோசம்?

யதார்த்தன்

என்னுடைய சமூகம் இன்னொரு சமூகத்தின் பலம் மிக்க குழுவொன்றால் அடக்கப்படுகின்றது, சுரண்டப்படுகின்றது. இங்கே என்னுடைய சமூகம் பிறிதொரு இனக்குழுவாலோ முதாளித்துவ அலகுகளாலோ , அடக்கப்படவோ சுரண்டப்படவோ இல்லையெனில் என்னுடைய இனம் , மொழி , பண்பாடு போன்றசிக்கலான தன்மைகளுக்குள் போய் அடையாளங்களை கண்டுபிடிப்பதில் எனது நேரத்தை நான் செலவழிக்க மாட்டேன். இந்த நாட்டில் பிறிதொருவனின் சுதந்திரத்தில் தலையிடாத பட்சத்தில் எல்லோரிடமும் அன்புள்ள ஒரு வாழ்வு முறை இருக்குமாயின் எனக்கு மரபோ அடையாளமோ அவசியமற்றது.

ஆனால் ஈழத்தைப் பொறுத்தவரையில் பேரினவாதம் வரலாற்றையும் , மரபினையும் , மொழியையும் எங்களுடைய சமூகத்துக்கு எதிராக முன் வைக்கின்றது. அது, இந்த நிலத்தின் வாழ்வியலுக் குரித்துடையவர்கள் நாமல்ல என்கின்றது. எங்களுக்கு நிலத்திலிருந்து எழும் அடையாளம் ஒன்று இல்லையென்கிறது. அது, போரினை ஏவி , வன்முறையை நிகழ்த்தி மனித உயிர்களை மட்டுமல்ல மரபடையாளங்களையும் அழித்துச் சென்றது , எஞ்சியதை வேறுவடிவங்களில் அழிக்கவும் முயன்றுகொண்டிருக்கின்றது. எனவே அது அழிப்பவற்றை, அழிக்க முயல்பவற்றை நான் காப்பாற்ற நினைக்கிறேன். அதற்கான ஓர் எதிர்ப்பு வடிவமாக அறிவுத்தளத்தில் உருவாகிவரும் மரபுரிமை , மொழிநிலை மீதன்மை என்பவற்றை முன்வைக்க நினைக்கிறேன்.

குறிப்பாக 'வந்தேறுகுடிகள்' என்று தமிழ் பேசும் சமூகத்தை அடக்குமுறையாளர்கள் சொல்லும்போது இந்த நிலத்தில் எனக்கொரு வரலாற்று வாழ்வு இருந்ததற்கான ஆதாரங்களை அறிவியல் பூர்வமாகத் தேடித் திரட்டுவதற்கும், முன்வைப்பதற்கும் என்னுடைய மக்களைப் பழக்கும் வேலையை நான் செய்ய வேண்டும். அது வெறும் கூச்சல்களால் அல்ல, எப்படிச் சிங்களப் பேரினவாத அரசு பாடநூல் ஊடாகவும், ஊடகங்கள் ஊடாகவும், இலக்கியம், சினிமா போன்றவற்றின் ஊடாகவும் அவற்றை முன் வைக்கின்றதோ அவற்றை அடிப்படை நிலையில் இருந்தே எதிர்க்க அறிவு நிலைப்பட்ட எதிர்ப்பு வடிவமாக மரபு, மொழி போன்றவற்றை நான் கொள்ளநினைக்கிறேன்.

இதுவே மரபுகள் தொடர்பில் இனவுணர்வு, மொழியுணர்வு தொடர்பில் எனது நிலைப்பாடாகும். என்னுடைய இனம்- ஓர் ஆதி இனம் , என்னுடைய மொழி- தூயமொழி , என்னுடைய மரபென்பதே அதி உன்னதமானது என்ற கோசங்களை நான் தமிழ்ச்சமூகத்தின் தாழ்வுச்சிக்கலாக மட்டுமே பார்க்கின்றேன். என்னுடைய சமூகம் அடக்கப்படாவிட்டால், அல்லது சுரண்டப்படாவிட்டால் , நான் நேசிக்கும் எனது மக்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்படாவிட்டால், மகிழ்ச்சியாகப் பாடல்களைப்பாடிக்கொண் டும், சந்தோசமாக கதையெழுதிக்கொண்டும் எனது வாழ்வை நான் அமைத்துக் கொள்வேன். எனக்கு அப்போது மொழி , மரபு , இனம் எதுவும் தேவையில்லை. எந்த மொழிக்காரன், எந்த இனத்தவன், என்னுடன் அன்பாயிருக்கிறானோ அவனுக்குநானும்அன்புகாட்டிவாழ்ந்துவிடுவேன். அப்போது எனக்கு மொழி என்பதும் சரி மரபென்பதும் சரி உணர்ச்சிவசப்படவோ, கோபப்படவோ, எதிர்க்கவோ நான் பயன்படுத்தும் ஒன்றாக இருக்காது. ஏனெனில் அவை எனக்கு வழிபாட்டுக்குரிய புனிதங்கள் இல்லை. அவை எனக்கு கருவிகள் மட்டுமே. அன்பினைப் பகிர்ந்து கொள்ளமட்டுமே அப்போது நான் அவற்றைப் பயன்படுத்துவேன். ஆனால் துரதிர்ஸ்டவசமாக இந்த நிலத்தில் என்னுடைய மரபும் மொழியும் கேள்விக்குள் ளாக்கப்பட்டு, எனது சமூகத்தின் இருப்பும் கேள்விக்குறியாக்கப்படும்போது அடக்குமுறையை எதிர்க்கும் வடிவமாக மொழி, மரபு, இனவுணர்வு போன்றவற்றைக் கையிலெடுத் துக்கொள்ள நான் தள்ளப்பட்டுள்ளேன். ஆனால் அதை நான் ஒரு கோசமாகவோ நடைமுறைக்கு ஒவ்வாத புனிதம், தன்னிகரில்லாதன்மை, வீரம் போன்ற துதித்தல் அல்லது மிகை உணர்வினால் பீறிடும் ஒன்றாகவோ முன்வைக்க மாட்டேன். மாறாக நான் அதை அறிவுத்தளத்தினான எதிர்ப்பு வடிவமாகவே கையாள நினைக்கிறேன். ஏனெனில் கடந்த காலத்தில் விடுதலைப் போராட்டத் தலைமைகள் மொழி உணர்வு, இனவுணர்வைப் போருக்குத் தூண்டும் கோசமாக வைத்து எனது மக்களையும் , கனவுடன் போராடச்சென்ற போராளிகளையும் பலிகொடுத்ததை நான் மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

—தமிழ் நாட்டுச் சகோதரர்களின் ஜல்லிக்கட்டுக்கான எழுச்சியை ஆதரிப்பதற்கான நேரம் இதுவல்ல.

—தமிழ்நாட்டின் பண்பாடு, மரபு என்பதும் ஈழத்துப் பண்பாடும் மரபும் என்பதும் வெவ்வேறானது.

—செய்யப்பட்ட ஆதரவு ஒன்றுகூடல், போராட்டத்தின் அக,புறத்தில் உள்ள அபத்தங்கள் , மற்றும் அதனை ஆரோக்கியமானதொரு எழுச்சியாகக் கருதிச் சில நண்பர்கள் முன்வைத்த வாதங்கள் மீது இருக்கும் எனது எதிர்நிலைக் கருத்துக்கள்.






இதுவே எனது, மரபு – மொழி – இனம் தொடர்பான நிலைப்பாடு.

இதனால் நான் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட ஜல்லிக்கட்டு ஆதரவு ஒன்று சேர்தலை எதிர்க்கின்றேன். ஈழத்தில் நாம் ஏன் ஆதரிக்கக் கூடாது என்பதற்கு நான் கொள்ளும் எதிர்ப்பு நிலைகளைப் பிரதானமாக பின்வரும் இரு வடிவங்களின் கீழ் சொல்ல நினைக்கிறேன்

-தமிழ் நாட்டுச் சகோதரர்களின் ஜல்லிக்கட்டுக்கான எழுச்சியை ஆதரிப்பதற்கான நேரம் இதுவல்ல.

-தமிழ்நாட்டின் பண்பாடு, மரபு என்பதும் ஈழத்துப் பண்பாடும் மரபும் என்பதும் வெவ்வேறானது.

-செய்யப்பட்ட ஆதரவு ஒன்றுகூடல், போராட்டத்தின் அக,புறத்தில் உள்ள அபத்தங்கள் , மற்றும் அதனை ஆரோக்கியமானதொரு எழுச்சியாகக் கருதிச் சில நண்பர்கள் முன்வைத்த வாதங்கள் மீது இருக்கும் எனது எதிர்நிலைக்கருத்துக்கள்.

இவற்றில் முதலும் அடிப்படையானதுமான எனது வாதம் இதுதான். சரியோ, பிழையோ ஈழத் தமிழ்ச் சூழல் என்பது பொருத்தமான தலைமை நிலைகளை இழந்து வேறு வழியில்லாத மொன்னைத் தலைமைகளுடன் சனநாயக இயங்கு பொறிக்குள் இருக்கின்றது. இந்தநிலையில் தமிழ் பேசும் சமூகங்கள் தமது மரபுரிமைகள், வாழ்வுநிலம், பொருளாதாரம் முதலியன சுரண்டப்படும்போதும், அழிக்கப்படும் போதும் எதிர்ப்பதற்கான நேரடியானதோ மறைமுகமானதோ எதிலும் பலம் பொருந்திய கட்டமைப்புகளற்றவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில், அறிவார்ந்த தளத்தில், சொற்ப அளவில், மரபுகளை, அடையாளங்களை மீள் கட்டுமானத்துக்கும், பாதுகாப்புக்கும் விழிப்புணர்வின் பொருட்டும் வேலைகள் நடக்கின்றன. ஆனால் இனவாதச்சூழலைப் பொறுத்தவரை அரச இயந்திரத்தின் பெரும்பான்மை ஆதரவுடன் மாகாவம்சம் ஆரம்பித்து வைத்த ஈழத்தமிழர்களைத் தீவிலிருந்து அகற்றுவதற்குப்பெரும்பான்மை சிங்கள சமூகத்தை ஆற்றுப்படுத்தும் 'வந்தேறுகுடிகள்' என்ற கோசத்தை இனவாதிகள் தற்பொழுது அறிவார்ந்த தளத்திலும் சரி அரசியல் கோசத்தளத்திலும் சரி நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு முன்வைக்கின்றனர்.

அவர்களின் பிரதான வாதங்களில் ஒன்று நாம் இந்திய மரபின் தொடர்ச்சிகள் என்பதாகும். எனவே இந்தப் பரப்புரையை, அடக்குமுறைய எதிர்கொள்ள நாம் இதனை அறிவியல் பூர்வமாக வரலாற்று மரபின் ஆவணமாக்கல் மற்றும் அறிவு மீள் நிரப்புதல் மூலம் நிரூபிக்கவேண்டியிருக்கிறோம்.

ஆனால் அப்படியான முன் வைப்புக்களும் கண்டறிவுகளும், அறிவார்ந்த தளங்களில், அடக்குமுறை இடைவெளிக்குள் புகுந்து அடையாளங்களை மீளக் கட்டியெழுப்பும் கருத்து செயல்கள் மெல்ல மெல்ல நடக்கும் போது, சடுதியாகக் குறிப்பிட்ட நூறு பேர் வீதிக்கு இறங்கி 'தமிழேண்டா' , 'Wedo Jallikattu' என்றால், சிங்கள இனவாதிகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாத ஊடகங்களும், மொழி என்ற பெருஞ்சுவற்றால் பிரிக்கப்படும் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்துக்குக் குறிப்பிட்ட மேற்படி நூறுபேரினதும் கோசத்தையும் ஒன்று கூடலையும் சுட்டிக்காட்டி 'இப்போது புரிகிறதா அவர்கள் தமிழ் நாட்டுக்காரர்கள் தான்' (வந்தேறு குடிகள்) என்று பரப்புரையைத் தொடங்கிவிடுவார்கள் . எனவே நான் வைக்கும் வாதம் தமிழ்நாட்டுச் சகோதரர்களுக்குத் தோள் கொடுக்குமளவுக்குத் தற்பொழுது நமது தோள்களில் இடைவெளியில்லை என்பதாகும்.




முதலில் நாம் எப்படி இந்தக் கவன ஈர்ப்பின்பால் ஈர்க்கப்பட்டோம் என்று பார்ப்போம். எல்லோருக்கும் தெரிந்ததைப்போல சினிமாவிலும், எப்போதாவது செய்திகளிலும் கேள்விப்பட்ட ஜல்லிக்கட்டுப் பிரச்சினை தமிழ்நாட்டுப் போரட்டக்காரர்களாலும் , நட்சத்திரப் பிரபலங்களாலும் , இணையவாசிகளாலும் பெருமெடுப்பில் அலசப்பட, அது ஒரு போராட்ட வடிவமாக மாறியது. எப்படியெல்லாம் சினிமா நடிகரின் திருவுருவப் படத்துக்குப் பால் ஊற்றும் பண்பாடு எமக்குள் வந்து சேர்ந்ததோ அதே வழியில் நாம் அருட்டப்பட்டோம்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் முன் வைத்த 'தூய இனம்', 'தமிழேண்டா' கோசங்கள் எங்களை அருட்டின. ஆனால் நாம் அந்த அருட்டுணர்வைக் கொஞ்சமாவது சிந்தனைத்தளத்தில் அணுகினோமா? என்றால் , இல்லவேயில்லை.

உண்மையில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட இந்த எழுச்சி என்பது , ஜல்லிக்கட்டினால் மட்டும் தோன்றிய எழுச்சியல்ல! அது வெறுமனே 'பீற்றா' போன்ற அமைப்புக்களை எதிர்க்க மட்டும் சடுதியாய்க் கிளம்பியதல்ல. உண்மையில் இத்தனை வருடகாலமாக தமிழ்நாட்டு அரசியலும் சரி, இந்திய தேசிய அரசியலும் சரி ஏற்படுத்திய மோசமான அரசியல் பொருளாதார சமூக ஏமாற்றுதல்கள், சுரண்டல்கள், புறக்கணிப்புக்கள் என்று சனநாயக விரோதச்செயல்கள் அனைத்தின் மீதான மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கூட்டு நனைவிலியில் திரண்டிருந்த பெரும் கோபத்தின் ஒரு சிறு பொறியே ஜல்லிக்கட்டுப் பிரச்சினை. அந்த மனநிலை வெறும் ஜல்லிகட்டாலோ, சமூக வலைத்தளங்கலாலோ மட்டும் காட்டப்படுவதல்ல. அது இதுவரை காலமும் அங்கு எழுத்தாகவும், சினிமாவாகவும், ஏனைய கலை வடிவங்கள் ஊடாகவும், எல்லாவற்றுக்கும் மேலாக நேரடியான சமூக அனுபவங்களின் கூட்டு நனவிலியின் ஊடாகவும் காட்டப்பட்டதாயிருக்கின்றது.

ஆனால் எந்த அடிப்படையிலும் தமிழ் நாட்டு மனநிலையையோ , ஜல்லிக்கட்டைப்பற்றியோ தெரியாமல் நாங்கள், ஆதரவு கூடல் என்று தொடங்கியதற்கு 90வீதமானவர்களின் காரணம் சுயவெளிப்படுத்தல். பச்சையாகச்சொன்னால், வலைத்தள ரெண்டிங்கில் இணைந்து கொண்டு 'ரோ' காட்டுதல் என்று பொருள்படும். அத்தோடு இந்தப் பிரச்சினைக்குக் குரல் கொடுப்பதால், கோசம் போடுவதால் இலங்கைப் பொலிஸோ, இராணுவமோ எங்களைச் சட்டைகூடச் செய்யாது என்பதால், பாதுகாப்புக்குள் நின்று, வழமையாக ஏதும் பிரச்சினை என்றால் கடை, தெருவெல்லாம் பூட்டிவிட்டு வீட்டில் நின்று கொண்டு ஹர்த்தால் அனுஷ்டிப்பதைப் போல மிகப்பாதுகாப்பாக மேற்கொள்ள கூடிய எதிர்ப்புக்கோசக்கூட்டம் என்பதாலும், செல்பி எடுத்துப் பதிவேற்றலாம் என்பதாலும் நாமெல்லாம் ஒன்று கூடினோம். எப்படி இந்தப் போராட்டத்தில் 'ரோ' காட்டும் மனித இயல்புக்குட்பட்ட உளவியலுடன் போய் நின்றோமோ, அதேபோல் மரபுரிமை சார்ந்து இயங்குபவர்கள், நல்லிணக்கம், விடுதலை பற்றி கதைக்கும் அறிவார்ந்த தளத்தில் சிந்திக்கும் எனது உற்ற நண்பர்களும் இந்த ஒன்று கூடலுக்குப் புறப்பட்டுச்சென்றார்கள். அவர்களிடம் இதுபற்றிக் கேட்ட போது ,

'இது ஒரு கவனவீர்ப்பு ஒன்றுகூடல் மட்டுமே' 'பொதுவெளிக்கு மக்களை இப்படியான போராட்டங்களுக்கு அழைத்துவரவும் அவர்களை மரபுரிமை போன்ற விடயங்கள் பற்றி உரையாடவும் வைக்க, எதிர்காலத்துக்கான ஒரு தொடக்கப்புள்ளியாக இதனைக் கையாளலாம்' என்றும் இரண்டு கருத்து நிலைகளை அவர்கள் முன் வைத்தார்கள். உண்மையில் இதுதான் நிலைமை என்பதை அவர்கள். எனக்குச் சொன்னார்கள். வேறு வழியில்லை இப்படியான மனநிலையில்தான் இளைஞர்கள் இருப்பார்கள் அவர்களை கொண்டே அடுத்தகட்டத்துக்கு நகரலாம் என்பது அவர்களுடைய வாதம்.

ஆனால் அவர்கள் முதலில் கூறிய 'கவனவீர்ப்பு ஒன்று கூடல்' என்பதிலும்சரி பின்னர் கூறிய தொடக்கப்புள்ளி என்பதிலும் சரி நிறைய முரண்களைக்காணக் கூடியதாகவிருந்தது.

முதலாது– அவர்கள் கவனவீர்ப்பு ஒன்று கூடலுக்கு அழைத்த போஸ்ரர்களில் அந்த முரண்பாடுகள் தொடங்கின.

அந்த ஒன்றுகூடலில் முதலில் வெளியிடப்பட்ட போஸ்ரறில் இருந்த 'தமிழேண்டா' என்ற வாசகம், வழமையாக வீற்றர் கணக்கில் பாலாபிசேகம் வாங்கும் விஜயின் போஸ்ரர்களில் இருப்பதுபோல் தோன்றியது. அந்தப் போஸ்ரலில் இருந்த ஒரே ஆறுதல் "நாங்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு' என்பது மட்டுமே. சரி ஆதரவுதானே சொல்லப்போகின்றார்கள் என்று பார்த்தால் அந்தப் போஸ்ரரைப் பகிர்ந்த பெரும்பாலானவர்களின் இடுகைகளில் 'எங்களுடைய மரபு அழிக்கப்படுவதற்கு எதிராகப் போராடுவோம்', 'தமிழர் மரபு அழிக்கப்படுவதற்கு எதிராகப் போராடுவோம்' என்பதோடு வழமையான தூய இனம், புனிதஇனம் போன்ற கோசங்களும் இருந்தன. ஜல்லிக்கட்டு, ஒட்டுமொத்தத் தமிழ்ச்சமூகத்துக்கும் எப்போது மரபானது என்பது தெரியவில்லை. மலையகத்தமிழர்கள், யாழ்ப்பாணத்தமிழர் கள், புலம்பெயர் தமிழர்கள் என்று அனைவருக்கும் ஜல்லிக்கட்டு மரபா? என்று வியந்து போனேன். அதற்கிடையில் அடுத்த போஸ்ரறில் 'We do Jallikattu' என்று போட்டிருந்தார்கள். விசாரித்த போது அது ரெண்டிங்கில் ஆதரவு இணைப்பதற்கான 'Keylink' என்றார் கள்! சரி, போஸ்ரறில்என்ன'Keylink?'. அப்போதே எனக்குக் குழப்பம் தொடங்கி விட்டது. அதற்குப்பிறகு நல்லூரின் முன் வாசலில் எங்களுடைய இளைஞர்களின் பிடித்திருந்த வாக்கியங்களும் பேட்டிகளும் என்னை மூர்ச்சிரையாக்கி விடுமோ? என்று பயந்து விட்டேன். அசல் அலங்கா நல்லூர் பிரசைகளாகவே மாறி விட்டிருந்த அவர்களைப் பார்த்தேன். இதைக்கூட ஒரு கும்பல் மன நிலை என்று கடந்து விடலாம். ஆனால் அவர்கள் வைக்கும் அடுத்த வாதத்தில் எனக்கு உடன்பாடு அறவே கிடையாது.

**'மரபு குறித்தும் பண்பாடு குறித்தும் பெருமிதம் கொள்வது மட்டும்தான் எழுச்சியல்ல அதன் சீர் கேடுகுறித்துக் குற்ற வு ணர்ச்சி கொள்வதும் எழுச்சியாகும்'– டி.தர்மராஜ்**

அதாவது பொது எதிர்ப்பு ஒன்றுக்குப் பொது எதிரியொன்றை முன்வைத்து இப்படி இளைஞர்களைத் திரட்ட முடியாது. இப்படியான இடத்தில் நின்றுதான் அப்படியான இளைஞர் களைத்திரட்ட இயலும். சாதி, மதம் போன்ற முரண்பாடுகளில் இருந்து மக்களை மீட்டுக் கொண்டு வந்து ஒரு பொது எதிரிக்கு முன் நிறுத்த இப்படியான போராட்டங்கள் வேண்டும் என்றனர் அவர்கள்.

அப்படிப்பார்த்தால் கடந்த காலத்தில் 'புலி' மனநிலையை ஏன் எதிர்த்தோம் ? புலிகளுக்கும் சரி புலி மனநிலையை எதிர்ப்பவர்களுக்கும் சரி அரசுதானே பொது எதிரி. அப்படியெனில் அதிகபட்ச மக்கள் ஆதரவைக்கொண்ட புலிமனநிலையை ஆதரித்தால், மக்கள் கூடிவிடுமல்லவா? புலிகளும் தூயஇனம், ஆதிமொழி போன்ற கொள்கைகளைப் பரப்புரை செய்துதானே என்னுடைய மக்களின் உணர்வைத்தூண்டி , அவர்களைப் போர் வெறிக்குப் பலிகொடுத்து முடித்தார்கள்.

சாதிய அடக்கு முறையில் அடக்குபவன் - அடக்கப்படுபவன் , சமய அடக்கு முறையில் அடக்குபவன் - அடக்கப்படுபவன் , வர்க்க அடக்குமுறையில் அடக்குபவன் - அடக்கப்படுபவன் போன்ற சமூக பிறழ்வுகள் எதையும் தீர்க்காமல் இந்தச் சமூகத்தைப் பொது எதிரியின் முன்னால் நிறுத்த ஒரே தளத்துக்குக் கொண்டுவரலாம் என்றால், புலிகள் என்ன செய்திருந்தால் என்ன? யாரை அடக்கினால் என்ன? அந்த மனநிலையைக்கொண்டு பொது எதிரிக்கு முன்னால் மக்களை அணி திரட்டலாமே ? ஏன்புலிமனநிலையை எதிர்க்கவேண்டும்? சரி அதை விடுவோம். வெறும் சமூக வலைத்தள ரெண்டிங் அருட்டுணர்வால், அல்லது தமிழ் உணர்வு என்ற பெயரில் கோசமாக மட்டும் வளர்ந்து நிற்கும் உணர்ச்சிக் கூச்சலின் பொருட்டு உணர்ச்சிவசப்பட்டு ஜல்லிக்கட்டு ஆதரவு ஒன்று கூடலுக்கு வரும் இந்த இளைஞர் கூட்டத்தில் 500இல் நூறு பேரையாவது அடுத்த ஈழத்துச் சமூகம் சார்ந்த போராட்டம், அல்லது கவனவீர்ப்பு ஒன்றுக்குக் கொண்டு வரமுடியும் என்று நினைக்கின்றீர்களா ? சரி கொண்டு வந்து விட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம், அந்த நூறு பேரையும் கொண்டு யாழ்ப்பாணத்தில் சாதி ஒழிப்புப் போராட்டமொன்றை ஒழுங்கு செய்கின்றீர்கள் என்று வைத்துக்கொள்வோம். பொலிஸ், இராணுவப் பயம் கூடத்தேவையில்லை. எந்த அச்சுறுத்தல்களும் இல்லை. எங்கே சாதி எதிர்ப்புப் போராட்டத்துக்கு அவர்களை அணி திரட்டுங்கள் பார்க்கலாம்? அதில் குறைந்தது 20 பேராவது கலப்புத் திருமணம் ஒன்றுக்குத் தயாராக இருப்பார்களா?

நமது சமூகத்தில் கண்ணுக்கு முன்னால் இருக்கும் உப பிரச்சினைகளையும் பிரதான பிரச்சினைகளையும் நோக்கி இளைஞர்களை முன் நகர்த்தக் காலம் இருக்கின்றது. ஆறுவருடங்கள் தான் ஆகின்றது வன்முறையில் இருந்து மக்கள் மீண்டு வந்து. நாம் உருக்குலைந்துபோன சிந்தனைத்தளத்தை இன்னமும் கட்டமைக்கவில்லை. பாடசாலைகள் சீராக இல்லை. பல்கலைக்கழகங்கள் சீராக இல்லை. பொருளாதாரம்சமநிலையில்லை. சிந்தனையும் செயலும் ஒருங்கே நடக்கும் அறிவு நிலைச் சமுதாயம் இன்னும் ஒரு கனவாகவே தொடர்ந்தும் இருக்கின்றது. அது பாடசாலை மட்டம் தொடங்கி அறிவின் செயற்பாட்டின் வழியே கொடுக்கப்படும் போது, எப்படியும் ஒரு கட்டத்தில் சமூகத்தின் மீது நிகழும் அபத்தத்தின் கொதி நிலையின் கொள்ளவு இறுக்கம் வெடித்துப் பீறிடும். அப்போது அறிவின் தளத்தில் இயங்கும் இளைஞர்கள் அதனைத் தாங்குவார்கள். அதனைத்தாங்கத்தக்க தோள்கள் அப்போதுதான் அவர்களுக்கு இருக்கும். நாம் இப்போது செய்ய வேண்டியது அந்த பெருவெடிப்பை தாங்கத்தக்க இளைஞர் சமுதாயத்தை உருவாக்கத்தேவையான வேலைகளை ஆகும்.

இவ்வாறு வலைத்தள ரெண்டிங்வழியாகச் சமூகப் போராட்டத்துக்கு வருதல் என்பது கூட அறிவின் வழியே நிகழ்ந்திருக்க வேண்டும். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அறிவு என்பது அவர்களின் நிலம் சார்ந்த, அரசியல் சார்ந்த கடந்தகால நொதிப்பின் பீறிடுகை தான். அதுவே அங்கே நிகழ்ந்தது. அது நிகழப் பலவருடங்களும் பல அறிவார்ந்த செயல்களின் கூட்டு உழைப்புக்களும்ஏற்படுத்திய ஒரு மகத்தான வெடிப்பின் பீறிடுகைதான் ஜல்லிக்கட்டு எழுச்சி.

அவர்களுக்குச் சமூக வலைத்தளங்கள், சமூக அழுத்தம் போன்றன காலத்துக்குச் சரியாகக் கிடைத்த கருவிகள். ஆனால் அந்த நிலத்தினைப்பற்றிய எந்த அழுத்தமோ, அறிவோ , அனுபவமோ இன்றிய அடிப்படைவாதங்களைக் கொண்ட கோசங்களால் அருட்டப்பட்டும் அந்தத் தேசத்தின் பேஸ்புக் ரெண்டில் அருட்டப் பட்டும் ஈழத்தில் கூட்டமாகத் தெருக்களில் இறங்கிப்போராட்டம் என்று கூச்சலிடுவது என்பது மிகப்போலியானது. இவர்கள், ஒருவனின் அல்லது ஒரு உணர்வின் கீழ் ஒன்றிணைந்து விட்டனர் என்பது என்பது மகத்தான செயலொன்றுமில்லை. அறிவுத்தளத்தில் இது நடக்காவிட்டால் இந்த இளைஞர் கூட்டத்தின் திரளும் கணம் என்பது நீத்துப்போகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ர பிள்ளைய என்னட்டத் தாங்கோ...?

## ஒரு தாயின் கண்ணீர்



அருள்மதி

காற்றுக்கும் மழைக்கும் பனிக்குளிருக்கும் வாகனநெரிசல்களுக்கும் மத்தியில் அமர்ந்திருந்து அகிம்சை புரிகிறார்கள் இவர்கள். ஒருவேளை இவர்கள், "எங்களை எங்களுடைய பாரம்பரியக் களியாட்டங்களை நடத்த விடுங்கள்" என்றுகூறிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால், இளைஞர்கள், போராட்ட அமைப்புக்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பல்லாயிரக்கணக்கில் ஒன்றுகூடியிருப்பார்கள் இவ்விடத்தில். மாறாக, இவர்கள் காணாமலாக்கப்பட்டு விட்ட தமது உறவுகளை மீட்டுத் தாருங்கள் என்று கூறிப் போராட்டத்தில் ஈடுபடுவதாலோ என்னவோ அந்தக் கொட்டகை, போராட்டக்காரர்களான அந்தப் பதினாறு பேர்களாலும் அவர்களுடைய கண்ணீராலுமே நிறைந்திருந்தது.

**ஜனாதிபதியுடன் மகள்**

"கடைசிச் சண்டையில் அகப்பட்ட என்ர மகள் 2009ஆம் ஆண்டு மூண்டாம் மாசம் காணாமல் போயிருந்தாள். அவளுக்கு என்ன நடந்துதோ? ஏது நடந்துதோ? எண்டு தெரியாமல் அந்தரிச்சுத் திரிஞ் சன். 2010இல்தான் எங்களை முகாமில இருந்து விடுவிச்சாங்கள். அதுக்குப் பிறகு என்ர பிள்ளையத் தேடியலையாத இடமே இல்லை. தேடித் தேடிக் களைச்சுப் போனது தான் மிச்சம், பிள்ளைகிடைக்கவேயில்லை. ஆனாலும் என்ர பிள்ளையத் தேடிக்கண்டுபிடிச்சிடுவன் என்ற நம்பிக்கையில தொடர்ந்தும் தேடிக் கொண்டேயிருந்தன். ஐந்து வருசங்களுக்குப்பிறகு 2015இல் கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நோட் டீசில என்ர மகள் பள்ளிக்கூட உடுப்போட நிற்கிறதைப் பார்த்தன். அப்ப என்ர மகள் உயிரோட தான் இருக்கிறாள்..."

தனது மகளைக் கண்டுவிட்ட ஆனந்தக் கண்ணீரோ? அவள் உயிரோடு எங்கே? எப்படி? யாருடன் இருக்கிறாள்? எதுவுமறியாததால் அந்தரிக்கும் கண்ணீரோ? காசிப்பிள்ளை ஜெயவனிதாவான அந்தத் தாயின் கண்களில் தன்னிச்சையாகவே கண்ணீர் நிரம்பி வழிகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை முன்னணியாகக் கொண்டுபாடசாலைச்சீருடையணிந்துள்ள மாணவர்கள் சிலரைப் பின்னணியாகச் சித்திரிக்கும் சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் பலவும் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அதில் இறுதிப்போரின்போது காணாமலாக்கப்பட்ட இந்தத் தாயின் மகள் பாடசாலைச்சீருடையுடன் காணப்படுகி றாள். இதன்காரணமாக இறுதிப்போரின் போது பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகளை மீட்டுத்தரக்கோரி, அவர்களுக்கு என்ன நேர்ந்ததோ என எதுவும் அறியாதவர்களாய் வவுனியாவில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் மத்தியில் தனது பிள்ளை உயிரோடு இருந்தும் கண்டுபிடித்துத் தரவில்லை என்ற ஆதங் கத்துடன் தனது பிள்ளைக்கு அடுத்ததாகத் தனது உயிரையும் துறக்கத் துணிந்து அவர் களுடன் இணைந்து உணவு ஒறுப்புப்போராட்டத்தில் ஈடுபட்டார் இந்தத் தாய்.

**ஜனாதிபதியின் உறுதிமொழி**

"2015ஆம் ஆண்டு ஜனவரி மாசம் ஏழாம் திகதி ஜனாதிபதியின்ர தேர்தல் பரப்புரை நோட்டீசிலதான் என்ர பிள்ளை உயிரோட இருக்கிறாள் எண்டு அறிஞ்சு கொண்டன். அந்த நோட்டீசில அடையாளங் கண்ட என்ர மகளை மீட்டுத்தரக் கோரி, ஜனாதிபதி, மங்கள சமரவீர, மனோகணேசன் என எல்லாரோடையும் கதைச்சன். என்ர மகளைக் கண்டுபிடிச்சு என்னட்டத் திரும்பவும் தரக்கோரி நான் அலைஞ்சு திரியாத இடங்களோ, சந்திக்காத ஆள்களோ எதுவுமே மிச்சமில்லை. அதுக்குப் பிறகு என்னை நாலாம் மாடிக்குக் குற்றப்புலனாய்வுப்பிரிவு கொண்டுபோய் விசாரிச்சுது. ஆனால் யாருமே என்ர மகளை இன்னமும் கண்டு பிடிச்சுத் தரவில்லை. உயிரோட இருக்கிறாள் எண்டு தெரிஞ்சாப் பிறகும் என்ர பிள்ளைய வேணுமெண்டே தரமறுக்கிற இவங்கள், எப்பிடி என்ன நிலைமையெண்டே தெரியாத மற்றைய உறவுகளைக் கண்டு பிடிச்சுத் தரப்போறாங்கள்...?"

இந்தத் தாயின் கேள்வி நியாயமானதே.

பெயரளவில் நிலவும் 'நல்லாட்சி'யின் கொடுங்கோலாட்சியைச் சாதாரண, அடிமட்டத்திலிருக்கும் அந்தத் தாயாலேயே நன்கு புரிந்துகொள்ளமுடிகின்றதே. ஆனாலும் தனக்குத் தனது பிள்ளை வேண்டும் என்ற திடத்துடன் தொடர்ந்தும் போராடுகின்றார் இந்தத்தாய்.

'படிச்சுக் கொண்டிருந்த என்ர பிள்ளை காணாமல் போகேக்க ஓ.எல். எழுதி மூண்டு மாசம். எங்க போனவள்? என்ன நடந்தது? எண்டு தெரியாமலிருந்த என்ர பிள்ளைய இரட்டை வாய்க்காலில வைச்சு இவங்கள் பிடிச்சிருக்கிறாங்கள். அதுக்குப் பிறகு என்ன நடந்துதோ தெரியேல்ல. இப்ப அவள் பள்ளிக்கூட உடுப்போட அதில நிற்கிற படியால அவளை எங்கயோ படிக்க விட்டிருக்கிறாங்கள். என்ர பிள்ளைய நோட்டீசில கண்டாப்பிறகு ஜனாதிபதி நல்லூருக்கு வந்த இடத்தில நான் இதுபற்றி முறையிட்டனான்.

என்ர மகளை என்னட்டத் தரச்சொல்லி மண்டாடிக் கேட்டனான். அந்தப் படத்தில இருக்கிறது என்ர பிள்ளைதான் எண்டு ஏற்றுக் கொண்ட அவர் விசாரணை செய்து விரைவில அவளைக் கண்டு பிடிச்சுத் தாற்றதாக எனக்கு உறுதியளிச்சார்.

ஆனா அதுக்குப்பிறகு என்ர மகளைக் கண்டுபிடிக்க அவர் எதுவுமே செய்யேல்ல. அவரைச் சந்திச்சுக் கதைக்க எத்தினையோ தரம் போயும் அதுவும் நடக்கயில்ல. எனக்கு ஏமாற்றம் தான் மிஞ்சினது. அதுக்குப் பிறகு எனக்கு உடனடியாய் என்ர பிள்ளை வேணும். எண்டு சொல்லிப் போராட்டங்களில ஈடுபட்டு வாறன்.

பிள்ளை கிடைக்கும் வரை போராடுவேன்

'வீட்டில நாங்களும், எங்கயோ ஒரு இடத்தில எங்கட பிள்ளைகளுமாய்த் தினம் தினம் அதுகளின்ர நினைவால உருகிச் சாகிறத விட ஒரேயடியாச் சாகிறது பரவாயில்லை. ஒண்டில எங்கட பிள்ளையள எங்களிட்டத் திருப்பித்தரவேணும் இல்லாட்டி எங்கட உயிர் எங்களை விட்டுப்போகவேணும். பிள்ளையைக் காணாமல் எனக்குப் பசியுமில்லைத் தண்ணி விடாயுமில்ல. என்ர பிள்ளை எனக்குத் திரும்பவும் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போட நான் சாகும் வரைக்கும் போராடுவன்" என்று உறுதிபூண்டிருக்கும் இந்தத் தாய் தனது மகளைப் பார்க்கும் காலத்துக்காகக் காத்திருக்கின்றார்.

என்ர பிள்ளையைத் திருப்பித் தாறாங்களில்லை" வார்த்தைகள் வெளிவர முடியாத அளவுக்குச் சோர்ந்து விட்ட இந்தத் தாய் தனது பிள்ளை யைத் திருப்பித் தரும்படி கேட்டு அண்மையில் வவுனியாவில் அறப் போர் புரிந்திருந்தார். தமிழர்களின் தேவையை எந்தவொரு சிங்கள அரசா லும் பெற்றுக்கொடுக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்த நான் அவரிடமிருந்து விடைபெற்றேன்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தமிழில் வருகிறது 'குங்பூ யோகா'

இந்திய – சீன கூட்டுத் தயாரிப்பான 'குங்பூ யோகா' திரைப்படம் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு பெப்ரவரி 3 ஆம் திகதியன்று வெளியாகிறது. இந்தப் படத்தை தமிழ்நாடு முழுவதும் ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் விநியோகம் செய்கிறது. ஜாக்கிசானுடன் இந்திய நட்சத்திரங்களான சோனு சூட், திஷா படானி, அமைரா தஸ்தூர் ஆகியோர் இந்தப்படத்தில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஜாக்கிசான் நடித்து இதற்கு முன் வெளிவந்த 'போலீஸ் ஸ்டோரி 3, 4, ரம்புள் இன் தி பாக்ஸ், தி மித்' ஆகிய படங்களை இயக்கிய ஸ்டானி டோங் 'குங்பூ யோகா' படத்தை இயக்குகிறார். சீன, ஆங்கில, ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளியாகவுள்ளது.

ஜாக்கிசான் படங்களுக்கென்று கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக தமிழ்நாட்டில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. 'கராத்தே கிட்' படத்திற்குப் பிறகு வெளிவந்த ஜாக்கிசானின் படங்கள் இங்கு பெரிய வெற்றியைப் பெறவில்லை. அந்தக் குறையை 'குங்பூ யோகா' போக்குமா என்பது அடுத்த வாரம் தெரியும் என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சந்தோஷ உணர்வு மனதில் நிலைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில், சிறந்த தரதேர்ச்சி காண்பர்.

**இடபம்:** கடந்தகால உழைப்புக்குரிய நற்பயன் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பைக் கண்டு, மனம் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். வருமானம் திருப்தியளிக்கும்.

**மிதுனம்:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற்பட்டு விலகும். நல்லவர்களின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அ... வான மூலதனம் போதும். பணியாளர்க... பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**சிங்கம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உத... கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமி... மான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் வித... தில் வருமானம் வரும். மாணவர்கள் அ... கறையுடன் படிப்பர்.

**கன்னி:** நிதானத்துடன் செயற்படுவது நல்ல... தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாய... கிடைக்கும். பணியாளர்கள் பணிவிடயம... வெளியூர் செல்வர். உடல்நலனில் அக்கறை கொள்வது நல்லது.

**துலாம்:** அவமதித்தவரும் அன்பு பாராட்டுவ... தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

**விருச்சிகம்:** செயல் நிறைவேற விடாமுயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்பநலனுக்காகப் பாடுபடுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**தனுசு:** சிறிய முயற்சியில் கூட அதிக நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். குடும்பத்துடன் உறவினர் இல்லம் செல்வீர்கள்.

**மகரம்:** நண்பரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானம் திருப்தியளிக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து கல்வி வளர்ச்சி காண்பர்.

**கும்பம்:** குடும்பச் சூழ்நிலை அதிருப்தியளிக்கலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மீனம்:** எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். உறவினர்கள் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் சக ஊழியர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வர்.

ஏண்டா நம்ம ஊருக்குள்ள காளையை அடக்குறாங்க நீ போகலையா?



அட! என் வீட்டுல பொண்டாட்டியயே அடக்க முடியல நான் எங்க காளையை அடக்குறது...!

ஜென் தத்துவம் என்ன சொல்லுதுன்னா...



10 நிமிசத்துக்கு மேல் ஒரு பொண்ணு கைபேசியில பேசிக்கொண்டு இருந்தால் அது கண்டிப்பாக உள்வரும் அழைப்புதான் என்று!




# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 7 | | | 4 | | 1 |
| | | 2 | | | 5 | | | |
| 4 | | 5 | | 8 | 1 | 7 | | |
| | | | | 7 | | | | |
| | | | 3 | | | | | 5 |
| 6 | | | | | | 9 | | |
| | | 3 | | | 2 | | 4 | |
| | | | 5 | | | 3 | | |
| 2 | | | 4 | | 8 | | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 4 | 7 | 3 | 1 | 6 | 9 | 2 |
| 1 | 9 | 7 | 8 | 6 | 2 | 5 | 3 | 4 |
| 2 | 3 | 6 | 9 | 5 | 4 | 1 | 8 | 7 |
| 7 | 4 | 9 | 3 | 1 | 8 | 2 | 6 | 5 |
| 3 | 1 | 5 | 6 | 2 | 7 | 9 | 4 | 8 |
| 6 | 8 | 2 | 5 | 4 | 9 | 7 | 1 | 3 |
| 4 | 7 | 8 | 2 | 9 | 6 | 3 | 5 | 1 |
| 9 | 2 | 3 | 1 | 8 | 5 | 4 | 7 | 6 |
| 5 | 6 | 1 | 4 | 7 | 3 | 8 | 2 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ் வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

காற்றின் நண்பன்

துரோகியாக இருந்து துரோகம் செய்வதைவிட நண்பனாக இருந்து துரோகம் செய்வது ரொம்பவே கொடியது

ஏண்டா... என்னிடம் இப்படி பொய் பேசுறாய்?"
உன்னைப் பார்த்ததும் மெய் மறந்து போயிடுதே, அதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாகிஸ்தானின் எதிர்காலமாக உருவாகிறார் சர்பிராஸ் அகமட்

பாகிஸ்தான் கிரிக்கெட்டின் எதிர்காலமாக உருவெடுக்கவுள்ளார் அந்த அணியின் இலக்குக் காப்பாளரும், ரி-20 அணியின் தலைவருமான சர்பிராஸ் அகமட். முன்னொரு காலத்தில் பாகிஸ்தான் அணியில் இலக்குக் காப்பாளர்களுக்கு பஞ்சம் இருக்கவில்லை. கம்ரன் அக்மல், உமார் அக்மல், அடன் அக்மல் (மூவரும் சகோதரர்கள்) என்று இலக்குக் காப்பாளர்களால் அந்த அணி நிரம்பி வழிந்தது. இதனால் பிறிதொரு இலக்குக் காப்பாளர் அணிக்குத் தேவைப்படவில்லை. தனக்கு முன்னால் இருந்த மூன்று தெரிவுகளைத் தாண்டி, அணியில் இடம்பிடித்தவர்தான் சர்பிராஸ் அகமட். இலக்குக் காப்பிலும் சிறப்பாகச் செயற்பட்டு, இக்கட்டான தருணங்களில் துடுப்பாட்டத்திலும் சாதித்தார். அரைச்சதங்கள், சதங்கள் தொடர்ந்து அடுக்கிச் சென்றார். ரி-20 அணியின் தலைவராகச் செயற்பட்ட அப்ரிடி, படிப்படியான தடுமாற்றங்களை எதிர்கொள்ள, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பார்வை சர்பிராஸின் மீது குவிந்தது. தலைமைப் பதவி அப்ரிடியிடமிருந்து எடுக்கப்பட்டு, அகமட்டிடம் கொடுக்கப்பட்டது.

தற்போது ரி-20 அணிக்கு சர்பிராஸ் அகமட்டும், ஒருநாள் அணிக்கு அசார் அலியும், டெஸ்ட் அணிக்கு மிஸ்பாவும் என மூன்று ஆட்டங்களுக்கும் மூன்று தலைவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி தடுமாறுகிறது. குறிப்பாக ஒருநாள் ஆட்டங்களில் மிகையான தடுமாற்றத்தை எதிர்கொள்கிறது. இதனால் அசார் அலியிடமிருந்து தலைமைத்துவம் எடுக்கப்பட்டு அகமட்டுக்கு கொடுக்கப்படப்போகிறது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் தற்போது 42 வயதாகும் மிஸ்பாவும் ஓய்வை அறிவிக்கும் நாள்களை எண்ணிக் கொண்டுள்ளார். அவர் அவ்வாறு ஓய்வை அறிவித்தால் அகமட்டுக்கே வாய்ப்பு என்று கருதப்படுகிறது.

இன்னும் சில மாதங்களில் மூன்று வகையான ஆட்டங்களுக்கும் அகமட்டே தலைவராக நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது. ஒரு இலக்குக் காப்பாளராகவும், மூன்று வகை ஆட்டங்களுக்கு தலைவராகச் செயற்பட்டவருமான டோனி எவ்வாறு அணியைக் கட்டிக் காத்தாரோ அவரை மாதிரியாகக் கொண்டுள்ள அகமட்டும் சிறப்பாகச் செயற்படுவார் என்பதே பலரதும் கருத்து.



# "வஞ்சிக்கப்படுகிறேன்" புலம்புகிறார் சிறிசாந்

இந்திய கிரிக்கெட் சபையால் தான் வஞ்சிக்கப்படுகிறார் என குற்றஞ்சுமத்துகிறார் சிறிசாந்.

ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து சிறிசாந் உள்ளிட்ட சில வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. தற்போது அவர்கள் குற்றமற்றவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்திய கிரிக்கெட் சபை அவர்கள் மீதான தடையை நீக்க மறுத்து வரும் நிலையிலேயே, சிறிசாந் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் தான் திட்டமிட்டு வஞ்சிக்கப்படுகிறார் என இந்தி ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார். ஸ்கொட்லாந்து கிரிக்கெட் கழகமொன்றுக்காக விளையாட அனுமதி கேட்டு விண்ணப்பித்திருந்தேன். ஆனால் எனக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. எனது விடயத்தில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எந்தக் கருத்தையும் வெளியிடாமல் மௌனித்துள்ளது. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நிலையே இது என சிறிசாந் மேலும் தெரிவித்தார்.



# 6 பந்துகளில் இலக்குகள்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் கழகமொன்றின் வீரரான ஆலெட் கேரி ஒரு பந்துப் பரிமாற்றத்தில் வரிசையாக 6 இலக்குகளை வீழ்த்தி அசத்தினார். ஆஸ்திரேலியாவில் கழகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கோல்டன் பொயிண்ட் கிரிக்கெட் கிளப் – ஈஸ்ட் பலாரட் அணிகள் மோதின. ஈஸ்ட் பலா ரட் அணி தடுத்தாடிக் கொண்டிருந்தபோது, கோல்டன் பொயிண்ட் கிரிக்கெட் கிளப் அணியின் 29 வயதான ஆலெட் கோரி 9 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசினார். தான் விசிய 6 பந்துகளில் 6 இலக்குகளைக் கைப்பற்றி அசத்தினார். முதல் மூன்று இலக்குகளும் பிடியெடுப்பின் மூலமும் அடுத்த மூன்று இலக்குகளும் போல்ட் முறையிலும் வீழ்த்தப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதாரணம் எனது...

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டியை தனது மனைவியாக ஏற்றுக் கொண்டார் வரதன்.

"சாந்தி.. எங்கட குடும்ப நிலையை அறிஞ்சு ஒரு சதம் கூடச் சீதனம் வாங்காமல் அண்ணாவின்ர சொல்லுக்குக் கட்டுப்பட்டு உன்னை வரதன் கலியாணம் செய்திருக்கிறார். உன்ரை தங்கச்சியவைக்கும் நல்ல எதிர் காலம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திட்டுது"

அம்மாவின் நம்பிக்கையுடனும் அறிவுரையுடனும் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தில் கால் பதிக்கும் எனது எதிர்காலக் கனவுகளுடன் எங்களுடைய அறைக்குச் செல்கின்றேன். ஒரு வாரத்தில் அவசரமாக நடந்த திருமணம் இது. அம்மாவுக்கு எப்படியும் ஒரு மகளையாவது கரையேற்ற வேண்டும் என்ற அவசரம். எனது கணவரின் முகத்தைக் கூட நான் பார்க்கவில்லை. எங்களது குடும்ப நிலையை எண்ணி அம்மாவின் விருப்பத்துக்குத் தலையசைக்கவேண்டியதாயிற்று.

அவருடைய குணம் எப்படி என்பது கூடத் தெரியாது. எனது அறைக்குள் இருந்த கட்டில் மீது அமர்ந்திருக்கும் அவருக்கு அருகில் செல்கின்றேன். என்னுடைய காலடியோசையைக் கேட்டு நிமிர்ந்த என் கணவரின் முகத்தைப் பார்த்ததும் ஒரு கணம் என் இதயம் நின்றது.

சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். முன்வழுக்கைத் தலையுடன் கரிய நிறமாக என் முன் இருந்த என் கணவரை ஏமாற்றமும் - தவிப்பும் கலந்த உணர்வுடன் உற்றுப்பார்த்தேன். என் அருகில் வந்தவர் முரட்டுத் தனத்துடன் என் கரங்களைப் பற்றி "இப்படி வா... என்ன கூச்சம்..." என்றவாறு என்னை முரட்டுத்தனமாக அணைத்தார்.

கண்கள் சிவப்பு நிறமாக மாறி, மூச்சிழைக்க, வெறி கொண்ட நாய் போல அவர் செயற்பட்ட விதம் என்னை அதிர்ச்சியடையச் செய்தது.

என் பலத்தை எல்லாம் திரட்டி அவரைப் பற்றித் தள்ளிவிட முயன்ற என் முயற்சிகளும் பலனற்றுப் போக "ஐயோ தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்" எனக் கெஞ்சினேன். அவருடைய முகம் விகாரமாக மாறியது. அவரது பிடி வலிமையானது. எனது முயற்சியில் தோற்ற நான் மயங்கிச் சரிந்தேன்.

அதிகாலையில் கண்விழித்த நான் சிங்கத்தின் கர்ச்சனை போலக் குறட்டை விட்டுத்தூங்கும் அவரை அருவருப்புடன் பார்த்தேன். அம்மாவிடமும் இந்த விடயத்தை எவ்வாறு கூறமுடியும். வேதனையால் துடித்த எனக்கு இன்னுமொரு அதிர்ச்சி காத்திருந்தது.

திருமணம் முடிந்து எங்களது வீட்டிலே தங்கியிருந்த எனது கணவர் வேலைக்குச் செல்வதற்கு ஆயத்தமா னார். "நான் இண்டைக்குப் பள்ளிக்கூடம் போக வேணும். போகாமல் விட்டால் சம்பளக் காசும் தரமாட்டாங்கள்" என்று கூறிச் சைக்கிளை எடுத்த அவர் வீட்டிலே அணிந்திருந்த சாறத்துடன் புறப்பட்டார்.

"வேலைக்கு பள்ளிக்கூடம் போறதென்றால் உடுப்பை மாத்திக் கொண்டு போங்கோ" நான் கூறியதைக் கேட்ட அவர்"அங்க கூட்டிற வேலைக்கு ஏன் உடுப்பு மாத்துவான்." அலட்சியத்துடன் கூறிவிட்டுச் செல்லும் அவரை வெறித்துப் பார்த்தபடி செயலற்று நிற்கின்றேன்.

ஏமாற்றப்பட்டு விட்டமையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அரச வேலை என்று நினைத்த எனக்கு அவர் சாதாரண கூலி வேலை செய்பவர் என்பதை அறிந்ததும் மனம் சொல்லவொண்ணா வேதனை அடைந்தது.

திருமணம் முடிந்து இரண்டு கிழமைகள் நிறைவடைந்தன. வீட்டுக் கிணற்றில் தங்கை தாரணி குளித்துக் கொண்டிருந்தாள். கிணற்றைச் சுற்றி வேலி அடைத்திருந்தது. வேலையால் வந்த எனது கணவர் வேலியின் கிடுகை விலக்கி, அவள் குளிப்பதைப் பார்த்ததை நான் கண்டேன். "இப்பதான் வேலை முடிஞ்சு வந்தனீங்களா? என்ன வேலியைப் பிரிச்சு பார்க்கிறீங்கள்" கோபமாகக் கேட்ட எனக்கு அசட்டுச் சிரிப்புச் சிரித்துவிட்டு அந்த இடத்தை விட்டு நழுவிச்சென்றார்.

பாடசாலையிலிருந்து கொண்டு வரும் உணவு, கோயில்களில் வாங்கி வரும் உணவு அவருக்கு மிகவும் பிடித்தமானது. எனக்கு முன்னால் உணவுப் பார்சலை பிரித்து அகோரமான பசியோடு இருக்கும் மிருகம் தனக்கு முன்னால் இருக்கும் உணவைப் பசியோடு உண்பது போல அவர் சாப்பிடும் கோலமும் - பார்த்துக்கொண்டிருக்கும் என்னையும், அதனை உண்ணுமாறு வற்புறுத்துவதும் அவருக்கும் எனக்கும் இடைவெளியை அதிகரிக்கச் செய்தது.

எனது மற்றைய தங்கைகளும் "அக்கா,அத்தான் சரியான மோசமான ஆளாயிருக்கிறார். எங்களை அவர் பார்க்கிற பார்வையே சரியில்லை. எங்களுக்கு அவரைப் பார்க்கப் பயமாயிருக்கு"; என என்னிடம் கூறுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. வறிய குடும்ப நிலையிலிருந்த நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தொலைத்து திருமணப் பெறிக்குள் சிக்கிக்கொண்டு என்னைக் காத்துக்கொள்ள முடியாவிட்டாலும், எனது தங்கைகளைக் காத்துக் கொள்ளவேண்டும் என்ற கடப்பாட்டில் இன்று தூக்கம் தொலைத்து நிற்கிறேன். ■

## சொற்சிலம்பம் - போட்டி இல: 456

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | ■ | 3 | | 4 | |
| 5 | | ■ | 6 | | ■ | | ■ |
| 7 | | | | | 8 | ■ | 9 |
| ■ | | ■ | 10 | | | ■ | |
| 11 | | | | | ■ | 12 | |
| | ■ | ■ | | ■ | 13 | | ■ |
| | ■ | 14 | ■ | 15 | | | 16 |
| 17 | | | | | ■ | 18 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................................

கையொப்பம்:...................................................

### இடமிருந்து வலம்

1. அரிசியோடு ஒட்டிய உமி அல்லாத பொருள்
3. கிரகநிலை பற்றிய குறிப்பு
5. ஆசிரியர்
6. கோமாதா
7. ஒரு செயலைச் செய்து முடிக்கும் வழிமுறைகளைத் தயாரி
10. உத்தியோகம்
11. மனைவி
12. திரவ நிலைக்கும் திண்மநிலைக்கும் இடைப்பட்ட நடு ரகம்
13. முடியாததை முயற்சி செய்து வெற்றியாக்கு
15. கரு நிறத்தவள்
17. முழங்குதல்
18. செய்

### மேலிருந்து கீழ்

1. வேலைக்காக ஒருவர் பெற்றிருக்கும் முன் அனுபவம் அல்லாத அறிவு
2. மரம்
3. நித்தியம்
4. அம்பு
6. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்
8. அதிக அளவில் பொருள்களைச் சேர்த்து நிறைத்தல்
9. காரமான சிறுகாய் உணவில் பயன்படுத்துவது
11. குதிரைச் சாட்டை
12. இயல்பான தன்மைக்கு ஏற்படும் கேடு
13. (பழ)ரசம்
14. துர்வாடை வீசுதல்
15. மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றியது
16. வகுத்துக் கொள்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 454 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**
(1) தராதரம் (4) பகு (6) வகு (7) பரிதி (8) தும்பி (10) தரை (11) எரு (12) சிதைவி (14) கள் (15) சூன்ய (17) சாது (18) லூக்கா (20) காடு (21) தருவி

**மேலிருந்து கீழ்**
(1) தவறு (2) ராகு (3) ரதம் (4) பரிதவி (5) குதிரை (8) துரு (9) பிசின் (11) எள் (13) தையல் (14) கல்லூரி (15) சூது (16) குட்டு (17) சாகாத (19)கவி (20) கார்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 454 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
திருமதி ப.சிவன்நேசன்,
'நிம்மதி'தேவாலய வீதி,
சங்கானை.

**2 ஆம் பரிசு**
திவ்யா அருந்தாபன்,
இல.6-8/AC, வியாசர் வீதி,
தோணிக்கல் (கரப்புக் குத்தி), வவுனியா.

**3 ஆம் பரிசு**
திருமதி மோனிங்ஸ்ரார் தேவதாஸ்,
முருங்கன்பிட்டி, முருங்கன்,
மன்னார்.

**4 ஆம் பரிசு**
இ.கதிர்ச்செல்வன்,
இல.44 ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

**5 ஆம் பரிசு**
ஜெ.கிறிஸ்மிகா,
இல.338, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்**

ந.செல்வராணி,
சிவன் வீதி,
காரைநகர்.

**திருமதி ச.லிங்கமூர்த்தி.**
அ.மி.பாடசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

**[illegible]**
7 ஆம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம்.

சொற்சிலம்பம் போட்டி
இல.456
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(08.02.2017 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.456இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 12.02.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 456 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

## 29.01.2017 முதல் 04.02.2017 வரை

உங்களுக்கு எப்படி?



### மேடம்

குரு, கேது, சூரியனால் நன்மை உண்டாகும். அக்கம் பக்கத்தவர் அன்புடன் நடந்து கொள்வர். வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் பெற வழி பிறக்கும். பூர்வ சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும். வெளிநபர் பிரச்சினையில் தலையிட்டால், உங்களுக்கு பிரச்சினை வரும். இதைத் தவிர்க்கவும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் நன்றாக இருக்கும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். வெளியூர் பயணம் செல்ல வேண்டி வரும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்கான திட்டங்களை வகுப்பர்.



### இடபம்

செவ்வாய், புதன், சந்திரன் நன்மை தருவர். உங்கள் பேச்சும், செயலும் மற்றவர்களைக் கவரும். புதியவர்களின் நட்பு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். குடும்பத்துக்குள் சில பிரச்சினைகள் வரலாம். பயணங்களால்லாபம்ஏற்படும். புத்திரர்கள்விரும்பிக்கேட்ட பொருள்வாங்கித் தருவீர்கள். கணவன், மனைவி இடையே சிறு பிரச்சினை வந்து நீங்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருக்கும். பணியாளர்களுக்கு, நிர்வாகத்துடன் கருத்துமோதல்ஏற்படலாம். பெண்கள், உடல்நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். மாணவர்கள், கவனமாகப் படித்தால்தான் முன்னேறலாம்.

### மிதுனம்

ராகு, சுக்கிரன், குரு, சனீஸ்வரர் வியத்தகு பலன் தருவர். பணிகள் சிறப்பாக நிறைவேறும். தம்பி, தங்கையின் பாசம் நெகிழ்ச்சி தரும். தாராளமாக செலவழிக்கும் வகையில் பணவரவு இருக்கும். புத்திரர்களின் மனதில் நல்ல சிந்தனை வளரும். உறவினர்களின் ஒத்துழைப்பு மகிழ்ச்சி தரும். குடும்பப் பிரச்சினைகளில் இருந்த ஒன்றிரண்டு பிரச்சினைகளும் தீரும். மனைவியின் நற்செயல் பெருமை தேடித்தரும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் பணிபுரிவர். பெண்கள், தாராள செலவில் விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.





### கடகம்

சுக்கிரன், புதன், சந்திரன் நன்மை வழங்குவர். சில முடிவுகளை மறு பரிசீலனை செய்வீர்கள். வீண் பேச்சு பேசுபவர்களிடம் பழக வேண்டாம். பயணங்களால் அதிக பலன் இராது. புத்திரர்களால் சில பிரச்சினைகள் வந்து நீங்கும். பணவரவு சுமார் என்பதால், செலவில் சிக்கனம் நல்லது. உடல் நலத்தில் கவனம் வேண்டும். மனைவியின் அன்பும், உதவியும், மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள், தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள், நன்றாகப் படித்து பாராட்டு பெறுவர்.

### சிங்கம்

சூரியன், சந்திரனால்நன்மை ஏற்படும். திட்டங்களை மன உறுதியுடன் செயற்படுத்தி வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பராமரிப்பு செலவு அளவுடன் இருக்கும். புத்திரர்களின் உடல்நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். பகைவரால் உருவான சிரமம் இஷ்டதெய்வ அருளால் விலகும். மனைவி வழிசார்ந்த உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தை நிலைநிறுத்த அதிக பணம் தேவைப்படும் என்பதால் வங்கி இருப்பில் கை வைக்க வேண்டி வரலாம். மாணவர்களுக்கு, படிப்பில்அதிககவனம் வேண்டும்.





### கன்னி

குரு, சனி, புதன், கேது அனுகூல பலன்களைத் தருவர். குடும்பத்தினரின் ஆதரவுடன் திட்டங்களைச் செயற்படுத்துவீர்கள். மனதில் நம்பிக்கை வளரும். புதிய வீடுசி வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள் படிப்பு, வேலையில் தங்கள் திறமையை வெளிப்படுத்துவர். உடல்நிலை நன்றாக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவது முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். அரசியல்வாதிகள் புதிய பதவி பெற யோகம் உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழித்து பணவரவு கூடும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும். பெண்களுக்கு, ஆடை, ஆபரணம்சேரும். மாணவர்கள், படிப்பில்சாதனை படைப்பர்.

### துலாம்

சுக்கிரன், செவ்வாய், ராகு நற்பலன் தருவர். படிப்பினை தரும் வகையிலான சம்பவம் ஒன்று நிகழலாம். இடம் சூழல் உணர்ந்து பேசுவதால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். வீடு, வாகன வகையில் பாதுகாப்பாக இருப்பது பொருள் நஷ்டத்தை தவிர்க்கும். புத்திரர்கள் பொது விடயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வர். உடல்நிலை சீராக இருக்கும். எதிரியால் உருவான தொந்தரவு பலமிழக்கும். மனைவியின் நல்ல செயலால் குடும்பத்துக்கு பெருமை சேரும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற புதியவர்களின் ஆதரவு துணை நிற்கும். பணியாளர்கள், பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றி சலுகை பெறுவர். மாணவர்களுக்கு, படிப்பில் முன்னேற்றம் ஏற்படும்.





### விருச்சிகம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். எவரிடமும் மதிநுட்பத்துடன் பேசி ஆதாயம் பெறுவீர்கள். பயணத்தில் ஆர்வம் வளரும். புத்திரர்கள் உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமைகூடும். சத்தான உணவும், சீரான ஓய்வும் ஆரோக்கியம் தரும். எதிர்ப்பாளர்களிடம் இருந்து விலகவும். மனைவி கருத்து ஒற்றுமை கொள்வார். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து, உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள், துரிதமாக பணி களை முடித்து, நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள், வீட்டு உபயோகப்பொருள் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.



### தனுசு

கேது, சுக்கிரன், குரு நற்பலன் தருவர். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். உடன்பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள். வெளியூர் பயணம் பயனுள்ளதாக அமையும். புத்திரர்களின் திறமை வளர ஆலோசனை சொல்லி முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வீர்கள். பூர்வீகச் சொத்தில் ஓரளவு பணவரவு கிடைக்கும். நோய் தொந்தரவு குறையும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி உற்சாக மனதுடன் குடும்ப பணிகளில் ஈடுபடுவார். பணியாளர்கள், பொறுப்புடன் பணிபுரிந்து சலுகை பெறுவர். பெண்கள், விருந்து விழாவில் கலந்து கொள்வர்.



### மகரம்

சுக்கிரன், செவ்வாய், சனீஸ்வரர் அளப்பரிய நற்பலன் தருவர். பணிகளை பரிசீலனை செய்து தொடங்குவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். தம்பி, தங்கைகள் அன்புடன் நடந்து கொள்வர். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் படிப்புடன் ஆன்மிகத்தை அறிவதிலும் ஆர்வம் கொள்வர். வழக்கு விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்க தாமதமாகலாம். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பெண்கள், உறவினர் குடும்ப சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள், படிப்புடன் கலைகளிலும் சிறந்து விளங்குவர்.





### கும்பம்

சுக்கிரன், குரு, புதனால் நன்மை கிடைக்கும். வாழ்வில் முன்னேற்றம் பெற வாய்ப்புஉருவாகும். உடன்பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். வாகனப் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் மகிழ்ச்சியுடன் தகுதி திறமையை வளர்த்துக் கொள்வர். புதிய சொத்து வாங்க யோகம் உண்டு. உடல்நிலை சீராக இருக்கும். விரும்பிய உணவு உண்டு மகிழ்வீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். வெளியூர் செல்ல வேண்டி வரலாம். பெண்கள், குடும்ப நலனுக்கான திட்டங்களை வகுப்பர். மாணவர்கள், நன்றாகப் படித்து பரிசு, பாராட்டு பெறுவர்.



### மீனம்

ராகு, புதன், சூரியன், சுக்கிரன் தாராள நற்பலன் தருவர். மனதில் மகிழ்ச்சியும் உற்சாகமும் கூடும். திட்டங்கள் முழு அளவில் வெற்றி பெறும். உறவினர்களுடன் சுமுக உறவு இருக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் வசதி செய்ய சற்று அதிகமாகவே செலவழிப்பீர்கள். புத்திரர்கள் படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். இஷ்ட தெய்வ அருள் கிடைக்கும். வந்த சுவடு தெரியாமல் துன்பங்கள் விலகும். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் உயர்வு கூடும். பணியாளர்களுக்கு, சலுகை கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

tools for success...

Atlas

எழுதுபொருள் உற்பத்தி துறையில் முன்னோடிகளான நாங்கள் பாடசாலைகளுக்கும் அலுவலகங்களுக்கும் 300க்கும் அதிகமான பொருட்களை விநியோகித்து வருகிறோம். எமக்கு தேவைப்படும் தகைமைகளுடன் சவால்களுக்கு முகம்கொடுக்கவும் நீங்கள் தயாரானவர் என்று நீங்கள் நம்பினால் நீங்கள்தான் எமக்கு வேண்டியவர்.



## விற்பனை பிரதிநிதி •

**தகைமைகள்/அனுபவம்**

- FMCG வகையறாவில் 01 வருட அனுபவம்
- க.பொ.த உயர்தரம் பூர்த்தி
- வயது 35க்கு உட்பட்டவர்
- சவாலான சூழலில் வேலை செய்யக்கூடிய ஆற்றல்
- அதிசிறந்த தொடர்பாடலும் மக்கள் உறவாடல் திறனும்
- விளையாட்டுக்கள், புறக்கிருத்திய செயற்பாடுகள் மேலதிக தகைமைகளாகும்

ஆரம்பத்தில் கையில் கிடைக்கும் சம்பளம் ரூபா 40,000/- (அடிப்படை சம்பளம் ரூபா 16,000 + ஊக்குவிப்பு படிகள் + மதிய போசனம், அடிப்படை படிகள்)

பொருத்தமான விண்ணப்பதாரர் பிறர் தூண்டுதலின்றி சுயமாக வேலை செய்பவராகவும் சுறுசுறுப்பானவராகவும் புதிய விற்பனை மார்க்கங்கள் ஊடாக எமது உற்பத்திகளை சந்தைக்கு கொண்டுசெல்பவராகவும் பாவனையாளர் கிராக்கியை அதிகரிப்பதற்கு புதிய வழிமுறைகளை புகுத்து பவராகவும் இருத்தல்வேண்டும்.

Walk-in Interviews
திங்கள் - வெள்ளி தினமும்
காலை 8.30 - நண்பகல் 12.00
உங்கள் சுயவிபரக்கோவையையும் எடுத்து வரவும்.

"தனித்துவமான தேர்ச்சி, திறன்கள் அடிப்படையில் போனஸ், பதவி உயர்வுகளும் உண்டு"

Atlas
tools for success...

மனிதவள முகாமையாளர்
Ceylon Pencil Company (Pvt) Ltd. (PV-7125)
96, Parakrama Road, Peliyagoda, 11830. www.atlas.lk
Contact: 0115-289326

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கம்மா கந்தையா

வளலாயைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி தங்கம்மா கந்தையா நேற்று (28.01.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், இராசதுரை (வவுனியா), இரத்தினம் (மல்லாவி), இரதிதேவி (மல்லாவி), புஸ்பராணி தேவி, வசந்தகுமாரன் (அளவெட்டி), றஞ்சிதகுமார், வதனி (கனடா), சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேஸ்வரி, கெங்காதேவி, முருகையா, அருளானந்தம், காலஞ்சென்ற சத்தியானந்தம், இராஜசெல்வி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவிலும், அளவெட்டியில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.[illegible]

அளவெட்டி.

(AJA/ 00686)
(11,17,18)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பிளாட்டினம்
10.00 / 1.00 / 4.00 / 7.00
சில்வர்
10.15 / 1.15 / 4.15 / 7.15
ப்ரொன்ஸ்
10.30 / 1.30 / 4.30 / 7.30
விசாரணை ☎ 021- 2227712
facebook. CeylonTheatres
www.ceylontheatres.lk

WANTED DEALERS
AKASH BRAND STAINLESS STEEL TUBES - INDIAN MANUFACTURER
FOR S.S. RAILING (POLISHED)
S.S. DECORATIVE TUBES (POLISHED)
S.S. INDUSTRIAL PIPES
PLEASE VISIT OUR STALL NO.A114, IN 8TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
FOR OTHER DETAIL PLEASE VISITOUR SITE
www. akashsteelcraft.com
AKASH STEEL CRAFTS (P) LTD MUMBAI, INDIA
email : akashsteelcraft@gmail.com

Study in USA, Canada, UK, Ireland, Germany, Holland Latvia, Switzerland, Lithuania, Poland, Singapore, China Malaysia, New Zealand, Australia, India
GCE (O/L) அடிப்படைத் தகுதியுடன் Government Colleges/Universities அனுமதியை பெற்றுக்கொள்ள. குறைந்த செலவில் வெளிநாட்டில் உயர்கல்வி.
VISA கிடைத்த பின் College கட்டணம், 7/10 years banded or 02 or 03 times refused / rejected செய்து இருந்தாலும் செய்து தரப்படும்.
No: 36 1/1 Station Road, Colombo - 06, Phone: 0112552399, 0773547049
Website: www.lifetimencl.com, www.srilanka.eie-group.com

போதனா ஆசிரியர்கள் தேவை
AIDE - ET - ACTION INTERNATIONAL SRI LANKA.
கீழ்வரும் போதனா ஆசிரியர் வேலைகள் வெற்றிடமாக திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள எமது தொழிற்கல்வி நிலையமான iLEAD (Intiative for Livelihood Education and Development ) இல் காணப்படுகின்றது
- COMPUTER APPLICATION ASSISTANT
- BEAUTICIAN
- ENGLISH

அனுபவமுள்ளவர்கள் தங்கள் தொடர்பு இலக்கத்துடன் கூடிய சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு 10 . 02 . 2017 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் ( மின்னஞ்சலும் செய்யலாம்)
THE ADMINISTRATIVE OFFICER
139 1/1, Inner Harbor Road,
Orrshill, Trincomalee.
E-Mail : ilead.colombo@gmail.com

max adz

## நினைவேந்தல் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஜன.29

மகாத்மா காந்தியின் 69ஆவது நினைவேந்தல் நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு உருத்திரபுரத்தில் அமைந்துள்ள காந்தி நிலைய சிறுவர் இல்லத்தில் காந்தி நிலையத்தலைவர் கா. கார்த்திகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கரைச்சிப் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக இந்துக்கல்லூரி அதிபர் கி.விக்கினராசாவும் ஊற்றுப்புலம் பாடசாலை அதிபர் ம.உமாசங்கரும், கிளிநொச்சி வர்த்தகச் சங்கத்தலைவர் வி.நவரட்ணராசாவும், சாயி சமித்தி தலைவர் ரதி குணசேகரமும் கலந்து கொள்வர். (ற-ரி)

## கால்வாயில் இரு சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜன.29

கல்கிஸைப் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட அத்திடியப் பிரதேச கால்வாய் ஒன்றின், இருவேறு பகுதிகளிலிருந்து இரண்டு அடையாளம் காணப்படாத சடலங்கள் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள் ளனர்.

பொலிஸ் அவசர தொலைத் தொடர்பு எண்ணுக்கு (119) அழைப்பை ஏற்படுத்திய மையால் கிடைத்த தகவலுக்கு இணங்கவே குறித்த சடலங்களை மீட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள ஹோட்டல் அருகில்உள்ளகால்வாயில் இருந்து ஒரு சடலமும், மற்றுமொரு பகுதியிலிருந்த மற்றைய சடல மும் மீட்கப்பட்டுள் தாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் தெகிவளைப் பொலிஸார் தீவிர விசாரணைகள்மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## இசைவாக்க நிகழ்ச்சி

யாழ்ப்பாணம். ஜன.29

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தரம் 6 புதுமுக மாணவர்களுக்கான மகிழ்ச்சிகரமான பாடசாலைச் சூழல் இசைவாக்கம் நிகழ்ச்சித்திட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்குபஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வுக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி யின் கனடா வாழ் பழைய மாணவர்கள் ரகு, தேவராஜா, திருமதி சுகன்யா தேவராஜா ஆகி யோர் அனுசரணை வழங்கியுள்ளனர். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவன் ஊடகவியலாளன்

■ தி.ராஜ்

2002 ஆம் ஆண்டு திறக்கப்பட்ட சமாதானக் கதவு தற்காலிகமானது என்பதைப் புரிந்து கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கவில்லை. ரணில் அரசிடமிருந்து அமைச்சுப் பொறுப்புக்களை அப்போதைய அரச தலைவர் சந்திரிகா பிடுங்கிக் கொண்டதும், ரணில் அரசின் ஆட்சியைக் கலைத்ததும், சமாதானத்தின் மீதிருந்த தமிழர்களின் நம்பிக்கையைச் சிதைக்க ஆரம்பித்தது. தொடர்ந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிப் பீடமேறியது. மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகினார். சமாதானத்தின் மீதான துளியளவு நம்பிக்கையும் இழக்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மகிந்த ராஜபக்ச அரச தலைவராகின்றார்.

அதே மாதத்தின் இறுதி வாரப் பகுதியில் சமாதானத்துக்குச் சாவு மணி அடிக்கும் செயற்பாடு தொடங்குகின்றன. 'மாவீரர்' வாரத்துக்குரிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் நீர்வேலியில் சுட்டுக் கொலை செய்யப்படுகின்றனர். இதனைக் கண்டித்து ஏற்பாடு செய்யப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தின்போது குடாநாட்டின் பெரும்பாலான இராணுவ நிலைகள் மீது கைக்குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், சமாதானம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு விட்டது என்பதை உணர்வதற்கு நீண்ட நாள்கள் பிடிக்கவில்லை. அறிவிக்கப்படாத ஊரடங்கு ஆரம்பத்தில் நிலவியது. மாலை 5தொடக்கம் 6மணிக்குள் தமிழர் தேசம் வீட்டுக்குள் முடங்கிவிடும். அனைவரையும் அச்சம் ஆட்கொண்டிருந்த காலம்.

2006 ஆம் ஆண்டு நிலைமை இன்னமும் மோசமாகத்தான் இருந்தது. ஆண்டு பிறந்த அடுத்த நாளே - ஜனவரி 2ஆம் திகதி திருகோணமலை நகரில் சோகச் சம்பவம் அரங்கேறுகின்றது. பல்கலைக் கழகத்துக்குத் தேர்வு செய்யப்பட்ட 5மாணவர்கள் உயிரற்ற சடலங்களாக மீட்கப்படுகின்றனர்.

அவர்கள் பாதுகாப்புத் தரப்பினராலேயே கொல்லப்பட்டார்கள் என்று அனைவருக்கும் தெரிந்திருப்பினும், அது எதையும் வெளியில் சொல்ல முடியாத சூழல். இலங்கை அரசு - தனது படைகள் அறிவிக்கும் - சொல்லும் கதையே சரியானது என்கின்ற நிலைமை. பாதுகாப்புத் தரப்பினர் மீது தாக்குதல் நடத்துவதற்குக் கைக்குண்டை எடுத்து வந்தார்கள். அது வெடித்து அவர்கள் சாவடைந்து விட்டார்கள். இதுதான் இலங்கை அரசினதும் - அதன் படைகளினதும் அறிக்கை. 5 மாணவர்களுக்கும் பயங்கரவாதிகள் பட்டம் சூட்டி, விடயத்தை முடித்து விட்டது- அரசு.

சம்பவம் நடைபெற்று இரண்டு தினங்களின் பின்னர் - சரியாக ஜனவரி 4 ஆம் திகதி 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் 5 மாணவர்களதும் படங்கள், தலைப் பகுதி மாத்திரம், குறிப்பிட்டுக் காண்பிக்கப்பட்டுப் பிரசுரமானது. அகோரமான இத்தகைய படங்களைப் பிரசுரிப்பது ஊடகதர்மத்துக்குச் சரியானதா? என்ற கேள்வி ஒருபுறம் இருந்தாலும், உண்மையைத் தோலுரித்துக் காட்டுவதற்காக அந்தப் படங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. அந்தப் படங்களின் மேலே 'திருகோணமலையில் படையினரைத் தாக்குவதற்குச் சிலர் எடுத்து வந்த கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததில் அதை எடுத்து வந்த ஐவர் உயிரிழந்தனர் என இலங்கை இராணுவம் அறிவித்திருந்தது. அந்த ஐவரின் உயிரற்ற சடலங்களின் முகப் பகுதியே கீழே படங்களில் உள்ளன. எல்லாச் சடலங்களிலும் காதுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. அரச படைகளின் அறிக்கைகளின் உண்மைத் தன்மையை நிரூபிக்கும் நல்ல சான்றுகள் இவை...' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.



இலங்கை அரசை பன்னாட்டுச் சமூகத்தின் முன்பாக நிர்வாணப்படுத்திய - உண்மையை உரைத்த சான்றாதாரமாக இது அமைந்தது. இலங்கை அரசை, அப்போதைய பாதுகாப்புத் தரப்பினரை, மகிந்த குழுமத்தினரை நிச்சயம் இந்தச் சம்பவம் சீண்டியிருக்கும். சொன்னது பொய் என்று நிரூபிக்கப்பட்டு எல்லோர் முன்னிலையிலும் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதே என்று, ஆத்திரம் கொப்பளித்திருக்கும்.

உண்மை வெளியாகி சரியாக 20நாள்களின் பின்னர், ஜனவரி 24ஆம் திகதி, 'உதயன்' மற்றும் 'சுடர்ஒளி' பத்திரிகைகளின் திருகோணமலைச் செய்தியாளர் சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்படுகின்றார். திருகோணமலை நகரின் பாதுகாப்பு மிகுந்த பகுதியில் வைத்துத்தான் அவர் சுட்டுக் கொல்லப்படுகின்றார். கொலையாளிகள் தப்பித்துச் சென்று விடுகின்றனர்.

கொலையாளிகளை ஊகிப்பதற்கு 'ஜேம்ஸ்பான்ட்' மூளை ஒன்றும் தேவையில்லை. யார் செய்திருப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பல்கலை மாணவர்கள் படுகொலை தான் செய்யப்பட்டனர் என்ற உண்மை தெரிந்திருந்தும் எவரும் வாய் திறந்து பேசாமல், நமக்கு ஏன் வீண் வம்பு என்று ஒதுங்கியிருந்த அந்தக் காலத்தில், தனது உயிருக்குப் பிரச்சினைகள் வரும் என்று தெரிந்திருந்தும் அந்தப் பத்திரிகையாளன் அதனை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டினான். திருகோணமலை மாணவர் படுகொலை இன்றுவரை உயிர்ப்புடன் இருப்பதற்கு அந்தப் பத்திரிகையாளனின் துணிச்சலே காரணம். மாணவர் படுகொலைக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. ஆனால் அது தொடர்பில் விசாரணைகள் நடக்கின்றன. பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசிடம் இன்னமும் கேள்வி கேட்டுக் குடைந்து கொண்டிருக்கின்றது.

ஆனால் உண்மைகளை எடுத்தியம்பிய பத்திரிகையாளனின் கொலை தொடர்பில் எந்தவொரு விசாரணையும் இல்லை. கொலையாளிகள் இவர்கள் தான் என்பதைச் சட்டத்தின் முன் சொல்லவும் இல்லை. உண்மையை உலகின் கண்களுக்கு கொண்டு சென்றவனுக்கு நடந்ததை விசாரிக்கக் கோருவதற்கு உலகமும் மறந்து விட்டது. ஏன் எல்லோரும் மறந்துவிட்டார்கள். இந்த அரசும் ஊடகவியலாளர்களின் படுகொலைக்கு நீதி வழங்காமலே தொடர்கின்றது.

# தனிநபர் அருங்காட்சியகம்

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

ஆலயங்களில் காணப்படும் பெட்டகம் அழகான வேலைப்பாடுகளுடன் இருக்கும்" என்றவர் ஆதரவாக அந்தப் பெட்டகத்தைத் தடவினார்.

தான் சேமித்து வைத்திருக்கும் இந்தப் பொருள்களை எனக்கு அறிமுகப்படுத்துவதில் அவருக்கு மனநிறைவு இருந்திருக்க வேண்டும். அருகில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஒரு பாத்திரத்தைக் காட்டி "தயிரைக் கடைந்து வெண்ணெய் பெறுவதற்காக பயன்படுத்தும் கருவி இது, இதை 'மத்து' என்று கூறுவார்கள். தயிரைக் கடையும்போது, அதிலுள்ள கொழுப்பு நிறைந்த பதார்த்தம் வெண்ணெயாக மாறி வர மிகுதியாக இருக்கும் நீர்த் தன்மையான பதார்த்தம் தான் மோர். அந்தக் காலத்தில மோரின் மணம் அக்கம் பக்கம் உள்ளவர்களையும் ஓடிவரச் செய்யும்" - என்றார்.

"அந்தக்காலத்தில் அனைவரது வீடுகளிலும் மோர் கடைய 'மத்து' இருக்கும். அதன் மையப் பகுதியில் கயிறு சுற்றுவதற்கு ஏற்ற வடிவமைப்பு இருக்கும். இது பசுப்பாலைப் புளிக்க வைத்து, அதில் இருந்து தயிர், மோர் என்பன பிரித்தெடுக்கப் பயன்படுகின்றது" அருகே நிலத்தில் விழுந்து கிடந்த உலக்கையை நிமிர்த்தி வைத்த ஐயா! "இப்ப பிள்ள இந்த உரல், உலக்கை எல்லாம் போய் மிக்ஸி, கிறைன்டர் என்பவை இலகுவாக வேலையை முடிக்கும் நோக்கில் வந்திட்டுது. ஆனால் அவை உடல் ஆரோக்கியத்துக் குப் பாதகமாக அமைவதை உடனடியாக எவரும் அறிவதில்லை.



அது மட்டுமல்ல நமது பெண்களுக்கு வேலைகள் இலகுவாக்கப்பட்டு சோம்பல் தன்மையும் உடல் உபாதைகளும் ஏற்படுகின்றன. முன்னர் என்றால் தனியாக அல்லது இருவராக உரலில் அரிசி இட்டு உலக்கையால் இடித்து மாவாக்குவார்கள். அதிலும் கைமாற்றி கைமாற்றி உலக்கை பயன்படுத்துவது என்பது ஒரு சிறந்த உடல் பயிற்சியாகவும் இருந்தது. அதனால் பெண்கள் நல்ல ஆரோக்கியத்துடனும் கட்டழகுடனும் இருந்தனர், இப்ப என்னென்று சொல்வது" என சலித்த ஐயாவுக்குப்பதில்கூறஎன்னாலும்முடியவில்லை. அந்த வீடு கட்டி நூறு வருடங்கள் கடந்திருக்கும் வீட்டுக்கு உள்ளே செல்வதற்குப் பயமாக இருந்தது. தொட்டால் வீடு முழுவதும் விழுந்து விடுவதைப் போன்றிருந்தது. வீட்டுக்குள் இருக்கும்பொருள்கள் ஐயாவினால் கையாளப்பட்டதையும் இப்பொழுது பாதுகாக்கப் பயன்படுவதையும் நினைத்தால் அந்த வீட்டின் உறுதியை யும் உங்களால் உணர்ந்து கொள்ளமுடியும்.

அங்கே ஓரிடத்தில் பழைய சில்லறைகள் சில சிதறிக்கிடந்தன. 'பிள்ள இவையெல்லாம் பழைய நாணயக்குற்றிகள். அந்தக் காலத்தில் ஒரு சல்லி, இரண்டு சல்லி, காலணா, அரையணா, ஓரணா, இரண்டணா, நாலணா, எட்டணா, ஒரு ரூபாய் நாணயங்கள் இருந்தன. ஓரணாவுக்குக் குறைந்த மதிப்புடைய நாணயங்கள் செப்பு நாணயங்கள். மற்றையவை நிக்கல் (தொடக்கத்தில் ஒரு ரூபா வெள்ளியில் வந்தது). ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய தனி வடிவம். இப்பொழுது ஒரு ரூபாயா, இரண்டு ரூபாயா என்று கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு பார்ப்பதுபோல் அப்பொழுது பார்க்கத் தேவையே இல்லை. தொலைவிலிருந்து பார்த்தால்கூட அது எத்தனை ரூபா என்று தெரிந்துவிடும். ஓரணா வட்டமாயும், விளிம்பில் வளைவு நெளிவுடன் இருக்கும். இரண்டணா வளைசதுரமாயிருக்கும். மற்றவையெல்லாம் அவையவற்றின் மதிப்புக்குத் தகுந்தபடி சிறியளவும் பெரியளவுமாயிருக்கும். எந்த நிலையிலும் குழப்பம் ஏற்பட்டதேயில்லை' என்றார். ஐயாவிடம் பழைய பொருள்கள் இன்னும் அதிகமாகவே இருந்தன. மரக் கட்டில்கள், கலப்பைகள், பழைய காலத்து எண்ணெய் வகைகள், பித்தளைப் பாத்திரங்கள், வெள்ளிப் பாத்திரங்கள், மரத்தளபாடங்கள் என ஏராளமான பொருகள் ஐயாவின் வீட்டில் பழைமையைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக

# மக்களைப் பிழையாக வழி நடத்த முயற்சி

## சிவன் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் விசனம்

கண்டி, ஜன.29

அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுக்கத் தடையாக, மக்கள் மத்தியில் சிலர் தமது அரசியல் இலாபத்துக்காகப் போலியான பரப்புரைகளைச் செய்து, அவர்களைத் தவறாக வழி நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆயினும் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும். இல்லையெனில் நாடு மீண்டும் மோசமான நிலையை அடையும். இவ்வாறு சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவரும், றெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் மக்களின் எதிர்கால இருப்பையும், அரசியல் எதிர்காலத்தையும் அவர்களின் உரிமைகளையும் அரசமைப்புத் திருத்தம் மூலம் தான் உறுதிப் படுத்த முடியும். அது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட மிதவாத தமிழ்க்கட்சிகள் அனைத்துமே அதிகாரப்பகிர்வே இன நெருக்கடிக்கான உகந்த அரசியல் தீர்வு என்றவகையில் செயற்பட்டு வருகின்றன.

காணாமல் போனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணல் மற்றும் அரசியல்கைதிகளை விடுவித்தல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மக்கள் நடத்தும் போராட்டங்கள் இன்னும் முடிந்தபாடில்லை. காணாமல் போனவர்கள் தொடர்பாக அலுவலகம் திறப்பதாக அரசு தெரிவித்திருந்தது. அது இன்னும் திறக்கப்படவில்லை.

காணிப்பிரச்சினை, வாழ்விடப் பிரச்சினை, வாழ்வாதாரப் பிரச்சினை உள்ளிட்ட இன்னோரன்ன பிரச்சினைகளிலிருந்து தமிழ் மக்கள் விடுபடவில்லை.

எனவே, தற்போது இந்த நாட்டில் மக்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்காக விசமத்தனமான இனவாதக் கருத்துகளையும் பழைய பல்லவி போன்று நாடு பிளவுபடப் போகிறது என சூழ்ச்சிக்காரர்கள் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடிய தீர்வுகளைத் தடுக்கின்ற வகையில் போலியான, அடிப்படையற்ற குற்றச் சாட்டுக்களை எதிரணியினர் பரப்பி வருகின்றனர்.

எனவே, மக்களைப் பலிக் கடாவாக்கி ஆதாயம் தேடும் தரப்பினரின் செயற்பாடுகளைக் காட்டி அரசமைப்பு தொடர்பான விவகாரங்களை அரசு காலம் தாழ்த்தாமல் முன்னெடுக்க வேண்டும்.- என்றார். (ஐ-ய)

### வெளிநாடுகளில் துன்புறுத்தல்களை அனுபவித்து

# நாடு திரும்பும் பணியாளர்களுக்கு நிரந்தரத் தீர்வு தரப்படும்

கொழும்பு,ஜன.29

வெளிநாடுகளுக்குச் சென்று துன்புறுத்தல்களை அனுபவித்து வரும் பணியாளர்களுக்கு நிரந்தரமாக தீர்வுகாண வேண்டிய காலம் வந்துள்ளதாக இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

கஹவத்தையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சட்ட விரோதமான முறையில் வேலைத்தேடி செல்வோரின் தொகை நாளாந்தம் அதிகரித்துள்ளது. மேலும் வெளிநாட்டு பணிப் பெண்களாக சென்றவர்கள் பலர் பலவித இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

பலர் தமது நகைகள் ,பணம். உட்பட தமது வாழ்க்கையையே தொலைத்து நிற்கின்றார்கள். இதன் காரணமாகவே பலர் நாடு திரும்பியதும் தற்கொலை செய்து கொள்கின்றனர். வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் என்ற வகையில் இதனைத் தடுக்க வேண்டிய உயரிய பொறுப்பு எனக்கிருக்கின்றது. இதற்காக எனது வேலையையும் துறப்பதற்குத் தயாராக உள்ளேன்.-என்றார். (ஐ)




## பாடசாலை மாணவர்களுக்கு வாய்ப் புற்றுநோய் அபாயம்

கொழும்பு,ஜன.29

பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாய்ப் புற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பேராதனை பல் மருத்துவமனையின் விசேட மருத்துவர் சமன் நாணயக்கார இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சந்தையில் தயாரிக்கப்படும் பாக்கு வகை ஒன்றுக்கு பாடசாலை மாணவர்கள் அடிமையாகி வருவதே இந்த நிலைமைக்கு காரணமாகும். அத்துடன் மது பானம் மற்றும் புகை பிடித்தல் பழக்கம் அதிகரிப்பும் இந்த நிலமைக்கு மற்றுமொரு காரணமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## தேக்கு மரங்களை கடத்த முற்பட்ட இருவர் கைது

கொழும்பு,ஜன.29

அலவத்துகொட - கல்கடே பகுதியில் சட்ட விரோதமாக தேக்கு மரங்களை வெட்டிக் கடத்த முற்பட்ட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேக்கு மரங்களை வெட்டி கனரக வாகனமொன்றில் வைத்துக் கடத்திச் சென்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் ஜம்புக்கஹப்பிட்டிய மற்றும் அக்குரணப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொட்டகலை மருத்துவமனைக்கு கிடைத்தது நவீன அம்புலன்ஸ்

கண்டி,ஜன.29

பொதுமக்கள் கோரிக்கை விடுத்து ஒரு வாரத்துக்குள், கொட்டகலை மருத்துவமனைக்கு நவீன முறையிலான நோயாளர் காவு வண்டியொன்றை அரச தலைவர் வழங்கியுள்ளார்.

சொன்ன வாக்கை நிறைவேற்றியதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பிரதேச மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதற்காக வானூர்தி மூலம் வருகை தந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் வானூர்தி காலநிலை சீர்கேட்டால் கொட்டகலை தொண்டமான் தொழிற் பயிற்சி காரியால்ய மைதான வளாகத்தில் திடீரென தரையிறக்கப்பட்டது.

வானூர்தி தரையிறங்கியதைக் கண்ட பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் அவ்விடத்தில் கூடினர். இதன்போது அவர்களின் குறைநிறையைக் கேட்டறிந்த அரச தலைவரிடம் கொட்டகலை மருத்துவமனைக்கு ஒரு நோயாளர் காவு வண்டி தேவை என விடுத்த கோரிக்கைக்கு அமைய, அரச தலைவர்; ஒரு வாரத்துக்குள் நவீன முறையிலான புதிய நோயாளர் காவு வண்டியை மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளித்துள்ளார்.

இதற்கு நன்றி கூறும் வகையில் நேற்று இந்த வண்டியைப் பொதுமக்கள் சேவைக்காக மக்களிடம் கையளிக்கும் நிகழ்வும், நன்றி நவிலும் நிகழ்வும் கொட்டகலை பிரதேச வைத்தியசாலைப் பணிப்பாளர் சாவித்திரி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட சுகாதாரப் பிரிவின் முக்கிய அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது கொட்டகலை பிரதேச குறைநிறைகளை நிவர்த்தி செய்த அரச தலைவருக்கு பொதுமக்கள் மற்றும் சுகாதார பிரிவினர் நன்றிகளைத் தெரிவித்தனர். (ஐ)

## ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜன.29

கொழும்பு - கிராண்பாஸ் பகுதியில் ஹெரோ்யினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண ஊழல் தடுப்பு பிரிவினர் நேற்று முன் தினம் மேற்கொண்ட சுற்றிவளைப்பு ஒன்றின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 145 கிராம் 590 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் 29 வயதுடையவர் எனவும், சந்தேக நபர் மாளிகாவத்தை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரி வித்தனர். (ஐ)

## ரயில் மோதி மூதாட்டி சாவு

மீட்டியகொட-தொட்டகமுவ பகுதியில் ரயிலில் மோதுண்டு மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தறையிலிருந்து வவுனியா சென்ற புகையிரதத்தில் மோதிய குறித்த மூதாட்டி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர் உயிரிழந்தவர் 87 வயதுடையவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரச வங்கிகள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற புத்தாண்டு விழாவில் கலந்து கொண்ட இலங்கை வங்கி இந்துமாமன்ற செயலாளர் வி.ஆர்.சுதா கரன், அமைச்சர் கபிர்ஹாசிமுக்கு புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்தார். (ஐ)





வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் அருள்மிகு கண்ணலிங் கேஸ்வரர் மற்றும் கண்ணகி யம்மன் ஆலயங்களில் இடம் பெற்ற திருவாசக முற்றோதல் மற்றும் ஆருத்திரா தரிசனத் தின் போது...



கிளிநொச்சி கிராஞ்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் ஏழ்மைநிலை யில் உள்ள மாணவர்களுக்கு, றகமா நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங் கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பாடாசலை அதிபர் ச.லதீஸ்குமார், பூநகரி பிரதேச செயலாளர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-7)



பெண்களைத்தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்கள், மற்றும் மாற்றுத்திறனாளியான குடும்பத்தினருக்கான சுயதொழிலை மேற்கொள்வதற்கான வாழ்வாதார உபகரணங்கள் வழங்கப்பட்டன. வடமாகாண. தொழிற்றுறைத்திணைக்களத்தின் அலுவலர் வசீகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிப்பொருள்களை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வழங்கினார். நிகழ்வில் சுமார் ரூ.4 லட்சம் பெறுமதியான வாழ்வாதார உதவிப்பொருள்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன. (ஐ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் வள்ளிபுனத்தில் அமைந்துள்ள இனிய வாழ்வு இல்ல மாணவர்களின் இசைத்திறன் மேம்பாட்டுக்காக ஓகன் இசைக்கருவி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ஐ)



மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரவூர்திச் சங்கத்தினால் 41 மாணவர் களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பாரவூர்திச் சங்கத்தினால் குடாரப்பில் மண் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்வதால் அந்த இடத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களைத் தெரிவு செய்து உபகரணங்கள் வழங்கப்பட்டன. (10)



உயிலங்குளம் மாந்தை தெற்கு பிரதேச அபிவிருத்திக் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, நொச்சிக் குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளையும் சேர்ந்த 65 மாண வர்களுக்கு, வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச் சர் பா.டெனிஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து 195 அப்பியாசக்கொப்பிகளை மாந்தை தெற்கு பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவர் மடுத்தீன் வின்சென்டிடம் வழங்கினார். (ஐ)



தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சா தீனத்தின் வவுனியாவுக்கான திருச்சபைக் கட்டடத்துக்கான அடிக்கல் வவுனியா மறவன்குளம் பகுதியில் கடந்த வாரம் தென்னிந்திய திருச்சபையின் [illegible] அதி [illegible] கலாநிதி [illegible] தியாகராஜாவால் நடப்பட்டது. (ஐ-6)



வேலணை, சரவணை ஸ்ரீ அருள் வரதக[illegible] அம்பாள் ஆலயத்தின் [illegible] கும்பாபி[illegible] பெரு விழா ஆயிரக்கணக்கான பக்த அடியார்[illegible] மத்தியில் அண்மையில் நடைபெற்றது. அதனை[illegible] கோயில் புனரமைப்புக்கான திருப்பணி [illegible] வேலைகள் தலைவர் ஐ.கோ. சந்திரசேகரன் தலை[illegible]மையிலும் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ சி.நந்தகுமார் வழிகா[illegible]ட்டலிலும் நடைபெற்றுவருகின்றன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிவுகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT





கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், பாடசாலைக்கான கணினித்தொகுதி கையேற்கும் வைபவமும் அண்மையில் பாடசாலை அதிபர் குமுதினி அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் தனது ஒதுக்கீட்டில் பெறப்பட்ட பாடசாலைக்கான கணினித் தொகுதியைக் கையளித்தார். சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா. சிவநேசன் கலந்துகொண்டார். (ஐ)







வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியலாயத்தில் தரம் ஒன்றுக்கான மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தா.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலய கோட்டக் கல்வி பணிப்பாளர் எம். பி. நடராஜ், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு ஆசிரிய ஆலோசகர் ஆரம்பப் பிரிவு செ. விஜயகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)



சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் முகமாக வலம்புரி ஹோட்டலினால் யாழ். புகையிரத வளாகத்தினுள் பயன் தரு மரக்கன்றுகள் அண்மையில் நடப்பட்டன. (ஐ)





முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் உள்ள கைவேலி கணேசா வித்தியாலயத்தின் புலமைப் பரிசில் சிறப்பிப்பு நிகழ்வு பாடசாலையின் முதல்வர் செல்வி. இ.பேரின்பராணி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன், விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் ச.சந்திரசேகரம், ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவாகரன் ஆகியோருடன் பெற்றோர், ஆசிரியர், மாணவர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)





வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனால் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கான உதவித்திட்டம் வழங்கப்பட்டது. நட்டாங்கண்டல் விளையாட்டுக் கழகத்திற்கான விளையாட்டு உபகரணங்களும், பொன்னகர், விநாயகபுரம், பூவரசங்குளம் கிராமங்களை உள்ளடக்கி தகர கொட்டகைகளும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



மன்னாரில் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரிக்கு அமைச்சர் பா.டெனிஸ்வரன் 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து ரூபா 50 ஆயிரம் பெறுமதியான மேசைப்பந்து விளையாட்டுக்குரிய உபகரணங்களை வழங்கினார். கல்லூரியின் உடற்பயிற்சி ஆசிரியர் மற்றும் பழையமாணவர் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பொருள்களைப் பெற்றுக் கொண்டனர். (ஐ)





வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தனது நிதியொதுக்கீட்டின் கீழ் கைதடி, தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு 111 பிளாஸ்ரிக் கதிரைகளை வழங்கினார். (ஐ)







வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனால் பொது அமைப்புகளுக்கான உதவித்திட்டம் வழங்கப்பட்டது. இதில் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஐயங்கன்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கு தளபாடங்களும், கோட்டை கட்டிய குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான ஒலி பெருக்கி சாதனம், அம்பலப்பெருமாள் குளம் விளையாட்டுக் கழகத்திற்கான சீருடைகள், கல்வி[illegible] பாடசாலைக்கான நீர் இறைக்கும் இயந்திரம் என்பனவும் பிரதேச செயலகத்தில் வைத்து உரிய அமைப்புகளுக்கு வழங்கப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் அன்பின் கதையைச் சொல்ல வாருங்கள் நண்பர்களே!

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

## 2017ஆம் ஆண்டு திருப்பாலத்துவசபை தினத்தில் அழைப்பு

இயேசுவின் அன்பின் கதையை சொல்ல வாருங்கள் நண்பர்களே என்னும் கருப்பொருளில் 2017ஆம் ஆண்டு திருப்பாலத்துவ சபை தினம் 29 ஜனவரி 2017 அன்று இலங்கையின் கத்தோலிக்க மறைமாவட்டங்கள் அனைத்திலும் கொண்டாடப்படுகிறது. யாழ். மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குநர் உரும்பிராய் பங்குத்தந்தை மடுத்தீன் பத்திநாதர் அடிகளார் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் கொண்டாடப்படும் திருப்பாலத்துவ சபை தினத்தையொட்டி தமது செய்தியை வெளியிட்டுள்ளார். அதனை இவ்வாக்கத்தில் நோக்குவோம்

யாழ். மறைமாவட்ட திருப்பாலத்துவசபை இயக்குநர் மடுத்தீன் பத்திநாதர் அடிகளார். 1843 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் நன்சி என்னும் ஊரில் ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன் ஆண்டகையால் திருப்பாலத்துவ சபை உருவாக்கப்பட்டு கடந்த 174 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இலங்கை கத்தோலிக்க திருச்சபையில் திருப்பாலத்துவ சபையானது கடந்த 65 வருடங்களாக செயற்பட்டு வருகிறது. இலங்கையின் கத்தோலிக்க மறைமாவட்டங்கள் தோறும் திருப்பாலத்துவ சபை இயக்குநர்கள் பணியாற்றுகிறார்கள். யாழ். மறைமாவட்ட திருப்பாலத்துவசபை இயக்குநர் உரும்பிராய் பங்குத்தந்தை மடுத்தீன் பத்திநாதர் அடிகளார் பணியாற்றுகிறார். இவர்கள் அனைவரையும் இணைத்து செயற்படும் தேசிய இயக்குநராக பசில் றொகான் பெர்னாண்டோ அடிகளார் பணியாற்றுகிறார்.



### சிறுவர்களை சிறுவயதில் இருந்தே உருவாக்க வேண்டியது சமூதாயத்தின் கடமை

இன்றைய சிறுவர்கள் எதிர்காலதலைவர்கள், சிறுவர்களை அவர்களின் சிறுவயதில் இருந்தே உருவாக்க வேணடியது ஒரு சமுதாயத்தின் முக்கிய கடமையாகும். சிறுவர்களின் எதிர் காலம் நோக்கிய நீண்ட பயணத்தில் அவர்களோடு பயணித்து, மனித வாழ்வையும் மனித வாழ்வின் விழுமியங்களையும் கற்றுத்தர வேண்டும். வாழ்வின் மென்மையான, மகிழ்வான பகுதிகளை மட்டு மல்ல கடினமான, துக்கமான பகுதிகளையும் கடந்து தொடர்ந்து வாழ வேண்டும் என்ற அந்த மனித வாழ்வின் தத்துவத்தை கற்றுத்தர வேண்டும். மனிதர்களை அவர்களாகவே ஏற்று, அவர்களின் குண நலன்களைப் புரிந்து, கட்டுப்பாடற்ற அன்பைப் பொழிந்து, மனித விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் அவர்களை ஏற்று வாழவேண்டும் என்ற உண்மையை சொல்லித்தர வேண்டும். மனித வாழ்வு எப்போதும் இனிமையானதல்ல அதேவேளை எப்போதும் கடினமானதுமல்ல என்ற உண்மையை சொல்லித்தர வேண்டும். மனித வாழ்வு எப்போதும் போராட்டம் மிக்கது, எப்போதும் போராடியே வெல்ல வேண்டும் என்று கற்றுணர்ந்த பாடத்தை படிப்பிக்க வேண்டும். எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது, எதைச் செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது, எப்படிச்பேசவேண்டும், எப்படிப் பேசக் கூடாது என்ற விடயத்தை தெளிவாக்க வேண்டும். இது போன்ற மனித வாழ்வின் அடிப்படை உண்மைகளை விளையாட்டு விளையாட்டாக அந்த குழந்தை நெஞ்சங்களில் தூவிவிட வேண்டும்.

வாழும் பிள்ளையை மண் விளையாட்டில் தெரியும் என்று சொல்லுவார்கள். மண் விளையாட்டில் வாழ்வின் முழுமையை கற்றுத்தரும் பாடம் இன்றைய கணினி யுகத்திலும் இன்னும் முழுமையாக இல்லாமற் போகவில்லை. எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணிற் பிறக்கையிலே. அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்க்கையிலே என்ற திரைப் படப்பாடல் வரிகள் சிறுவர்களை சிறுவயதில் இருந்தே உருவாக்க வேண்டியது சமுதாயத்தின் கடமை என்பதை தெளிவாக்குகிறது.

### சிறுவர்களை இயேசுவின் சிறிய மறைத் தூதுவர்களாக் மாற்ற வேண்டும்

இன்றைய சிறுவர்களான எதிர்காலத் தலைவர்களை அவர்களின் மிக இளமைக்காலத்தில் இருந்தே உருவாக்க வேண்டும். மனித வாழ்வையும் மனித வாழ்வின் விழுமியங்களையும் இந்த பிஞ்சு நெஞ்சங்களில் விதைத்து அது வளர்ந்து பல மடங்கு பயன்தர அத்திபாரமிடவேண்டும் என்ற உண்மையை அவர்கள் கத்தோலிக்க சிறுவர்கள் என்கின்றவகையில் அவர்களை இயேசுவின் சிறிய மறைத்தூதுவர்களாக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தைக் கொண்டே ஆயர் சாள்ஸ் டீ போபின் ஜான்சன் ஆண்டகை திருப்பாலத்துவ சபையை உருவாக்கினார். சிறுபிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது (மத்தேயு 19:14) என்ற இயேசுவின் வார்த்தைகளின் உண்மைப் பொருளை இவர்கள் விளங்கி எப்போதும் இயேசுவை நோக்கி வந்து கொண்டிருப்பவர்களாக உருவாக்க விரும்பினார். இந்த கத்தோலிக்க சிறுவர்கள் இயேசுவை, அவர்பற்றிய ஆழ்ந்த அறிவை அவரின் புதுமைகள், போதனைகள், படிப்பினைகள், வாழ்க்கைச் சாதனைகள் வழி அறிந்து அவரை ஆழமாக அன்புசெய்யவும் அவருடன் இணைந்து வாழவும் அக் கிறிஸ்தவ வாழ்வை மற்றவர்களுடன் பகிரவும் வேண்டும் என்ற நோக்குடன் திருப்பாலத்துவ சபையை உருவாக்கினார். நற்செய்தி விழுமியங்களான அன்பு, பகிர்வு, தியாகம் போன்ற நற்பண்புகளை இந்தச் சிறுவர்கள் தம் வாழ்வில் கடைப்பிடிக்கவும் அதன்வழி தம் விசுவாச வாழ்வை ஆழப்படுத்தி சாட்சிய வாழ்வு வாழவும் இவர்களை நெறிப்படுத்த திருப்பாலத்துவ சபையை உருவாக்கினார்.

### இன்றைய சிறுவர்களை சிறுவயதில் இருந்தே உருவாக்க வேண்டியது தமிழ் சமூகத்தின் தேவை

இன்று நாம் வாழும் தமிழ் சமூகம் பன்முக சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இதில் இன்று பெற்றோரும் பெரியவர்களும் ஒட்டு மொத்த தமிழ் சமூகமும் எதிர்நோக்கும் பாரிய சவால் இன்றைய இளையோர்களால் ஏற்படுத்தப்படும் சவாலாகும். எங்கும் எதிலும் எப்போதும் வன்முறை, அடிதடி அட்டகாசம், கொலை கொள்ளை வழிப்பறி, வாள் வெட்டு களவு பாலியல் வன்முறை, போதைப்பொருள் குடிவெறி, தொலைபேசி மோட்டார் சைக்கிள் கணினி, இணையம் சமூக வலைத்தளங்கள் முகநூல் போன்றன ஆக்கத்தை விட அழிவையே இளைய சமூகத்தினரால் எடுக்கப்படுகிறது. ஒரு போராட்டத்தின் பின்னரான விளைவுகள் இது போன்ற நிலையை உலகம் முழுவதிலுமே தோற்றுவித்துள்ளது. இளைஞர்களை குறைகூறுவதையும் வெறுப்பதையும் விடுத்து இப்பிரச்சனையை எப்படிக் கையாளலாம் என்பதே தழிழ் சமூகத்தை வழி நடத்துவோர் கண்காணிப்போர் நெறிப்படுத்துவோரின் பணியாக வேண்டும்.

### சிறுவர்களில்விசேடகவனம்செலுத்துவது இளைய சமுதாயத்தோடு தொடர்புடைய சவால்களைத் தீர்க்க சிறந்த வழியாகும்

சிறுவர்களில் விசேட கவனம் செலுத்துவது தமிழ் சமூகம் எதிர் நோக்கும் இளைய சமுதாயத்தோடு தொடர்புடைய இந்த சவால்களை கால ஓட்டத்தில் தீர்க்க சிறந்த வழியாகும் என்ற கண்ணோட்டத்தில் சிந்திப்பது ஒரு சிறந்த முடிவாகலாம். இன்றைய சிறுவர்களின் பிஞ்சு நெஞ்சங்களில் அன்பு உறவை, நம்பிக்கை உணர்வை, நன்கு மதிக்கும் மனப்பாங்கை, உயர்ந்த இலட்சியங்களை, சாதிக்கும் மனநிலையை , தியாக எண்ணங்களை, பகிர்வு நிலைப்பாட்டை, அர்ப்பண உறவை, உருவாக்கி வளர்ப்பது இன்றைய காலத்தின் தேவையாகும். உன்னால் முடியும், மனச்சான்றை மதி, முயற்சித்தால் வெல்வாய், மனம் சோராதே, நம்பிக்கை இழக்காதே, அவசர முடிவு எடுக்காதே, தொடர்ந்து போராடு,தோற்றாலும் சோர்ந்து விடாதே, இறுதிவரை போராடு, வெற்றி உனதே, வாழ்க்கை வாழ்வதற்கே, என்றும் இறைவனே துணை என்ற நல் எண்ணங்களை உருவாக்கி வளர்ப்பதும் இன்றைய காலத்தின் தேவையாகும். விசுவாசம் நம்பிக்கை அன்பு , ஏற்றல் புரிதல் தாங்குதல், போன்ற பண்புகளையும் உருவாக்கி வளர்ப்பது காலத்தின் தேவையாகும். ஒவ்வோர் நாளும் ஒரு புதிய நாள். அது புதுமையோடும் புனிதத்தோடும் சாதிக்கும் மனப்பாங்கோடும் வாழப்படவேண்டும்.

### நவீன யுகம் கவனத்தோடு அனுகப்பட வேண்டும்

இன்று அனைத்துமே கணினி மயமாகி கணப்பொழுதில் முழு உலகோடு தொடர்பாகவும் காரியமாற்றவும் கூடிய நிலை தோன்றியுள்ளது. ஊடகமானது அனைத்தையும் ஆளவும் ஆக்கிரமிக்கவும் தொடங்கியுள்ளது. தொழில் நுட்பமானது ஊடகத்தோடு இணைந்து பல புரட்சிகளை ஆற்றத் தொடங்கிவிட்டது. ஊடகம் இன்று எல்லோருக்கும் எல்லாமாகி விட்டது. சமூக வலைத்தளங்கள் குறிப்பாக முக நூல், வட்ஸ் அப், யூரியூப் போன்றன இளம் சமூகத்தினரை ஆட்டிப் படைக்கத் தொடங்கியுள்ளன. இந்த சமூக வலைத்தளங்கள் வழி தொடர்புகளையும் உறவுகளையும் ஏற்படுத்தி ஏமாந்து போவோர் தொகை அதிகரித்தே வருகிறது. காதல் என்ற பெயரில் மானத்தையும் பணத்தையும் இழப்போர் தொகை அன்றாடம் அதிகரித்தே வருகிறது. பல தற்கொலைகளுக்கும் மான இழப்புக்களுக்கும் பொருள் இழப்புக்களுக்கும் இந்த சமூக வலைத் தளங்கள் காலாயுள்ளன என்பது வேதனையானது. இணைய வழி அறிவை வளர்க்கலாம் என்கின்ற வேளை அது உரிய விதமாகப் பயன்படுத்தப்படாமல் பலரின் அழிவிற்கும் அபாசத்திற்கும் வழியாயும் உள்ளது. நவீனகைத் தொலைபேசிகள், அவற்றின் வசதிகள் வாய்ப்புக்கள் என்பன இளையவர்களுக்கு உதவம் சாதனங்களாக இருக்கும் வேளை அவையே அவர்களுக்கு சவால் விடும் சாதனங்களுமாகியுள்ளன. செல்பி மோகம் என்பது வேகமாக வளர்ந்து இலங்கையிலும் உயிர்களைப் பறிக்கும் ஒன்றாகி விட்டது.

### எதிர்காலச் சிறுவர்கள் எவ்வாறு இந்த நவீன யுகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட போகிறார்கள்

இந்த நிலையில் எதிர்காலச் சிறுவர்கள் எவ்வாறு இந்த நவீன யுகத்திற்கு அறி முகப் படுத்தப்பட போகிறார்கள். இன்று சிறுவர்களும் இளையோரும் பெற்றோரையும் பெரியவர்களைக் காட்டிலும் இந்த நவீன தொழில் நுட்ப கருவிகளையும் ஊடகத்தையும் குறிப்பாக சமூக வலைத்தளங்களையும் அறிகிறார்கள். வேகமாகப் புரிந்து தம்முடையதாக்கிக் கொள்கிறார்கள். சிறுவர்களுக்கு நவீன யுகத்தின் வசதிகளையும் வாய்ப்புக்களையும் அறிமுகப்படுத்துவது அவசியமானது. அதேவேளை அவற்றின் நன்மை தீமைகளையும் எப்படிப் பாவிக்க வேண்டும், எப்படிப்பாவிக்கக் கூடாது என்ற நெறிகளையும் கற்றுக் கொடுப்பதோடு அதன்படி செயற்படுகிறார்களா என்பதையும் உறுதி செய்ய வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. கற்றுக் கொடுக்க வேண்டிய வயதில் கற்றுக் கொடுக்காது, வழிகாட்டும் வயதில் வழிகாட்டாது , நெறிப் படுத்தும் வயதில் நெறிப்படுத்தாது பின்னர் கட்டுக்கடங்காமல் அவர்கள் வந்த பின்னர் தண்டிப்பதும் வேதனை அடைவதும் வீணானது. அன்போடு கூடிய தண்டிப்பு சிறுவயதில் வழங்கப்படும் போது சிறுவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். காலம் கடந்த பின் வழங்கப்படும் தண்டிப்புக்களே விபரீத முடிவுகளை எடுக்க அவர்களைத் தூண்டுகிறது.

சிறுவர்களை அன்போடும் பராமரிப்போடும் வளர்ப்பது , மகிழ்வோடு ஏற்றுக்கொள்ளும் விதமாக அறிவு புகட்டுவது, எது சரி எது பிழை என்பதை தெளிவாக்குவது, அதிக அன்பையும் சுதந்திரத்தையும் கொடுக்காது அளவான அன்போடு கண்டிப்பையும் வழங்குவது , எப்படி வாழவேண்டும் என்பதை போதித்தும் வாழ்ந்தும் காட்டுவது போன்றன எல்லாமே குடும்ப வட்டத்தில் இருந்து கற்றுத் தரப்பட வேண்டும். குடும்பத்திற்கு வெளியேயும் குருக்கள், கன்னியர், மறை ஆசிரியர்கள், பெரியோர் போன்றோரிடமிருந்தும் கற்றுத் தரப்பட வேண்டும். திருப்பாலத்துவ சபை தினத்தில் அழைப்பு இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமந்திரனை...

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர் என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மறவன்புலவில் கடந்த ஆண்டு தற்கொலை அங்கி மீட்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகளுக்கும், இவர்களுக்கும் இடையே தொடர்புகள் இருப்பதற்கு வலுவான ஆதாரங்கள் இருப்பதாக இந்த விசாரணையுடன் தொடர்புடைய தரப்புக்கள் குறிப்பிடுகின்றன.

சுமந்திரனைப் படுகொலை செய்வதற்குச் சதித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்குக் கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி தகவல் வழங்கப்பட்டது. எவ்வகையான பாதுகாப்பு அச்சுறுத்தல் என்பது தெரியப்படுத்தப்படவில்லை.

இதன் பின்னர் இந்த மாத முற்பகுதியில் முன்னாள் போராளிகள் 4 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் வடமராட்சி கிழக்கு மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் சுமந்திரனை இலக்கு வைத்து மேற்கொள்ள இருந்த தாக்குதல் தொடர்பாகவே கைது செய்யப்பட்டனர் என அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவர்களிடம் கிளைமோர் இருந்ததாக நீதிமன்றில் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 13 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு, மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் தொடர்பிலான பொதுமக்கள் கலந்துரையாடல், நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் தலைமையில் நடைபெறத் திட்ட மிடப்பட்டிருந்தது. இருப்பினும் இறுதி நேரத் தில் – ஜனவரி 11 ஆம் திகதி, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கூட்டம் திடீரென இரத்துச் செய்யப்பட்டது.

கூட்டம் நடைபெற இருந்த 13 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகளுடன் தொடர்புடையவர்களே தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என அரச தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நவம்பர் 6ஆம் திகதி சாவகச்சேரியில் நடந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கே. சயந்தன், மறவன்புலவில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கியுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி இன்னமும் கைது செய்யப்படவில்லை என்றும், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைக் கொலை செய்யும் நோக்குடன் திட்டம் தீட்டப்பட்டிருந்தாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மறவன்புலவு தற்கொலை அங்கிச் சம்பவத்துடன், தற்போது கைது செய்யப்பட்டவர்களுக்குத் தொடர்புகள் இருப்பதாகவும் விசாரணையாளர்கள் அறிந்துள்ளனர்.

'உண்மையாக இதை யார் இயக்குகின்றார்கள் என்பது எனக்குத் தெரியாது. இதற்குப் பல சாத்தியங்கள் இருக்கின்றன' என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார். (த-5)

## இலங்கை மீது...

ஊடகச் செயற்பாட்டாளர்கள், அரசின் முக்கிய அமைச்சர்கள் உள்ளிட்ட பல தரப்புக்களுடன் அவர் பல்வேறு கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

'ட்ரம்ப் பதவியேற்றதால், இலங்கை தொடர்பிலான அமெரிக்காவின் அயலுறவுக் கொள்கை மாற்றமடையும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். அவ்வாறு எதிர்பார்ப்பவர்கள் ஏமாற்றமடைவார்கள். ஐ.நா. தீர்மானத்தைநடைமுறைப்படுத்துவதற்கு இணங்கி இலங்கை அரசு அதற்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது. இன்னமும் நிறை வேற்றவேண்டிய விடயங்கள் அதிகமாக உள்ளன. அந்த விடயங்களை நிறைவேற்று வதற்குக் கால அவகாசம் வழங்கி, எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத் தொடரில் பிரேரணை கொண்டு வரப்படும்' என்ற விடயங் களைக் கொழும்பு அரசுக்கு, அன்ஜிலா தெரியப்படுத்தியுள்ளார். (த-5)

## கொக்கட்டிச்சோலை...

1987ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் பணியாற்றிய நூற்றுக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நினைவு நிகழ்வை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிப்பளை பிரதேசக் கிளை ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சீ.யோகேஸ்வரன், வியாழேந்திரன் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். (த-ய-46,47)

## புதிய...

பிக்க அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாகப் புதிய சட்டமொன்றை கொண்டு வருவது குறித்த கலந்துரையாடல் ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு இராஜங்க அமைச்சர், அயலுறவு அமைச்சர் உட்பட தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய முக்கிய பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டுள்ளனர்.

நீண்ட கலந்துரையாடலின் பின்னரே இவ்வாறு புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமொன்று கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு அரசமைப்பில் அறிமுகம் செய்யப்பட்ட பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டமே தற்போது நடைமுறையில் உள்ளது. கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்த இந்தச் சட்டத்தை மாற்றி புதிய சட்டமொன்றைக் கொண்டுவரும்படி தமிழ் அரசியல் தலைமைகள் பலமுறை கோரியும் அரசு அதனைக் கண்டு கொள்ளவில்லை.

கூட்டு அரசு இந்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் என்று வாக்குறுதியளித்திருந்தது. என்றாலும், அரசு ஆட்சி பீட மேறி இரண்டு வருடங்கள் கடந்த போதிலும் இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க எவ்வித முயற்சியையும் மேற்கொண்டிருக்கவில்லை. தற்போது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்குக் கிடைக்கஐரோப்பிய ஆணைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சலுகையை அரசு பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் கட்டாயம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றிப் புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமொன்று கொண்டுவரப்பட வேண்டுமென்று ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு நிபந்தனை விதித்துள்ளது. அதன் அடிப்படையில் தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாகப் புதிய சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தச் சட்டம் தொடர்பிலான வரைவை எதிர்வரும் பெப்ரவரி மாத இறுதியில் அல்லது மார்ச் மாத்தில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கக்கக் கூடிய வாய்ப்புள்ளதாகவும் அறிய முடிந்தது. (த-4)

## சார்க்...

அடுத்த வருடம் அமைக்கவுள்ளன. இந்தக் கலாசார நிலையத்தின் மூலம் ஏனைய நாட்டுக் கலாசாரங்களை நாம் அறிந்து கொள்ளவும் எமது கலாசாரங்களை அவர்கள் தெரிந்து கொள்ளவும் முடியும்.

இவ்வாறு உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் எஸ்.பீ. நாவின்ன தெரிவித்தார்.

பருத்தித்துறையில் 20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மத்திய கலாசார நிலையம் நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலாசார விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்கான நிலையத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். கலாசாரம் என்கின்றபோது அதில் இன, மத, மொழி பேதங்கள் எதுவும் இல்லை. நாங்கள் சகல இனத்தவர்களும் ஒன்றிணைந்துதான் கலாசாரத்தை வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும். சகல இனத்தவர்களுக்கும் தனித்தனியான கலாசாரங்கள் உள்ளன. பிறப்பிலிருந்து இறக்கும்வரை கலாசார நடைமுறைகள் உள்ளன. ஒற்றுமையின் மூலமே நாங்கள் எமது நாட்டின் முன்னேற்றத்தை மேற்கொள்ள முடியும். வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பல மதத்தவர்கள், பல இனத்தவர்கள் பல தரப்பட்ட பதவி நிலைகளை வகிக்கின்றனர். இவர்கள் எல்லோரும் சேர்ந்துதான் ஒருங்கிணைந்த செயற்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றனர்.

மகிந்த ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட நல்லிணக்கம் நாட்டில் நிலவவில்லை. இவ்வாறு ஒற்றுமையுடன் காணப்பட்டால்தான் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். அதேபோன்று எமது வெவ்வேறு வகைப்பட்ட கலாசாரங்களையும் நாங்கள் முன்னேற்றம் காண முடியும். சாவகச்சேரி, சண்டிலிப்பாய், கரவெட்டி ஆகிய இடங்களில் இந்த வருடம் மார்ச் மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் முடிவதற்குள் கலாசார நிலையங்களைத் திறந்து வைக்கவுள்ளோம்.

வடக்கையும் தெற்கையும் இணைக்கும் வகையில் இரண்டு தரப்புக்களும் இணைந்து செயற்படக்கூடிய வகையில் கலாசார மத்திய நிலையம் திறப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு வடபகுதி, தென்பகுதி மற்றும் முஸ்லிம்களையும் இணைத்துக் கலாசார இணக்க நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அனுராதபுரத்தில் கலாசார நிலையம் அமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தை நேற்று முன்தினம் மாலை சுற்றிப்பார்த்தேன். எமது பகுதியை விட யாழ்ப்பாணம் அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளது. இங்குள்ள இளைஞர், பெண்கள், சிறுவர்கள் யாவரும் மிகவும் சந்தோசமான நிலையில் காணப்படுகின்றனர். இவர்களைப் பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது-என்றார். (த-10,26)

## ஆசிரியர்களுக்கு...

அமர்வில் எடுத்துக் கொள்வதற்காகக் கண்டனப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிமாவட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது சில ஆசிரியர்கள் கல்வி அமைச்சின் செயலரின் 'கொலரை'ப் பிடித்துள்ளனர். கல்வி அமைச்சின் செயலரை வெளியேறாமல் முற்றுகையிட்டுள்ளனர்.

மாணவர்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டிய ஆசிரியர்கள் இவ்வாறு அடாவடியாகச் செயற்பட்டமையைக் கண்டித்து, எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா பிரேரணை சமர்ப்பித்துள்ளார்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள மாகாணசபையின் 83 ஆவது அமர்வில் அந்தப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்படுவதற்காக நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (த-5)

## முருங்கைக்கு...

வாய்ப்புக்கள் தேவைப்பட்டால் எதிர் காலத்தில் அவை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என ஹேலீஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் ரித்வி கீத் தெரிவித்துள்ளார்.

ஹேலீஸ் நிறுவனத்தின் வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் ஒரு மில்லியன் முருங்கைக் கன்றுகள் விநியோக்கிக்கும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் முருங்கைக் கன்று பாரம்பரியமான மரமாகும். எந்தக் கால நிலையிலும் தாக்குப்பிடித்து வளரக்கூடிய இயல்பைக் கொண்டது. இந்த முருங்கை மரங்கள் ஆண்டாண்டு காலமாக தோட்டங்களில் மட்டுமல்லாது வீட்டுத் தோட்டங்களிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

முருங்கை இன்றைய காலத்தில் மருத்துவத்துக்காக, எண்ணெய்க்காக பல வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது. பொதுவாக வெளிநாடுகளில் இதற்கு அதிக வரவேற்பு காணப்படுகின்றது. முருங்கை இலையை பொடியாக்கி மருந்துகள் உருவாக்குகின்றனர். அவ்வாறான மருந்துப் பொருள்கள் தற்போது சந்தையில் அதிக விலைகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் முருங்கை எண்ணெய்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு பல வழிகளில் நாம் இதனூடாக நன்மைகளைப் பெறமுடியும். நாம் முருங்கை இலை, முருக்கைங்காய் போன்றவற்றை உணவுடன் சேர்த்து வந்தோம். ஆனால் தற்போது அதனை எமது அன்றாட உணவில் பயன்படுத்துவதைக் குறைத்து வருவதை அவதானிக்க முடிகின்றது. எனவே நாம் அதனை ஊக்குவிக்கவேண்டிய தேவையுள்ளது.

இவ்வாறன திட்டத்தின் ஊடாகப் போசாக்கு மட்டத்தையும் வாழ்வாதாரத் திட்டத்தையும் வளர்க்க முடியும்.

இது பல போசனைக் கூறுகளைக் கொண்ட உணவாகும். ஒரு மரம் மூலம் சந்தைவாய்ப்புக்கு ஏற்ப சில சமயங்களில் ஒரு கிலோ ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. அப்படிப் பார்க்கப் போனால் ஒரு தொகை மரங்கள் மூலம் அதிக வருமானத்தை எட்டிக் கொள்ளமுடியும். சில சந்தர்ப்பங்களில் விலை வீழ்ச்சியும் ஏற்படுகின்றது. அந்த சந்தர்ப்பங்களில் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படின் அதனையும் நாம் மேற் கொள்ளத் தயாராகவுள்ளோம்-என்றார். (த-8)

## மைத்திரி...

அமையும். அதற்கு முன்னர் அரசியல் அதிகாரம் குறித்து எவரும் நினைத்துப் பார்க்க முடியாது.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சூளுரைத்துள்ளார்.

மகிந்த ஆதரவு அணியினர் நுகேகொடையில் நேற்று முன்தினம் முன்னெடுத்த போராட்டத்தில், இந்த ஆண்டு மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகுவார் என்று தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். மொனராகலை கும்புக்கன் ஓயா நீர்த்தேக்கத் திட்ட ஆரம்ப நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரத்துக்காக அன்றி நாட்டைக் கட்டியெழுப்பவே அனைவரும் இன்று ஒன்றிணைந்து போராடவேண்டியுள்ளது. அதிகாரத்தைக் கோரி சிலர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். 2020 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நடைபெறும் தேர்தலில் மக்கள் தீர்ப்புக்கு அமையவே அனைத்தும் அமையும். அதற்கு முன்னர் அரசியல் அதிகாரம் குறித்து எவரும் நினைத்துப் பார்க்கவும் முடியாது.

தேர்தல் காலத்தில் அரசியல் நோக்கங்களுக்காகப் போராட்டங்களை முன்னெடுத்த போதும் மக்கள் விருப்பத்தில் தெரிவான புதிய அரசு முன்னேற்றத் திட்டங்களுடன் நாட்டை முன்கொண்டு செல்கையில் குறுகிய அரசியல் நோக்கங்களை மறந்து அந்தத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே நாட்டை விரும்பும் அனைத்து அரசியல்வாதிகளினதும் பொறுப்பு - என்றார். (த-5)

## இந்திய...

சந்துவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தியக் குடியரசு நாளை முன்னிட்டு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினால், இந்தியா இல்லத்தில் வரவேற்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டபோதே, புதிய இந்தியத் தூதுவருடன், இரா.சம்பந்தன் கலந்துரையாடினார். இது சம்பிரதாய பூர்வமாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் குறுகிய நேரச் சந்திப்பாகவே இடம்பெற்றது. இந்தியத் தூதுவராக தரன்ஜித் சிங் சந்து கடந்த 24 ஆம் திகதி பொறுப்பேற்றிருந்தார். பதவியைப் பொறுப்பேற்ற பின்னர், இரா. சம்பந்தனை சந்தித்துப் பேசியமை இதுவே முதல்முறையாகும். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி இராசலிங்கம்



யாழ் சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசலிங்கம் 25.01.2017 புதன்கிழமை காலமானார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் நாகம்மா தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ் சென்றவர்களான சண்முகம் பூரணம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் பத்மாதேவி(உடுவில்). பிறேமாதேவி (பருத் தித்துறை). பரமேஸ்வரலிங்கம் (சுவிஸ்). பத்மலிங்கம் (லண்டன்). பாலதேவி (கனடா). பற்குண லிங்கம்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகா லிங்கம் (சுவிஸ்). தங்கவடி வேலு(பருத்தித்துறைசிற்றி வெதுப்பகம்). தவ றஜனி(சுவிஸ்) ,பிறேமா (லண்டன்). சுகுணகுமார் (கனடா). ஞானாம்பாள் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற ஏரம்பு மற்றும் மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற துளசிதாசன் மற்றும் ஜெகசொரூபி. ரூபினி. கஜன்-ஜனனி (பிரான்ஸ்). சுஜன்-அஞ்சனா. அரவிந் (சுவிஸ்).அஜித்(சுவிஸ்). சங்கீத்தா (லண்டன்). சரணியா (லண்டன்).சர்மினி(லண்டன்).சஜன் (கனடா). சோனர் (கனடா).மனு (கனடா).பகீரதன் (கனடா).மதுசா (கனடா). யது (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் கௌரி (பிரான்ஸ்). கௌசிக்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மாகியப்பிட்டி கொட்டுப் பனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்கள் .நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொட்டடி,
உடுவில்,சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மாணவர்களை பதியுமாறு அறிவுறுத்து

யாழ். மத்திய கல்லூரியிலிருந்து ஓகஸ்ட் மாதம் நடைபெற விருக்கும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவை தோற்றவிருக்கும் மாணவர்கள் உடனடியாக அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 3 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அதிபர் அறிவித்துள்ளார். (ற-ரி)

**வடக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி) எழுப்பியுள்ளார். வடக்கு மாகாண சபையின் அமர்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. வடக்கு முதலமைச்சரிடம் இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பியுள்ள கேள்வி நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கனடாவுக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின்போது வவுனியா நகர், முல்லைத்தீவு நகர் தொடர்பான இரட்டை நகர உடன்படிக்கையைக் கனடாவின் மாநிலங்களுடன் மேற்கொண்டிருந்தார்.

இது தொடர்பிலும் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கேள்வி எழுப்பியுள்ளார். உடன்படிக்கைக்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்பட்டதா ? உடன்படிக்கையின் வரைவைச் சபைக்குச் சமர்ப்பிக்க முடியுமா ? முல்லைத்தீவு மாவட்டச் செயலர், வவுனியா நகர சபையின் செயலர் ஆகியோரின் அனுமதியை உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட முதலமைச்சர் பெற்றிருந்தாரா ? என்று வினாத் தொடுத்துள்ளார்.

கனடியத் தமிழ் காங்கிரஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கின் சுகாதார மற்றும் கல்வி தொடர்பான அபிவிருத்தி மாநாடு கடந்த 16 ஆம் திகதி கனடாவில் நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெற்ற சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் கனடாவில் இருந்தார். மாநாட்டுக்கு முதலமைச்சருக்கு அழைப்புக் கிடைத்ததா ? அழைப்புக் கிடைத்திருந்தால் ஏன் செல்லவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளார். நாளை மறுதினம் நடைபெறும் அமர்வில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இதற்குப் பதில் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### வைத்தி சத்தியநேசன்



தோற்றம்
02.02.1949

மறைவு
29.01.2016

அன்பாய் பண்பாய் பாசமாய்
எம்மை வளர்த்த அப்பா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நாம் உம்மை மறவோம்

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(AJA 418)
(14,17,18)

என்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

## மரண அறிவித்தல்

### சிதம்பரநடராஜா இன்பபாலன்
(கணக்காளர்)

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, மலாவி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநடராஜா இன்பபாலன் 26.01.2017 வியாழக்கிழமை மலாவியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநடராஜா - நிதிபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புத்திரனும் டென்மார்க்கைச் சேர்ந்த ச. சசிதேவியின் அன்பு சகோதரனும் சுவேந்திரியின் அன்புக் கணவரும் பரதன், துஷ்யந்தன், லாவணியா ஆகியோரின் தந்தையாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலாவியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம்.

தகவல்:
லிங்கேஸ்

## கண்ணீர் அஞ்சலி

### கிட்ணன் நாராயணன்



எனது ஆருயிர் நண்பன் கிட்ணன் நாராயணனின் (நாகராசா) பிரிவுச் செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க.சோ. சிவகுமார்
(சிவ சக்தி ஜுவல்லறி - முன்னாள் உரிமையாளரும், சமாதான நீதிவானும்)
இல. 78, அரசடி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
01.08.1944

மறைவு
26.01.2017



### Dr. கைலாசப்பிள்ளை ஸ்ரீரஞ்சன்

(Retired Medical Practitioner - Government Hospital Kilinochchi, Founder of Kilinochchi Clinic, Kandy Road, Kilinochchi, Partner of Central Medical Clinic, Dehiwala.

யாழ். பண்ணாகம் தெற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. கைலாசப்பிள்ளை ஸ்ரீரஞ்சன் 26.01.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற Dr. E. கைலாசப்பிள்ளை திருமதி வடிவாம்பிகை கைலாசப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வடலியடைப்பு. பண்டத்தரிப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற A.S. நடராஜா - திருமதி மனோன்மணி நடராஜா தம்பதியரின் அன்பு மருமகனும் விமலராணியின் அன்புக் கணவரும் உமா பாஸ்கரமூர்த்தி(UK), காலஞ்சென்ற சந்திரமோகன்(Australia), காலஞ்சென்ற பராபரி, ஹரிஹரன்(UK), கௌரி புண்ணியமூர்த்தி (Canada), மைதிலி தர்மகுலசிங்கம் (திரு)(UK), ராகினி சிவகுமார்(UK), ரோகினி திருநீலகண்டன்(Australia), ரதி நித்தியானந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாஸ்கரமூர்த்தி(UK), கோமதி(Australia), சிவயோகினி(UK), புண்ணியமூர்த்தி(Canada), தர்மகுலசிங்கம்(UK), சிவகுமார் (UK), திருநீலகண்டன்(Australia), நித்தியானந்தன்(UK), நாகராணி தியாகராஜா(UK), யோகராணி செல்வராஜா(Canada), விக்னராஜா காலஞ்சென்ற தியாகராஜா, செல்வராஜா(Canada), மதிவாணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மருமக்களின் அன்பு மாமனாரும் பேரப்பிள்ளைகளின் அன்புப் பேரனும் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்களின் நலன்விரும்பியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணிவரையும், 30.01.2017 திங்கட்கிழமை மு.ப 9.00 மணிமுதல் வைக்கப்பட்டு பி.ப 2.00 மணியளவில் கிரியைகளின் பின்னர் தகனக்கிரியைக்காக கல்கிஸை இந்து மயானத்திற்கு பி.ப 4.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

05, 4/6, Francis Road, Colombo 06.
Tel: 011 2596209, 077 2969892

தகவல்:
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
13 . 09 . 1980



இறப்பு
09 . 02 . 2016

### அமரர் ரேணுகா தவயோகராஜன்

திதி: 29.01.2017

காலம் கடந்தாச்சு ! கனவுகள் கலைந்தாச்சு!
ஆண்டொன்று ஆயாச்சு - உன்
நினைவு அது நீங்கவில்லை
கணமேனும் மறவாத உன்
முகம் தன்னைத் தேடுகின்றோம்
எம்மை எல்லாம் தவிக்க விட்டு
பதில் ஏதுமே சொல்லாமல்
பயணம் தான் சென்றனையோ!

[illegible]
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்.
East Ham London.

## மரண அறிவித்தல்

பிறப்பு
23 . 07 . 1930



இறப்பு
27 . 01 . 2017

### கதிர்த்தம்பி வேலாயுதபிள்ளை

(Retd. Financial Assistant- Education Department, Jaffna)
(அகில இலங்கை சமாதான நீதிவான்).

யாழ் வீமன்காமம் வடக்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அல்வாய்மேற்கை வாழ்விடமாகவும் வெள்ளவத்தை கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி வேலாயுதபிள்ளை 27.01.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் வீமன்காமம் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி.கதிரித்தம்பி இராசம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் அல்வாய் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மரு மகனும்வனஜா. ஜெயபவானி (Swiss) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீரங்கன்(Retd.Principal). குருபரன்(Swiss) ஆகியோரின் அன்பு மாமனாரும் அச்சுதன் (First Capital Holdings). Dr.ஆர்த்திகை(Jaffna Teching Hospital). விவேகா (Silueta, MAS Holdings). கீர்த்தனா (ZHAW - Bio Engineering). மௌலிகரன்(University of Bern, Medicine). வர்ணசுதன்(Royal College). சாய் ஆரபியின் அன்பு அம்மப்பாவும் காலஞ்சென்ற நாகம்மா. பாலசேகரம். (Retd. Chief Clerk, Local Government) பாலசுப் பிரமணியம் (Retd.ADE.Vaddamaratchi). ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தங்கம். அன்னப்பிள்ளை. பத்தினிப்பிள்ளை. இராசா.செல்லம்மா. சின்னத்துரை (Retd.Accountant, Local Government) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் இருந்துபார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிகிரியைகளின் பின்னர் 6 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:- க. ஸ்ரீரங்கன் (011-2365311/ 0772942761)
க. குருபரன் (+41792705591 - Swiss)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் இல்ல மெய்வன்மை



யாழ்ப்பாணம், ஜன. 29

**வரணி மத்திய கல்லூரி**

வரணி மத்திய கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் நடைபெறவுள்ளன.

கல்லூரி அதிபர் பீ.செல்வநாயகம் தலைமையில் கல்லூரியின் மைதானத்தில் நடைபெறுமநிகழ்வுக்கு தலைமை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளருமான வ.நடராசாவும் கௌரவ விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபரும் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமாகிய சி.துரைராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**எழுதுமட்டுவாழ் கரம்பம் அ.த.க.**

எழுதுமட்டுவாழ் கரம்பகம் அ.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி த.அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சீ.ஏ.திருக்குமாரும் சிறப்பு விருந்தினராக சைவ சமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செல்வி இ. இராமலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை**

பளை இத்தாவில் வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் குறித்த பாடசாலையின் மைதானத்தில் பெப்ரவரி முதலாம் திகதி இடம்பெறவுள்ளன. பாடசாலை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக பளைக் கோட்டக் கல்வி அலுவலர் ஐ.குகானந்தராஜா, பளை அஞ்சல் அலுவலர் சு.ரசிகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9)



# மன்னார் பிரதேச செயலக கரப்பந்து; துள்ளுக்குடியிருப்பு மேரிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 29

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப் பந்தாட்டத் தொடரில் சென். மேரிஸ் அணி சம்பியனானது. மன்னார் பொது உள்ளரங்கில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் துள்ளுக்குடியிருப்பு சென். மேரிஸ் அணியை எதிர்த்து மன்னார் புதுகுடியிருப்பு அல் அறாபா அணி மோதியது. 3 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந் தது. ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது சென். மேரிஸ் அணி. (ம-23)

# ஆஸி. தொடரில் செரீனா சம்பியனானார் முதலிட அரியணை மீண்டும் கிடைத்தது



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் செரீனா வில்லியம்ஸ். நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. செரீனா வில்லியம்ஸை எதிர்த்து அவர் சகோதரியான வீனஸ் வில்லியம்ஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரு செற்களையும் முறையே 6:4, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார் செரீனா வில்லியம்ஸ்.

தொடர் ஆரம்பித்த போது பன்னாட்டுத் தரப்படுத்தலில் செரீனா இரண்டாவது இடத்தில் இருந்தார். இந்தக் கிண்ணத்தைக் கைப்பற்றியதை அடுத்து அவர் மீண்டும் முதலிடத்துக்கு வந்தார். செரீனாவுக்கு இது 23ஆவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணமாகும். இதன் மூலம் அதிக கிண்ணங்களைக் கைப்பற்றிய வரிசையில் அவர் இரண்டாவது இடத்துக்கு முன்னேறினார். ஜேர்மனின் ஸ்டெபி கிராப் பின்தள்ளப்பட்டார். (ம)

# கயிறிழுத்தல் வலைப்பந்து

யாழ்ப்பாணம், ஜன. 29

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான இருபாலாருக்குமான கயிறிழுத்தல், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் ஆகியன அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத் தில் இன்று இடம்பெறவுள்ளன. (ம-23)

# பூப்பந்தாட்டம் மேசைப்பந்து

யாழ்ப்பாணம், ஜன. 29

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்துக்கான இருபாலாருக்குமான பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகள் மன்னார் பொது உள்ளரங்கில் இன்று இடம்பெறவுள்ளன. (ம-23)

# மன்னார் விளையாட்டுக் கட்டடத் தொகுதிக்கு நடப்பட்டது அடிக்கல்





மன்னார் நானாட்டன் பிரதேச செயலக பிரிவில் அமைக்கப்படவிருக்கும் விளையாட்டுக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்றுமுன் தினம் மாலை நடைபெற்றது.

பிரதேசத்தில் உள்ள விளையாட்டு வீர வீராங்கனைகள் தேசிய மற்றும் பன்னாட்டு ரீதியில் வெற்றிகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள நறுவிலிக்குளத்தில் விளையாட்டுக் கட்டடத் தொகுதி அமைக்கத் திட்டமிடப்பட்டது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரிஸ், அமைச்சர் ரிசாத் பதியுதீன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, எச்.எம்.ரயீஸ் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டனர். (ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெடரர் - நடால் இறுதியில் இன்று


பெடரர்

ஆஸ்திரேலிய ரென் னிஸ் தொடரின் அரை யிறுதி ஆட்டத்தில் பெடரர், நடால் ஆகிய முன்னணி வீரர்கள் இன்று பலப் பரீட்சை நடத்தவுள்ளனர்.
நடப்பு வருடத்தின் முத லாவது பன்னாட்டு அந் தஸ்துப் பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் இன்று இடம் பெறவுள்ளது. நடாலை எதிர்த்து பெடரர் மோதவுள் ளார்.
சுவிற்சர்லாந்தின் முன் னணி வீரரான பெடரர் ஏற் கனவே இறுதிக்குத் தகுதி பெற்றிருந்தார். தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நடாலை எதிர்த்துப் பன்னாட்டுத் தரப் படுத்தலில் 15 ஆம் இடத்தில் உள்ளவரான பல்கேரிய வீரர் டிமிட்ரோவ் மோதினார்.
முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப் படை யில் கைப்பற்றினார் நடால். இரண்டாவது செற்றை 7:5 என்று கைப்பற்றி பதிலடி கொடுத்தார் டிமிட்ரோவ். மூன்றாவது செற் 7:5 என்ற புள்ளிகளின் அடிப் படையில் மீண்டும் நடா லின் வசமானது. நான்கா வது செற்றை 6:4 என்று கைப்பற்றினார் டிமிட்ரோவ். முதல் நான்கு செற்களின் நிறைவில் இருவரும் 2:2 என்றிருந்தனர். இறுதி செற்றில் வெற்றிபெறுப வரே ஆட்டத்தில் வெற்றி யாளர் என்ற நிலை இருந் தது. 6:4 என்ற புள்ளி களின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப் பற்றி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றார் நடால். இந்த ஆட்டம் 4 மணித்தியாலம் 56 நிமிடங் கள் இடம்பெற்றது. (ம)


நடால்



## இந்தியாவிடம் மிகக் கவனம்; எச்சரிக்கிறார் பொண்டிங்

இந்தியாவிடம் ஆஸ்திரேலிய அணி மிகவும் கவனமான இருக்க வேண்டும் என்று எச்சரித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான பொண்டிங். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் பெப்ரவரி 23 ஆம் திகதி ஆரம்ப மாகிறது. இந்த நிலையிலேயே ஆஸ்திரேலிய அணிக்கு பொண்டிங்கிடம் இருந்து எச்சரிக்கை கிடைத்துள்ளது.
ஆஸ்திரேலிய அணி இந்திய மண்ணில் திணறும் என்று நினைக்கிறேன். எந்தவொரு அணியும் இந்தியா சென்றால் திணறத்தான் செய்கிறது. இந்திய மண்ணில் விளையாடச் செல்லும் அணிக்கு மிக மிகக் கடின மான நிலை ஏற்படுகிறது. முன்னர் இருந்ததை விட தற்போது இந்தியா தங்களுக்கு ஏற்றவாறு ஆடுகளத்தைத் தயார் செய்கிறது. நான் இந்தி யாவில் ஏராளமான தொடர்களில் விளையாடியுள்ளேன். உண்மையிலேயே சில கடினமான சூழ்நிலையில் விளையாடியுள்ளோம். முதல் இரண்டு நாள்களுக்கு ஆடுகளம் சிறப்பாக இருக்கும். அதன்பின் அவர்களின் சுழற்பந்து வீச்சாளர்கள் மாயாஜாலம் காட்டுவதற்கு ஏதுவாக மாறிவிடும். தற்போது இலங்கைத் தொடரில் என்ன நடந்தது என்று பார்த்தி ருப்பீர்கள். எப்போதெல்லாம் ஆஸ்திரேலிய அணி துணைக்கண்டத்திற்கு செல்கிறதோ, அங்கெல்லாம் முதல் நாளில் இருந்து ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்ற வகையில் தயார் செய்யப் படுகிறது. ஆஸ்திரேலிய அணிக்கு கடும் சவால் காத்துக் கொண் டிருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற தோல்வியை போல் இல்லா மல், சரியான போட்டியை ஏற்படுத்துவதற் கான வழி யைத் தேட வேண்டும். மொத் தத்தில் ஆஸ்திரேலியா இந்தியா விடம் மிகவும் எச்சரிக் கையாக இருக்கவேண்டும் என பொண்டிங் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்தியாவுக்கு அழுத்தம்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடை யிலான இரண்டாவது ரி-20 ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இந்திய அணி களமிறங்கு கிறது.
தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. எனவே இன்று நடைபெறும் ஆட்டத்தி லும் அடுத்த ஆட்டத்திலும் வென்றால் மட்டுமே இந்தியாவால் கிண்ணம் வெல்ல முடியும். அவற் றில் ஒன்றில் வென்றாலேயே இங்கிலாந்து கிண்ணத்தைக் கைப்பற்றுவது உறுதியாகும். இதனால் தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வென்றேயாகவேண்டும் என்ற நிலையில் இந் தியா இன்று களம் காணுகின்றனது. (ம)



## தெ.ஆபிரிக்கா பதற்றமற்ற வெற்றி



இலங்கைக்கு எதிரான ஐந்து ஆட் டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் 94 பந்துகள் மீதமிருக்க பதற்றமில் லாத வெற்றியைப் பதிவுசெய்தது தென்னாபிரிக்கா.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத் தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கைக்கு முதல் கோணல் முற்றும் கோண லாக அமைந்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான டிக்வெல்ல, வீரக் கொடி இருவரும் முறையே ஒரு ஓட்டத்துடனும் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தாகிரின் சுழல் சிறப்பாக எடுபட்டது. மூன்றாம் நிலை வீரரான குசல் மெண்டிஸ் அரைச்சதம் கடந்தார். அவர் ஒரு வரே அரைச்சதம் பதிவுசெய்த ஒரே யொரு வீரராவார். தரங்க, சந்திமல், தனஞ்சய டி சில்வா என்று எவரும் சிறப்பாகச் செயற்படவில்லை. 181 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இலங்கை இழந்தது.
பந்துவீச்சில் தாகிர், பார்னெல் இரு வரும் தலா மூன்று இலக்குகளை யும், மொறிஸ் 2 இலக்குகளையும் ரபாடா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய தென்னா பிரிக்காவுக்கு ஆரம்ப இணை 71 ஓட்டங்கள் வரை தாக்குப் பிடித்தது. அணி 71 ஓட்டங்களைப் பெற்றிருந் போது 34 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்தார் குயின்டன். அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் அம்லா. பிளாசிஸ், வில் லியர்ஸ் இணைய பிறிதொரு இலக்கை இழக்காமல் இலக்கை அடைந்தது தென்னா பிரிக்கா. பிளாசிஸ் 55 ஓட்டங்களுடனும் வில்லியர்ஸ் 30 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். (ம)

## ஆஸியின் தலைவராக நியமிக்கப்பட்டார் வேட்

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியின் தலைவராக மத்தியூ வேட் நியமிக்கப்பட்டார்.
இந்த இரு அணிகளுக்கும் இடை யிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் நியூசிலாந்தில் நாளை ஆரம்பமா கிறது. ஆஸ்திரேலிய அணித் தலைவரான சிமித் காயமடைந் துள்ளதால், வேட் தற்காலிக அணித்தலைவராக நியமிக்கப் பட்டார்.
ஆஸ்திரேலிய அணி விவரம் - வேட் (அணித்தலைவர்), பல்க்நெர், ஹான்ட்ஸ்கொம், ஹெட், சோன் மார்ஷ், பெய்லி ஸ்ரான்லேக், ஸ்ரொய்னிஸ், கும்மின்ஸ், பின்ஞ், ஹசில்வூட், ஹேஸ்லெட், மக்ஸ் வெல், ஸ்ராக், சாம்பா. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WANTED DEALERS
AKASH BRAND STAINLESS
STEEL TUBES - INDIAN MANUFACTURER
FOR S.S. RAILING (POLISHED)
S.S. DECORATIVE TUBES (POLISHED)
S.S. INDUSTRIAL PIPES
PLEASE VISIT OUR STALL NO.A114, IN 8TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR
FOR OTHER DETAIL PLEASE VISITOUR SITE
www. akashsteelcraft.com
AKASH STEEL CRAFTS (P) LTD MUMBAI, INDIA
email : akashsteelcraft@gmail.com

பணியாளர் தேவை
முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
* எழுது வினைஞர் - Clerk (பெண்)
* சிற்றூழியர் (ஆண்)
03.02.2017 (வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு நேர்முகத் தேர்விற்கு நேரில் சமுகமளிக்கவும்.
New Science World
Brown Road Navalar Road Junction, Jaffna.
077 336 4055
(AJA 00512) (14.17.18)

தாதியர் பயிற்சி நெறி
DIPLOMA IN NURSING (02 Years)
NURSING ASSISTANT (1 Year)
GRIATRIC NURSING (9 Months)
Holy Cross School of health science
விண்ணப்ப இறுதித் திகதி : 20.02.2017
க.பொ.த சாதாரண (O/L) உயர்தரத்தில் (A/L) சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை தாதியர் பாடசாலை இல.767/4 கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.
பணிப்பாளர்
021 300 1102, 077 115 9391

காசி யாத்திரை
ஆரம்பம் 10.03.2017, நாள்கள்-16, யாத்திரிகர்-20 பேர், தரிசிக்குமிடங்கள் **டெல்லி:** அட்ஷயதாம் உட்பட 7 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ஆக்ரா:** தாஜ்மகால், செங்கோட்டை பார்த்தல். **மதுரா:** கிருஷ்ணஜென்மபூமி, **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி (திருவேணிசங்கமம்) தீர்த்தமாடல், சயனஆஞ்சனேயர் தரிசனம், **சீத்தாமடி:** சீதை பூமியுள் புதையுண்ட இடம் உட்பட 5 இடங்கள். **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் பார்த்தல். அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த இடம் (கங்கைநீராடல்) காசியில் 3 நாள்கள் கங்காபூசை பார்த்தல். **ஹரித்துவார்:** கங்கைநீராடல், 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். **ரிஷிகேஸ்:** சிவானந்த ஆச்சிரமம் உட்பட இடங்கள் தரிசனம். **குருச்சேத்திரம்:** பாண்டவர்கள் யுத்தம் புரிந்தஇடம் உட்பட 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். அத்துடன் **பிரம்மதீர்த்தம்** நீராடல். **கயா:** உறவினர்களுக்கு சிரார்த்தம் செய்தல். **புத்தகயா:** புத்தாலயங்கள் 5 பார்த்தல். **இராமேஸ்வரம்:** (தீர்த்தமாடல்) 2 கிணறுகளில், உத்திரகோசமங்கை உட்பட 7 இடங்கள் தரிசித்தல் **சென்னை** வருகை வான்வலம் **திருப்பதி** விஸ்ணு, அலமேலுமங்கா தரித்து சென்னை வருகை. **எமது சேவை:-** 5 விமான ரிக்கட், சுத்தமான குடிநீர், AC வாகனவசதி, மடப்பள்ளி ஆட்கள் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, 2 பேருக்கு தரமான கட்டில், மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், எயார்போட் போகவர வாகனவசதி (ரயில் பயணம் கிடையாது) மேலும் விவரங்களை கேட்டு அறிந்து பதிவு செய்யவும். ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.
விவரங்கட்கு,
குறைந்தகட்டணம் நிறைவான தரிசனம். **கலாநிதி.T. ஸ்ரீரெங்கநாதன்**- மகன். ராஜன்
Office : City Center Shopping Complex
3 rd Floor, No. 59, 3/6, Sea Street, Colombo - 11.
Tel : 077 768 0102, 077 736 2154
E.mail : sriranganathan2601@gmail.com
FB : sridevisriranganathanthuralappa

# வோர்ணர் முதலிடம்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் முதலிடத்துக்குமுன்னேறினார் ஆஸ்திரேலிய வீரரான வோர்ணர்.

880புள்ளிகளுடன்வோர்ணர் முதலிடத்தில் உள்ளார். முதலிடத்தில் இருந்துவந்த வில்லியர்ஸ்861 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டார். 852 புள்ளிகளுடன் கோக்லி மூன்றாவது இடத் துக்கு தள்ளப்பட்டார். குயின்டன் டி ஹொக் 4 ஆவது இடத்திலும், வில்லியம் சன் ஐந்தாவது இடத்திலும்
உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே ரூட், அம்லா, சிமித், குப்தில், அசாம் ஆகியோர் உள்ளனர். இலங்கை வீரர்கள் எவருக்கும் முதல் பத்துக்குள் இடம் கிடைக்கவில்லை.

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2839 திகதி 28.01.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
06 25 55 61 R
போனஸ் இல. புதன்கிழமை ஜக்பொட்
24
ரூ. 45,472,382/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு 1919
2017.02.01 ஆம் திகதி புதன் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 608
சீட்டிழுப்பு திகதி 28.01.2017
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
28 39 58 62 H
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.48,287,155/=
தொ.பே: 011 4062002 / 0114062063 Web: www.dlb.lk
SMS: DLB LOT SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
அல்லது துரித அழைப்பு 1919
2017.01.30 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் ▶ 12
சீட்டிழுப்பு திகதி ▶ 28.01.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 28 43 53
சுப்பர் இலக்கம் 01
அதிர்ஷ்ட மாதம் செப்டெம்பர்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 6,707,990/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2,555,203/=
அடுத்த ஜக்பொட் 1,279,994/=
2017.02.02 திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

வேலைவாய்ப்பு
DYNAMIC ORG (PVT) LTD
சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Dynamic நிறுவனம் வடக்கில் திறக்கப்படவிருக்கும் 03 புதிய கிளைகளுக்கு O/L Or A/L படித்த ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
Customers Service, Supervisors, Ass. Managers, Management traineers
நிரந்தர வேலைவாய்ப்புடன் வெளிநாடு செல்லும் வாய்ப்பும்.
பயிற்சியின் போது ஊக்குவிப்புத் தொகை 15, 000 - 20, 000 பயிற்சியின் பின்பு 65000 இற்கு மேல்.
(GM/7077)(12.18)
077 664 4442, 076 678 1042
077 230 2795, 077 574 1700

காணி விற்பனைக்கு
ஆறுகால் மடம் மானிப்பாய் வீதிக்கு அண்மித்து,மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 1 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9131 128

கொள்வனவு
நிம்பினால் நம்புங்கள் 1 kg காட்போட் மட்டை 15/= இற்கு கொள்வனவு செய்யப்படும்.
தொடர்புகளுக்கு:-
071 524 0705

வாகனம் விற்பனைக்கு உண்டு
62,000 Km மட்டும் ஓடிய py வாகன இலக்கத்தையுடைய Tata Super Ac வாகனம் விற்பனைக்கு உண்டு.
077 786 0456

நிலம் குத்தகைக்கு விடப்படும்
A9வீதி, நாவற்குளி
அரசகளஞ்சியத்துக்கு முன்பாகவுள்ள (8) பரப்பு விஸ்தீரணமுள்ள நல்ல குடி தண்ணீர் வசதியுடன் கூடிய கிணற்றுடன் சுற்றுமதில் அமைக்கப்பட்ட காணி குத்தகைக்கு உண்டு.
தொடர்பு : 077 635 9201 (AJA 417) (14.17.18)

ஜூஸ் பக்கெட் தயாரிக்கும் மெசின்
புதிய ஐடியா !
புதிய வியாபாரம் !




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No. 19, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo - 03

ஆங்கில வகுப்புகள்
தரம் 6-11(O/L) வரையான மாணவர்களுக்கு யாழில் வீடுகளுக்கு வந்து, அனுபவம் வாய்ந்த நம்பகமான, பிரபல பாடசாலை ஆசிரியரால் சிறப்பாக கற்பிக்கப்படும்.
* O/L மாணவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்
077 252 8824

பயிற்சி நூல் வெளியீடு
வெகு விரைவில்
விரைவாகச் செய்வோம்
விரைவு கணிதம் -தரம் 4
25 பயிற்சிகளைக் கொண்ட
பயிற்சி நூல் தரம் 4 இற்கானது
வெளிவரவுள்ளது.
ஆசிரியர்: அ. ஸ்ரீகரன் (ஓய்வு நிலை பி.க.ப)
(ஆரம்பக் கல்வி பயிற்சி வணிகவியல் பட்டதாரி)
தொடர்பு: 077 434 9105

மாத்தளை, வத்தளை, கந்தானை, ஜா-எல நீர் கொழும்பு, எஹெலியகொட, கொழும்பு கண்டி, அநுராதபுரம், தம்புள்ள.
ஜேம், பானம், பிஸ்கட், டொபி, சொக்லட், யோகட் பட்டம், இறைச்சி, கண்ணாடி சிம், டயர், பாதணி
தொழிற்சாலைகளுக்காக வயது 17-35 ஆண்/பெண்
* வேலை நேரத்தின் போது உணவு இலவசம்.
* பாதுகாப்பான தங்குமிடம்.
* சிங்களம் பேசுதல் அவசியம் இல்லை.
* தமிழ் காரியாலய உத்தியோகம்.
* நண்பர்கள், குழுக்கள், திருமணமானவர்கள் வரலாம்.
* நாள், கிழமை, மாத சம்பளம் பெறலாம்.
மேலதிக சம்பளம்
யாழ்ப்பாணம் 077 06 99 492
வவுனியா 077 68 38 226

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா செல்லத்துரை



கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், இல.255, பாரதிநகர், யோகபுரம், மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா செல்லத்துரை 27.01.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், சின்னையா செல்லத்துரையின் (மனேஜர்) அன்பு மனைவியும், இரவீந்திரநாதன் (ரவி - ஆஸ்திரேலியா), இரங்கநாதன் (றங்கன் - சுவிஸ்), இராசேந்திரன் (ராசன்), நந்தினிதேவி (ராசி - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாசினி, தர்ஷினி, ஆயிலியம், சுதாகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியங்கா, பிரியங்கன், மைத்திரி, மயூரி, அபிதா, ஆதவன், சாதுந், சாருகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

பிறப்பு 28.10.1938 இறப்பு 27.01.2017

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.255, பாரதிநகர்,
யோகபுரம், மல்லாவி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 261 9493 - ராசன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கொழும்பில் உள்ள
Fx detergent Company இன்
யாழ்ப்பாணக் கிளைக்கு
விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
தொடர்பு: V.மகேஸ்வரன்
0777 3790 82 (00510)(10.17.19)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

அரியாலை நெடுங்குளம்
சந்தியிலிருந்து (A9) 100m
தொலைவில் 3 அறைகளுடன் கூடிய
வீட்டுடன் காணி உடன் விற்பனைக்கு
உண்டு.
தொடர்புகளுக்கு:-
078 911 3954 077 033 3910
021 221 1414 077 778 2192

## கடை வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள்
வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கும்
ஏற்றது. தொடர்பு - 077 7651 826


# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் அருமைநாயகம்



கலட்டியைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும், ஓட்டுமடத்தை தற்போதைய வதிவிட மாகவும் கொண்ட திருமதி பாக்கியம் அருமைநாயகம் (25.01.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் சின்னப்பொடி - பெரிய பிள்ளை தம்பதியரின் அன்புமரு மகளும் காலஞ்சென்ற அருமை நாயகத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான ரத்தினம், அப்புத்துரை, செல்லையா, பொன்னரியம், சின்னத்துரை, கண்மணி ராசா மற்றும் கந்தசாமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரியும் பத்மநாதன் (பிரான்ஸ்), மும்மூர்த்தி (வயறிங்),இன்பம், தயாதேவி, மோகனதாஸ் (பின்லாந்து), ஆனந்தமோகன் (பிரான்ஸ்), குணசாந்தன், பஞ்சாச்சரம், றதிவதனன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் தவமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற குஞ்சு (சண்டிலிப்பாய்), செல்வராணி (சண்டிலிப்பாய்), வவி (ஆஸ்திரேலியா), ரவீந்திரன், மேரி கரோலின் (பின்லாந்து), றஞ்சினி (பிரான்ஸ்), ஜெயவேணி, கிரிஜா, தர்சா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
077 4115 387

187/2, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.


British BUSINESS COLLEGE
Where Students Come First

## தைப்பூசம் அன்று வித்தியாரம்பம்

BBC பாடசாலையின் அனைத்து வளாகங்களிலும்
தைப்பூசமன்று (09.02.2017 வியாழக்கிழமை) காலை
8.00 மணிமுதல் ஏடுதொடக்கி வைக்கப்படும்

தைப்பூசம் அன்று புதிய அனுமதிகள்

சிறார்களின் அபிவிருத்திக்கான செயற்பாடுகள்

- Sports Meet
- English Day Concert
- முத்தமிழ் விழா
- Art & Craft Exhibition
- Carols
- Pre School Graduation

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்



- 2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்
- வயதின் அடிப்படையில் வகுப்புக்கள்

### பாலர் பாடசாலை பிரிவுகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2+ முதல் 3+ வரை | 2+ முதல் 4+ வரை | 4+ முதல் 5+ வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |

- அனுமதிக் கட்டணம் ஒரு தடவை மட்டும்
- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

| யாழ்ப்பாணம் 1 | யாழ்ப்பாணம் 2 | கோப்பாய் | நீர்வேலி |
|---|---|---|---|
| இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | இல.625, K.K.S வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி, கோப்பாய் மத்தி. | பருத்தித்துறை வீதி, நீர்வேலி சந்தி, நீர்வேலி. |
| **மானிப்பாய் 1** | **மானிப்பாய் 2** | **சுன்னாகம் 1** | **சுன்னாகம் 2** |
| இல. 252, யாழ். வீதி, ஆலடிச்சந்தி, மானிப்பாய். | சங்கரப்பிள்ளை வீதி, (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | Dr. சுப்பரத்தினம் வீதி, சுன்னாகம். | இல.142,K.K.S வீதி, சுன்னாகம், (NSB வங்கி முன்பாக) |
| **வடமராட்சி** | **சாவகச்சேரி** | **சங்கானை** | **புத்தூர்** |
| பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி. | சாவகச்சேரி Hindu College Primary School அருகாமை | பொன்னாலை வீதி, பிரதான வீதி, சங்கானை. | பருத்தித்துறை வீதி, புத்தூர் கிழக்கு (ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி முன்பாக) |

BRITISH BUSINESS COLLEGE இல.653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 077 362 7055, 021 222 4060


# மரண அறிவித்தல்



தோற்றம்: 24.02.1946 மறைவு: 27.01.2017

## செபஸ்ரியன் ஜோச்

யாழ். சென். பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரி யன் ஜோச் 27.01.2017 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற A.K. ஜோசப்-மேரி அந்தோனிப்பிள்ளை (தங்கபொன்னு) தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்ற செல்வரெட்னம்- பொன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இமல்டா (ராணி) யின் அன்புக் கணவரும், ஜோச் லூயிஸ்(சூட்டி-லண்டன்), திரேசா (சுவிற்றி-யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற நியூட்டன் (பஸ்ரி), லூட்ஸ் யசிந்தா (யசி-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிங்கராயர் (யோகரட்ணம்-கனடா), கிரிஸ்டியன் (யோராஸ்-ஜேர்மனி), மரியராணி (சறோ-திருகோணமலை), மேரி ஜோசபின் (புஸ்பம் - யாழ்ப்பாணம்), மேரி மாகிரட் (புனிதம் - ஜேர்மனி), அன்ரன் ரோய் (ராஜன்- யாழ்ப்பாணம்), நியூட்டன் (துரை-ஜேர்மனி), ஜெகநேசன் (ஜெகா-சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர் களான திரேஸ்மலர், பொன்ராசா, யோகம், செல்வம், பமி, றொபேட் மற்றும் ஜீவம் (ஜேர்மனி), ஜோதி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், நளினி (லண்டன்), அன்ரன் (பிரான்ஸ்), சந்திரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனும், லையான், லிடியா (லண்டன்), சஞ்சிகா, அனுஷன் (பிரான்ஸ்), தனுஷா, கௌமியா (யாழ்ப்பாணம்), எல்வின், எலோடி, எலிசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 70, பழைய பூங்காவீதியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து நாளை (30.01.2017) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, கொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 70, பழைய பூங்கா வீதி,
கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(J/433) (10.17.19)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## உலகைப் போசித்த உத்தமன்



நிலையாமையே உலகில் நிலையானது என்றனர் நம் தத்துவ ஞானிகள். ''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு'' என்று நம் வள்ளுவப் பெருந்தகையும் இக் கருத்தை வலியுறுத்துகிறார். மனிதர் தொடக்கம் புல் பூண்டு வரையிலான பல உயிர்களும் இவ் உலகில் அன்றாடம் தோன்றி மறைந்து கொண்டிருக்கின்றன. மனிதரைத் தவிர மற்றைய உயிர்களுக்கு வாழ்க்கை வதிவு என்று ஒன்றில்லை. ஆனால் ஆறறிவு பெற்ற மனிதர்களோ தம் சிந்தனைத் திறத்தால் பல அறக்காரியங்களைச் செய்து மற்றைய உயிர்களையும் காத்து தன் வாழ்க்கையை அர்த்தம் உள்ளதாக்குகின்றனர்.

அதனால் மரணம் இயற்கை என்று அறிந்தாலும் சிலர் இழப்புக்களை இதயம் தாங்க மறுக்கிறது. அங்ஙனம் எனது இதயத்தை அதிரச்செய்யும் செய்தியாய் நண்பர் பேரம்பலம் கணேசலிங்கம் அவர்களின் மறைவுச் செய்தி வந்தது. எனது சொந்த ஊரான காரைநகரின் வாரிவளவில் பிறந்த கணேசலிங்கம் அவர்கள் ஊர்த் தொடர்பாலும் வியாபாரத் தொடர்பாலும் நெருங்கிய நண்பரானார். வழி வழி வந்த அற உணர்வால் இச் சமூகத்திற்கு அவர் செய்த நற்காரியங்கள் பற்பல. ஆலயங்களையும் சமூக நிலையங்களையும் தன் சொந்த உழைப்பில் போசித்து வந்தவர் அவர். அவரது இழப்பு குடும்பத்தாருக்கு மட்டுமன்றி ஊருக்கும் தமிழ் சமூகத்துக்கும் என்னைப் போன்ற நண்பர்களுக்கும் பேரிழப்பே என்பதில் ஐயமில்லை. அந் நல்லவரின் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**த. தியாகலிங்கம்**
**சரவணாஸ் ரேடர்ஸ்**
**இல. 03, நவீன சந்தை வெளிப்புறம்,**
**யாழ்ப்பாணம்.**

### தேவை

**SLS** தரச்சான்றிதழுடைய பால் உற்பத்திப் பொருள்களைக் கொண்ட பிரபல நிறுவனம் ஒன்றுக்கு வவுனியா,மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் **(Sales Reps)** தேவை.
**தொடர்புக்கு:-075 377 8274**

### அனெக்ஸ் வாடகைக்கு

நல்லூரில் கோயில் வீதிக்கண்மையில் இருவர்மட்டும் தங்கக் கூடிய அனெக்ஸ் தனிப்பாதையுடன் வாடகைக்குண்டு.
**தொடர்பு:- 011 236 2611**

### காணிவிற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கும் சிவபூமி பாடசாலைக்கும் இடையில் வடக்கு பக்கமாக 300 மீற்றர் தூரத்தில் 5 பரப்புக்காணி விற்பனைக் குண்டு. பிரதான வீதியில் 4பரப்பு விற்பனைக் குண்டு.
**076 697 2287**

### தேவை

வங்கி ஊழியர் குடும்பத்திற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப் பெண்தேவை.இடம் சுண்டுக்குளி யாழ்ப்பாணம். நல்ல மாதாந்த சம்பளம் வழங்கப்படும் .
**தொடர்பு: 076 803 5294**

### பிரத்தியேக வகுப்பு

**A/L கணக்கியல்**
**புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.**
**( தனிப்பட்ட வகுப்புக்கள் மட்டும்)**
**தொடர்பு - 075 4099 968**

### வீடு தேவை

யாழ்ப்பாணம்,.கொக்குவில், கோண்டாவில், கோப்பாய்,மானிப்பாய் ஆகிய இடங்கள் சிறிய குடும்பம் வசிப்பதற்கு அடிப்படை வசதிகள் கொண்ட 2 பரப்புக்களில் அமைந்த வீடு ஒன்று தேவை. விற்க உள்ளவர்கள் உடனடி யாகத் தொடர்பு கொள்ளவும்.(தரகர்கள் தேவையில்லை)
தொடர்பு: 077 867 7261 ,077 934 6338

## மரண அறிவித்தல்

### யோசப் அன்ரன் ( திருச்செல்வம்)



**தோற்றம்** 03.04.1945 **மறைவு** 27.01.2017

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், சோமசுந்தரம் லேன் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் அன்ரன் (27.01.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பொடியன் - பத்தினி தம்பதியரின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் (பவளம்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற பாலசிங்கம், லூர்த்தம்மா, சின்ராசன் மற்றும் ராசரட்ணம், பற்றிமா, ராசன், புஸ்பம் ஆகியோரின் அன்புச்சகோதரரும் கொலிசின், கொலின், கொன்சலியா, கொன்சன், கொலஸ்ரீனா, கொட்மன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறி, சுனித்திரா, சன், சோபா, சுரேஸ் ஆகியோரின் மாமனாரும் சிந்துஜா, லக்ஸ்சி, சமீரா, ஜெறிக், ஜெனி, கெலின், சுஜித், கெஷான், ஜெப்றின், றியா ஆகியோரின் அன்புப்பேரனும் டானியலின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2017) திங்கட்கிழமை புனித திரேசம்மா ஆலயத்தில் மு.ப. 10 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புகொடுக்கப்பட்டு பின் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**39/3, சோமசுந்தரம் லேன்,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர். 077 2424 606**

## ஆற்றல் மிக்க மண்ணின் மைந்தனை இழந்தோம்

# ஈ.எஸ். பேரம்பலம் கணேசலிங்கம்



எங்களது தாய் மண்ணான காரைநகரில் நாடளாவிய பெருமை கொள்ளச்செய்ததில் ஈ.எஸ். பேரம்பலம் கொம்பனிக்கு முக்கிய இடம் இருக்கிறது. அந் நிறுவனத்தை தன் ஆளுமையான ஆற்றலால் சிறப்புற வழிநடத்தியவர் எனது அன்பு நண்பர் **பேரம்பலம் கணேசலிங்கம்** அவர்கள். எந்நேரமும் சிரித்த முகம் மற்றவர்களை அன்போடு வரவேற்கும் பண்பு நல்ல காரியங்களில் முன்னின்று உழைக்கும் விருப்பு என இயல்பான தன் குணங்களால் மற்றவர்களை வசீகரித்து நின்றவர் திரு. கணேசலிங்கம் அவர்கள். கடுமையான உழைப்பும் அவ் உழைப்பை உலகின் உயர்விற்கும் வழங்கும் இயல்பும் அவரது சிறப்புக்கள். எங்கள் ஊரின் வரலாற்றில் தனது நிறுவனத்தினதும் தனதும் பெயரை ஆழப் பதித்த கணேசலிங்கத்தின் மரணச்செய்தி கேட்டு என் மனதைப் பெரிதும் அதிரச் செய்கிறது உலகெலாம் ஒரு பெரும் கனவு அதனுளே உண்டு உறங்கி இடர் செய்து செத்திடும் கலக மானிடப்பூச்சிகள் வாழ்க்கை ஓர் கனவிலும் கனவாகும் என்றான் பாரதி. மனித வாழ்க்கையின் நிலையாமையை இதை விட எப்படி சொல்ல முடியும். மரணம் இயற்கை என்பதையறிந்து. ஆறுதல் அடைவதைத் தவிர வேறு வழியில்லை. குடும்பத்தாருக்கு எனது ஆறுதலை உரைத்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

**S.V.M.குணரத்தினம்**
**( S.V.M. ஸ்தாபனம்)**
**154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு உண்டு (Two Wheeler)

வவுனியா கூமாங்குளத்தில் HERO MOTOR CYCLE 100 cc DELUXE 2250 K.M தூரம் ஓடியுள்ளது.

**024 222 6445**

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சியில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு கணினி இயக்குநர் (Computer Operator) தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் 10.02.2017 இற்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு:** யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று தங்கி வேலைசெய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**மே/பா உதயன்**
**விளம்பர இல. 5520**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## பதவி வெற்றிடம் (பெண்கள் மட்டும்)

யாழ். நகரில் இயங்கிவரும் மொத்த விற்பனை நிலையத்துக்கு எழுதுவினைஞர் (பெண்கள் மட்டும்) தேவை. விரும்புபவர்கள் எதிர்வரும் 10.02.2017 இற்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.

**யுனிற்றல்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

(J/429) (10.17.19)

## கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்களகத்தின் உடுவில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் **திரு பொ. சந்திரராசா** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நல்மணி பொன்னுச்சாமி**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மனம் வருந்துவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக் கின்றோம்.

**நலன்புரி சங்கச் சமூகம்**
**கமநல அபிவிருத்தித் திணைக்களம் ,யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



உடுவில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் **திரு .பொ. சந்திரராசா** அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி நல்மணி பொன்னுச்சாமி**

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்தோடுஅன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக் கின்றோம்.

**கமநல சேவைச்சமூகம்**
**உடுவில்.**

Multigrains 15 Nutrition of Life

சிவப்பு உடையல் பச்சை அரிசி, சிவப்பு கைக்குத்தரிசி, கோதுமை(உடையல்), சோளம், ஓட்ஸ், பார்லி அரிசி, குரக்கன், வரகு, அரிசி, திணை, பயறு, உழுந்து, பொட்டுக்கடலை, கச்சான் கடலை இத்துடன் சிறிதளவு தானியங்கள் பாதாம் பருப்பு கயூ மசாலா ஆகியவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தயாரிக்கும் முறை:**

சட்டியில் சிறிதளவு எண்ணெய் விடவும். தேவையானளவு சத்துமாவை போடவும். சிறிதளவு உப்புத்தூள் சேர்க்கவும். போதியளவு தேங்காய்பால் விட்டு அதை சாப்பிடக்கூடிய அளவு வரும்வரை கிளறவும். ஒரு பாத்திரத்தில் சீனி அல்லது சர்க்கரை போட்டு கலக்கவும். (நீரிழிவு நோய் உள்ளவர்கள் சீனி அல்லது சர்க்கரையை தவிர்க்கலாம்.)

**BIO TEC International Ltd**

Date of Manufacture :25.01.2017
Date of Expiry : 24.01.2018
Price : Rs. 550/=
Bio Tec Orient (Pvt) LTD
131/2, Palaly Road,
Thirunelvely, Jaffna, Srilanka.
T.P : (021) 459 0907, 077 704 8181
E.mail : Kanbalasub@yahoo.co
Web : www.bioteclanka.com
Visit to Stole No : 181

## காணி விற்பனை

நந்தாவனை சொய்சாபுர தொடர்மாடியில் B29/G4 நிலத்தடி வீடு உறுதியுடன் உடனடி விற்பனைக்கு. குசினியும் ஹோலும் விஸ்தரிக் கப்பட்டுள்ளது. முன்பக்கம் கராஜ் நிலப்பகுதி முட்கம்பிவேலி. விலை பேசித் தீர்மானிக்கலாம். பார்வையிடும் நேரம் ஞாயிறு முற்பகல் 11 மணிமுதல்.

**071 481 3190**

## சிறுநீரகம் தேவை

0+ சிறுநீரகம் 50 வயதிற்குட்பட்ட தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தரகர் வேண்டாம்

**077 3601013**

## தேவை

உடனடியாக ஆண் அல்லது பெண் வேலையாள் தேவை. சம்பளம் 35,000/ = +OT உணவு தங்கும் இடம் செய்துதரப்படும்.

**தொடர்பு:-071 865 2510**

## ஆட்டோ, வான் விற்பனைக்கு

NW GN XXXX பச்சை, 21 - XXXX பட்டர் கலர் ஆட்டோ, 60 - XXXX வானும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 844 6089

## வீடு வாடகைக்கு

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 3ஆம் குறுக்குத்தெருவில் சகல வசதியும் கொண்ட நான்கு அறைகள், இரண்டு பாத்றூம், சமையலறையுடன் சேர்ந்த இரண்டு அறை, வாகனத் தரிப்பிடம் உள்ள மாடி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**077 605 5555**

## காணிவிற்பனைக்குண்டு

அரியாலை, மாம்பழச்சந்தி, **A9**,அருகில் 3 பரப்பு காணியும் அரியாலை **A9** அருகில் 4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் இன்றி தொடர்பு கொள்ளவும்.

**077 662 1971**

## காணி விற்பனைக்கு

A9 றோட், கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு அண்மையாக 56ஆம் கட்டையில் 2 பரப்பளவு கொண்ட காணி (மாடிக்கட்டடம் அமைக்கக்கூடியது) விற்பனைக்கு உள்ளது.

**077 668 9565**

## பணிப்பெண் தேவை

கைதடியில் தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை (மூன்று வருடங்களுக்கு)

தொடர்புகளுக்கு: **077 222 4913**

(AJA 00521)(10.17.19)

## வாகன விற்பனை

Toyota Townace KR - 42 (NOAH) Diecal Converted (1999) Rey 2004 வான் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு - 078 308 8220

## வீடு வாடகைக்கு உண்டு

வவுனியா வைரவப்புளியங்குளம் 10 ஆம் ஒழுங்கையில் வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 077 024 6712**

## வேலையாள்கள் தேவை

பிரபல்யமான உணவு விடுதி ஒன்றில் யாழ்ப்பாண வகை உணவு (சோறு, கறி) சமைப்பதற்கு ஆள்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு - 077 321 4915, 077 445 8567

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு பலாலி வீதியை அண்மித்த கோண்டாவில், உரும்பிராய் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: **077 1516126**

(j/434)(10,17,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.02.1964 — மறைவு 10.02.2016

**வேலுப்பிள்ளை அருளானந்தர் (சிக்கா)**

ஆண்டொன்று போதைய்யா உன் அழகு முகம் நாங்கள் கண்டு
புன்னகை ஒன்றே சொல்லும் புனிதன் உன் நெஞ்சின் நேர்மை
பண் பெற்ற சொல்லுகின்றோம் பதம் சிக்கா என்று அன்பர்களன்றி
மற்றும் அனைவரும் புகழக் கேட்டோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஞானசம்பந்தர் வீதி ,
வட்டுக்கோட்டை.

உங்கள் நினைவுகளுடன்
வே. இராசலக்ஷ்மி (துங்கா)சகோதரி

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### வாடகைக்கு வீடுகள்/கட்டடங்கள் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய1500 சதுர அடிகளுக்கு மேற்பட்ட பெரிய, நடுத்தர வீடுகள்/ கட்டடங்கள்பல்கலைக்கழகத்தை அண்மித்த பகுதிகளில் வாடகைக்கு தேவை.

வீட்டை/கட்டடத்தை வாடகைக்கு தர விரும்புவோர்கீழ்வரும் மாதிரிப்படிவத்தில் தயார் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 09.02.2017 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர்உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில்அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "மாணவர்களின் விடுதிக்கான வீடு/கட்டடம்" என குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

- தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517

பதிவாளர்.
உதவி பதிவாளர்/நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்.

**யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உபயோகத்திற்கான வீடு/கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ......... ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை/கட்டடத்தை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்குத்தர விரும்புகின்றேன்.

**வீடு/கட்டடம் பற்றிய விபரங்கள்**

1) வீடு/கட்டடம் அமைந்திருக்கும் இடம்
..............................................................
2) வீட்டு/கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்
..............................................................
3) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கமும்
பெயர்.........................................................
முகவரி:......................................................
தொலைபேசிஇல:..............................................
4) வீட்டின்/கட்டடத்தின் பரப்பளவு (சதுர அடி)
..............................................................
5) அறைகளின் எண்ணிக்கை ..................................
குளியல் அறைகளின் எண்ணிக்கை..........................
மலசல கூடங்களின் எண்ணிக்கை...........................
6) மின்சார வசதி உண்டு/
இல்லை.......................................................
விபரம்........................................................
7) தண்ணீர் வசதி: கிணறு/குழாய் நீர்
விபரம் ......................................................
8) எதிர்பார்க்கும் குத்தகை/மாதாந்த வாடகை
..............................................................
9) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு
..............................................................
10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள்/நிபந்தனைகள் (இருப்பின்)
..............................................................

திகதி ......................

......................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

## மரண அறிவித்தல்

### இரத்தினம் சோதிலிங்கம்



மறவன்புலோவைப் பிறப்பிட மாகவும், இல. 5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சோதிலிங்கம் 26.01.2017 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் பானுமதிதேவியின் அன்புக்கணவரும் விவேகினி, ருபாகினி, செந்தில்குமரன், திருக் குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரண்குமார், ஷனேத்திரன், வித்தியாஞ்சலி, சிவசக்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.01.2017) திங்கட் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 05, அன்னசத்திர ஒழுங்கை,**
**கந்தர்மடம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch
Vehicle Brand | T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print
Book Printing | Woodent Print




சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த
விலையில் தரமாக
செய்துதரப்படும்.





ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் கனகலிங்கம்



வயாவிளானைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மேற்கு திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி இராமலிங்கம் கனகலிங்கம் 28.01.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

021 226 3469,
077 377 7446

தகவல் :
Dr. S. குமரன்
(மருமகன்)



## மரண அறிவித்தல்

### மேரி செசிலியா இராயப்பு (நேசம் ரீச்சர்)

(இளைப்பாறிய ஆசிரியர்,யா/ சில்லாலை றோ.க.த.க.பாடசாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி செசிலியா இராசப்பு (நேசம் ரீச்சர்) 28.01.2017 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசப்புவின் அன்பு மனைவியும் மரிய வில்ம றஜனி (லண்டன்),யூட் றெனோல்ட் (லண்டன்),ஆன் யூலியற் றதினி(ஆசிரியர்,இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்),வெலிசிற்றா றமணி (பிரதி அதிபர், இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றஞ்சன், லோஜினி, றோய்லன்ஸ்,ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் றெபேக்கா, றபாயேல், ஜெறமி, ஜெறிக், ஜெனிபர், றிஸ்னி, றிஷான்,ஜானுஜன்,ஜஸ்மின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும்,பத்திநாதர்,செலஸ்ரீன் பிள்ளை காலஞ்சென்றவர்களான புஸ்பம்,பொன்னுத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.அன்னாரின் பூதவுடல் 01.02.2017 புதன்கிழமை மாலை 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புனித கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கதிரை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:மகள் -ஜெ.வெ.றமணி (021 225 1402)

## மரண அறிவித்தல்



### இராமலிங்கம் நிர்மலன்

(முன்னாள் இராமலிங்கம் மில் உரிமையாளரும் செல்வன் வீடியோ, கவி தொலைத்தொடர்பு நிலையம், பூரணா மல்ரிசொப் உரிமையாளர்)

சாவகச்சேரி இராமலிங்கம் வீதியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் நிர்மலன் 28.01.2017 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-பூரணம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம்-ஞானபூபதி தம்பதியரின் மருமகனும் சிவநேசம் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கவிதா, பூரணச்செல்வன் (செல்வன்), நளாயினி (துஞ்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற யோகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை), மங்களேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை,கனடா), காலஞ்சென்ற மதுரேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் சுதந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராஜபிரசாந்தின்(இராசன், Sierra Telecom-யாழ்ப்பாணம்) அன்பு மாமனாரும் தஸ்வின், பிரகவி ஆகியோரின் அன்புப் பேரனும் மறைந்த நடராஜா ரவிராஜ் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், யாழ். மாவட்டம்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுரேந்திரன் சபாரட்ணம்



பிறப்பு
02 . 01 . 1973

இறப்பு
10 . 01 . 2017

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சுரேந்திரன் சபாரட்ணம் 10.01.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr. சபாரட்ணம் (முன்னாள் மகப்பேற்று வைத்திய நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை)-ரூபவதி தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும் சுந்தரமூர்த்தி -ரட்ணலீலா தம்பதியரின் அருமை மருமகனும் சுமதியின் அன்புக் கணவரும் குகேந்திரன் (கனடா), நரேந்திரன் (கனடா), துஷ்யந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மிதுன் (University of Cambridge-Medicine), தீபா, மித்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற லீலாவதி அவர்களின் அன்புப் பெறாமகனும் ரஜனி, லோஜனி, ருத்திரகுமாரன், சுகந்தி, வானதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிரோஜ், பிரதீஷ் ஆகியோரின் அன்புச் சகலனும் அனோஜன், அருண், ஆருஷி, ஆஷிதா, அக்ஷயா, அபிலாஷ், நிவேதா, சுகாரித்தா, நிகாரித்தா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பிரணவனின் ஆசை அப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.01.2017 செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org